கடவுள் துணை.

மஹா விகட விநோதக் களஞ்சியம்.

இஃது

பாப்புராஜபுரம்
ஹக்கீம் முஹம்மது சாகிபு அவர்கள் குமாரராகிய
ஹக்கீம் முஹம்மது நிஜா முகியித்தின் சாகிபு
அவர்களாலியற்றப்பட்டது.

Madras:
PRINTED BY TEMPLE & Co.

1907.

Registered Copy-right.

இதன் விலை அணா 8.] [வி. பி. சார்ஜ் அணா 3.

இப்புத்தகம் தேவையுள்ளோர் 439-நெ., சௌகார் பேட்டை, மதராஸ் யூநானி மெடிகல் ஹால், மானேஜருக்கு எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

மஹா விகட விநோதக் களஞ்சியம்.

முதல்நாள் விகடப்பிரசங்கம்.

விகடனுடைய அதிசாதுர்யப்பிரஸங்கத்தைக் கேட்குநிமித்தம் பெருங்கூட்டமாய்க்கூடியிருக்கும் ஜனங்கள் ஒருவரோ டொருவர் பேசிக்கொள்ளும் விதம்.

குப்பு. — அட ராமு! என்னடா இங்கே பெரிய கும்பலாயிருக்கிறது. ஒரு நாளும் இத்தனை பெரியகூட்டத்தை இங்குநாம் கண்டதில்லையே. அனேகம் பிரபுக்கள் ஒருங்குகூடி நிற்கிறார்களே யாதுகாரணமென்று சொல்லத்தெரியுமோ? ஏதேனுமொரு விசேஷம் இருக்கத்தான்வேண்டும்.

அகல இருந்தால் நீள உறவு, கிட்ட இருந்தால் முட்டப்பகை.

ராமு :—அப்பா சப்பு! இதோ பலஜனங்களும் பேசிக்கொண்டு நிற்கிறார்களே, உனக்குக் கேட்கவில்லையோ? இங்கு மஹா விகடவிநோதன் ஒருவன்வந்து பிரசங்கம் செய்யப்போகிறானும். அதற்காகத்தான் இவ்வளவு பெருந்திரளான ஜனங்கள் பலவிடங்களினின்றும்வந்து ஆவலுடன் காத்திருக்கிறார்களாம்.

சப்பு:—அப்படியானால் விகடப்பிரசங்கம் வெகுநேர்த்தியாயிருக்குமடா. நாமும் சற்றுநின்று கேட்டுக் களிப்போமே.

ரங்கன் :—கிருஷ்ணு! விகடன் 4 மணிக்குப் பிரசங்கம் செய்யப்போகிறானென்றல்லவோ நோட்டீஸில் கண்டிருந்தது. இப்போது மணி நாலேகாலுமாயிற்றே. ஏன் இன்னுமவன் வரவில்லை. ஏதேனும் அசந்தர்ப்பம் நேரிட்டதோ?

கிருஷ்ணன் :—(பக்கத்திலுள்ளவர்களைப்பார்த்து) ஸார் - ஸார்! உங்கள்கடிகாரத்தில் இப்போதென்னமணி? சற்றே தயைசெய்து பாருங்கோ.

பக்கத்தில் நிற்பவன் :—மணி நாலேகாலாயிற்றுஸார்; விகடன் ஏன இன்னும் வரவில்லை. விகடன்சகடம் உடைந்ததோ?

வேறொருவன் :—ஏதோ அஸந்தர்ப்பம் நேரிட்டிருக்கலாம். கவர்ன்மெண்டு மீட்டிங்குகள்கூட சிலசமயங்களில் எதிர்பாராத அசந்தர்ப்பங்களினால் காலந்தவறிப்போகவில்லையா? ஆனைக்கும் அடிசறுக்கும் என்பது தெரியாதா? விகடேஸ்வரன் சீக்கிரம் வந்துவிடுவான், சற்றேபொறுத்திரும். காத்திருந்தபலன் கைகூடுமேயன்றி வீண்போகாது.

கான்பஹதூர் வெரிவெல் வேங்கட கிருஷ்ணமாச்சாரியார் :— (அண்டையிலிருந்த தம்முடைய நண்பரைப்பார்த்து) என்ன ஸார்? மணி 5 ஆகப்போகிறதே. விகடன் ஏன் இன்னும் வெளிப்படவில்லை?

ட்டங் - ட்டங் - ட்டங் - ட்டங்.

ஜனங்கள் :—இதென்ன விபரீதம் அப்பா! காலக்கேடாயிருக்கிறது. 5 - க்கு நான்குமணியடிக்கிறதே.

இதோவிகடன்! இதோவிகடன்!! ஸ்டேஜில்வந்து நிற்கிறான் பாருங்கள்.

திடும் - தீடும்.

நடேசன் :—வட்சுமணா! விகடன் 4 மணிக்குப் பிரஸங்கஞ்செய்வதாக நோட்டீஸ் பப்ளிக் செய்துவிட்டு சரியாய் 5 மணி அடித்தபிறகு ஸ்டேஜுக்கு வந்தான் என்னவோ இவ்விடத்துக்கடியாரம் 4 மணிதான் அடித்திருக்கிறது. தப்போ ஒப்போ அதிருக்கட்டும். விகடன் ஸ்டேஜில்வந்து

பூவுடன்சேர்ந்த நாறும் மணம்பெறும்.

நின்றவுடனே 51 - குண்டுகள் இடிமுழக்கம்போலவும் கடைசியாய் டும் என்று ஒரு குண்டோசையும் கேட்டோம், நல்லது வந்த கிழட்டுப்பிணம் வாய்திறந் தொன்றும்பேசாமல் தலைமயமட்டும் வெகுச் சௌடாலா வசைத்து நாற்புறமும் திரும்பிப்பார்த்துக்கொண்டுநிற்கிறதே. இதென்ன வேடிக்கை? அட்டகாசம் அதிகமாயிருக்கிறதே.

லட்சுமணன்:—அடே! பதட்டம்வேண்டாம். ஆத்திரக்காரனுக்குப் புத்தி மட்டு - இதோ பிரசங்கமாரி பொழியப்போகிறான்பார்.

விகடன் சிலநேரம் தலையையசைத்து நின்றுகொண்டிருந்து பேசுகிறவிதம்.

லேடீஸ் அண்டு ஜெண்டில்மென்! லேடிமார்கள்! பிரபுக்களே! வாழ்க வாழ்க, நீங்களெல்லோரும்வாழ்க, நானும்வாழ்க, நம் நாயனும்வாழ்க, உங்கள் குலம்வாழ்க, குடிவாழ்க, குபேரனும்வாழ்க, கோவணாண்டியும்வாழ்க, குஷ்டனும்வாழ்க, இஷ்டனும்வாழ்க, துஷ்டனும்வாழ்க, சிஷ்டனும்வாழ்க, குடியனும்வாழ்க, தடியனும்வாழ்க, சர்வஜனங்களும் குபேரசம்பத்துடையவர்களாய் எந்நாளும் வாழ்கவாழ்கவே.

உங்களுக்குச் சதா,

ஜயமுண்டாக, நயமுண்டாக; தனமுண்டாக, கனமுண்டாக;
மனமுண்டாக, குணமுண்டாக; அகமுண்டாக, சுகமுண்டாக;
அன்புண்டாக, தென்புண்டாக.

ஜயஜய, ஜயஜய, மஹாஜய;
ஜயஜய, ஜயஜய, மஹாஜய;
ஜயஜய, ஜயஜய, மஹாஜய.

வேரிவெல், ஜெண்டில்மென்! நம்மை நீங்கள்க்குத் தெரியுமா? ஹம்குத்தும் பைர்சான்தேஹோ?

என்னை நீங்களறிவீர்களா?

நன்று மீறு தெலுஸா—கொண்டீரா?

நான்தான்நாம் - நாம் என்றால் யார் தெரியுமா?

இதுபரியந்தம் எப்போதுவருவார், எப்போதுவருவார் என்று நீங்கள் யாவரும் எதிர்பார்த்திருந்தீர்களல்லவா? அவர்தான் நாம்.

கனவான்களே! நம்மை இப்போது தெரிந்துகொண்டீர்களல்லவா? என்னென்று தெரிந்துகொண்டீர்கள்? ஆசாமியைக் கண்டுகொண்டீர்கள். அதாவது நம்முருவத்தைப் பார்த்தீர்கள். நல்லது, அதுமட்டும்போதுமா? இல்லை இல்லை; பெயரையுந் தெரிந்துகொள்ளவேண்டும். விகடனென்று என்னைச் சாமானியமாய்க் கூறிவிடுவார்கள். அதனால் உங்களுக்குத் திருப்தியுண்டாகாது. என் பிரதாபமுள்ள பெயர்களையெடுத்துக் கூறுகின்றேன், கேளுங்கள்.

விகட மகுடாதிபதி, விகடச் சக்ராதிபதி, விகட மண்டலாதிபதி, விகட குண்டலாதிபதி, விகட பொக்கிஷ வீரமாமணி, விகட வித்வசிரோமணி, விகட சூக்ஷம சிகாமணி, விகட நவரத்ன மஹாமணி, விகடாலங்கார மகேந்திரமணி,

3. கூன்முதுகன் குறுமார்பன் பூணூல்காரன் குறித்துச்சொன்னால வனுக்குக் காலில்லை கையில்லை தலையுமில்லை. கட்டழகனொருவர் மேலேறிப் போவான் காலனையா கள்ளருக்குக் கண்டுகொள்ளே.

இருட்டு வேலையோ குருட்டு வேலையோ!

விகடானந்த வைரமுனி, விகட பராக்ரம சிங்கம், விகட திடகாத்திர தங்கம், விகட மஹாடோப சுதாப்பிரசங்கி, விகட விநோத ரத்னாகரம், விகட வித்வஜ்ஜன சேகரன், மஹா விகட மஹா ராஜ ராஜேந்திர ராஜகம்பீர ராஜவல்லாளராஜபூபால ராஜாதிராஜ ராஜபூஜித ராஜப்பிரதாப ராஜகோலாகல ராஜமார்த்தாண்ட மஹாப்பிரபு முதலிய இன்னும்பல திருநாமங்கள் எனக்குண்டு. ஆனால், இப்போது கூறிவந்த சில பெயர்களைமாத்திரம் கவனத்தில் வைத்துக்கொண்டால் போதும். எல்லாப்பெயர்களையும் ஞாபகத்தில் இருத்துவதென்றால் உங்களாலாகாது. என்னை அனந்த நாமாடம்பர அட்டஹாசன் என்று கூறுவார்கள்.

ஓ சோதரர்களே! என்னுடைய பெயரைமாத்திரம் தெரிந்துகொள்வதனாலும் பயனில்லை. உருவத்தாலும் பெயராலும் ஒருவரை மதிக்கவொண்ணாது. ஒதியமரம்போல் பருத்திருந்தாலும், நடப்பக்கட்டைக்குப் பட்டுக்குச்சி கட்டியதுபோல் நல்ல சிங்காரமான பெயரைத் தாங்கியிருந்தாலும் ஒருபயனுமில்லை. குணமிருந்தால் மணமுறலாம், ஆற்றலிருந்தால் நாற்றிசையும்புகழும். என் சாமர்த்தியத்தைச் சுருக்கிக் கூறுகின்றேன், சற்றே கவனம்வைத்துக் கேளுங்கள்.

நான் கண்ணின்றிப் பார்ப்பேன், காதின்றிக் கேட்பேன், வாயின்றி வசனிப்பேன், காலின்றி நடப்பேன், கையின்றி வேலைசெய்வேன். நான் துஷ்டநிக்கிரக சிஷ்டபரிபாலகன்; தாயாநுக்கிரக சாபமுடையேன்; வெற்றிக்கொடிநாட்டிய வீரப்பிரதாபன்; பந்தியிலிருக்குந்துஷ்டரைச் சந்தியிலிழுப்பவன்; தர்மகுணசீலனைத் தட்டிக்கொடுப்பவன்; அதர்ம பபோவியை அதட்டிக்கெடுப்பவன்: நியாயஞ்செய்வோரை ரத்நதிலில் விடுப்பவன்; அநியாயஞ்செய்வோரை ஆழ்நரகில் விடுப்பவன்; லஞ்சம்பெறுவோரைப் பஞ்செனப் பறக்கடிப்பேன்; கொடுங்கோன்மன்னர்கள் கொட்டத்தை யடக்குவேன், செங்கோன்மன்னரைச் செவ்வனே ஆதரிப்பேன்; சோரஞ்செய்வோரைக் கோரஞ்செய்துவிடுவேன்; விபசாரஞ்செய்பவர்க்கு அபசாரஞ்செய்வேன்; கூச்சநழுவோரை லஜ்ஜைக்குட்படுத்துவேன்; தஞ்சம்புகுந்தோரை நெஞ்சமகிழ்விப்பேன்; கதியற்றவர்க்கு நிதியிக்களிப்பேன்; மோசஞ்செய்வோரை நாசப்படுத்துவேன்; கொள்ளையடிப்போரைச் சிள்ளையில் விடுப்பேன்; குடியர்கள் செயலை கொடியினில் தவிர்ப்பேன்; பொய்யர்தம் வாய்க்குப் பூட்டிடவல்லேன்; லோபியர் பொருளீப பாபிகட் கழிப்பேன்; பலே! பலே!! பலே பேஷ்!!! என்சாமர்த்தியத்தைப் பார்த்தீர்களா? இமாசலம் குன்றினாலும் என்னிதயபலம் இம்மியளவும்குன்றாது. ஆழ்கடல் வற்றினாலும் என் அகண்டசாமர்த்தியம் அணுவளவும் வற்றாது. தினகரன் ஒளிகுறைந்தாலும் என் திடகாத்திரம் தினையளவுங் குறையாது. சந்திரசூரியர் தம் திசைமாறினும், சற்றுமென் புகழ் தான்மாறாது. உலகம்புரண்டாலும் என்னை ஒருவராலும் புரட்டமுடியாது. என்னாற்றலை இவ்வளவு அவ்வளவு என்று எவ்வண்ணம்

4. என்னிடத்திலிருக்கிறான் ஒரு சின்னப்பையன் அவனுக்கு அவயவங்களெல்லாமுண்டு நான் பார்க்கமுடியவில்லை மற்றவர்கள் பார்க்கின்றார்கள்.

ஈனருக்கிடங்கொடுத்தால் இல்லிடமுங் கைக்கொள்ளுவர்.

எடுத்துச்சொல்வேன். கடற்கரை மணலையும் ககனத்து நட்சத்திரங்களையும் கணக்கிட்டுமுடித்தாலும் என் அதிபல பராக்ரமசாமர்த்தியத்தை அளவிட்டுச் சொல்லப்போமா? ஆஹா! ஆஹா!! என்சாமர்த்தியத்திற்காக நானே அதிசயப்படும்போது நீங்கள் அதிசயப்படுவது பெரிய காரியமா? இன்னுங் கேளுங்கள் :—

பூரணம தானவரு ளானகுரு நாதனைப்
பூரித் தகம் மகிழ்ந்தேன்
புண்ணியம தானமெய் யென்றெண்ணி யென்னுடைய
புத்தி வைத்தே பணிந்தேன்
ஆரண மொழிந்தபடி கட்டியே சிவனையிங்
கரிய சிவிகையி லேற்றுவேன்
அதிசயக் கூத்தெலா மாட்டுவிப்பேன் காந்த
லாற மேருவை யுடைப்பேன்
வாரணம தானமத யானையைக் கொண்டுசிர
மாட்டியே தூளாக்குவேன்
மஹாசண்ட வக்ரப்ர சண்டனையு மோட்டுவேன்
வாழ்கண்ட கரையாட்டுவேன்
நாரணம தாகுங் கரந்தாச் செய்வனென்
சதுரரு சொலற் கெளியதோ
சகமீதும் விண்ணகத் தின்மீது மொருவரினை
சாற்றிட வெனக் கரியதே.

மதியதனை யென்கையில் வாவழைப் பேனதனை
வாராழி யாக்கி விடுவேன்
வானரவி யுமதுடோ லாக்குவேன் தகடாக
வைத்துவிடுவேன் சுருட்டிப்
பதியதைநீ ராக்கியே ஆற்றுவேன் காற்றிலே
பகலையிரு ளாக்கி விடுவேன்
பட்சமொரு நாழியிற் கொச்சிநவ நீதமாய்ப்
பண்ணிவிட்டே வருகுவேன்
நதியதனை வாள்கொண் டறுத்தெடுத்தே துண்டு
நாவாற் புசித்து விடுவேன்
நாகமதை கட்டியதை லோகமதில் விட்டுவெகு
நர்த்தனங்கள் புரிகுவேன்
கதியற்று நிதியாசை கொண்டலையு மாந்தருட்
களிகூர்ந்து மிடியொழியவே
கரியினையு மாதங்க மாக்கியே நல்குவேன்
கழறுமிவை யுண்மையாமே.

இவ்வளவுதான் என்சாமர்த்தியமென்று முடிவுசெய்துவிடப்போகிறீர்கள். பத்திரம்! பத்திரம்!! எச்சரிக்கை! எச்சரிக்கை!! இன்னும் அளவிறந்த சாமர்த்தியங்கள் எனக்குண்டு. அல்லும்பகலும் அனந்தகோடிகாலம் ஓயாமல்

(இதன் தொடர்ச்சி 9-வது பக்கத்தில்.)

5. பூலோகத்திலே இப்புலவனைப் பின்பற்றத்தக்க வல்லவன் யாவன்?

கடவுள் அடியைக் கனவிலும் மறவாதே.

MADRAS UNANI MEDICAL HALL.
மதராஸ் யூநாநி ஔஷதசாலை.

சென்னப்பட்டணம் சௌக்கார்பேட்டை சின்னக்கடை
அம்மன் கோவிலுக்கெதிரில் 439 நே. ஷாப்பு.

முகவுரை.

சர்வவல்லமையுடைய கடவுளினது கிருபையினால் இந்த யூநாநி ஔஷதசாலை 1894வருடம் ஜனவரிமீ ஸ்தாபிக்கப்பட்டு இதில் கையாளப்பட்டு வருகின்ற மஹா மேன்மையான ஔஷதங்களினால் உள்ளூரிலும் வெளியூர்களிலும் அதிக கீர்த்திபெற்று தினேதினே விர்த்தியடைந்து வருகின்றதாகையினால், எமது நண்பர்களில் பலபேர்களின் வேண்டுகோளின்படி, ஏழைமுதல் தனவந்தரீறாக எல்லா ஜனங்களுக்கும் உயர்த்தியான பல ஔஷதங்களைச்செய்து சகாயமான விலைக்குக் கொடுக்கும்படியாக இதனை விரிவாக்கியிருக்கின்றோம். கனவான்களே! இக்காலத்தில் பல பத்திரிகைகளாலும் அறிக்கைகளாலும் ஔஷதங்களைப் பலவிதமாய்ப் புகழ்ந்துபேசி அநேகர் விற்றுவருகிறார்கள். அவற்றுள் சில ஔஷதங்கள் சுகுணத்தைக்கொடுத்து வியாதியை சுவஸ்தப்படுத்திவிடுவதும், சில துர்க்குணத்தைக்கொடுத்து விபரீதமான வேறு பல வியாதிகளை உற்பத்தியாக்கிவிடுவதும், சில ஒரு குணமுஞ் செய்யாமல் வியாதியை முன்னிருந்த ஸ்திதியிலேயே வைத்துவருவதும் அனேகர் அறிந்திருக்கிறார்கள். குணமுள்ள ஔஷதங்கள் இன்னதென்றும், குணமில்லாதவை இன்னதென்றும் தெரிந்துகொள்ளாமல் பெருந்தொகையான பணத்தை விருதாவிற் செலவுசெய்து ஜனங்கள் ஏமாந்துவருகிறதும் பலர் அறியாததல்ல. இவ்வித குறைகளை நிவர்த்திசெய்யும்படியாகவும் ஏழை ஜனங்களும் எளிதில் வாங்கி சாப்பிட்டு சௌக்கியமடையும்பொருட்டும், எமது யூநாநி குடும்ப ஔஷதங்களை பகிரங்கத்திற்குக் கொண்டுவந்தோம். இவ்வவுஷதங்கள் அனேகவருஷங்களாய் அனுபோகஞ்செய்து பரீட்சித்துத் தேர்ந்தெடுக்கப்பட்டவைகளாதலால் சொன்னதுசொன்னபடி வியாதிகளை நிர்மூலமாக்கக் கூடியவைகளாகவுமிருப்பதைப் புகழ்ந்துபேசுவது தற்புகழ்ச்சியாகுமாகையினால் ஜனங்கள் முந்தி சில ஔஷதங்களைவாங்கி அவைகளைப் பரீட்சைபார்த்துத் திருப்தியடைந்தபிறகு தங்களுக்குத் தேவையுள்ள மற்ற ஔஷதங்களுக்கெழுதி வரவழைத்து உபயோகிக்கலாம். அப்போது எமது ஔஷதங்களின் பெருமையைத் தெரிந்துகொள்வார்கள். இன்னும் இவ்வவுஷதசாலைக்கு ஒரு பெருமைகிடைத்திருக்கிறது; எவ்வாறெனின்: ஐதராபாத் நவாப் H. H. நிஜாம் அவர்களின் அரண்மனை பிரேட்ட வைத்தியராயிருந்த அக்கீம் முனவ்வர் கான்பகதூர் அவர்களிடத்தில் 20 வருஷம் சிகிச்சை

6. காலையில் கோட்டைகட்டிக் கம்பகல் புத்தூச்செய்து மாலையில் பிரித்துப்போடும் மல்லவர் யார் ?

உம் என்றாளாம் காமாட்சி கட்டிக்கொண்டாளாம் மீனாட்சி.

கற்றபின் மூலிகைகளின் சாராம்சங்களையும் பிரயோஜனங்களையும் பரீட்சித்து அறிந்துகொள்வதற்காகப் பல தேசங்களிலும் காடுமலைகளிலுந் திரிந்து அநேக மூலிகைகளின் ஆச்சரியமான குணங்களை ஆராய்ச்சிசெய்து ஆங்காங்குள்ள சன்னியாசிகள் யோகிகள் பக்கீர்கள் முதலியோர்களுக்குப் பலவிதத்தில் தொண்டுசெய்து அவர்களிடத்தில் பல சட்கா முறைகளையும் கற்றுக்கொண்டு பலதேச யாத்திரையில் அநேகருக்குப் பல கொடிய வியாதிகளைத் தீர்த்து 25 வருடகாலம் இவ்வாறு சுற்றுப்பிரயாணம் செய்தபின் தற்போது மதராஸில் வந்து வசிக்கும் அக்கீம் முஹம்மது இபுராஹீம் சாயபு அவர்களும் இந்த ஔஷதசாலையில் பங்காகச்சேர்ந்து ஒற்றுமையுழைத்து வருகிறபடியால் இங்கு செய்யப்படுகின்ற ஒவ்வொரு ஔஷதமும் அபூர்வமானதும் ஆச்சரியப்படத்தக்கது மென்பதில் ஆட்சேபணையே இல்லை. பலபேர்களிடத்தில் மருந்து சாப்பிட்டு பலனடையாமல் மனவெறுப்பு அடைந்தவர்களாயிருப்பினும் ஒரேதடவையில் நம்முடைய மருந்துகளை உபயோகித்துப்பார்த்தால் சந்தோஷமடைவார்களென்பது திண்ணம். பழையவியாதி புதியவியாதி எவ்வகை ரூபமாயிருப்பினும் அதைத் தீர்ப்பதற்குத் தக்க ஔஷதம் இங்கு உண்டு. வெளியூரார் வியாதியின் தன்மையைத் தெரிவித்தால் தக்க ஔஷதம் அனுப்பிவைப்போம்.

மேலும், நம்முடைய சிறந்த ஔஷதங்களை எல்லாஜனங்களும் வாங்கி உபயோகித்து சௌக்கியமடையவேண்டுமென்னும் பரோபகாரசிந்தையினால் இந்தக்காட்லாக்கு பலபேர்களுடைய பார்வைக்கும் வரவேண்டுமென்னும் நோக்கத்துடன் அநேக விகடவிநோதக் கதைகளுடன் விகடாலங்காரப் புத்தக ரூபமா யியற்றப்பட்டிருக்கிறது.

☞ குறிப்பு:—சென்னை மாபூஸ்கான்தேவடியில் டாக்டர், டீ. முஹம்மது கௌஸ் சாஹிபு அவர்களால் அஞ்சுமனே கௌஸியா என்னும் நாமத்துடன் ஒரு தருமசாலை அநாதரானையான ஏழைப்பிள்ளைகளுக்கு கல்வி, கைத்தொழில் முதலியவை கற்றுக்கொடுப்பதற்கு ஏற்படுத்த முயற்சிசெய்து வரப்படுகிறதாகையினால் அந்தத் தருமசாலைக்காக இந்த ஔஷதசாலையின் வரும்படியில் ஒருபாகத்தை சேர்ப்பிப்பதற்குத் தீர்மானம் செய்திருக்கிறோம்.

விஞ்ஞாபனம்:—தனவான்களே! நம்முடைய ஔஷதசாலையில் ஔஷதங்கள் வாங்கிச் சாப்பிட்டு தேகாரோக்கியமடைந்த பரோபகாரசிகாமணிகள் மேலே கூறப்பட்டுள்ள அஞ்சுமனே கௌஸியா வென்னும் நாமமுடைய தருமசாலைக்கு தங்கள் இயல்புக்கும் பிரீதிக்கும் தக்கபடி பொருளுதவி செய்யும்படியாகக் கேட்டுக்கொள்ளுகிறோம். அப்படி அனுப்பும் தொகையை சென்னை பாபமஸ்பிராட்வே 28, 29-நெ. ஷாப்பில் அஞ்சுமனே கௌஸியா என்னும் தருமசாலைக் காரியதரிசியாகிய டாக்டர், டீ. முஹம்மது கௌஸ் சாகேபு அவர்கள் பேருக்கு அனுப்பவேண்டியது.

இங்ஙனம்,

அக்கீம் முஹம்மது இபுராஹீம் சாயபு,

மானேஜர்.

8. காலையில் நான்கு கால் நடுப்பகல் இரண்டுகால் மாலையில் மூன்றுகால் வளமாவளர்க்கும் ஜந்து எது?

முக்கியக்குறிப்பு.

1. வெளியூரார் வியாதியஸ்தரின் வயது, தேககுபாவம், வியாதியின் குணங்கள் முதலியவைகளை விபரமாய் எமக்குத் தெரிவித்து தக்க ஔஷதங்கள் பெற்றுக்கொள்ளலாம்.

2. சாமான்கள், முற்பணத்திற்கும் வி பி. மூலியமாகவும் அனுப்பப்படும். 4 அணாவுக்குக் குறைந்த ஆர்டர்களுக்கு வி. பி. ஸிஸ்டம் கிடையாதாகையால், ஷை தொகையுடன் 2 அணா சேர்த்து போஸ்டேஜ் லேபில்வாங்கி யனுப்பிவிட்டால் சாமானை அன்ரிஜிஸ்டர்பார்சலாக அனுப்பப்படும். 10 ரூபாய்க்கு மேற்பட்ட ஆர்டராயிருந்தால் சாமான்களின் முழுத்தொகை அல்லது கால்பாகமாகிலும் முந்தி அட்வான்ஸாக அனுப்பவேண்டும். பாக்கித்தொகைக்கு வி. பி. அனுப்பப்படும்.

3. கடிதத்திற்கு பதில் விரும்புகிற பெயர்கள் ½ அணா லேபில் அல்லது ரிப்ளைபோஸ்டு கார்டுடன் எழுதவேண்டும்.

4. பார்சல்களுக்கு போஸ்டேஜ் சார்ஜ் உடையவர்களே கட்டி பார்சலை ஒப்புக்கொள்ளவேண்டும்.

5. ரெயில்வே ஸ்டேஷனுக்கு அருகாமையிலுள்ளவர்கள் அந்த ஸ்டேஷன் பெயரைத் தெரிவித்தால், பார்சல்கள் ரெயில்வே மூலியமாய் அனுப்பப்படும். அப்போது சார்ஜ் குறைவாய்வரும்.

6. மருந்துகளை யுபயோகப்படுத்துங் கிரமங்கள் பத்தியபாகங்களின் விபரங்கள் முதலிய குறிப்புகள், மருந்துகளனுப்பும்போது சேர்த்தனுப்பப்படும். இதில் குறிக்கப்பட்டிருக்கும் மருந்தின் பிரமாணங்கள் பெரிய மனிதர்களுக்கேயாகையால் சிறுவர்களுக்கு வயதுக்குத்தக்கபடி குறைத்துக் கொடுக்கவேண்டும்.

7. மருந்துகளைப்பற்றிப் பேசும்போது டைரக்ஷன் என்று எழுதியிருப்பதின் அர்த்தம் என்னவென்றால், மருந்து சாப்பிடுகிற விபரம், பத்தியபாக முதலியவைகள் எழுதியிருக்கும் கடுதாசி. இது மருந்து அனுப்பும்போது சேர்த்தனுப்பப்படும்.

மேல்விலாசம்.

எமக்கனுப்பப்படும் கடிதங்கள், மணியார்டர்கள், செக்குகள், உண்டியல்கள் முதலியயாவும்

சென்னப்பட்டணம் சௌக்கார்பேட்டை

சின்னக்கடையம்மன் கோயிலுக்கெதிரில் 439 நெ.

பூநாநி ஔஷதசாலை மானேஜருக்கு

என்று எழுதல்வேண்டும்.

எட்டிக்குப்பால்வார்த்து வளர்த்தாலும் தித்திப்புண்டாகுமா?

(5-ம்பக்கத் தொடர்ச்சி,)

எடுத்துரைத்தாலும் அவைமுடிவுபெறா. கண்ணின்றிப்பார்த்தல், காதின்றிக்கேட்டல் முதலிய அரும்பெருஞ்செயல்கள் சர்வசாமர்த்தியமுள்ள கடவுளொருவருக்கே யுரியனவாயிருக்க, அவை எனக்கெப்படி சித்தித்தனவென்று உங்களிற் சிலர் முணுமுணுக்காம லிருக்கமாட்டீர்களென்று எனக்குத் தெரியும். ஆயினும் நானுரைத்தவைபொய்யன்று. உண்மை யுண்மையே. அதையும் உங்களுக்குத்தெள்ளிதின் விளங்கச்சொல்லி விடுகிறேன் கேளுங்கள். கடவுளை சதாவிசுவாசித்து மனமொழிமெய்களால் அவருக்குக்கீழ்ப்படிந்துபணிவுடன்நடப்பவர்கள்மீது அவர் அதிக அன்புபாராட்டி அவர்கள் கேட்ட வரங்களையெல்லாம் இல்லையென்னாமல் அநுக்ரகித்து வருகிறார், அப்படிப்பட்ட வரப்பிரசாதிகளுடைய லிஸ்டில் நானும் தாக்கலானவனாகையால் என்பேரில் கடவுள் ஸ்பெஷலாக அதிக அன்புவைத்து நான் கோரியபடி இத்தகைய பேருதவியெனக்குப் பிரசாதித்திருக்கிறார். ஆகையால் என்னைச் சாமனிய மனிதனென்று எண்ணிவிடாதீர்கள்.

"உருவுகண்டெள்ளாமை வேண்டுமுருள்பெருந்தேர்க்
கச்சாணியன்னாருடைத்து"

என்கிற பெரியோர்மொழிப்படி உருவத்தின் பெருமையா லொருவனைப் பெரியவனென்றும், உருவத்தின் சிறுமையாற் சிறியவனென்றும் மதித்தல் கூடாது. நான்வில்லாதி வில்வீரன், சூராதி சூரன், சண்டப்பிரசண்டன். என்று தெளிந்துகொள்ளுங்கள். பெண்சாதி மெச்சாப்புருஷன் புருஷனல்லவென்று பாட்டிமார்கள் பல்லை இளித்துக்கொண்டு பலமுறைகளில் பகரநான் கேட்டிருக்கின்றேன். இதைச்சற்றே செவிசாய்த்துக் கேளுங்கள். என் பெருமையேபெருமை. என்மகிமையேமகிமை. என் சாமார்த்தியத்தைச் சொல்ல எனக்கே வரவில்லை. என்பெண்சாதிகூட என்சாமர்த்தியத்திற்காக என்னைப்பெரிதும் புகழ்ந்துபாடியிருக்கிறாள் பாருங்கள்.

தீயேசுடுமென்பர் தெண்ணீர்குளிருமென்பர்
ஈயேபறக்குமென்ப ரின்னமூர்தான் - பாய்காகஞ்
சத்தக்கறுப்பென்பர் சூழ்கொக்குவெண்மையென்பர்
அத்தானைப்போற்சமர்த்தர்யார்.

என்கண்மணிகளே! என்னுடைய வயது என்னவென்றுங்கட்குத் தெரியுமா? சிலர்வயதுகேட்டால் சொல்லப்பின்னிடுவார்கள். அதவாச்சொன்னாலும் சரியாகச்சொல்லமாட்டார்கள். நானோசிறிதும் ஒளித்துரையேன். உள்ளதையுள்ளபடிச்சொல்லுகிறேன் அதையும்கேளுங்கள். உலகம் என்று சிருஷ்டிக்கப்பட்டதோ அன்றே நானும் சிருஷ்டிக்கப்பட்டிருக்கிறேன். உலகம் அழிக்கப்படும் தினத்திலேதான் என்னுடைய ஆத்மா இந்தச்சரீரத்திற்குகூட்டை (Good bye) சொல்லி வெளிப்படும். இப்போது என்னுடைய வயதை

என்டிபாட்டி மஞ்சள் குளித்தாய்? என் பழைய நினைப்புடா பேராண்டி.

நீங்களேகணித்துக்கொள்ளலாம். என்னை அகாதிவிகடத்தாத்தா வென்றும் பழயபாட்டாவென்றுங்கூட உலகத்தார் புகழ்ந்துரைப்பார்கள். நான் தற்போதும் யௌவனவயதுடையவனாகவே யிருக்கிறேன். கிழவ னென்று கணித்துவிடாதீர்கள். ஆனால் என்னுடைய முற்பற்களிரண்டும் ஆப்சண்டா (Absent) யிருக்கின்றனவேயென்று சற்றுசமுசயப்படுவீர்கள். அதன்காரணத்தையுங் கூறிவிடுகிறேன் கேளுங்கள். அதனாலேயே நான் யதார்த்தவாதியென்று நீங்கள் தெரிந்துகொள்வீர்கள்.

முஹம்மதியர்களால் நூஹ்நபியென்றும் கிரிஸ்தவர்களால் நோவாவென்றும் புகழ்ந்தோதப்பட்ட பெயருடைய தீர்க்கதரிசியொருவர் பூர்வகாலத்திலிருந்தார். அவர்காலத்தில் உலகமுற்றிலும் அழிந்தொத்தக்க மஹாபெரிய ஜலப்பிரளயம் ஒன்றுண்டாயிற்று. ஜகமுழுவதும் ஜலப்பிரவாகத்தால் நிறைவுற்றிருந்தது. உலகிலுள்ள எல்லாப்பர்வதங்களிலும் மிகவோங்கிவானத்தையளாவியதென்று சிலாகித்துச்சொல்லப்படும் இமாசலத்தின் சிகரங்கள் கூட இம்மஹா ஜலப்பிரவாகத்தைக்கண்டுநடுநடுங்கி வெளியே தலைநீட்டாமல்தண்ணீர்க்குள்ளேயே தம்தலைகளை மறைத்துவைத்துக்கொண்டன. ஜலத்தைத்தவிர வேறொருவஸ்துவும் கண்ணுக்குப்புலப்படவில்லை. அப்போது இந்தத்தீர்க்க தரிசிக்கிழவரும்பயந்து ஒருகப்பலைச்செய்து தாமும் தம்பரிவாரங்களும் அதிலேறிக்கொண்டு உலகத்தைச்சுற்றி வந்துகொண்டிருந்தார்.

நான்தான்வல்லாளகண்டனாயிற்றே. சாகாவரம்பெற்ற சதுரனல்லவா? இந்தப்பிரளயத்துக்குப்பயந்த ஆசாமியா? நெஞ்சில் கொஞ்சமும்அஞ்சாமல் ஜலத்தில் நடந்துகொண்டுதான் போகிறேன். கடலாழம் கணைக்காலுள்வாகும் எனக்குப் பிரளயம் வாயளவுதானிருக்கிறது. இவ்வாறு நடந்துபோய்க்கொண்டேயிருக்கையில் தீர்க்கதரிசியினுடைய கப்பல் எதிரேவந்துவிட்டது. கிழவர்நம்மைக்கண்டால் கப்பலில் ஏறிக்கொள்ளச்சொல்வரேயென்று பயந்து ஒருபக்கமா யொதுங்கித் தலைமறவாய் போய்க்கொண்டிருந்தேன். அப்போது ஒரு சுழற்காற்றுகிளம்பியதால் கப்பல் நிதானமாய் நிலைநிற்கமாட்டாமல் கிறுகிறுவென்று சுழன்று நானிருக்கும் பக்கமாக வேகத்துடன் தாக்கப்பட்டுவந்து என் மூஞ்சியில் உரப்பாய் மோதிற்று. நான் என்னையின் வலிவெல்லாங்கொண்டு, தாங்கித்தள்ளியும் அதின்பலத்ததாக்கினால் என்முன்பற்கள் இரண்டும் விழுந்துபோயின. அதனால் யான்சிறிதும் பாதைப்பட்டேனில்லை. ஆயினும் அதினின்றும் பெருக்கெடுத்தோடிய ரத்தத்தால் உலகில் நிறைந்துள்ள பிரளயமுழுவதும் இரத்தமயமாய்விட்டது. அதைக்கண்ணுற்ற அந்தப்பெரிய கிழவர் பயந்து நடுநடுங்கிவிட்டபடியால் அவருக்குக் குளிரும் காய்ச்சலும் உடனேவந்து மூடிக்கொண்டது. தக்ஷணமே நான் சமீபத்திற்சென்று ஐயா பெரியவரே! பயப்படாதீர், நான்தான் விகடனென்றேன். அண்ணவாரும் என்றார். சிறிதுநேரம் அவருக்குத்தேறுதல் சொல்லிவிட்டு நான் கிழேயிறங்

10. மாமா மணம்பண்டால் அத்தை நீரென்னசெய்வீர்? நான் கட்டிப்பிடித்து கையால்தடவி தென்புப்படுத்தி தேற்றிக்காலே மேலே போடுவேன்.

ஜவருக்குந்தேவி அழியாத பத்தினி.

இவத்துவிட்டேன். இந்தச்சம்பவம் நடந்து நெடுங்காலம் ஆய்விட்டதென்று நினையாதீர்கள். இப்போதுதான் சமீபத்தில் சுமார் (4000) நாலாயிர வருஷத்திற்கு முன்நடந்தது. அப்போது நடந்தவிஷயங்களை உங்களுக்குச்சொல்ல வேண்டுமானுல் மஹாபாரதமாகவும் இராமாயணமாகவும்முடியும். அதையம் மட்டில் நிறுத்தி நாம் எடுத்துக்கொண்ட விஷயத்தைக்கவனிப்போம். என் முன்பற்களிரண்டு மில்லாமையாய்ப்போனமைக்குக் காரணத்தை உள்ளபடியொளியாமலுரைத்துவிட்டேன் எந்தவிஷயத்தையும் கண்டு கேட்டுத்தெளியவேண்டுமென்று பாட்டன்மார்கள் பல்லிளித்துக்கொண்டு சொல்வார்களல்லவா? அது பொய்யன்றுவாஸ்தவமே. நீங்கள் முந்தியென்னைக் கண்டுகொண்டீர்கள். பிறகு என்பெயரைத்தெரிந்துகொண்டீர்கள். அப்புறம் என் சாமர்த்தியங்களையும் சொல்லக்கேட்டீர்கள். அவ்வளவில் நீங்கள் திருப்தியடைந்துவிட்டீர்களா? வெல்லம் என்றுசொன்னுல் வாய்தித்திக்குமா? தின்றுபார்த்தாலன்றோ இன்சுவைதெரியும். எட்டிச்சுரக்காய் கறிக்குதவுமா? அதுபோல் என்வாய்ப்பிரசங்கத்தால் என்சாமர்த்தியத்தை எவ்வாறு அறிந்துகொள்வீர்கள். அனுபவத்தாலன்றோ தெளியவேண்டும். நான் அளந்த அளவுகளெல்லாம் உங்கள்புத்தியில் உண்மையென்று பதிவிப்பதற்காக இன்று முதல் நாடோறும் இந்தமைதானத்தில் இயற்றப்பட்டுள்ள இம்மேடையில், யான்நின்றுகொண்டு மாலை 5 மணிமுதல் 6 மணிவரையில் பிரசங்கஞ் செய்வேன். தினந்தோறும் எல்லோரும் தவறாமல் வந்து கேளுங்கள். நான் வெகுகாலத்துப்பழைய பெருச்சாளியாகையால் இக்காலத்துள்ள ஒருவருக்கும் தெரியாத அனேகபுராதன விஷயங்களை வண்டிவண்டியாய் கப்பல் கப்பலாய் என் பாக்கெட்டில் பத்திரப்படுத்தி வைத்திருக்கிறேன். அவைகளை யெல்லாம் உங்களுக்கு அப்படியப்படியே மொத்தமொத்தமாக அளந்து கொட்டிவிடுவேன். அப்போது என்சாமர்த்தியம் உங்கள் அநுபவத்தில் செம்மையாய்ப்பதிந்துவிடும். என்னுடைய பிரசங்கத்தில் அதிஅற்புதமானவிகடங்கள், நீதிசாரவிஷயங்கள், ஞானமார்க்கங்கள், பூர்வீகக் கதைகள் தமாஷ்க்கதைகள் முதலிய பல அருமையானவிஷயங்கள் அடங்கியிருக்குமாதலால் இவற்றால் நீங்கள் பலவிதநன்மைகளைப்பெறுவீர்கள் என்பதற்குச் சந்தேகமில்லை. கேட்டபிறகன்றோ தெரியும். அப்பா! இவ்வளவுபுராணங்களை இவர் எப்படி ஞாபகத்தில் வைத்திருந்தாரோ? இவர்மனிதரல்ல, தெய்வப்பிறப்பென்று மூக்கின்மேல் விரல்வைத்து பேசிக்கொள்வீர்கள். புத்தியை வேறுவிஷயங்களிற் செலுத்தாமல் கவனமாய்க்கேளுங்கள்.

பூலோகத்தில் மூவரே பூச்சக்ரவர்த்திகள்.

பல அரசரைத்தமக்குக் கீழ்ப்படுத்தி அவர்களிடத்தில் கப்பம் பெற்று அரசாண்டுவரும் வேந்தருக்குச் சக்ரவர்த்திகள் என்றுபெயர். இவர்கள் பூமியில் சிலபாகங்களைமாத்திரம் ஆண்டுவருவார்களேயல்லாமல் பூலோக முழு

11. முன்னே வெறுத்த முலையில் நனைந்து நடுவேசெய்த்து நடக்குமிவன்கண்டது கண்டாற்போல் காணமற்போகின்றுன்பார்.

மையுமல்ல. ஆனால் பூலோகமுற்றிலும் செங்கோல்நடாத்தி, ஒரேகுடையில் அரசாண்டு வருவோர்க்குபூச்சக்ரவர்த்திகள் என்றுபெயர். அத்தகைய பூச்சக்ர வர்த்திகள் இப்பூவுலகிற்கு மூவரேயிருக்கின்றனர்.

1-வது. முதலாவது சக்ரவர்த்தியார்தெரியுமா? சர்வசாமர்த்தியம், சர்வ வியாபகம், சர்வஞானம், முதலிய சற்குணங்களை ஆபரணமாகப்பூண்டுள்ள சர்வஜீவதயாபரக்கடவுளாகிய பரம்பொருள் ஒருவரே. இவர் பூவுலகத்திற்கு ஏக சக்ராதிபதியா யிருப்பதன்றியும், சகலலோகங்களுக்குமே மஹாசக்ரவர்த்தி யாயிருக்கிறார்.

2-வது. உவது சக்ரவர்த்தியை சொல்லிவிடட்டுமா? அது மூட்டுப்பூச்சி மஹாத்மாக்கள் தான். இந்த மஹாபிரபுக்கக அற்பப்பிராணிகள் மானிடர் வசிக்கும்இடங்களிலெல்லாம் சர்வபரிபூரண சஞ்சாரஞ்செய்து எங்கும்வெற்றி கொண்டு தம்முடைய அதிகார பராக்ரமங்களைத் திசாமுகங்களிலெல்லாம் செலுத்திக்கொண்டு வருகிறபடியாலும், இவைகள் சஞ்சரியாத இடம் நாஸ்தி (சைபர்) யாகையாலும், இவை இரண்டாவது பூச்சக்ரவர்த்திகளாகக் கணிக்கப்பட்டிருக்கின்றன.

3-வது: மூன்றாவது ஆஸாமியைக்காட்டிவிடுகிறேன் பார்த்துக்கொள்கிறீர்களா? மஹாவிகடமருட்ராதிபதி மண்டலேஸ்வரப்பிரபுவாகிய நான்தான்.

மஹாபூச்சக்ரவர்த்திகளாகிய எங்கள் மூவரைத்தவிர மற்ற சக்ரவர்த்திகளைப்பூச்சக்கரவர்த்திகள் என்பது தகாது. அப்படிச்சொல்வது நொள்ளைக் கண்ணனைச்செந்தாமரைக் கண்ணனென்பது போலாம். அவர்களெல்லாம் எங்களைப்போல் கிரேட்எம்பெரரஸ் (Great Emperors) ஆகார்கள். ஸிம்பில் (Simple) சக்ரவர்த்திகளேயாவர்.

மைடியர்பிரண்ட்ஸ்! (My dear friends) இப்போது முதலாவது மஹாசக்ரவர்த்தியாகிய பரமாத்மாவைப்பற்றி சில குறிப்பானசங்கதிகளைமாத்திரம் இங்கேசொல்ல உத்தேசித்திருக்கிறேன். ஏனெனில் அந்த அகண்டசாமர்த்தியமுள்ள மஹாபிரபுவின் சக்திப்பிரதாபங்களை முற்றிலும் பேசவேண்டுமாயின், என்னாலும் என்மூதாதைகளாலும் மற்றெவராலும் முடியவே முடியாது. அவரவர்களுடைய புத்திக்கெட்டியமட்டில் அவருடைய புகழை யெடுத்துப் பேசுவது ஊசிக்கண்ணால் ஆகாசத்தைப்பார்ப்பதொக்கும். சத்தசமுத்திரங்கள், கடல்கள், ஏரிகள், ஆறுகள், குளங்கள், குட்டைகள் மடுக்கள், கிணறுகள் தூரவுகள் முதலிய நீர்நிலைகளிலுள்ள ஜலத்தையெல்லாம் ஒருசொட்டு இங்கியாக்கியும், உலகம் சிருஷ்டியான தினமுதல் முடிவுபரியந்தம் உதித்தும் மரித்தும்போன ஜீவராசிகளை யுயிர்ப்பித்தும், உயிரோடிருக்கிற மனிதர்களையும், மிருகங்களையும் பறவைகளையும், ஊர்வன, நீர்வாழ்வனவாகிய எறும்புமுதல் யானைமுதலுள்ள சகலபிராணிகோடிகளையும் ஒன்றுசேர்த்து ஓரிடத்தில் இருத்திவைத்து, உலகில் காடுமலை வனம் வஞ்ந்தாம் காகிதமாம்

12. உலகமெலாம் நிறைந்திருக்கும் ஒருவனுண்டு உண்டென்று தெரிந்ததுண்டு கண்டதில்லை உண்மை இவனில்லாத உலகமில்லை உம்பரனுங் கடவுளல்ல உணர்ந்து சொல்லே.

ஓடிப்போன புருஷன் வந்து கூடிக்கொண்டாளும்,
உடமைமேல் உடமைபோட்டு மினுக்கிக் கொண்டாளாம்.

முதலிய எல்லாவிடங்களிலும் உற்பவித்துள்ளவும் அழிந்துபோனவுமான புல் பூண்டு வேர்விறகு மரம் மட்டை கிளை கொம்பு இலை ஈர்க்கு முதலியவற்றை (அழிந்துபோனவற்றை மறுபடியும் உண்டாக்கியும்) பேறுவாக்கியும், பூலோக முழுவதையும் கதோசியாக்கியும், ஒவ்வொரு பிராணிகையிலும் ஒவ்வொரு பேனுவைக்கொடுத்து அந்த மஹாபூச்சக்ரவர்த்தியின் புகழை எழுதும்படி உத்தரவளித்து, அவை உலகாரம்பமுதல் அந்தம்வரையில் இடை விடாமல் உட்கார்ந்து சோர்வின்றி யெழுதினாலும் லட்சங்கோடியில் ஒருபாகத்தையேனும் எழுதி முடிக்கச்சாத்தியப்படாது. ஆகையால் அவர்விஷயம் எடுத்துப்பேசுவது என்தரமன்று. ஆயினும் என்னளவுக்கேற்றபடி ஒரு சிறிதேனும் ஒரு வாறெடுத்துக் கூறுகின்றேன் கேளுங்கள். சர்வசக்தியுள்ள ஒரே கடவுளைத்தவிர வேறேகடவுள் கிடையவேகிடையாதென்று ஒருக்கால் இருக்கால் முக்காலும் சத்தியப்பிரமாணமாய்ச் சொல்லுகிறேன். அவர் ஒருவரே அழியாதவஸ்து. ஒருவராகிய அவரே வணக்கத்துக்குரியவர். இன்பதுன் பமற்றவரவரே. தமக்கொரு தாயுந்தந்தையும் தாரமும் தநயருமின்றிய ஏகாங்கியும் அவரே. அண்டகோடிகளை சாட்டையில்லாப் பம்பரம்போலாட்டுகின்றவரவரே. கிருபாநேத்திரத்தாற் சதா நம்மைப்பார்ப்பவரும் அவரே. எள்ளுக்குள் எண்ணெயைப்போன்று எங்கும் நிறைந்துநிற்கும் இறைவரும் அவரே.

ஆகையினால் அவருடைய புகழையும் மகிமையையும் எடுத்துரைப்பதற்கு எவராலும்முடியாது. கடவுள்சர்வக்ஞர், சர்வசக்தர், சர்வேசுரர், சர்வகாரணர், சர்வகற்பிதர்; சர்வநியந்தா, சர்வாந்தரியாமி; அவர்தீனகிருபாகரர், சிலமனோகரர், ஞானதிவாகரர், நற்குணசாகரர், பரமபவித்திரர், பக்தர்கள் மித்திரர், தர்மசமுத்திரர், சகலவிசித்திரர்; அகிலநிர்வாகர், ஆனந்தயோகர், இகபரத்தியாகர், இன்பப்பிரவாகர், அவர்மோட்சதாதா, மூலவேதா, சாட்சாத்மாதா, சர்வக்கியாதா; அவர் ஆதிமத்தியாந்தரகிதர், சோதிசித்தியாந்தசகிதர், வேதசித்தாந்தவிகிதர், போகவிருத்தாந்தலிகிதர், கபடநாடகருத்திரர், தபனகோடிகாத்திரர் உபஞானநேத்திரர் அபயமோட்சக்ஷேத்திரர், அவர் பாவநாசகர், ஜீவநேசர், தேவராசர், மஹாவிலாசர், இவ்வித அநந்தகலியாணகுணங்களையுடைய பராபரவஸ்துவினுடைய மகோந்நதப்பிரதாபத்தை முற்றிலும் அறிவதற்குயார்தரம்.

ஆஸ்திகர் கடவுள் உண்டென்றும் நாஸ்திகர் கடவுள் இல்லையென்றும் பேசுகிறார்களல்லவா? இவ்விஷயத்திற் சிறிது கவனத்தைச் செலுத்துவோம். வித்தில்லாத சம்பிரதாயம் மேலுமில்லை கீழுமில்லை என்கிறபடி, ஆதாரம் இல்லாமல் ஆதேயம் இல்லை. காரணமில்லாமல் காரியமில்லை. வித்தில்லாமல் மரமில்லை. தாயில்லாமல் பிள்ளையில்லை. கோழியில்லாமல் முட்டையில்லை. தலைவனில்லாமல் படையில்லை. முதலில்லாமல் வர்த்தகமில்லை. ஆகையால் பர

13. காலில்லை கையில்லை கண்கள் உண்டு வாயுண்டு சிறகுண்டு வலிவான ஓட்டமுண்டு வானத்தில் பறவாது
பூமியில் நடவாது வகையாக உரைத்திடுவீர் வன்மை கண்டே.

ஆனையிருந்து அரசாண்ட இடத்தில் பூனையிருந்து புலம்பி அழுகிறது.

மாத்மாவாகிய முதற்பொருளில்லாமல் பிரபஞ்சமேயில்லை. கடவுளில்லாமல் உலகமுண்டாயிற்றென்பது தாயில்லாமல் பிறந்திருக்கிறேனென்பதை யொக்கும். 10 - 100 - 1000 - 10000 முதலாகிய எண்கள் ஒன்று என்னும் முதல் மூலாதார எண்ணினின்றும் உற்பத்தியாயிருக்கிறதேயன்றி, ஒன்றென்பதில்லாவிடில் வேறொன்றுமேயிராது. உலகத்தார் பண்டைக்காலந்தொட்டு பேரிடி முழக்கம்போல் ஜயபேரிகை யடித்துவரும் கடவுளுண்மையை மறுப்பவன் பேயோடொப்பாவான். இதை, "உலகத்தாருண்டென்ப தில்லென்பான் வையத் - தலகையாவைக்கப்படும்" என்று ஆன்றோர்களும் கூறியுள்ளார். இல்லை இல்லை என்றிரவும்பகலும் நனவிலும் கனவிலும் இடைவிடாமல் புலம்பித்திரிந்து அந்த அமங்களவார்த்தையே ஆபரணமாகப்பூண்டிருக்கும் நாஸ்திகன், உலகம் ஒருகாரணக்கடவுளால் சிருஷ்டிக்கப்படவில்லையென்றும், தானகவே இயற்கையில் உண்டாயிருக்கிறதென்றும் சொல்லுகிறானல்லவோ? இதனால் இன்மையினின்றும் உண்மையுண்டாயிருக்கிறதென்று அர்த்தமாகிறது. ஒன்றுமில்லாத சூனியத்திலிருந்து பிரபஞ்சமுதலிய சராசரப்பொருள்கள் எங்கேனும் உண்டாகுமா? இது முயற்கொம்பை முழம்போட்டவனுடைய முழுப்புரட்டுக்குச் சமானமாகும். ஒன்றிலிருந்து ஒன்பது கோடிகள் உண்டாவது இயல்பேயொழிய, சைபரில் (சூனியத்தில்) இருந்து சதகோடி, ஸகஸ்திர கோடிகள் எவ்வாறு கிடைக்கும்? இது மலடிஃமைந்தர்கள் பலரும் மஹாவிபுணர்களாயிருக்கின்றனர் என்பது போலன்றோவிருக்கிறது சராசரப்பொருள்களெல்லாம் ஒருவரால் சிருஷ்டிக்கப்படாமல் இயற்கையிலேயே உற்பத்தியாயிருக்கின்றனவென்றும் பின்னர் ஒன்றுமில்லாமல் அழிந்துபோய்விடுமென்றும் சொல்லும்போது, உண்டு என்பதை ஒருவிதத்தில் ஒப்புக்கொண்டவனாகிறான். இல்லை என்பதைஸ்தாபிக்க வெளிவருவானாகில், பிரபஞ்ச உற்பத்தியேயில்லையென்று சாதித்துமுடிக்கவேண்டும். அவ்வாறின்றி உண்டு என்பதை ஒப்புக்கொள்ளும்போது, இல்லையென்னும் இவனுடையதுர்வாதம் அடியற்றமரம்போல் நிலைசாய்ந்து விழவேண்டும். நானே இங்கே இல்லை என்பது இல்லையென்றேஸ்தாபனஞ் செய்யப்போகிறேன் பாருங்கள். (இல்லையென்பது இல்லையானால் உண்டு என்பது நிலைத்தபொருளாகும்) பிரபஞ்சத்தின் படைப்புகள் எல்லாம் காலம் செல்லச் செல்ல ரூபத்தில் மாறுபட்டுவருகிறதேயன்றி இல்லாமல் அழிந்துபோய்விடவில்லை. இதனை விளக்கிக்காட்டுகிறேன். மனிதன் இறந்துபோய்விட்டபிறகு, அவன் சரீரத்திலுள்ள பிருதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாசம் ஆகிய பஞ்சபூதங்களில் அது அது தன்தன் இனத்துடன் சேர்ந்து சுவயரூபமடைகின்றன. தேகமாகிய கூடும் மக்கி அதன் இனமாகிய மண்ணோடு சேர்ந்துவிடுகின்றது. ஆன்மாவோ பரமாத்மாவினிடம் போய்விடுகின்றது, ஆகையால் உலகில் உற்பத்தியான மனிதன் உருவமாறி நிற்கின்றானே யொழிய இல்லாமையாய் (சூனியமாய்)ப்போய்விடவில்லை. இன்னும் ஒரு மரத்தைத் திருஷ்டாந்தமாக எடுத்துக்கொள்வோம். அது காய்ந்

ஓடிப்போனவனுக்கு ஒன்பதாம் இடத்தில் ராஜா,
அகப்பட்டவனுக்கு அஷ்டமத்தில் சனி.

தலர்ந்து கட்டையாய்ப்போனபிறகு மக்கிமடிந்து மண்ணாய்ப் போய்விடு கிறது. உலகில் உற்பத்தியாயிருந்தமரம் வேறு ரூபமாய் மாறிப்போயிருக்கி றதேயன்றி இன்மையாய்விடவில்லை. இவ்வாறு ஒவ்வொரு விஷயத்தையும் நன்கு கவனித்துப்பார்க்குங்கால், இல்லையென்பது கிடையவேகிடையாது. எங்குபார்த்தாலும் உண்மையமயமாகவேயிருக்கிறது (உண்மை உள்ள தன்மை) ஆகையால் இல்லையென்பதும் பொய் இல்லையென்பவனும் மூடன். ஒரு நல்ல இனம் தன் இனமாகிய வேறொன்றோடு மிகுதியாய்ச்சேர்ந்தால் அவ் வினத்தின் சக்தி முன்னிருந்ததைப்பார்க்கிலும் அதிகப்பட்டு விளங்குவது இயல்பு. எப்படியெனின் ஒரு தீபத்துடன் மற்றொரு தீபத்தைக் கொளுத்தி வைத்தால் பிரகாசமதிகப்படும். ஒருபடி பாலுடன் மற்றொருபடி பாலைச் சேர்த்தால் பாலினளவுமிகுதியாகும். ஒருவிவேகமுள்ள மனிதனுடன் வே றொருவிவேகி சேர்ந்துழைத்தால் புத்திபலம் மேலிட்டு பலவிதலாபமும் கீர்த் தியுமுண்டாகும். இதுபோலவே கெட்டவஸ்துவுடன் வேறொருகெட்டவஸ்து சேர்ந்தால் மிகவும் கெட்டதாய்விடுவது இயற்கை. எங்ஙனமெனின், துர் நாற்றமுள்ளவஸ்துவுடன் மற்றொரு துர்நாற்றவஸ்து சேர்ந்தால் துர்க்கந்தம் இன்னும் அதிகப்படும். துஷ்டனுடன் துஷ்டன் சேர்ந்தால் துன்பம் அதிகப் படுமென்பதில் தடையில்லை! தனவான்களே! இப்போது உங்கள்கவனத்தை முற்றிலும் என்சமீபத்தில் ஆஸரப்படுத்திவிடுங்கள். உண்டு இல்லையெ ன்னும் வார்த்தைகளில் உண்டு என்பதை உண்மையென்றும் இல்லையென் பதை இன்மையென்றும் பொய்யென்றும்புகலுகின்றேன். இவ்வாதத்தை அந்த இல்லையென்னும வார்த்தையைக் கொண்டேநிரூபிக்கிறேன் பாருங் கள். இல்லையென்பது சர்வாபத்தம். இல்லையென்பதொன்று இருப்பது போல் பொய்வேஷம்போட்டுக்கொண்டு உலகத்தை மருட்டிக்கொண்டு நிற்கிறதேயொழிய வாஸ்தவத்தில் இல்லையென்பது கிடையவே கிடையாது. நெடுங்காலமாய் ஒருவருக்குந்தெரியாமல் ரகசியமாகத் திருட்டுத்தொழில் புரிந்துவந்த ஒருகள்வன் வேறொருகள்வனைத் தனக்குச்சகாயமாகச் சேர்த் துக்கொண்டால் உடனே முதற் கள்வனுக்குத் தீங்குநேரிட்டு விடுகிறது எப் படி சுபாவமோ, அதுபோலவே உலகத்தை யேமாற்றிவரும் இல்லையென்னும் வார்த்தை தன் இனமாகிய மற்றொரு இல்லையென்னும் வார்த்தையைத் தன் னுடன் சேர்த்துக்கொண்டால் உடனே தனக்குக் கெடுதியை வருவித்துக் கொள்ளுகிறது, எவ்வாறெனில், கடவுள் இல்லையென்பது இல்லை. இதன் பொருளைப் பார்த்தீர்களா? கடவுள் உண்டு என்று பொருள்பட்டு நிற்கின்றது. இல்லையென்னுந் திரை யில்லாமல் நீங்கிவிட்டது. மாறுவேடம்பூண்டு யாவ ரையுமயக்கி வஞ்சித்துக் கொண்டிருந்த இல்லையென்னும் பெருங்கள்வனுகிய தன்னுடன் தன்னினமாகிய வேறொரு இல்லையென்னும் கள்வன்வந்து சேர்ந் தவுடனே கள்வனைக் கள்வன்காட்டிக்கொடுப்பதுபோல் இல்லையென்பதன்

15. கோட்டுத்தலைகாரி துரைமார்கள் கிளிங்கா? வழியிலேயிருக்கிறவர்கள் கழிட்டைப் புண்டாக்குவார்.

16. எல்லாமிருந்து அது ஒன்றுமட்டுமில்லாதிருந்தால் யாவர்க்கும் இன்பம் அது இருந்து எல்லாமிருந்தாலுந் துன்பமே.

கண்ணாலே கண்டாம் மண்ணாலே மறைக்கவேண்டும்.

குட்டை (மர்மம்) வெளியாக்கி உண்டு என்னும் மறைபொருளுண்மையை ஸ்தாபித்துவிட்டது. இனி உண்டு என்னும் வார்த்தை இவ்வாறு மாறிப் போகிறதா என்று சிறிது ஆராய்ந்துபார்ப்போம். "கடவுள் உண்டென்பது உண்டு" இதனால் கடவுள் ஒருவருளர் என்று அர்த்தமாகிறதே யல்லாமல் எவ்விதத்திலும் அதற்கு எதிரிடையாக இல்லை என்று பொருளாகவில்லை; ஆகையால் எத்தனைக்காலம் ஒளிந்துகொண்டு திரிந்தாலும் பழையகள்வன் ஒருநாளைக்கு அகப்பட்டுப்போவான் என்பதுபோல் பொய்யாகிய இல்லையென்னும் வார்த்தை நான் பொய்யாய்விட்டேன். இனி எங்கும் தலைகாட்டமாட்டேன், உண்டென்பதே உண்மையென்று சாட்சி பகர்ந்துவிட்டது. ஆகையால் சகோதரர்களே! கடவுள் உண்டென்னும் உண்மைக்கு ஒருபோதும் பங்கமேயில்லை. கடைசியாக ஒரு திருஷ்டாந்தம் கூறுகிறேன் கேளுங்கள். உலகமுழுவதிலும் வசிக்கிற ஜனசமூஹத்தை யெடுத்துக்கொள்ளுங்கள். இதில் கடவுள் உண்டு என்போர் தொகை அதிகமாயிருக்கிறதா இல்லையென்போர்தொகை யதிகமாயிருக்கிறதா என்று பாருங்கள். உண்டென்போர் தொகையே மிகுதிப்பட்டிருக்கும் என்பதில் சந்தேகமில்லை. பெரும்பான்மையோருடைய வாக்கையே ஒப்புக்கொள்ளவேண்டும் என்கிற பொதுவிதிப்படி கடவுள் இல்லையென்று கூறும் புரட்டர்களாகிய சிறுபான்மையோருடைய வார்த்தையைப் புட்டத்திலுதைத்துப் புரட்டிப் புரட்டித்தள்ளிவிடுங்கள். கடவுள் உண்டு என்னும் சிறப்புள்ள மஹாமந்திரத்தை உலகறிய விளைநாட்டிவிடுங்கள். இன்னும் இது விஷயத்தில் ஒரு சிறு சங்கதியைத் தெரிவிக்கிறேன. உண்டு என்னும் மங்களகரமான அருள்வாக்குடையவனிடத்தில் இளையாளாகிய சிதேவிவாசஞ்செய்கிறாள். "இல்லையென்பவர் வீட்டில் பல்லியுஞ்சேராது" என்னும் பழமொழிப்படி, கடவுள் இல்லையென்று கூறும் அமங்களகரமான தரித்திரவாக்குடையவனிடத்தில் மூத்தவளாகிய மூதேவி விட்டு நீங்காமல் நிரந்தரவாசஞ்செய்கிறாள். உண்டு என்பவனுக்குச் செல்வமுண்டு, சீருண்டு கவுரவமுண்டு, மதிப்புண்டு, களிப்புண்டு, மகிழ்ச்சியுண்டு, புகழ்ச்சியுண்டு, வீரமுண்டு, தீரமுண்டு, திடகாத்திரமுண்டு தீர்க்காயுளுண்டு. சகல சம்பத்துகளுமுண்டு, இல்லையென்றியம்பு மூதேவிக்குப்பணமில்லை, குணமில்லை, தனமில்லை, கனமில்லை, மனமில்லை, இனமில்லை, சீரில்லை, பேரில்லை, புகழில்லை, புண்ணியமில்லை, லட்சுமிவாசமில்லை, யாவராலும் வெறுத்தொதுக்கத் தக்கவனுவான். உண்டவீட்டில் இரண்டகஞ்செய்பவனைப்போலும் நீட்டியமரத்தில் கூர் பார்ப்பவனைப்போலும் தன்னைப்படைத்து உணவாதிகளைத்தந்து காப்பாற்றும் கடவுளையே மோசஞ்செய்ய முந்துகிறவனை யாரும் ஒருபொருளாக மதிக்கமாட்டார்கள். அவன்வார்த்தை வீண்வார்த்தையாகையால் அந்த நாஸ்திகனுடைய வார்த்தையை நசுக்கிக் கசக்கி நாசமாக்கிவிடுங்கள். நாஸ்திகர்கள் தம்முடைய யுக்திபுத்தி முதலியவற்றின் சக்தியினால் பாமர ஜனங்களை வெருட்டி மருட்டி வென்று விடுகிறார்களென்று

குமரியாயிருக்கையில் கொண்டாட்டம் கிழவியாயிருக்கையில் திண்டாட்டம்.

சொல்லுகிறார்கள். அவர்களுடைய யுக்தியில் மூன்னிரண்டெழுத்தை நீக்கித்தள்ளிவிட்டுக் கடையெழுத்தொன்றால் சணமாய்க்கொளுத்திவிடுங்கள். அவர்களுடைய புத்தியின் முதலெழுத்தைப் புரட்டித்தள்ளிவிட்டுக் கழுதையின் முன்னெழுத்தைக் கலக்கக்கூட்டிக் குடிசேயரிந்து தள்ளுங்கள். அவர்களுடைய சக்தியின் நடுவிலுள்ள ஒற்றை நீக்கி உயிர் மெய்யாக்கி அதையள்ளிப் பூமிமானபங்கப்படுத்தி விடுங்கள். இவ்வுபாயங்களை நீங்கள் தேடுவீர்களானால் நாஸ்திகர்களுடைய யுக்தியிலே நிலைத்துக் கொளுத்தலாம். புத்தியைக் கத்திகொண்டு கண்டதுண்டமாக்கலாம். சக்தியிலே சகதியையள்ளிப்பூசலாம் (சகதி - சேறு) அப்படிச் செய்வதனால் உங்களுக்குச் சர்வ சுகுர்தங்களுமுண்டாகும். சுபம்.

சகோதரர்களே! இப்போது கடவுளொருவர் உண்டென்று தெரிந்து கொண்டோமல்லவா? ஒருவஸ்து உண்டென்று நிர்மானித்தறிந்தபிறகு அதன்வல்லபம் தன்மை முதலியவற்றையுணர்ந்து அதை விசுவாசிப்பதற்கு ஆவல்கொள்வது சகஜமல்லவா? அதிவிநோதமாகவும் விசித்திரமாகவும் அரிய வேலைத்திறத்தோடும் செய்யப்பட்டுள்ள அழகான ஒரு ஆபரணத்தை நாம் பார்த்தவுடனே அவ்வாபரணத்தைச்செய்த தட்டானை மிக்க சாமர்த்தியவானென்று நாம் புகழ்கின்றோமல்லவா? அதுபோலவே, இப்பூலோகத்தையும் அதிலுள்ள சராசரப்பொருள்களையும் அதியற்புதவண்ணமாகச் சிருட்டித்திருக்கும் ஒழுங்குகளைக்காணும் நாம் அவற்றைப்படைத்த பரமாத்மாவினுடைய அகண்ட சாமர்த்தியத்தை வியந்து அவருடைய தரிசனத்தையடையுமாறு செய்யவேண்டுமல்லவா? அவ்வாறடைவதற்கு ஆசை, வைராக்கியம், முயற்சியாகிய இம்மூன்றும் முக்கியமாய்க் கைப்பற்றினால் அது சாத்தியமாகும். இதவிஷயத்தைச் சமயம்வந்தபொழுது மற்றொருநாளைக்குச் சவிஸ்தாரமெடுத்துப்பேசுவேன்.

மேற்கூறிய சர்வசக்தி ஸம்பன்னரான சாக்ஷாத் ஜகதீசனே சர்வலோகங்களையும் சாட்டையில்லாப் பம்பரத்தைப்போல் ஆட்டியாண்டுவருகிறார் ஆகையால் அவரே ஏகசக்ராதிபதியும் சகலசக்ராதிபதிகளுக்கு மேம்பட்ட மஹா சக்ராதிபதியாகவுமிருக்கிறார்.

2-வது மூட்டைப்பூச்சி மஹாத்மாக்களைப்பற்றிப் பேசுவோம்.

"பெரியோரெல்லாம் பெரியருமல்லர், சிறியோரெல்லாம் சிறியருமல்லர்" என்றபடி மூட்டைப்பூச்சிகள் பார்வைக்கு மஹா அற்பப்பிராணிகளாயிருக்கின்றன. அதை ஜனங்கள் வெகு எளிதிலே நசுக்கிவிடுகிறார்கள். ஐயா! இந்த அற்பப்பிராணியின் ஆற்றலை என்னென்றுரைப்பேன்? நன்குகவனித்துப்பார்க்குங்கால் அது மஹா ஆச்சரியத்தையும் அதிசயத்தையும் உண்டாக்குகின்றது. மனிதர் சஞ்சாரஞ்செய்யும் எல்லாத்தேசங்களிலும் சந்திலும் பொந்திலும் எங்கும் இம் மூட்டைப்பூச்சிப் பேர்வழிகள் இல்லாதவிடம் இடையவேயில்லை

குளிராதவீடும் கூத்தியாரும் உண்டானால் மயிரான வேளாண்மை
விளைந்தால் தானென்ன? விளையாமல்போனால் தானென்ன?

யாது. உலகில் எல்லாவிடங்களிலும் அது சர்வசஞ்சாரம் செய்துவருகிறது. கிலவுலகாளும் நீதிமன்னர்களாயினும் சிலசந்தர்ப்பங்களில் தயைதாட்சணியம் பாராட்டுகிறார்கள், மூட்டைப்பூச்சிக்கோ அது சிறிதும்கிடையாது. ஏழையானாலும் சரி, யாசகனாயினும்சரி, பிரபுவாயினும்சரி, பணக்காரனாயினும்சரி, ராஜாவாயினும்சரி, சக்கரவர்த்தியாயினும்சரி, தண்டாயுதபாணியாயினும்சரி, யோகனாயினும்சரி, யாராயிருந்தபோதிலும் கிஞ்சித்தேனும் தாசட்ணியமில்லாமல் கடின சித்தத்துடன் குத்திக்குருதியை உறிஞ்சிவிடுகின்றது. மனிதனுக்குப் பிராணாதாரமாயுள்ள உதிரத்தைச்சிறிது மிரக்கமின்றிக் கொடுமையாய்க்கொள்ளைகொண்டு உண்டுவிடுகிறபடியால் இதன் சாமர்த்தியம் மனிதனுக்கு மேம்பட்டிருக்கிறதென்றன்றோ மதிக்கவேண்டியதாயிருக்கிறது. காட்டில் புலிகொல்லும், வீட்டில்புளிகொல்லுமென்று சொல்வார்களல்லவா? அவ்வாக்கியத்தைக்காட்டில் புலிகொல்லும் வீட்டில் பூச்சிகொல்லுமென்று அமெண்டு (Amend) செய்து கொள்ளுங்கள். (பூச்சியென்றது இங்கு மூட்டைப்பூச்சியை) புலியோ அடங்கா ஆங்காரத்துடன் அடிபாய்ந்துவந்து மேல் விழுந்து அடித்து உதிரத்தைப்பருகும். மூட்டைப்பூச்சியோ அமைதியாகவும் அதிசாந்தமாகவும் சந்தடிசெய்யாமல் பையநுழைந்துமாட்டி இரத்தத்தைச் சாப்பிட்டுவிடுகிறது. ஆகையால் இதை மஹாதந்திரஜாலம் தெரிந்த பிராணியென்று சொல்லவேண்டும். காட்டில் ஒருபுலியைச் சுட்டுக்கொன்றால் ஏனையபுலிகளெல்லாம் பயந்து உடனே அக்காட்டைவிட்டு ஓடிப்போய்விடும். ஆனால் ஒரு மூட்டைப்பூச்சியைக்கொன்றாலோ, வெட்டவெட்டக் கிளைத்துக் கொண்டேவந்த இராவணன்தலைகளைப்போல் ஒன்று பத்து நூறு ஆயிரமாக விருத்தியாய் விடுகின்றது. ஆகையால் இதன்கூட்டத்துக்கு மாளாச்சேனையென்று நாமகரணஞ் சூட்டினேன். புலி மனிதனைக்கண்டால் பயந்து எட்ட ஓடிப்போய்விடும். மூட்டைப்பூச்சியோ மனிதருக்குக் கொஞ்சமும் மஞ்சாமல் ஓட்டியோடிவரும். ராஜாக்களெல்லாம் பகலில் மிருகவேட்டையாடுவார்கள். மூட்டைப்பூச்சியோ அல்லும்பகலும் அறுபதுநாழியும் ஓயாமல் மனிதவேட்டையாடுகின்றது. பூச்சி சிறிதாயிருந்தாலும் நசுக்கினால் நாற்றம் பெரியதாயிருக்கும். உருவம் அற்பமாயிருந்தாலும் ஓட்டம் வேகமாயிருக்கும். அதன் ஆயுதமாகிய தும்பிக்கை அம்பினுங் கூர்மையாயும், மிளகாயினுங் காரமாயும் இருக்கும். அதுதன் ஆயுதத்தை மனிதன் தேகத்தில் செலுத்தினவுடனே, உவ் அப்பா! என்று தன்தொடையில் ஒருதட்டுதட்டுகிறான். அவ்வடி பூச்சிக்குப் படுகிறதில்லை. அதுவாயுவேகம் மனோவேகமாயோடிப்போய்ப் பதுங்கிக் கொள்ளுகின்றது. பதுங்கிய இடமும் புலப்படுகிறதில்லை. ஊரைவிட்டோடியொளிக்கும் குற்றவாளியையும் வாரண்டுகொண்டு எப்படியேனுங்கண்டு பிடிக்கிறார்கள். உள்ள இடத்திலேயேபதுங்கும் பூச்சியைத்தேடிப்பிடிக்க ஒருவராலும் ஆகிறதில்லை. இத்தனை பராக்கிரமசாமர்த்தியங்களைத் தன்னிடம்

22. கால்பத்துக் கண்ணிரண்டுதலையோயில்லை கடினமாய்ப் பி[illegible]த்துக்கொல்வான் கையோயில்லை கண்டுநாப்பிர்
இவராரோ கருணைகொ[illegible]ண்டே.

கூழைக்குடித்தாலும் குப்பையைச்சுமந்தாலும் குப்பைநாட்டுப்
பெண்கள் ருக்மணி; பாலைக்குடித்தாலும் பட்டைக்கட்டினாலும்
பட்டணத்துப்பெண்களுள் பறக்கை.

அடக்கிக்கொண்டு உலகமெங்கும் அதி ஜயபிரதாபத்துடன் வியாபித்து நின்று மனிதவேட்டையாடிவருவதால் இதற்குப் பூச்சக்ரவர்த்தியென்று பெயரிட்டிருக்கிறேன். நானே இதை வெகுவாய்மெச்சி இப்பெயர்தந்ததனால் ஒருவரும் இதை ஆட்சேபிக்கமாட்டார்கள். நான் இவ்வளவு சாமர்த்திய முள்ள விகடனாயிருந்தும் என்னையும் ஒருகைபார்த்து விடுகின்றதாகையால் இதை எனக்குமேலான அந்தஸ்தில் இரண்டாவது பூச்சக்ரவர்த்தியாய் வைத்து விட்டேன்.

3 - வது - விகடமகுடாதிபதியாகிய நான் பூச்சக்ரவர்த்தியாயிருக்கும் மகாத்மியத்தைக் கேளுங்கள்.

இராஜாக்கள், சக்ரவர்த்திகள், கவர்னர்கள், கவர்னர் ஜனரல்கள் இவர்களுக்கெல்லாம் மரியாதைக் குண்டுகள்போடுகிறது எத்தனை தெரியுமா? 11 - 19 - 21 - 31 - வரையில்தான். ராஜாதிராஜ பூமண்டலேஸ்வரனாகிய நான் ஸ்டேஷனுக்குவந்தவுடன் 51½ குண்டுபோட்டதைக் கவனித்தீர்களா? இதனால் நான் எல்லாரைப்பார்க்கிலும் மிகச்சிரேஷ்டனென்று உங்கட்கு விளங்கவில்லையா? உங்களுடைய கவர்ன்மெண்டு கடியாரப்பிரகாரம் 5 - மணியாயிருந்ததை என்கவர்ன்மெண்டு கடியாரப்பிரகாரம் 4 - மணியாக்கியிருக்கின்றேன் பார்த்தீர்களா? நான் 4 - மணிக்கு வந்து பிரசங்கம் செய்வேனென்று நோட்டீஸில்கண்டபடி சரியாய் 4 - மணிக்கே ஸ்டேஷனுக்குவந்தேன். ஆனால் அதுஉங்கள் கடியாரப்பிரகாரம் 5 - மணியாயிருக்கலாம். ஐந்தை நான்காக்கவும், நான்கை ஐந்தாகவும் செய்யவல்லவன் நான்தான் என்பதை இப்போது நீங்கள் நிதானித்துக்கொள்ளுங்கள்.

கண்ணின்றிப் பார்ப்பதும், காதின்றிக் கேட்பதும், வாயின்றி வசனிப்பதும், காலின்றி நடப்பதும், கையின்றி வேலைசெய்வதும் எப்படியென்று உங்கட்குத்தெரியுமா? நான் கற்றுக்கொடுக்கிறேன் நீங்கள் பெற்றுக்கொள்ளுங்கள். நான் கண்களை மூடிக்கொண்டுமுன்னமே எனக்குத் தெரிந்திருக்கும் ஒருருவத்தை மனதில் நினைத்தமாத்திரத்தில் அவ்வுருவம் எனக்கு முன் பக்கவந்து என்மனக்கண்ணுக்குப்புலப்படும். முன்னமே நான் காதினால் கேட்டிருக்கிற ஒருதொனியை என்மனத்தில் நினைத்தவுடனே அத்தொனி என்மனக்காதுக்குக் கேட்கும். எத்தனையோவிஷயங்களை மனதில் நினைக்கிறேன், அவை மனவாயினால் பேசுவதாகும். இதுபோலவே மனக்கையினாலும் வேலைசெய்கிறேன். மனக்காலினாலும் நடப்பேன். இத்தகைய அரிய பெரிய செயல்களை என்னிடத்தினின்று நீங்கள் கற்றுக்கொண்டதற்காக என்னை உங்கள் பரமகுருவாக ஏற்றுக்கொள்ளுங்கள். இன்னும் எனக்கு எண்ணிறந்த சாமர்த்தியங்கள் உண்டென்பதை சீக்கிரமே உங்களுக்குத்

23. அடித்தலை பெருத்து முடித்தலை விரித்தவன் ஈடு உடல் இருத்து உடலெலாம் புகையான் ஒருத்தம் பூத்து தலைவணங்கினனாய் ஒரு பிள்ளையாலே உயிர்விடும் பேதையே.

தெரிவித்திருக்கிறேன். உலகத்திலுள்ள சகலராஜாக்களையும் சக்ரவர்த்திகளையும் என் சொக்காய்ஜேபிக்குள் செருகிவைத்திருக்கிறேன். எத்தனை பெரிய ராஜாவானாலும், பலேபடே சக்ரவர்த்தியானாலும், அவர்களுடையஜபம் என்னிடத்தில் சாயாது. அனேகரை ஆட்டுஆட்டென்று ஆட்டிவிட்டிருக்கிறேன். என் ஆட்சிக்குள்ளடங்கிப் பதுமைபோற்கிடக்கிறார்கள். என்னுடையதயவு அவர்களுக்கதிகமாய்வேண்டும்: உலகத்திலுள்ள எல்லாச்சக்ரவர்த்திகளும் எனக்குக் கீழ்ப்பட்டவர்களானபடியால் நானே 3 - வது சக்ரவர்த்தியாயிருக்கிறேன் இதோ! என்கையிலுள்ள இப்புத்தகத்தைப்பார்த்தீர்களா? இது என்னவென்று நினைக்கிறீர்கள்? இதுதான் அது. அது, எது? மஹா விகட விநோதக் களஞ்சியம். இதில் பலவித யுக்திபுத்தி தந்திரம் சாமர்த்தியம் சாலாக்கு முதலிய சேஷ்டங்களை நீங்கள் கற்றுக்கொள்வதன்றியும், உங்களுடைய தங்கமான அங்கத்தை இங்கிதமாகவைத்துக் காப்பாற்றிக்கொள்வதற்கான பல ஔஷதங்களையும் தெரிந்துகொள்ளலாம், இன்னும் 7 - வது பக்கத்திற்கூறியுள்ளபடி இதன்கிரயத்தில் ஒருபாகம் தருமகாரியத்தில் உபயோகப்படுத்தப் படுகிறபடியால் பரலோகவாழ்க்கைப்பலனையும் அடையும்படியான சதந்திரம் உங்களுக்கு யேற்பட்டுவிடுகிறது. ஆகையால் ஒவ்வொருவரும் இகபரமிரண்டுக்கும் ஆதாரவாயுள்ள இவ்வருமைவாய்ந்த புத்தகத்தைவாங்கி வாசிப்பதன்றியில் உங்கள் சிநேகிதர்களையும் வாங்கி வாசிக்கும்படி தூண்டிவிடுங்கள். இப்போது அடியிற்கூறும் விகடத்தைக் கவனியுங்கள்,

கனம்பொருந்திய பிரபுக்களே! என்னுடையவிகடத்தைச் சாமானியவிகடமென்று எண்ணிவிடப்போகிறீர்கள். ஜாக்கிரதை! அம்மாளும் ஐயாவும அறைக்குள்ளேசெய்துகொள்ளும் விகடமா? அத்தானும் அத்தையும் அந்தரங்கத்தில்செய்துகொள்ளும் விகடமா? மாமனும் மாமியும் மத்தியானத்தில்செய்துகொள்ளும் விகடமா? மைத்துனனும் மைத்துனியும் மரியாதையாய்ச் செய்துகொள்ளும் விகடமா? பள்ளிப்பிள்ளைகள் பழக்கத்தில்செய்துகொள்ளும் விகடமா? விவாகக்கச்சேரியில் விஸ்தாரமாய்ப்பேசும் விகடமா? கூத்துப் பந்தல்களில் கூடிப்பேசும் விகடமா ? கவிகள் கல்வித்திறத்தாற்பேசும் விகடமா? இல்லே இல்லே. இதுகளெல்லாம் கச்சா, பிச்சா, காமா, சோமா, காடா, பீடா, தாலா, பீலா,வே. ஆனால் என்னுடைய விகடமோ மா-கா-வீ-கா-டம்: அதன் ரஸத்தைப் பின்னால் தெரிந்துகொள்வீர்கள். மஹா விகடதூதன் விஜய விகடன் முதலிய விகடபத்திரிகைகள் பலவிருக்கின்றனவன்றோ ? இவைகளெல்லாம் என்விகடக்குஞ்சுகள் அல்லவா? அவைகளெல்லாம் என்னிடத்தில் அரைக்கால், கால், காலேயரைக்கால், அரைமுதலிய கணக்கிற்சேர்ந்த கற்றுக்குட்டிகள்தானே. ஐயோபாவம்! பிழைத்துப்போகட்டுமென்று பெருவாரியில் விட்டுவிட்டேன்.

நாய் கெட்ட கேட்டுக்குத் தேங்காய்ப்பாலுஞ் சோறுமா?

உ-ம் நாள் பிரசங்கம்.

இந்தியா.

கனவான்களே! நீங்களிருந்து வசித்துவரும் சுதேசசரித்திரத்தை உங்களில் ஒவ்வொருவரும் தெரிந்துகொள்ளவேண்டிய அவசியமாகையால், அதைச் சுருக்கமாக இன்று இங்கெடுத்துக் கூறுகின்றேன்,

உங்கள் முன்னோர்கள் யாவரும் பண்டைக்காலந் தொட்டுவாழ்ந்துவந்த இந்த இந்தியாதேசமானது வெகுபுராதனமான நாடென்று நீங்கள் கேள்வியுற்றிருப்பீர்கள். அநேகமாயிரம் ஆண்டுகளுக்கு முன் இவ்விந்தியா காடடர்ந்தவிசால நிலமாயிருந்தது. அக்காடுகளில் பலதுஷ்டமிருகங்களும் காட்டு மனிதர்களும் வசித்துவந்தார்கள். காலஞ் செல்லச்செல்ல ஹிமாலயபர்வதத்திற்கு வடக்கேயிருந்து வெவ்வேறான பலஜாதியார்வந்து குடியேறினமையால் நாளாவர்த்தியில் நாகரீகம் பெருகிவந்தது. அந்த ஜாதியார்களுக்குள்ளே தலைமைபெற்று தேசத்தையாள்வதற்குப் பல அரசர்கள் ஏற்பட்டார்கள். அவ்வரசர்களுக்குள் சிலரைமாத்திரம் நானெடுத்துக்கொண்டசந்தர்ப்பத்திற்குத் தக்கவாறு இங்கே குறிப்பிட்டுரைக்கிறேன்.

அக்பர்.

ஆதியில் இந்தியாவை அரசாண்டுவந்தவர்கள் ஹிந்துக்களே. இவர்கள் ஆரியர் என்று சொல்லப்படுவார்கள். பிறகு வடக்கேயிருந்துவந்த முஹம்மதியர்கள் ஹிந்துக்களைவென்று இத்தேசத்தை ஆண்டுவந்தனர். இம்முஹம்மதியர்களுட் சிலர் கொடுங்கோல்செலுத்தி ராஜரீகம் நடத்திவந்தபோதிலும், சிலர் நீதிமுறை வழுவாமல் செங்கோல் நடாத்தியிருக்கின்றனர். அவ்வாறு நீதிவழுவாமல் அரசாட்சி செய்துவந்தவர்களுள் முதன்மையானவன் அக்பர் என்னும் சக்ரவர்த்தியே. இவன் மொகலாய்வமிசத்திலுதித்த அரசன். பெருந்தகைமையும் கம்பீரகுணமும், நீதிவழுவாமையும், குடிகளிடத்தன்பும் அவனிடத்தே குடிகொண்டிருந்தன. தன்னாளுகைக்குட்பட்ட பல ஜாதிப்பிரஜைகளையும் வித்தியாசம் பாராட்டாமல் ஒரேவிதமாய் நடத்திவந்தான். தன்னுயிரைப்போல் மன்னுயிரைப்பாவித்து வந்தவனாகையால் தன்குடிகளை தன் மக்களைப்போல் அன்பாதரவோடு நடத்திவந்தான். கொடுங்கோன்மைக்

25. காலாறு கையிரண்டு கண்ணோ நான்கு தலையிரண்டு உடலிரண்டு வாலோ ஒன்று ஓடுவது நாலுகால் உதைப்பது இரண்டுகால் உண்மையிது கண்டுரைப்பீர் உலகத்தோரே.

உண்ட வயிறுகேட்கும், தின்ற பாக்கு சிக்கும்.

குரிய பல அதிதவரிகளை எடுத்துவிட்டான். நாயகன் இறந்தபிறகு நாயகி உடன்கட்டையேறுவது என்னும் கொடியவழக்கம் பூர்வீககாலமுதல் ஹிந்துக்களுக்குள் நடந்தேறி வந்தது. அந்தத் துர்வழக்கத்தை முதலில் நீக்கினவன் அக்பர் சக்ரவர்த்தியே. அவனுடைய ராஜ்யபாரத்தின் சரித்திரவிவரம் முழுவதும் எழுதப்பட்ட அயின் அக்பரி என்னும்புத்தகம் இன்றைக்கும் அழியாமலிருக்கிறது. அக்பர் ரஜபுத்திர வம்மிசத்துப்பெண்ணை மணம்புரிந்தபடியால் ரஜபுத்திரர்களுடைய கலியாணச்சடங்குகளை அநுஷ்டித்து வரும்படி முஹம்மதியர்களுக்குக் கட்டளையிட்டிருந்தான். அந்தவழக்கமே இன்றைக்கும் முஹம்மதியர்களுடைய கலியாணங்களில் அநுஷ்டிக்கப்பட்டு வருகின்றது. அக்பர் 1544 ம் வருஷத்திற் பிறந்து 1556 - ம் வருஷமுதல் 51 வருஷம் அரசாட்சிபுரிந்து 1607 - ம் வருஷத்தில் இறந்துபோனான்.

விகடனாகியநான் இரண்டொரு தடவை அக்பரைச்சந்தித்திருக்கிறேன். அவனுடைய அரசாட்சிநலத்துக்காக நான் அகமகிழ்ந்து அவனுக்கு ஆசீர்வாதம் செய்துவந்திருக்கிறேன். இந்தஅரசனுடைய உருவப்படத்தைப் பார்த்தீர்களா? மூன்றாறு ஆண்டுகளுக்குமுன் அரசாண்ட ஒருசக்ரவர்த்தியை இப்போது உங்களுக்குப் பிரத்தியக்ஷமாகக் காண்பித்து விட்டேன். என் சமானமற்ற சாமர்த்தியத்தைப் பார்த்தீர்களா? யாரேனும் இவ்வாறு காட்டவல்லவர்களுண்டா?

அக்பர் சக்ரவர்த்தி இந்தியாவில் அரசாட்சிசெய்யும்போது இங்கிலாண்டில் எலிசபெத் என்னும் இராணி அரசுபுரிந்துவந்தாள்.

நூர்ஜஹான்.

அக்பர் இறந்தபிறகு அவன்குமாரனாகிய ஜஹாங்கீர் என்பவன் பட்டத்துக்கு வந்தான். இவன் சிற்றின்பப்பிரியனானதால், தேசஅரசாட்சியையும் குடிகளி னன்மையையும் சிறிதும் கவனிக்கவில்லை. அவனுடைய மனைவியாகிய நூர்ஜஹான் (உலகஜோதி)என்னும் இராணி 20 வருஷகாலம் அரசாண்டு வந்தாள். இவள் அழகில் மிகச்சிறந்தவளும் புத்திகூர்மையில் சிலாகிக்கத்தக்கவளும் ராஜ்யபரிபாலனஞ் செய்வதில் அதிகசாமர்த்தியமும் ஆற்றலுமுடையவளாயிருந்தாள். இவள் அக்பர் சக்ரவர்த்தியைப்போலவே ஹிந்து முஹம்மதியர் முதலிய எல்லாச் சாதியாரையும் சிறிதும் வேற்றுமைபாராட்டாமல் சமபாவமாகவே நடத்திவந்தாள். இம்மாது சிரோன்மணியினுடைய அரசாட்சியில் பிரஜைகள் யாவரும் சந்தோஷமாகவும் சௌக்கியமாகவும் வாழ்ந்துவந்தார்கள். இவள்தன் கணவனுடைய ஸ்தானத்திலேயிருந்து கொண்டு செங்கோல் நடத்திவந்தாளே யல்லாமல் தானே ராஜ்யபட்டாபிஷேகஞ் செய்துகொண்டு அரசியாயிருக்கவில்லை. ஆயினும் தனியரசியைப் போலவே சகலராஜ்யநிர்வாகங்களையும் செவ்வனே நடத்திவந்தாள். இவளுடைய அரசாட்சிக்காலத்திலேதான் ஐயா! இப்போது வெண்ணெய்வெட்டிகளைப்போல் வெளிவ

26. தலைபெருத்தோன் உடல்சிறுத்தோன் சரீரத்தில் விரல்முளைத்தோன் தருந்தவர் கையின்றிருந்தால் சங்கையாது வசனிக்குந்தீரனைய்யா சந்தோஷமளிக்கவல்லோரன் சபையிற்றுனே..

பிள்ளைபிறக்கிறதற்கு மு . . . ண் இன்றுபார், மருமகள் வருகிறதற்கு முன்னே கட்டிப்பார்.

ந்து வீரசு பேசும் ருத்திராட்சப்பூனைகளாகிய வெள்ளைக்காரப்புலிகள் இரண்டாந்தடவை இந்தியாவுக்கு வந்தது. இங்கிலாண்டு தேசத்தில் அப்போது அரசனாயிருந்த முதலாவதுஜேம்ஸானவர் இந்தியாவில்ஆங்கிலேயர் வர்த்தகம் செய்வதற்காக உத்தரவளிக்கும்படி ஜஹாங்கீர் அரசனுடைய அநுமதி பெற்றுவருமாறு ஸர்தாமஸ்ரோ என்னும் தூதனை இந்தியாவுக்கு அனுப்பிவைத்தார். என்னுடைய நஞ்சான் குஞ்சுகளே! சிறிது கவனித்துக் கேளுங்கள். இது எக்காலத்து நிகழ்ந்த சம்பவமென்று தெரியுமா? இற்றைக்கு முந்நூறு ஆண்டுகளுக்குமுன்னே நடந்தது. அப்போது நீங்களும் பிறக்கவில்லை. உங்கள் தகப்பன் பாட்டன் பூட்டனும் பூஜ்ஜியந்தான். ஆனால் உங்கள் பூட்டனுடைய மூன்றாம் பாட்டனிருந்து இவைகளையெல்லாம் கண்காணித்திருக்கிறார். எமகண்ட வல்லாளகண்ட மஹாப்பிரவுவாகிய விகடன் தான் கூடவேயிருந்திருக்கிறேனே. அவர்களை யெல்லாம் நான் பார்த்திருக்கிறேன். அக்காலத்து மனிதர்களெல்லாம் வாயில்லாப்பூச்சிகள் ஐயா! இப்போதுபிறக்கிறபிள்ளைகளோ! என்னகாலக்கேடோ! கருப்பத்திலெவடித்து, காலின்கீழ்ப்பாய்ந்து, முளையிலே கிளைத்து, மொட்டிலே மலர்ந்து, பிஞ்சிலேபழுத்து, பெரிய பெரிய படாடோபங்களெல்லாம் செய்கிறார்கள். இது இருக்கட்டும். நாமெடுத்துக்கொண்ட விஷயத்தைக் கவனிப்போம். இங்கிலாண்டிலிருந்து இந்தியாவுக்கனுப்பப்பட்ட ஸர்தாமஸ்ரோ என்னசெய்தார்தெரியுமா? தன்னுடைய அபிப்பிராயப்படி ஜஹாங்கீரிடத்தில் வியாபாரஞ் செய்யும் பொருட்டு உத்தரவு பெற்றுக்கொண்டு இந்தியாவின் மேற்குக்கரையிலுள்ள சூரத்து என்னும்பட்டணத்தில், இதற்குமுன்னமே அக்பரிடத்தில் அநுமதி பெற்று இங்கிலீஷ்காரரால் கட்டப்பட்டிருந்த பண்டகசாலையில் இங்கிலாண்டிலிருந்து சரக்குகளை வசவழைத்து வைத்துக்கொண்டு வியாபாரஞ் செய்துவந்தார். ஜஹாங்கீர் சக்ரவர்த்தி ஸர்தாமஸ்ரோ என்னும் ருத்திராட்சப்பூனைக்குத் தக்கமரியாதை செய்து அன்பாய் நடத்திவந்ததல்லாமலும், தன்னரண்மனைக்குச் சமீபத்தில் அவருக்கொருவிடுதியும் கொடுத்திருந்தார். அதில் 3 - வருஷகாலம் வசித்திருந்து இவ்வெள்ளைக்காரப்புலி இராஜாங்கமுறைகளையும் இரகசியங்களையும் நாளாவர்த்தியில் சோதித்துவந்ததுமல்லாமல் இந்தியாவின் ஒளிவு சுளிவு முதலிய சகல அந்தரங்க விஷயங்களையும் வெகுதந்திரமாயறிந்து தன்னரசனாகிய முதலாவது ஜேம்ஸுக்கு அவைகளை அடிக்கடி தெரிவித்துவந்தான். விகடனாகிய நான் இவைகளையெல்லாம் பார்த்துக்கொண்டு சும்மாவிருப்பேனா? எதுபோனாலும் போகட்டுமென்று இருந்த வேலைகளையெல்லாம் விட்டுவிட்டு அப்போதே உங்கள் பாட்டன்மார்களுக்கெல்லாம் தீனிப்பூட்டிவிட்டேன்.

நூர் ஜஹான்.

27. ஆயிரங்கண்ணி நக்கும் அமரர்க்கரசரல்ல அநேக முடிகொண்டிருக்கும் அரக்கனல்ல ஆபரணம் பூண்டிருக்கும் பெண்ணுமல்ல பல உயிரை மாய்த்துவிடும் யமனுமல்ல மனிதர்மேல் ஏறிச்செல்லும் குழந்தையல்ல மதியினால் இக்கதையை மதிக்கலாமே.

புல்லுயிருக்கிற இடத்தில் மேய [illegible] து,
சோறு இருக்கிற இடத்தில் தின்னத்தெரியாது.

இனி இந்தியாதேசத்தின்மேல் ஆசைவைக்கவேண்டாம். அது வெகு சீக்கிரத்திலே இதரதேசத்தாருக்கு இரையாய்விடப்போகிறதென்றும் முக்காலும் தெரிவித்துவிட்டேன். என்பேரில் குற்றமில்லை. யாரும்பழிகூற வேண்டாம். ஒருவர் ஒருதோஷம் சொல்லும்படி இடந்தரும் வழக்கம் என்னிடத்திலில்லை. சொல்லியும் ஜாக்கிரதைப்படாவிட்டால் நான் என்செய்வேன். ஜஹாங்கிருடைய ஆளுகைக்குப்பிறகு அவன்குமாரனுகிய ஷாஜஹான் சிம்மாசனாதிபதியாயினன்.

ஷாஜஹான்.

ஷாஜஹான் 30 வருஷம்வரையில் செம்மையாகவும் நீதியாகவும் குடிகளுக்குப்பிரீதிகரமாகவும் ராஜ்யபரிபாலனஞ் செய்துவந்தான். அவனுடைய காலத்தில் அனேக சிறந்த நகரங்களையும் மாளிகைகளையும் பள்ளிவாசல்களையும் கல்லறைகளையும் இன்னும் பலவகையான அபூர்வகட்டிடங்களையும் கட்டிவைத்தான். அவனுடைய கீர்த்திப்பிரதாபம் இந்தியா முழுதும் வளர்ந்தோங்கினது. அவன் 1627-ம் வருஷம் சிம்மாஸனமேறி 1658-ம் வருஷத்தில் தன் அரசாட்சியை யிழந்து சிறுதுகாலம் வியாதிபீடிதனுயிருந்து 7வருஷகாலம்சிறைப்பட்டிருந்து கடைசியாக 77.வயதில் உயிர் துறந்தான். பிறகு அவனுடைய குமாரன் ஔரங்ஸிப் பட்டத்திக்குவந்தான். ஷாஜஹான் கட்டிவைத்த முக்கியமான கட்டிடங்களில் முதன்மையானவை டெல்லியில் ஜும்மாமஸ்ஜீது, மோத்திமஸ்ஜீது, என்னும் பள்ளிவாசல்களும், ஆக்ராநகரத்தில் தாஜ்மஹால் என்னுங்கோரியுமே. ஷாஜஹானுடைய அரசாட்சிக்காலத்திலேதான் இங்கிலாண்டிலிருந்த ஈஸ்டு இந்தியாகம்பெனியா இந்தியாவுக்குவந்தது. தற்போது மதராஸ் என்று பெயர்வழங்கி வருகிறப்பட்டணம் அக்காலத்தில் சென்னையென்று பெயர்வாய்ந்த ஒரு சிறிய கிராமமாயிருந்தது. அந்தக்கிராமத்தைதவாங்கி போர்ட்டு சேண்ட் ஜார்ஜ் என்னும் கோட்டையைக் கட்டினார்கள். அந்தக்கோட்டையை இன்றைக்கும் பார்க்கலாம்.

ஷாஜஹான்.

மும்தாஸ்மஹால்.

ஷாஜஹானுடைய பிரீதியுள்ள மனைவியாகிய மும்தாஸ்மஹால் அழகிலும் புத்தியிலும் மிகச்சிறந்தவள். அவள் தன் நாயகனிடத்தில் அதிகபிரியமுடையவள். விவாகமாய் 14 வருஷத்துக்குப்பின் இறந்துபோனாள். உயிர்

28. வயிற்றுப்பிள்ளை இருள் இருட்டக்கூடி வரும் இன் மூக்கும் வாய்மையுடையான். வாக்கிற் கொண்ட
பெரியோர்களைக் கொண்டு கொண்டாடிக் கொண்டு கொண்டு மனத்தூய்மையுடையான் வாகாக இலக்கைப் புதைந்தலேர.

இடிவிழுவானுக்கு வாழ்க்கைப்பட்டு என்னேரமும் இடிஜாமமா?

மும்தாஸ்மஹால்.

நீங்குந் தருணத்தில் நாயகனை வேறுபெண்ணை விவாகஞ்செய்து கொள்ள வேண்டாமென்றும், தன்பெயர் என்றும் நிலைநிற்கும்படி ஒரு சிறந்தகோரி கட்டிவைக்கவேண்டுமென்றும் கேட்டுக்கொண்டாள். அவ்வண்ணமே கட்டி வைப்பதாகக் கணவன் வாக்களித்து தாஜ்மஹால் என்னும் கோரியைக் கட்டி வைத்தான். அதுதான் இன்றைக்கும் ஆக்ரா நகரத்தில் யமுனையாற்றங் கரையில் பிரகாசித்துக்கொண்டிருக்கிறது. அது உலகத்திலுள்ள கட்டிடங்களெல்லாவற்றிலும் மஹாசிறந்ததென்று யாவராலும் மதிக்கப் பெற்றிருக்கிறது. இப்போது அதைப்போய்ப் பார்த்தாலும் நேற்றுத்தான் கட்டியதுபோல் அத்தனைப்புத்தம் புதியதாய் விளங்குகின்றது. அதுவெண் பளிங்குக்கற்களினாலும் கட்டப்பட்டு உட்புறத்தில் விலையுயர்ந்த ரத்தினங்கள் பதிக்கப்பட்டு ஒளிவீசிக் கொண்டிருக்கின்றது! இதைக் கட்டிமுடிக்க முப்பதுவருஷஞ் சென்றது. அதற்கு நேர்ந்த செலவு 2. கோடிரூபாய். இதைச்சுற்றிலும்



தாஜமஹால்.

பகலில்பசுவையே தெரிந்துகொள்ளவில்லையே இரவில் எருமை தெரியுமா?

ஒருசித்திரசுவரும் அதன்முன்னேஒருபிரமாண்டமானகோபுரவாசலுமுண்டு. கட்டிடத்தின்முற்பக்கத்தில் அழகிற்சிறந்த ஒருநந்தவனமும், அதில்சதாகாலமும் ஜலம்பாய்ந்துகொண்டிருக்கும் நீருற்றுகளும் இருக்கின்றன. இந்த நந்தவனத்தில் அனேகவகையான புட்பச்செடிக ளிருக்கின்றன. இந்தத் தாஜ்மஹால் என்னும் கோரியின் கட்டிடச்செலவைக் கேட்டீர்களா? இரண்டு லக்ஷம் ரூபாய். இத்தொகையைப் பூமியில் நெடுகப்பரப்பிவைத்தால் 450 மைல்வரையில் நீளும். மேலுக்கு உயர்த்திவைத்தால் மதராஸ் ஹைகோர்ட்டின் சிகரமாய்நிற்கும் லைட்ஹௌஸுக்கு மேலோங்கி ஆகாயத்தையளாவிமுட்டும். அடே பைத்தியக்காரா! இத்தனைப் பெரியபணத்தொகையை ஒரு நல்லதருமத்திற்கொட்டி அதை என்றும் நிலைநிறுத்தலாகாதா வென்று நான் ஜாடையாய் ஷாஜஹானைக்கேட்டும் பிரயோஜனப்படாமற்போயிற்று. செவிடன்காதில் சங்கூதியதுபோல் தன் பிடிவாதத்தையே முடித்துவிட்டான். இது இருக்கட்டும்.

முற்காலத்தில் இந்தியாவை அரசாண்டுவந்த ஆப்கானிய லோடிவமிசத்து அரசர்களெல்லாம் ஆக்ராநகரகத்தையே தங்கள் ராஜதானியாக வழங்கிவந்தார்கள். அதுபோலவே அக்பர்முதல் ஷாஜஹான்வரையிலிருந்த சக்ரவர்த்திகளுக்கெல்லாம் ஆக்ராவே பிரதானநகரமாயிருந்தது. மேற்கூறிய இரண்டரசர்களும் அதிசயமான விசித்திர சிற்பவேலைகளமைந்த அனேக மாடமாளிகைகளையும் கூடகோபுரங்களையும் ஆக்ராநகரத்தில் கட்டிச் சிறப்பித்தார்கள். அவர்கள்காலத்தில் அந்நகரமானது பெருங்கீர்த்தியோங்கிச் சிறந்து விளங்கியது.

ஷாஜஹான் பாதுஷா இறந்தபின்னர் அவனுடைய இளையகுமாரனை ஔரங்ஸிப் பட்டத்திற்குவந்து தன்னுடைய ராஜதானியை டில்லிநகரமாக மாற்றிவைத்துக்கொண்டான். ஔரங்ஸிப் 1658-ம் வருஷத்தில் சிங்காதனமேறி 1707-ம் வருஷம்வரையில் ராஜ்யபரிபாலனஞ்செய்துவந்தான். இவனுடைய ஆளுகை செம்மையானதன்று. ஹிந்துக்களை வெறுத்துவந்தான். இராஜ்ஜியமெங்கும் கலகங்களுண்டாகத்தொடங்கின. அவனுடைய கொடிய அரசாட்சியினால் நாடெங்கும் பலமான பகையுண்டாயிற்று. ஸிக்ஜாதியார் ராஜபுத்திரர் மராட்டியர் இவர்களோடு சதா போர்புரியும்படி நேரிட்டது. 50 வருடம் ஆளுகைசெய்தபின் தன்னுடைய 90-வது வயதிலிறந்தான். இவனுக்குப்பின் மொகலாய்ராஜ்ஜியம் சின்னபின்னமாய்விட்டது. மொத்தத்தில் இந்தியாவை அரசாண்ட 15 மொகலாய் அரசரில் முதல் ஆறுபேர்கள் தான் மிக்க வல்லபமுள்ளவர்கள். இவர்களே இந்தியாமுழுவதையும் உண்மையாக அரசுபுரிந்தார்கள். ஔரங்ஸிப்தான் அவ்வாறிருந்தவர்களுட் கடையானவன். ஔரங்ஸிப் இறந்தபின் அவனுடைய முதற்குமாரனாகிய பஹதூர்ஷா 5 வருடகாலம் அரசாண்டு இறந்தான். அதற்குப்பின் 7 வருஷத்திற்குள்

39. அத்தவன்கூடி போமெலேதன் மக்களை உதைமெலிந்தன் காரியமிட்டு.

இஞ்சியென்ருல் எனக்குத் தெரியாதா? எலுமிச்சம்பழம்போல் எட்டுச்சாணிருக்கும்.

டெல்லியில் 3 அரசர்கள் நகரத்திலுள்ள சமஸ்தான பிரபுக்களால் நியமன மாகி சிங்காஸனமிழந்து கொலைசெய்யப்பட்டார்கள். ஔரங்ஸிப் இறந்த 12 வருஷத்தின்பிறகு அதாவது 1719-ம் ஆண்டில் அவனுடைய வம்சத்தில் மூஹம்மத்ஷாவென்னும் ஓரரசன் பட்டத்திற்குவந்து 30 வருஷம் அரசாட்சி செய்தான். இவன்பெயருக்குமாத்திரம் பெரிய சக்ரவர்த்தியேயொழிய காரியத்தில் பசையற்றவன். தற்காலத்தில் மாகாணங்களை ஆளுகைசெய்வதற்காக கவர்னர் என்னும் உத்தியோகஸ்தர்கள் அரசர்களால் நியமிக்கப்படுவதுபோல், முற்காலத்தில் மாகாணங்களை ஆண்டுவந்த உத்தியோகஸ்தர்களுக்கு ஷுபேதார் என்றும், சர்தார் என்றும், நவாபு என்றும், இந்திய சக்ரவர்த்திகளால் பெயர்கொடுக்கப்பட்டிருந்தன. இவ்வுத்தியோகஸ்தருள் முக்கியமானவர்கள் இந்தியாவுக்குவடக்கிலுள்ள அயோத்தியின் ஷுபேதாரும், வங்காளத்தில் பேஹார் நவாபும், தெற்கில் நைஜாமுல்முல்க் என்னும் பெயருடைய ஐதராபாத்து ஷுபேதாரும் ஆர்காட்டுநவாபாகிய கர்நாடகநவாபுமே. ஔரங்ஸிபினுடைய கொடுங்கோல் அரசாட்சியினுல் தேசம் சீர்கேடாய்ப்போய்விட்டதன்றியும் அவனுக்குப்பின்வந்த அரசர்கள் ஆற்றலற்றவர்களாயிருந்தமையால் மேற்கூறிய நாற்பகுதி ஸர்தார்களும் இன்னும் பிறவிடங்களிலுள்ள சிறிய சர்தார்களும் சிற்றரசர்களும் தாம்தாமே அவ்வப்பகுதிகளுக்கு அரசர்களென்று உரிமைமேற்கொண்டு அவ்வப்பகுதிகளைத் தனித்தனியே அரசபுரிந்துவந்தார்கள். ஆனல் சக்ரவர்த்திக்குமாத்திரம் தாம்செலுத்தவேண்டிய கப்பத்தை முறைமைப்படி செலுத்திவந்தார்கள்.

ஔரங்ஸிப் இறந்து 30 வருஷத்துக்குப்பிறகு முஹம்மதுஷா என்பவன் ராஜரீகம் நடாத்திவருங்காலத்தில் பார்ஸிக தேசத்துக் குரூரமுள்ள அரசனாகிய நாதர்ஷா என்பவன் ஆப்கானஸ்தான் மேல்படையெடுத்து அத்தேசத்தை வெற்றிகொண்டு தன்சேனைகளுடன் டெல்லிக்குவந்து அப்பட்டணத்தைக் கொள்ளையாடித் திரண்ட செல்வத்துடனே தன் தேசம்போய்ச்சேர்ந்தான். இக்கொள்ளைக்குப்பிறகு மொகலாய்ராஜ்ஜியம் இன்னும் அதிக தாழ்ந்தநிலைமைக்குவந்துவிட்டது. ஸர்தார்மார்கள் சக்ரவர்த்திக்குச்செலுத்திவந்த கப்பத்தை முற்றிலும் நிறுத்திவிட்டார்கள். சிற்றரசர்களெல்லாம் சுவாதீனத்தைத் தேடிக்கொண்டார்கள். பற்பல இடங்களில் கலகங்களும் சண்டைகளும் நேர்ந்தன. இராஜ்ஜியம் அதிக சின்னபின்னமாய்விட்டது. 1748-ம் வருஷத்தில் முஹம்மதுஷா இறந்தான். அவனுக்குப்பிறகு அலிவர்திகான் என்னு மோர்போர்வீரன் டெல்லியைத் தன்வசப்படுத்திக்கொண்டான். இவன் கல்கத்தாவுக்குவடக்கே 120 மைலுக்கப்பாலுள்ள முர்ஷிதாபாத் என்னும் பட்டணத்தைத் தனக்குத் தலைநகரமாக்கிக்கொண்டு ராஜ்ஜியத்தை 8 வருஷகாலம் செம்மையாய் அரசாட்சிசெய்து பின்னர் இறந்தான்.

31. காலில்லை கையுண்டு, தலையில்லை சரீரமுண்டு, குடலில்லை வயிறுண்டு, கொண்டுபோவார் யாவருமே அன்புடனே. கூறிடுவாய் இவர் யாரோ தெளிவாய்க் கூறுவீர்.

பொட்டிக்கடை முண்டத்தில் பொருக்கி எடுத்தமுண்டம்.

அதன்பின்னர் அவனுடைய பேரன் சுராஜுத்தௌலா என்பவன் பட்டத்திற்குவந்தான். இவன் அதிக பலஹீனனும் மூடனுமிருந்தான்.

இவன் தன்னுடைய ராஜாங்கத்தில் பல மூர்க்கத்தனமான துஷ்டசெய்கைகள் செய்திருக்கிறான். குடிகளை மிகவும் கொடுமையாய் நடத்தினான். ஆகையால் குடிகள்யாவரும் அவனை வெறுத்துத் தொலைப்பதற்கே எண்ணங்கொண்டிருந்தார்கள். அவனுடைய பிரதான சேனாதிபதியாகிய மீர்ஜாபர் என்பவன் *ஆங்கிலேயருடைய உதவியினால் போர்நடத்தி சுராஜுத்தௌலாவை வென்றுமுர்ஷிதாபாத் பட்டந்துக்குடையவனானான். தோல்வியுற்றசுராஜுத்தௌலா ஓடிப்போகும்போது, மார்கத்தில் முன்னால் இவனால் மூக்கறுப்புண்ட ஒருமனிதன் இவனைப்பிடித்துவந்து மீர்ஜாபருடைய மகனிடங்கொண்டுபோய்விட்டான். உடனே அவன் இவனைக் கொன்றுபொட்டான். மீர்ஜாபர் தனக்குதவிபுரிந்த ஈஸ்டு இந்தியா கம்பெனியாருக்கு கல்கத்தாவைச் சூழ்ந்திருக்கும் நாட்டின் ஒருபகுதியாகிய இருபத்துநான்கு பரிமாகாணங்களை இனாமளித்தான். இதுதான் முதல்முதல் ஆங்கிலேயருக்கு இந்தியாவில் காணியாட்சியானது. அலிவர்த்திகான் என்னும் போர்வீரன் மூர்ஷிதாபாத்தை தன்னுடைய இராஜதானியாக்கிக்கொண்டு அவ்விடஞ் சென்றபிறகு டெல்லி சக்ரவர்த்தியாகிய முஹம்மத்ஷாவின் குமாரனாகிய ஷாலாமா என்பவன் பிரஜைகளுடைய அநுமதியினால் இரண்டாவது ஷாஆலம் என்னும் பட்டப்பெயருடன் டெல்லியில் சக்ரவர்த்தியானான். இந்தச் சக்ரவர்த்தியானவன் மூர்ஷிதாபாத் அல்லது வங்காளமாகாணத்திற்கு அதிபதியாயிருக்கும் மீர்ஜாபர் தனக்குக் கப்பஞ்செலுத்திவராமையால் அவனோடெதிர்ப்பதற்காகச் சில சைனியத்துடனே வங்காளத்தை நோக்கிச்சென்றான். அப்போது ஆங்கிலேயர் மீர்ஜாபருக்கு உதவியாக நிற்பதைக்கண்டு அவனோடமர்செய்யப்பயந்து டெல்லிக்குத் திரும்பிப்போய்விட்டான்.

பின்னர், வங்காளத்து நவாபாகிய மீர்ஜாபர் ராஜ்யபரிபாலனத்துக்குத் திராணியற்றவனாயிருந்தபடியால் அவனை நீக்கி அவனுடைய மருமகனான மீர்காஸிம் என்போன் பட்டத்திற்குரியவனாக்கப்பட்டான். இவன் அதிக புத்திசாலியும் சாமர்த்தியமுள்ளவனுமாயிருந்தமையால், தேசத்தை சீர்குலையாமல் செம்மையாய் ஆண்டுவந்தான். இவன் ஆங்கிலேயர் தன்னைச் சிங்காசனாதிபதியாக்கினமைக்காக ஈஸ்டு இந்தியா கம்பெனியாருக்கு 500 லட்சம் ரூபாய் வருமானமுள்ளதும், வங்காளத்தில் மூன்றிலொருபங்கு விஸ்தீரணமுள்ளதுமான பர்த்வான் சித்தகாங் மிதுனபுரம் என்னும் மூன்றுஜில்லாக்களை இனாமளித்தான். இது ஆங்கிலேயருக்கு வங்காளத்தில் கிடைத்தநாடுகளில் இரண்டாவது.

* ஆங்கிலேயர் இந்தியாவுக்குவந்ததும் இதரதேசத்தார்வந்ததும் ஈஸ்டு இந்தியா கம்பெனியாருடைய விருத்திகளும் பின்னால் தெரிவிக்கப்படும்.

32. கந்தைபோல இலையிருக்கும் கதலிமாம்பூப்பூக்கும். தின்னைப்பழம் பழுக்கும் தின்னாத காய்காய்க்கும்.

கடல்வற்றிக் கருவாடு தின்னலாமென்று, உடல்வற்றிச் செத்ததாம் கொக்கு.

டெல்லிச்சக்ரவர்த்தியாகிய ஷா ஆலம் ஆங்கிலேயருடன் செய்தசிலசண்டைகளில் தோல்வியடைந்தபடியால் ஷை ஆங்கிலேயர்களாகிய ஈஸ்டு இந்தியா கம்பெனியாரோடு ஓருடன்படிக்கை செய்துகொண்டு திவானி யென்னும் தன் இராஜ்யாதிகாரத்தை ஆங்கிலேயருக்கு ஒப்புவித்துவிட்டு வருஷம் ஒன்றுக்கு 25 லச்சம் ரூபாய் பென்ஷன் பெற்றுக்கொண்டு சிலகாலமிருந்து தன்னுடைய 100-வது வயதில் இறந்துபோனான். இவனே மொகலாய் வமிசத்தில் கடைசியான அரசன். இவனோடு மொகலாய் இராஜ்யம் முடிவடைந்துவிட்டது.

அன்னிய தேசத்தார் இந்தியாவுக்கு எவ்வாறு வந்தார்களென்பதைச் சற்றேகவனிப்போம். இந்தியாவை ஆக்பர் சக்ரவர்த்தி அரசபுரியுங் காலத்தில் ஆங்கிலேயர் வியாபாரவிஷயமாய் இந்தியாவுக்கு வந்துவிட்டார்களென்பதை முன்னமே தெரிவித்திருக்கிறேனல்லவா? என்ன வியாபாரங்கள் செய்தார்கள் தெரியுமா? மிளகு, அரிசி, நீலம், பஞ்சு, இஞ்சி, தேங்காய், கஞ்சா, சர்க்கரை, கசகசா, கோணி, பட்டு முதலிய சாமான்களை இவ்விடத்திருந்து ஐரோப்பாவுக்கு அனுப்புவதும் இவைகட்குப்பதிலாக இந்தியா விலைப்படாத கம்பளித்துணிகள், இரும்பு, செம்பு, பாதரசம், எஃகுமுதலியவற்றால் செய்யப்பட்ட சாமான்களை ஐரோப்பாவிலிருந்து இவ்விடத்திற்கு வரவழைத்து விற்பனை செய்துகொண்டிருந்தார்கள். இந்த ஆரம்பம் எக்காலத்து நடந்தது தெரியுமா? இன்றைக்கு மூன்று வருடங்கட்குமுன் நடந்ததென்பதைக் கவனத்தில் வையுங்கள்.

முற்காலத்தில் இந்தியாவிலிருந்து ஐரோப்பாவிற்குத் தரை வழியாகக் கோவேறு கழுதைகளின்மீதும், ஒட்டகங்களின் மீதும் சாக்குகளை ஏற்றி ஆப்கானிஸ்தான், பெர்ஷியா, சிறிய ஆசியாமுதலிய தேசங்களின் மார்க்கமாய்ப் போய் வந்துகொண்டிருந்தார்கள். அராபியாகள் அத்தேசங்களைக் கைப்பற்றியபிறகு அவ்வழியாய்ச் செல்வது தடைபட்டுப்போய் விட்டது. பிறகு போர்த்துகேசியருடைய கடல்மார்க்கத்தைப் பின்பற்றத் தொடங்கினார்கள். எங்ஙனமெனில், முதல்முதல் ஐரோப்பாவிலிருந்து போர்த்துகேசியர் (Portuguese) தான் இந்தியாவில் வர்த்தகம் செய்தவர்கள். 1498-ம் வருஷத்தில் வாஸ்கோடிகாமா என்னும் ஓர் போர்த்துகேச கப்பற்றலைவன் தன் மரக்கலங்களுடன் இந்தியாவின் மேற்கரையிலுள்ள கள்ளிக்கோட்டைக்கு வந்து சேர்ந்தான். அக்காலத்தில் அத்தேசத்துக்கரசனாயிருந்த ஜாமொரின் என்பவன் அவனைப்பட்சமாயேற்று வர்த்தகஞ்செய்ய அவனுக்குத்தரவளித்தான். இலவங்கம், இலவங்கப்பட்டை, மிளகு, இஞ்சிமுதலிய வஸ்துக்களை ஐரோப்பாவுக்கனுப்புவதும் அங்கிருந்து பொன், வெள்ளி, பவழம், சிகப்பு துணி முதலியவற்றை இந்தியாவுக்கு வரவழைத்தும் வியாபாரஞ் செய்துகொண்டு வந்தான். இவ்வாறாக 1500-ம் வருடமுதல் 1600-ம் வருடம்வரையில் ஒரு நூற்றாண்டுகாலம் இந்தப்போர்த்துகேசியரே தனிமையாக இந்தியா வர்த்தகம்

33. ஆங்கிலேயருக் கலகக்கிடையர் வெளிக்காரர் அதிலெ... உடகரிக் கட்டி இன்னின் மூன்; அவன் யார்.

காயுங்கனியு முண்டானால் கார்த்திகைமாதங் கலியாணம்.

34. "யாரடா, சோற்றின் மறைவிலே"? என "நான்தான் கோயாளி பத்தியம் பண்ணுகிறேன்" என்றான்.

முழுவதையும் ஐரோப்பாவுடன் நடத்திக்கொண்டு வந்தார்கள். அக்காலத்தில் கோவா நகரத்தில் அவர்களால் கட்டப்பட்ட அதிகபலமுள்ள ஓர் கோட்டை இன்றைக்கும் அழிவுறாமல் அவர்கள் வசத்திலேயே இருக்கின்றது.

ஐரோப்பா கண்டத்து இதரஜாதியார், போர்த்துகேசியர் இந்து தேச வியாபாரத்தால் மிக்க லாபமடைகிறார்களெனத்தெரிந்துகொண்டு அவர்களும் இந்தியவர்த்தகஞ்செய்ய முற்பட்டார்கள். இங்கிலாந்து, உலாந்து, பிரான்ஸ், டென்மார்க்கு, ஜெர்மனி, ஸ்வீடன் முதலிய தேசவியாபாரிகளும் தத்தம் கப்பல்களுடன் இங்கு வந்து வர்த்தகஞ்செய்யத்தலைப்பட்டார்கள். ஆனால் முதல் மூன்று தேசங்கள்மாத்திரம் சிறிது பயனடைந்தன மற்றையோர் நஷ்டப்பட்டுப்போனமையால் இந்தியவர்த்தகத்தை நிறுத்திவிட்டார்கள்.

இம்மூன்று தேசத்தவருள் உலாந்துதேசத்தாராகிய டச்சுக்காரரே போர்த்துகேசியருக்குப்பின் இந்தியாவிற்கு வந்தவர்கள். இக்காலத்தில் டச்சுக்காரருக்குப் போதுமான பலமில்லையாயினும் அக்காலத்தில் அதாவது 300 வருடங்கட்குமுன் ஐரோப்பியர்கள், யாவர்க்கும் முதன்மையானவர்களாயிருந்தார்கள். அவர்கள் போர்த்துகேசியரைப் பார்க்கிலும் மிக்க தைரியசாலிகளாகையால் இந்தியாவில் போர்த்துகேசியரை யெதிர்த்து அவர்கள் வசித்திருந்த ஊர்களில் கோவாவைத்தவிர மற்ற இடங்களையெல்லாம் கைப்பற்றிக்கொண்டு அவர்களை துரத்திவிட்டார்கள். 1600-ம் வருஷமுதல் 1700-ம் வருஷம் வரையிலுள்ள ஒரு நூற்றாண்டுகாலம் செம்மையாய் வர்த்தகஞ்செய்து கொச்சி, இலங்கை, ஜாவா, சுமத்திரா தீவுகள்முதலிய விடங்களில் வியாபாரஸ்தானங்கள் ஏற்படுத்தி யிருந்தார்கள்.

1600-ம் வருஷத்தில் லண்டன்மா நகரத்தில் நூறு வியாபாரிகள் ஒரு கூட்டமாய்ச்சேர்ந்து, இங்கிலீஷ் ஈஸ்டு இந்தியாகம்பெனி" என்னும் நாமத்துடன் இந்தியாவர்த்தகத்துக்கு வந்து அப்போது இந்தியா சக்ரவர்த்தியாயிருந்த அக்பரிடத்தில் அநுமதிபெற்றுக்கொண்டு சூரத்து என்னும் துறை முகத்தில் ஒரு வியாபாரஸ்தலத்தை யேற்படுத்தி வர்த்தகஞ் செய்துகொண்டிருந்தார்கள். இக்கம்பெனியார் மிக்கலாபமடைவதைப்பார்த்த மற்றைய இங்கிலீஷ்வர்த்தகர்களும் இந்தியாவில் வியாபாரஞ் செய்யத் தொடங்கினார்கள் இவ்வாறு பலவியாபாரிகளும் நூறுவருஷகாலம் வரையில் தனித்தனிவர்த்தகஞ் செய்துவந்தபிறகு இவர்கள் யாவரும் ஒன்றுசேர்ந்து 1700-ம் வருஷத்தில் "ஒன்றுகூடிய ஈஸ்டு இந்தியாகம்பெனியார்" என்ற பெயருடன் ஒரு பெரிய கூட்டமாய்க்கூடி இந்தியாவில் தாங்களே வியாபாரஞ்செய்து வரும்படி உத்தரவு பெற்றார்கள்.

முந்நூறு வருடங்கட்கு முன்னர் டில்லிசக்ரவர்த்தியாகிய அக்பர் பாதுஷா அரசாண்டுவருங்காலத்தில், தற்போது செல்வத்திற்சிறந்த பட்டணங்களாகவும் பிரதானநகரங்களாகவுமிருக்கின்ற சென்னை, பம்பாய், கல்கத்தா

கரக்காய் கற் என்றால் கணவனை அப்பா! யென்று கட்டிக்கொண்டாள்.

வாகிய இவைகள் அப்போது அதாவது அக்பருடைய அரசாட்சிகாலத்தில் சிறிய கிராமங்களா யிருந்தன.

கர்நாடக தேசத்தின் மலைக்கோட்டைத் தலைவனாயிருந்த சந்திரகிரி யாசனுக்கு அப்போது மீன்பிடிப்பதற்குபயோகமான சிறு கிராமமாயிருந்த சென்னையை 1639-ம் வருஷத்தில் ஈஸ்டு இந்தியா கம்பெனியார்கள் கிரயத்திற்கு வாங்கினார்கள். அக்காலத்தில் கர்நாடகராஜ்யத்தில் கலகங்களும் யுத்தங்களும் அதிகமாயிருந்தபடியால் ஆங்கிலேயர் தம்மைக் காத்துக் கொள்ளும் பொருட்டு சென்னையில் பலமான ஒரு கொட்டையைக் கட்டி அதற்கு "போர்ட் செண்ட் ஜியார்ஜ்" என்று பெயரிட்டார்கள். ஆங்கிலேயருடன் வர்த்தகஞ் செய்யும்பொருட்டு அநேகஇந்துக்களும் பல தேசங்களிலிருந்து வந்து இவ்விடத்தில் குடியேறினார்கள். இந்துக்கள் வசித்திருந்த இடத்திற்கு பிளாக்டவுன்" என்று பெயரிடப்பட்டது. அதுதான் தற்போது சென்னைமா நகரத்திற் மத்தியபாகமாயிருக்கிறது. நாளது 1906-ம் வருஷத்தில் பிளாக்டவுன் என்னும்பெயரைமாற்றி "ஜியார்ஜ்டவுன்" யென்று பெயரிடப்பட்டிருக்கிறது. இச்சென்னை தற்சமயம், சென்னப்பட்டணம் என்றும் மதராஸ் என்றும் பெயர் வழங்கப்பட்டு வருகின்றது.

இனி பம்பாய் என்னும் கிராமத்தைப்பற்றிச்சிறிது பேசுவோம். ஆரம்பத்தில் பம்பாயானது போர்த்துகேசியருக்குச்சொந்தமாயிருந்தது. இங்கிலாந்து அரசர்களிலொருவனான "இரண்டாவதுசார்லஸ்" என்பவன்போர்த்துகல் தேசத்தரசனுடைய மகளை மணஞ்செய்து கொண்டான். 1662-ம் வருஷத்தில் அவளுடைய தந்தை இங்கிலாந்து அரசனுக்கு பம்பாயை சீதனப்பொருளாகக் கொடுத்துவிட்டான். ஆறுவருஷஞ் சென்றபிறகு இங்கிலாந்தரசன் ஈஸ்டு இந்தியா கம்பெனியாருக்கு அடி பம்பாயை வருஷம் ஒன்றுக்கு 10 பவுன் வாட்கைக்கு விட்டிருந்தான். அங்கொரு சிறந்த துறைமுகமிருக்கிறது. அநேக இந்துவியாபாரிகள் அவ்விடம்வந்து குடியேறினார்கள். நாளாவர்த்தியில் அது ஒரு பெரியபட்டணமாய்விட்டது. சிலகாலத்திற்குப்பின் ஆங்கிலேயர்தங்கள் வர்த்தகமனைத்தையும்சூரத்திலிருந்துபம்பாயிக்கு மாற்றிக்கொண்டார்.

இனி கல்கத்தாவென்னும் கிராமத்தைப்பற்றிச் சிறிது எடுத்துப்பேசுவோம். ஷாஜஹான் சக்கரவர்த்தியினுடைய குமார்த்தியொருத்தி ஒருநாள் விளக்கருகேசென்றபோது அவளுடையிலே தீப்பற்றிக்கொண்டது. அதனால் தேகத்தில் கடுமையான காயமுண்டாயிற்று. அப்போது சூரத்திலிருந்து ஆங்கிலேய வைத்தியனொருவனை வரவழைத்து அப்பகோயம் ஆரம்பப்பட்டது. அதனால் சக்ரவர்த்தி அதிக சந்தோஷமடைந்து வைத்தியனுக் கிஷ்டமானதைக்கேட்கும்படி உத்தரவளித்தான். அவ்வைத்தியன் வங்காளத்தில் ஆங்கிலேயர் வர்த்தகஞ் செய்யமாத்திரம் உத்தரவளித்தால் அதுவே போதுமென்றுகேட்க உடனே அவ்வாறு அநுமதிபெற்றார்கள். சகோதரர்களே!

35. இரண்டு குதிரை நாலுகால் இரண்டுகொம்பு, ஒன்றைவிட்டு ஒன்றுபோகாது ஒருவருக்குமேல் ஏறமுடியாது இதென்ன?

கிணற்று ஆழமும் கயிற்று நீளமும் பார்க்க வேண்டும்.

போகலாய் தர்பாரைப்பார்த்தீர்களா? இதுவன்றோ அந்தாதர்பாரென்பது. ஒருகாயத்தை ஆற்றினதற்காக ஒரு ராஜ்ஜியத்தில் தீர்வையில்லாமலே வர்த்தகஞ்செய்ய உத்தரவுபெற்றுக்கொண்டார்கள்.

உடனே, அதாவது 1640 ௵ல் கங்கையாற்றின் சங்கமத்தருகில் ஹூக்ளியென்னுமிடத்தில் ஆங்கிலேயர்வர்த்தகசாலையொன்றமைத்துக்கொண்டார்கள். அதன்பிறகு கங்கைநதிக்கரையில் மூன்று கிராமங்களை விலைக்குவாங்கினார்கள், இவற்றில் ஒருகிராமத்தின்பேர் "காளிகட்டம்", அதுதான் பிறகு கல்கத்தாவென்று வழங்கப்பட்டுவருகிறது. இவ்விடத்தில் 1690-ம் ௵ல் "போர்ட் செண்ட் வில்லியம்" என்னும் கோட்டையை ஆங்கிலேயர் கட்டினார்கள். ஆங்கிலேயர்கள் கல்கத்தாவில் வர்த்தகஞ்செய்வதற்காக வங்காள நவாபுக்கும், சென்னையில் வர்த்தகஞ்செய்வதற்காக ஆர்க்காட்டு நவாபுக்கும் வருஷாந்தரவாடகை செலுத்திவந்தார்கள்.

அக்காலத்தில் பலவித கலகங்களிருந்தமையால் பிரெஞ்சுக்காரர்களும் சில சிற்றரசர்களுடன் சண்டைசெய்தாயாவது, புதுச்சேரி, சந்திரநாகூர் என்னும் இம்மூன்றுபட்டணங்களையும் வென்று தம்வசப்படுத்தி வர்த்தகஸ்தானங்களாக்கிக்கொண்டார்கள்.

அதுபோலவே உலாந்தாக்காரர்களும் கோச்சி, பழவேற்காடு, சின்ஸ்ரா என்னும் இம்மூன்றுநகரங்களையும் தங்கள் வர்த்தகசாலஸ்தானங்களாக்கிக்கொண்டார்கள். மஹாராஷ்டிரர் ஒருபக்கமும் சிக்ஜாதியார் ஒருபக்கமும் இருந்து கலகங்கள்புரிந்து எங்கும் போர்செய்துகொண்டிருந்தார்கள். இந்துதேசமுழுமையும் கலகம், ஒற்றுமையின்மை, கொலை, களவு, பொய்முதலியவைகளால் அல்லகல்லோலப்பட்டிருந்தது.

கர்நாடகதேசத்திற்கு வட ஆர்காடுதான் பிரதான நகரமாயிருந்தது. 1744-ம் வருஷத்தில் அதை அரசாண்டுவந்தவன் அன்வர்தீன் என்னும் நவாபு. ஆங்கிலேயர் சென்னைக்காகவும், பிரெஞ்சுக்காரர் புதுச்சேரிக்காகவும் அன்வர்தீனுக்குக் கப்பங் கட்டிக்கொண்டுவந்தார்கள். அக்காலத்தில் ஐரோப்பாவில் பிரெஞ்சுக்காரருக்கும் ஆங்கிலேயருக்கும் யுத்தம் நடந்துகொண்டிருந்தபடியால், இந்தியாவிலும் அவ்விருதிறத்தாருக்கும் கர்நாடகஇடங்களில் போர் நடந்துகொண்டிருந்தது. சென்னையில் ஆங்கிலேயருக்கு அதிக சைனியமில்லாமையால், பிரெஞ்சுக்காரர் படையெடுத்துவந்து சென்னையைப் பிடித்துக்கொண்டார்கள். இதுசங்கதி கர்நாடகநவாபாகிய அன்வர்தீனறிந்து பிரெஞ்சுக்காரர்களை விரட்டியோட்டும்படி ஒரு சைனியத்தையனுப்பினான். அச்சைனியம் பிரெஞ்சுக்காரரால் தோற்கடிக்கப்பட்டு புறங்காட்டி யோடிவிட்டது. பின்னர் ஆங்கிலேயருக்கும் பிரெஞ்சுக்காரருக்கும் சீர்மையில் சமாதானமாய்விட்டது. இந்தியாவிலும் அவ்விருதிறத்தார்க்கும் சண்டை நின்றுபோய்விட்டது. 1748-ம் வருஷத்தில் சென்னை திருப்பிக்

36. "ஏனைகளுக்கு சாக்ஷி சகதேவர் ஆண்டிருக்கிறார்" என "இதை ஒரு மண்டபம் பார்த்திருக்கிறேன்" என்றான்.

கொடுக்கப்பட்டது. ஆங்கிலேயருக்கும் சீர்மையிலிருந்து சைனியங்கள் வந்துகொண்டிருந்தன.

1748-ம்வருஷத்தில் தக்ஷணத்திற்கு சர்தாராயிருந்த நிஜாமுல்முல்க் இறந்துபோகவே அவனுடைய மூத்தகுமாரனாகிய நாஜர்ஜங் பட்டத்திற்குவந்தான். ஆனால் அவனுடைய மருமகனாகிய முஜாபர்ஜங் அப்பட்டத்தைத்தானடையவேண்டுமென்னும் நோக்கத்தால் புதுச்சேரிக்குப்போய்ப் பிரெஞ்சுக்காரருதவியைக் கேட்டுக்கொண்டான்.

அதேகாலத்தில் சந்தாசாகிபு என்னும் ஒருதலைவன் அன்வர்தீனைத்தள்ளிவிட்டுத் தான் கர்னாடகதேசத்திற்குச் சிங்காஸனாதிபதியாகவேண்டுமென்னுங் கருத்தால் அவனும் புதுச்சேரிக்குப்போய் பிரெஞ்சுக்காருடைய உதவி வேண்டினான். இந்தியதேசத்தையே ஜெயித்துத் தங்கள்வசமாக்கிக்கொள்ள வேண்டுமென்று பேராசைகொண்டிருந்த பிரெஞ்சுக்காரருக்கு இவ்விரண்டரசர்களும்வந்து உதவிகேட்கவே அதிக சந்தோஷமும் குதூகலமுமுண்டாகி அவர்களுடைய வேண்டுகோளுக்கு உடனே இணங்கினார்கள். மேற்கூறிய இரண்டரசர்களுடைய சேனையோடு பிரெஞ்சுக்காரர் தம்முடைய சேனையையுஞ்சேர்த்து ஆக மூன்றுசேனைகளுடன் ஆற்காட்டிற்குச்சென்று அன்வர்தீனுடன் போர்புரிந்து அவனைக் கொலைசெய்துவிட்டு சந்தாசாகிபை சிங்காசனத்திலேற்றி அந்தமூன்றுசேனைகளோடு ஹைதராபாத்துக்குப்போய் நாஜர்ஜங் என்பவனுடன் போர்செய்து அவனையுங்கொன்று முஜாபர்ஜங் என்பவனை ராஜ்யாதிபதியாக்கினார்கள். இவ்வாறு பிரெஞ்சுக்காரர்கள் வெற்றிகொண்டதினிமித்தம் ஐதராபாத் அரசனால் ,கீழ்க்கடற்கரையிலிருக்கும் வடசர்க்கார் பிரதேசங்களும் கர்னாடக அரசனால் கர்னாடகத்தில் பெரியநாடும் அளவிறந்தபொருளும் பிரெஞ்சுக்காரருக்கு இனாமளிக்கப்பட்டது.

கர்னாடக அரசனாகிய அன்வர்தீன் கொலையுண்டபின்னர் அவனுடைய குமாரனாகிய முஹம்மதலி, தான் தப்பித்துக்கொண்டு திருச்சினாப்பள்ளிக்கு ஓடிப்போய்விட்டான். பிரெஞ்சுக்காரர் அவனைத்துரத்திக் கொண்டுபோய் திருச்சினாப் பள்ளியை முற்றுகைபோட்டார்கள். உடனே முஹம்மதலி சென்னையிலிருக்கிற இங்கிலீஷ்காரருக்குஎழுதித் தனக்குதவி செய்யும்படிக் கேட்டுக்கொண்டான். இங்கிலீஷ்காரரும் இவ்வாறொருநல்லசமயம் வாய்க்கவேண்டுமென்று காத்துக்கொண்டிருந்தமையால் தேடிப்போன மூலிகை காலில் அகப்பட்டதென்றெண்ணி அதற்குட்பட்டு ஒரு சிறு சைனியத்தையனுப்பி ஆற்காட்டைக் கைப்பற்றிக்கொண்டார்கள். இதைக் கேள்வியுற்ற சந்தாசாகிபும் பிரெஞ்சுக்காரரும் ஆற்காட்டை முற்றுகை போட்டார்கள். இம்முற்றுகை 1752-ம் வருஷம் நிகழ்ந்தது. கோட்டைக்குள்ளிருந்த ஆங்கிலேயர் வெளியிலிருந்த பிரெஞ்சுசேனையை மிக்கவல்லமையுடன் எதிர்த்து நின்

37. கொல்லர் தெருவில் ஊசி விற்கிறதா?

தேவடியாள் சிங்காரிக்கிறதற்கு முன்னே தேரோடித் தெருவில்நிற்கிறது.

மூர்கள். அப்போது சென்னையிலிருந்து ஆங்கிலேயருக்கு உதவி கிடைத்தமையால், பிரெஞ்சுக்காரர் தோல்வியுற்று ஓட்டம் பிடித்தார்கள். பிறகு ஆங்கிலேயர் திருச்சிராப்பள்ளிக்குச்சென்று கடும்போர்புரிந்து பிரெஞ்சுக்காரரைத்துரத்தியடித்து முஹம்மதலியை மீட்டுச்செய்து ஆற்காட்டுக்குச் சிம்மாஸனாதிபதியாக்கினார்கள். சகோதரர்களே! பார்த்தீர்களா? விகடத் தாத்தாவாகியநான் இந்தக்கண்றாவிகளையெல்லாம் வாய்பேசாமல் மௌனமாய்ப்பார்த்துக்கொண்டேதா னிருந்தேன். ' இந்துதேசம் சமீபகாலத்திலேயே மெள்ள மெள்ள இங்கிலீஷ்காரர்வசத்தில் எவ்வாறு நகர்ந்து போய்க்கொண்டிருக்கிறதுபாருங்கள். இதுமுதல் இங்கிலீஷ்காரருடைய ஆற்றல் வளர்பிறைபோல் நாளாவர்த்தியில் அதிகரித்துக்கொண்டும் பிரெஞ்சுக்காரருடைய பலம் தேய்பிறைபோல் குறைந்துகொண்டும் வந்தது.

நவாப் முஹம்மதலி ஆற்காட்டை அரசாண்டுவந்த காலத்தில் மைசூர் இராஜ்ஜியத்தை ஒரு சிறுபாளயக்காரன் ஆண்டுவந்தான். அக்காலத்தில் எளியகுலத்திற் பிறந்தவனும் அஞல் தைரியமும் சாமர்த்தியமும் உடையானுமாகிய ஹைதராலி என்னுமோர் போர்வீரன் கொஞ்சங் கொஞ்சமாய் வெளிக்குவரத்தொடங்கினான். அக்காலத்தில் மல்யுத்தத்தில் தேர்ந்தவனொருவ னிருந்தால அவனுக்கநேகர் சிஷியர்கள் கீழ்ப்பட்டிருப்பார்கள். ஹைதராலியும் மல்யுத்தத்தில் வல்லவனுகையால் அநேகமல்லர்கள் இவனைச் சூழ்ந்திருந்தார்கள். இவர்களை ஆதரிக்குகிமித்தம் பற்பலஇடங்களுக்குப் போய்க் கொள்ளையிட்டு வருவது இவனுக்கு வழக்கமா யிருந்தது. ஆகையால் இவன் ஆதியில் கொள்ளைக்கூட்டத் தலைவனுயிருந்தான். இக்கூட்டத்தினர் பல கிராமங்களுக்குச்சென்று பொருள் தானியம் ஆடுமாடுகள் முதலிய வற்றை கொள்ளையடித்து கொண்டுபோய் தாம்பாதியெடுத்துக்கொண்டு தலைவனுகிய ஹைதராலிக்குப் பாதி கொடுப்பார்கள் ஹைதராலி மிகவும் கொடியவன், கொள்ளைக்காரன் என்னும் பெயர் எங்கும் பரவியது. ஹைதராலி என்னும் பெயரைக்கேட்டமாத்திரத்தில்ஜனங்கள் நடுங்குவார்கள்.

ஹைதராலி.

38. உலகம் ஒருபிணைத்திற் இணையாம்.

கஞ்சிவார்க்க ஆளில்லாவிட்டாலும் கச்சைகட்ட ஆளிருக்கிறது.

மைசூர் பாளயப்பட்டுக் குட்பட்டவர்களாய் அநேக சிறுபாளயக்காரர்கள் கப்பங்கட்டிக்கொண்டு வந்தார்கள். அக்காலத்திலிருந்த மைசூர் பாளயக்காரன் அதிகபலஹீனனாயிருந்தமையால் அவனுக்குக் கீழ்ப்பட்டிருந்தோர் அநேகர் அவனுக்குச்சரியாய்க் கப்பஞ்செலுத்தாமல் அதிக பாக்கித்தொகையை நிலுவையில் வைத்திருந்தார்கள். மைசூர் பாளயக்காரன் ஹைதராலியினுடைய பிரதாபத்தைக்கேள்வியுற்று அவனையும் அவன் கூட்டத்தையும் தன்னிடத்தில் உத்தியோகத்திலமர்த்திக்கொண்டான். இதனால் ஹைதராலிக்கு முன்னிலும் அதிகபலம் உண்டாயிற்று. அநேகரிடத்தில் பாக்கியாய் நின்றிருந்த பெருந்தொகையான இஸ்திபணத்தைச் சீக்கிரத்தில் வசூல்செய்துவிட்டான். தன்னரசனுக்கடங்காமல் முரண்செய்துகொண்டிருந்த வீரர்களையெல்லாம் வீறடங்கும்படி யடக்கிவிட்டான். ஆகையால் அரசனுக்கு ஹைதராலியின்மேல் அதிகபட்சமுண்டாகி அவனைத் தன் சேனைக்குத் தளகர்த்தனாக்கினன். ஹைதராலி அதிக சாமர்த்தியமும் புத்தி கூர்மையுமுள்ளவன். சகலகாரியங்களிலும் தந்திரசாலி. மைசூர் இளவரசனுக்குப் பிரதிகாவலனாயிருந்த அவனுடைய சிற்றப்பனோடு அரசன் விரோதமுற்றபோது ஹைதராலிதான் இளவரசன்பக்கத்தில் சார்வதாகப்பாவனை காட்டி பிரதிகாவலனை நீக்கிவிட்டு ராஜ்யாதிகாரமனைத்தையும் தானேவகித்துக்கொண்டு சிறிதுகாலத்திற்குப்பின் தானே சிம்மாஸனாதிபதியாகி இளவரசனையும் சிறைப்படுத்திவிட்டான்.

தன்னிடத்தில் உத்தியோகமாயிருந்த சிலபிரெஞ்சுகாரர்களைக்கொண்டு தன்படைகளைப் போர்த்தொழிலிற்பழக்கி அவர்களுக்கு நல்ல ஆயுதங்களைச் சேர்த்து சீக்கிரத்தில் ஒரு பெரிய பலமானசேனையை சித்தப்படுத்திக்கொண்டான். மைசூர் அரசனுடைய வல்லமைக் குறைவால் சுவாதீனம் பாராட்டிவந்த மற்றும் சிலசிறிய அரசர்களுடன் சமர்புரிந்து அவர்களைத் தன் வசமாக்கிக்கொண்டான். ஹைதராபாத்து நிஜாமுடைய இராஜ்ஜியத்தில் அநேகதேசங்களையும் கர்நாடகதேசத்தில் அநேக ஊர்களையும் தன் வசப்படுத்திக்கொண்டான். போனபோன இடங்களிலெல்லாம் இவனுக்கு ஜெயமேமிகுதியாக உண்டாயிற்று. நாளாவர்த்தியில் இவனுக்கு ஆற்றல் அதிகரிக்கவே இங்கிலீஷ்காரருக்கு இவனைப்பற்றிய திகில் மிகுதியாயிற்று.

ஹைதருடைய ஆற்றலை யடக்கிவிடவேண்டுமென்று ஆங்கிலேயர் பலவழியில் முயற்சிசெய்து அவனுடன் பல இடங்களில் போர்புரிந்தார்கள். சில சண்டையில் ஆங்கிலேயர் வெற்றியும் சில சண்டையில் தோல்வியுமடைந்தார்கள். கடைசியாக இருதிறத்தாரும் ஓருடன்படிக்கை யேற்படுத்திக்கொண்டு பத்துவருஷகாலம் போரின்றி அமைதியாயிருந்தார்கள். பிறகு ஆங்கிலேயருக்கும் ஹைதருக்கும் மனஸ்தாபம் நேரிட்டு பாங்கிப்பேட்டையிலும் சோழலிங்கபுரத்திலும் இருதிறத்தாருக்கும் பெரிய இரண்டு யுத்தங்கள்

39. கழுகு உனக்கு வழிகாட்டியானால் பிணக்கிடத்தில் உன்னைக் கொண்டுசேர்ப்பிக்கும்.

நாட்டான் பெண்சாதி என்றால் என், என்பாள்; நாலுபேருக்குச்
சோறு என்றால் ஊம், என்பாள்.

நடந்தன. இந்த யுத்தங்களில் ஹைதர் தோல்வியடைந்தான். சில காலத்துக்குப்பின் ஹைதரலி இறந்துபோகவே 1784-ம் வருஷத்தில் ஆங்கிலேயர் ஹைதருடைய குமாரன் திப்புசுல்தானுடன் மங்களூரில் ஓர் உடன்படிக்கை செய்துக்கொண்டார்கள். இதில் அவரவர்கள் ஜெயித்த நாடுகள் அவரவர்களுக்குக்கொடுத்துவிடப் பட்டன.

டிப்பு சுல்தான்.

திப்புசுல்தான் மிக்க வல்லமையும் புத்திக்கூர்மையும் தந்திரமுமுடையவனாயிருந்தான். இவனுக்கும் தன் தகப்பனைப்போலவே சென்ற சென்ற இடங்களிலெல்லாம் வெற்றியே யுண்டாயிற்று. மேற்குக்கரையிலுள்ள குடகு, மலையாளம் முதலிய ராஜ்ஜியங்களையும் கர்நாடகம் ஹைதராபாத்து முதலிய ராஜ்ஜியங்களில தன் தகப்பனால் ஜெயிக்கப்படாத பலதேசங்களையும் மஹாராஷ்டிர ராஜ்ஜியத்தில் அனேக தேசங்களையும் தன் வசப்படுத்திக் கொண்டு சென்றஇடங்களிலெல்லாம் ஜெயபேரிகை யடித்துக் கொண்டு வந்தான். ஆங்கிலேயர் பிரெஞ்சுக்காரர் மஹாராஷ்டியர் முதலிய பேர்களும் திப்பு என்னும் பெயரைக் கேட்ட மாத்திரத்தில் திகிலடைந்திருந்தார்கள். கடைசியாய் ஆங்கிலேயர் திப்புசுல்தானை எவ்விதத்திலேனும் ஜெயித்து விடவேண்டுமென்று பல தந்திரங்கள் செய்தார்கள். திருவாங்கூரைப்பிடிக்கும்நிமித்தம் திப்பு பிரயத்தனப்பட்டுக்கொண்டிருக்கையில், ஆங்கிலேயர் ஹைதராபாத்து நிஜாம் அரசனையும் மஹாராஷ்டிரர்களையும் தமக்குத் துணையாய்ச் சேர்த்துக்கொண்டு திருவாங்கூர் அரசனுக்குதவியாயிருந்து திப்புவை எதிர்த்தார்கள். இதில் திப்புசுல்தான் தோல்வியுற்று தன்தேசத்திற்கோடிப்போய்விட்டான். ஆங்கிலேயர் அவனைவிடாது பின்பற்றிச் சென்று திப்புவின் ராஜதானியாகிய சீரங்கப்பட்டணத்தில் சண்டை செய்தார்கள். அதிலும் திப்பு வெற்றிபெறுவதற்கு உபாயமில்லாமையால் ஆங்கிலேயருடன் ஒரு சமாதான உடன்படிக்கை செய்துகொண்டான். அதன் நிபந்தனைகள் என்னென்னின் திப்பு தன்தேசத்திற் பாதியும் போர்ச் செலவுக்காக மூப்பதுகோடி ரூபாயும் கொடுக்க வேண்டுமென்றும், அந்த மூப்பது

40. விலைமகளிர் பெண் உப்பிலா[illegible] இடப்பாளும்.

ஏண்டா ! பட்டப்பகலிலே இருக்கிறாய்?
ச்சீ, போ, என் அவசரம் உனக்குத்தெரியுமா ?

கோடி ரூபாயில் பாதி உடனேகொடுத்து மற்றப்பாதியைசிலகாலத்தின்பிறகு கொடுக்கவேண்டுமென்றும் இந்தத் தொகை முழுவதையும் செலுத்துகிற வரையில் திப்புசுல்தானுடைய இரண்டு பிள்ளைகளையும் ஈடுவைக்க வேண்டுமென்றும் தீர்மானிக்கப்பட்டிருந்தன.

சில காலத்திற்குப்பின் ஆங்கிலேயருக்கும் திப்புசுல்தானுக்கும் சில மனஸ்தாபங்கள் நேரிட்டு கடைசியாக ஸ்ரீரங்கபட்டணத்தில் ஓர்யுத்தம் நடந்தது. அதில் திப்புசுல்தான் வெட்டுண்டு இறந்துபோனான். மைசூர் ராஜ்ஜியம் ஆங்கிலேயர்வசமாய்விட்டது. ஆனால் அவர்கள் அந்தராஜ்ஜியத்தை பழைய ஹிந்து அரசன்சந்ததியில்வந்த ஐந்துவயதுள்ள கிருஷ்ண ராஜாவுக்குப் பட்டங்கட்டிவைத்தார்கள். திப்புசுல்தானுடைய இரண்டு குமாரர்களுக்கும் மூன்றுகோடிரூபாய் உபகாரச்சம்பளங்கொடுத்து அதிகபட்சமும் விசுவாசமும் பாராட்டி வேலூரில்வசிக்கும்படி அனுப்பிவிட்டார்கள். இவ்வாறு ஆங்கிலேயர் நாளாவர்த்தியில் பலப்பட்டு பிரபலமாய் அபிவிருத்தி யடைந்து வந்ததுமல்லாமல் மற்றைய அரசர்களையும் தந்திரத்தால்வென்று தற்காலம் தாங்களே இந்துதேசம் முழுவதையும் ஏக சக்ராதிபதிகளாய் அரசாண்டு வருகிறார்கள்.

விகடனாகிய எனக்கு ஒரு விஷயத்தில்மாத்திரம் பூரண திருப்திதான். எப்படியெனின், ஆங்கிலேயருடைய அரசாட்சி அதிகந்தமாய் நடந்து வருகிறது. சகலஜனங்களும் சந்தோஷமாய் வாழ்ந்துவருகிறார்கள். ஐயோ! போகட்டும் எப்படியாவது செம்மையாய் வாழட்டும். கண்குளிர யாவரும் பார்க்கட்டும்.

மூன்றாம்நாள் விகடப் பிரசங்கம்.

சகோதரர்காள் ! இப்போது இந்தியாவைப்பற்றிய சுருக்கமான சங்கதியைத்தெரிந்துகொண்டீர்கள். இனிமேல் உங்கள் குடும்பத்தைக் காப்பாற்றிக்கொள்வதற்காகச் சில அருமைவாய்ந்த நூல்களையும் அடியில் தெரிவிக்கிறேன். அவைகளை நீங்கள் யாவரும்வாங்கி வாசித்தால் அத்தனையும் பிரயோஜனந்தான். இன்னும் சுகாதாரத்திற்குறிய பல ஔஷதங்கள், வேடிக்கைக் கதைகள், விநோத சம்பாஷணைகள், சிலலரைப் பலசரக்குகள், முதலியவைகளையும் பேசிவருவேன்பாருங்கள். என் உபதேசங்களைப் புறக்கணிக்காது கவனத்திற்செலுத்தி அதுபோல் நடந்துவருவீர்களானால் அனேகம் நன்மையைப் பெறுவீர்கள்.

---

41. பொறுமையற்ற ஏழைமனிதன் எண்ணெயில்லாத தீபத்திற்குச்சமானம்.

கத்தரிக்காய் சொத்தை என்றான், அரிவாள்மணைக் குற்றமென்றான்.

குடும்பஸம்ரக்ஷணி.

ஒவ்வோருவருக்கும்
அதிமுக்கியோபயோகமாய் வேண்டத்தக்க
அருமையான புத்தகம்.

சர்வமத சம்மதமாயும், சகல ஜன மநோஹரமாயும், அளவிறந்த நீதி சாரங்களமைந்ததாயும் இயற்றப்பட்டுள்ள மேற்குறித்த பெயரையுடைய மிகச் சிறந்த நூதன நூல், டிம்மி எட்டுபக்கம் ஸைஜில் உயர்ந்த இளைக் காகிதத்தில் 420 - பக்கங்கள் கொண்டதாயச்சிட்டு உயர்ந்தகலிகோ பயின்டு செய்து வெளியாக்கப்பட்டிருக்கின்றது.

இந்நூல், மானிடர்கள் தங்கள் தோற்றம்முதல் இறுதிவரையில் நடந்துவரவேண்டிய இன்றியமையாப் பொதுவான ஒழுக்கங்களையும், பாலர்களைப் பயிற்றவேண்டிய வரிசைக் கிரமங்களையும், மாதர்களைத் திருத்தவேண்டிய இதோபதேசங்களையும், மாதர்கள் தங்கள்கணவர் மாமன்மார் மாமிமார் பேதைவியோர்க்குச் சிறப்புடன் நடக்கவேண்டிய முறைமைகளையும், மானிடர்கள் பலரும் பொதுவாக இகபரசௌக்கியங்களடையத்தக்க முக்கியசாதனங்களையும், தெள்ளிதின் வெள்ளிடைமலைபோல் விளக்கத்தக்க அநேகவித பிரபல சுருதிவாக்கியங்களாலும் முதுமொழிகளாலும் புலப்படுத்தி வாசிப்போர்க்கினிமையையும் குதூகலத்தையும் இறும்பூதையும் புத்திகோசரத்தையும் விளக்கத்தக்க சிறந்த யுக்திகளமைந்த வெகு விநோதக்கதைகளை எடுத்துக்காட்டாகக்காட்டி இலேசான தமிழ்ச்சொற்கள் புணர்ந்த கத்தியரூபமாய் இயற்றப்பட்டுள்ளது.

இந்நூலை வாசித்துணர்ந்து அவ்வாறொழுகின், தனயர்கள் தாய்தந்தையரைச் சந்திசெய்யாமல், அவர்கள்மீது அத்தியந்த அன்புடையவர்களாய் ஆதரித்துவருவார்கள். பெற்றோரும் தத்தம் பிள்ளைகளைப் பேரன்புடன் வளர்த்துப் பேணி கல்வியறிவொழுக்கம் கைத்தொழில் முதலியவைகளைக் கற்பித்து, இகபர சௌக்கியங்களை யெய்துதற்குரிய இயல்புடையாராக்குவார்கள்.

கணவனும் கல்வியறிவொழுக்கம் கைத்தொழில் முதலியவற்றில் தேர்ச்சியடைந்ததுடன் லௌகீக தந்திரம் முதலியவைகளினும் முழுதொருங்குணர்

எண்ணிச்செய்பவன் செட்டி எண்ணாமற் செய்பவன் மட்டி.

தவனாய், தனதானியம் முதலிய சகல சம்பத்துகளிலும் தாழ்வின்றி, கற்பிற் சிறந்த கன்னிகையைக் கடிமணமுடித்து அவளை அமிர்தகுணவதியாக்கி அன்பாதரவோடாதரித்து அரும்புத்திரப் பேறடைந்து இகபர சௌக்கியவானாய் என்றாளும் வாழ்வான். காதலியும் குடும்ப விவகாரங்களனைத்திலும் முறை வறத்தேர்ந்து, கல்வியறிவொழுக்க முடையவளாய், இல்வாழ்க்கை கற்பு என்னும் இவற்றினிலக்கணங்களுக் கிலக்கியமானவளாய், பத்தாவுக்குப் பணிவுடனடக்கும் பத்தினியாய், புத்திரப்பேற்றையும் பூரணசம்பத்தையும் அடைந்து பூலோகம் மேலோகம் என்னும் புவனங்களிரண்டிலும் போக மெய்துவாள்.

இன்னும், இந்நூலில் மானிடர்களுக்கு அத்தியாவசியமாய் வேண்டற்பாலதாகிய அநேக அரிய விஷயங்களை ஆங்காங்கு விவரித்திருப்பதால் முடிவாகக் கூறுமிடத்து, இந்நூல் ஒவ்வோராடவர் மகளிர் என்னும் இருபாலார்க்கும் பாலயௌவன கௌமார விருத்தமென்னும் நான்கு பருவங்கட்கு வேண்டிய இன்றியமையாத சாதனங்களாவைகளைவகளோ அவைகளனைத்தையும் ஒருங்கே விளக்குமென்பது இந்நூலைக் கண்ணுற்றமிசிங் கனவான்கள் பலர்க்கும் கரதலாமலகம்போலக் காணும். அவ்வாறு அநேகவிஷயங்கள் அடங்கியிருக்கின்றதென்பதை இதனடியில் வரும் அட்டவணையால் அறிந்து கொள்ளலாம்.

ஒவ்வொரு குடும்பத்திலுள்ள ஆடவர் மகளிரென்னும் இருபாலாரும் அத்தியாவசியகமாய் இதை வாசித்துணர்ந்து இகபர சௌக்கியங்களை யெய்தப் பெற்றவர்களாய் இன்பமடையவேண்டுமென்னும் பரோபகார சிந்தையுடன் அச்சிட்டு வெளிப்படுத்துவதால், இதன் விலை அதிசரசமாய் புத்தகம் ஒன்றுக்கு ரூபாய் இரண்டென்று ஏற்படுத்தி யிருக்கிறது V. P. P. சார்ஜுடன் விலை ரூபாய் 2 - 4 - 0.

சிங்கப்பூர், பினாங்கு, செய்கூன், நெட்டால்முதலிய இதரதேசத்திலுள்ளவர்கள் புத்தகம் ஒன்றுக்கு ரூபாய் 2-8-0. முற்பணமாக அனுப்பவேண்டும்.

இந்நூல் வேண்டுவோர், சென்னப்பட்டணம் சௌக்கார்பேட்டை தங்கசாலைவீதி சின்னக்கடையம்மன் கோயிலுக்கெதிரில் 439-வது நெ. மதராஸ் யூநாநி ஔஷதசாலை மானேஜருக்கெழுதிப் பெற்றுக் கொள்ளலாம்.

43. அன்புடனொருபறவை தென்புடன் வந்து இன்புடன் பாடியதை அன்புபாராட்டாது அடித்துத்துரத்தினேன் அதுஎது?

44. ஆகாயத்திலிருந்து அம்புகள் வந்து அழகான முட்டைகளாய் அங்ஙனத்திரண்டு அப்போதே அழியும் அரியவஸ்து எது?

ஏர்பிடித்தவன் என்னசெய்வான், பானைபிடித்தவள் பாக்கியம்.

இந்நூலில் அடங்கியுள்ள

அதிமுக்கியவிஷயங்களின் அட்டவணை.

கடவுள்துதி—சர்வலோக ரட்சண்யரான கடவுளைச் சதா மறவாது துதிக்கவேண்டுமென்பது.

குடும்பம்—இவ்வாறிருக்கின் குடும்பமெனப் பெயர்பெறுமென்பது.

தாய்செய் நன்றி—கர்ப்பந் தரித்ததுமுதல் பத்துமாதம் வரையிலும் அநுபவிக்கும் கஷ்டமும், பிரசவிக்கும் காலத்தில் அடையும் துன்பமும், பெற்றபின் பிள்ளையைக் காப்பாற்றுமியல்பும் இன்னவை என்பது.

தந்தைசெய் நன்றி—பிள்ளையை வளர்ப்பதற்கேற்ற பொருளீட்டலினும், கல்வி கற்பிப்பதினும், நல்...க்கத்திற் பயிற்றுவதினும், மணமுடிப்பதிலும் எடுத்துக்கொள்ளும் முயற்சிகளும், அநுபவிக்கும் கஷ்டங்களும் இவை இவை என்பது.

தாய்தந்தையரின் பரிபாலனம்—பெற்றோரிருவரும் பிள்ளைகளைப் பேணுவதற்காக அநுசரிக்கவேண்டிய ஒழுங்குகளும், அவர்கள் அதனாலடையும் பிரயாசைகளும் இவை என்பது.

சற்புத்திரரியல்பு—இருமுதுகுரவரும் தங்களுக்கியற்றியுள்ள எண்ணிறந்த உபகாரங்களை யெண்ணி, நன்றியறிதலுள்ளவர்களாய் நாடோறும் அவர்களுக்குக் கீழ்ப்படிந்து நடக்கவேண்டுமென்பது.

துர்ப்புத்திரரியல்பு—தந்தைதாயாரைச் சதிசெய்யும் தனயர்கள் சர்வலோக சரண்யரால் தண்டிக்கப்படுவார்களென்பது.

மூடத்தந்தையும் தனயர்களும்—தந்தை, தனயர்களைப் பாரபட்சமாய் நடத்துவதால் துன்புறுவதும், தனயர் அவ்வஞ்சனையைப் பொறுமையுடன் சகித்தலால் இன்புறுவதுமியல்பென்பது.

தனயன் தந்தைக்குக்காட்டிய நல்லொழுக்கம்—தனது தந்தைக்குத் துயர்விளைத்த ஒருவனை அவன் தனயன் திருத்தி நற்புத்தி கற்பித்த இவ்வாறென்பது.

தாய் தந்தையரை நிந்தித்ததால் தனயன் அவமானமடைந்தது—தனது செல்வப்பெருக்கால் பெற்றோரை யவமதிக்கும் பிள்ளை இவ்வாறவமான மடைவானென்பது.

நன்றிமறப்போர் நலமடையார்—ஒருவர் தனக்குச்செய்த சகாயத்தை மறந்த சண்டாளன் சஞ்சலமடைதல் சத்தியமென்பது.

பெற்றோர் பிள்ளைகளைப் பயிற்றும் முறைமை—தனயர்கள் சற்குணவான்களாவதற்காகத் தந்தைதாயர்கள் அவர்களைச் சிறுபருவந் தொடங்கி, திருத்தவேண்டுவ திவ்வாறென்பது.

மதராஸ் யூனானி மெடிக்கல் ஹால், 439 - நெ, சௌக்கார்பேட், சென்னை.

குடும்பஸம்ரக்ஷணி

என்னும் நூலில் அடங்கியிருக்கிற முக்கியமானவிஷயங்களின்

அட்டவணைத் தொடர்ச்சி.

தன்யனுக்கு ஒழுக்கம் கற்பிக்காமையால் தாய் தந்தையர் துன்புற்றது:—ஒழுக்கங் கற்பியாத தாய் தந்தையர் அத்தனயனால் இவ்வாறு சங்கடப்படுவரென்பது.

பிள்ளைகளின் துராப்பியாசத்தையொழித்தல்:—செல்வர்கட்கு நேர்ந்த தீயொழுக்கத்தைத் திருத்துவதிவ்வாறென்பது.

கல்வி:—கல்வியின்பயனும் அதைக் கற்கும்முறைமையும் இவையென்பது.

கல்வியும் செல்வமும்:—கல்வியில்லார் செல்வம் தீமையையும், கல்வியுள்ளார் செல்வம் நன்மையையும் விளைக்குமென்பதும், கல்வியினும் செல்வமே சிறந்ததென்பதும்.

கல்வியின் சம்பந்தம்:—ஒழுங்கீனத்தையும் மடமையையும் போக்கிப் பேரறிவையும் நாகரீகத்தையும் புகட்டி மானிடர்களுக் கின்றியமையாத்தொன்றாய் இகபரபோகங்கட்குரிய சாதனமாயுள்ளது கல்வியேயென்பது.

கல்வி கற்பிக்குங்காலம்:—இளஞ்சிறார்க்கு இன்னகாலத்தில் கல்வி பயில்வித்தால் அது வேரூன்றி நிலைபெறுமென்பது.

மாணாக்கரொழுக்கம்:—கல்வி கற்போர் இவ்வித முறைமைகளை அப்பியர்சிக்கவேண்டுமென்பது.

அறிவின்பயன்:—மானிடர்க்குப் பெருமையைத் தருவது பகுத்தறிவேயாதலால், அதனாற்றான் சகல காரிய சித்தியும், அதற்குரிய* சிறப்பும் எக்காலத்திலுமுண்டாகும் அஃதில்லார் நடைப்பிணங்களாவாரென்பது.

கேள்வி:—கல்வி கற்றவளவி லமையாது தக்கார்வாய்க்கேட்டுத் தெளியவேண்டுமென்பது.

கல்வியும் ஒழுக்கமும்:—ஒழுக்கமுள்ளார் கல்விக்கும், ஒழுக்கமில்லார் கல்விக்கும் உள்ள உயர்வு தாழ் விவ்வாறென்பது.

கல்லாமை:—கல்லாமையால் விளையும் கேடுகள் இவையென்பது.

லௌகீக தந்திரம்:—மெய்யர்கள் பொய்யர்களிடத்தில் ஏமாறாமல் தப்பித்துக்கொள்ளும் விதம் இவ்வாறென்பது.

சொல்லுகின்றது: "நீ உன்னை கல்வியில் செலவுசெய்தால், உன் செல்வாக்கை
உலகத்திலும் மேன்மைப்படுத்துவேன்".

குடும்பஸம்ரக்ஷணியின் அட்டவணை.

சுகாதாரம்:—மனிதர்கள் சரீரசௌக்கியத்துடன் வாழ்வதற்கும் பூரணாயுள் பெறுவதற்குமுரிய சாதனங்களிவை யென்பது.

ஜலத்தை ஔஷதமாக்கும் முறைகள்:—வயதுசென்றவார்த்திகர்களுக்குண்டாகும் அசதி ஜன்னி சித்தப்பிரமை, சிசுக்களுக்கும் சிறுபிள்ளைகளுக்குமுண்டாகும் மூர்ச்சை ஜன்னி வாந்திபேதி நீர்க்கட்டு தொண்டைப்புண் இருமல் கஷ்டசுவாசம் விப்புருதிகளுக்கு முதலியவைகளுக்குப் பரிகார முதலியவைகள்.

இன்னும் ஸ்நானஞ்செய்யும்போது சரீரத்திற் பூசிமுழுகுவதற்குச் சுகந்தஸ்நானப்பொடியும், முகத்திலுள்ள பருமாசுமறுவு நீங்கிப் பிரகாசிப்பதற்குப் பூசி ஸ்நானஞ்செய்ய வதன காந்தி பில்லையும்; கூந்தல்உதிராமல்அதிகவளர்ச்சியுடன் வாசனை வீசுவதற்காக ஸ்நானஞ்செய்த பிறகு கூந்தலை உலர்த்துவதற்குப் பரிமள தூபப்பொடியும், சகல தந்தவியாதிகளையும் நிவர்த்திசெய்யும் தசனப்பொடியும். சரீர சௌக்கியந் தருவதற் கேதுவாகிய சுகாதாரலேகியமும், ஒவ்வொருவரும் செய்து கொள்ளும்படி அவற்றின் முறைகளிவ்வாறென்பது.

தண்ணீரில் விழுந்தவன்தப்பித்துக் கொள்ளும்வகை:—ஆறு ஏரி குளம் கிணறு மடு என்னும் இவற்றில் தவறிவிழுந்தவர்கள் தப்பித்துக்கொண்டு கரையேற வுபாயங்களும் தண்ணீரில் விழுந்ததினால் இறந்தவனைப்போல் பிரக்ஞையற்றுக் கிடப்பவனுக்குப் பிரக்ஞையுண்டாக்கும் சிகிச்சைகளும் இவை யிவை என்பது.

கோபம்:—கோபத்தால் விளையும் கெடுதிகளும் துன்பங்களும் இவை என்பது.

பாவம்:—பொய், கொலை, களவு, கள், காமம், என்னும்பஞ்சமகாபாதகங்களின் கெடுதிகளும், அவைகளை நீக்கி நல்வழிபெறவேண்டிய விதிகளும் இவை என்பது.

எல்லாமறிந்தவனும் ஏதுமறியாதவனுமில்லை:—தானே வல்லவனென்னும் அகங்காரத்தை யொழித்து, தன்னினும் மிக்கார்பலருண்டென்று கொள்ளவேண்டு மென்பது.

கடவுள்:—கடவுளின் கட்டளையாகிய வேதமார்க்கத்தைக் கைப்பிடித்து அக்கட்டளைக்குக் கீழ்ப்படிந்து நடக்க வேண்டு மென்பது.

வறுமைமிகக் கொடியது:—உலகத்தில் மனிதர்களால் அனுபவிக்கப்படுந் துன்பங்க ளெவற்றினும் வறுமையா னேருந்துன்பமே மிகக் கொடியதென்பது.

கடன்:—கடன் உண்டாவதின் காரணமும் அதனால் விளையுந் துன்பமும் அதை நிவர்த்திக்கும் உபாயங்களும் இவை யென்பது.

பொருளீட்டல்:—உலகத்திற் சம்பாதிக்கத்தெரியாதவனும் சம்பாதிக்கத் தேர்ந்து பொருள்சேகரித்துத் தனவந்தனாய்வாழ்வதற்கு வழி இதுவென்பது.

கல்வி சொல்லுகின்றது: "செய்கையினாலும் பார்வையினாலும் கேள்வியினாலும் விளக்கப்பட்டிருக்கிற விஷயங்கள் தவிர, மற்றவைகளை என்னிடத்திலிருந்து கற்றுக்கொள், ஈருலகவாழ்க்கையிலும் உன்னைச் சிறந்தவனாகச் செய்வேன்".

மதராஸ் யூநானி மெடிக்கல் ஹால், 439 - நெ. சௌக்கார்பேட், சென்னை.

பரோபகாரம்:—மனிதர்களனைவரும் ஜீவ காருண்ணியராய்த் தம்மாலியன்ற உதவி புரியவேண்டு மென்பது.

கேடுவோன் கேடுநினைப்பான்: — பிறருக்குப் புரிய நினைக்கும் தீமை தனக்கே லபிக்குமென்பது.

தீர விசாரித்தல்:—எக்காரியத்தையும் நிரவிசாரியாமற்செய்தால் தீமை விளையுமென்பது.

ஸ்திரிகள்:—ஸ்திரீகளால் விளையும் நன்மைகளும் தீமைகளும் அவர்கள் அந்தஸ்தும் இவையிவையென்பது.

கல்யாணம்:—கல்யாணஞ் செய்யவேண்டிய ஒழுங்குகளும் காலநிர்ணய முதலியவைகளும் இவையிவையென்பது.

இலங்கைப்பெண்கள்:—அவர்களைப்பற்றி முக்கிய விஷயங்கள் இவையென்பது.

சதிபதி சம்மதம்:—விவாகத்திற்குப் புருஷனும் பெண்ணும் சம்மதந்தரவேண்டுமென்பது.

பெண்ணுக்குப் பிள்ளைபார்த்தல்: — பெண்ணுக்குத்தக்க அந்தஸ்து குணகுணங்கள் முதலியவைகளுடையவன்றானுவென்று விசாரிக்கவேண்டுமென்பது.

புருஷனுக்குப் பெண்பார்த்தல்:—பெண்ணின் லட்சணம் அந்தஸ்து குலம் முதலியவைகளைப்பற்றி விசாரிக்கவேண்டுமென்பது.

சம்போகம்:—காதலனும் காதலியும் கூடும் கலவியின் பிரயோசனமும் அதனியல்பும் இவ்வாறென்பது.

சம்போககாலம்:—கலவி புரியுங்காலம். அளவுமுதலியவை இவையென்பது.

சம்போகப்பிரமாணம்:—கலவியில் அதிதமாய்ப்பயிலாமல் மிதமாகப் பயிலவேண்டுமென்பது.

கணவன் மனைவியை நடத்தும் முறைமை:—மனைவியை அடிமை போலவும் மிருகம்போலவும் பாவித்து நடத்தாமல் அன்பாதரவாய் நடத்தவேண்டுமென்பது.

இல்வாழ்க்கை:—கணவனும் மனைவியுங் கலந்து வாழ்வதற்கு வேண்டிய முக்கியாம்சங்களிவையென்பது.

கற்பு:—மனைவி கணவனுக்குக் கீழ்ப்படிந்து நடந்துகொள்ளவேண்டிய முறைமைகளிவையென்பது.

மாமிக்கு மருமகள் நடந்துகொள்ளும் முறைமை:—மருமகள் தன் மாமியைத் தன் தாய்போற்பாவித்து அவள் சொற்படி நடந்துவரவேண்டுமென்பது.

மாமன் மூத்தார் கொழுநன் நாத்தி முதலியோர்களுக்கு மருமகள் நடந்துகொள்ளவேண்டிய ஒழுங்குகளிவையென்பது.

குடும்பஸம்ரக்ஷணியின் அட்டவணை.

மாமி மருமகளை நடத்தும் முறைமை:—மாமியார் மருமகளைத் தன் மகளைப்போல் அன்புவைத்துத் திருத்தியாளவேண்டுமென்பது.

சில மாமிமார் மருமகளை நடத்தும் கொடூரங்கள்.

நாத்திமுதலியோர் மருமகளை நடத்தவேண்டிய விதிகள்.

ஒரு மருமகளுடைய பரிதாப நிலைமை.

குடும்பங்களில் விளையும் கலகம்.

புருஷனை விபசாரத்தைவிட்டு நீக்கிய மனைவி.

கற்பலங்காரியின் பதிவிரதாதன்மையைக்காட்டிய கதை.

விபசாரம்.

சங்காமணியின் விபசாரத்தைப்பற்றிய கதை.

கெட்ட மனைவி.

கர்ப்பம்:—ஸ்திரீகள் கர்ப்பமடைவதற்கும் அடையாமைக்கும் காரணங்களும், கர்ப்பமடையும்படி நடந்துகொள்ளவேண்டிய ஒழுங்குகளும் இவையென்பது.

கர்ப்பசின்னங்கள்:—ஸ்திரீகள் கர்ப்பமாயிருப்பதைப்பற்றியறிந்து கொள்வதற்கான குறிகளிவையென்பது.

ஆண் பெண் சிசுவின் சின்னங்கள்:—வயிற்றிலிருக்கும் குழந்தை ஆண் அல்லது பெண்ணென்று அறிந்துகொள்ளுங் குறிகளிவையென்பது.

கர்ப்பத்தில் சிசுமரித்த சின்னங்கள்:—வயிற்றிலிருக்கும் குழந்தை மரித்துவிட்டதை யறிந்துகொள்வதற்கான குறிகளிவையென்பது.

கர்ப்பஸ்திரீகள் கவனிக்கவேண்டிய விஷயங்கள்:—கர்ப்பகாலத்தில் நோய்களாற் றுயரடையாமல் சௌக்கியமடையும்பொருட்டும், பிரசவகாலத்தில் வருத்தமின்றிப் பிள்ளைப்பெறும்பொருட்டும், பிள்ளை சௌக்கியமாயிருக்கும்பொருட்டும் நடந்துகொள்ளும் முறைமைகளும், கடி கர்ப்பஸ்திரீயின் ஆகாரம் உடை தேகவுழைப்பு நித்திரை மலவிசர்ஜனம் இவைகளைப்பற்றிக் கவனிக்கவேண்டிய கிரமங்களும் இவையிவையென்பது.

கர்ப்பகாலத்திற்காணும் வியாதிகள்:—கர்ப்பகாலத்திலுண்டாகும் வாந்தி, நெஞ்செரிவு, புளியேப்பம், பல்நோய், காலதைப்பு முதலிய வியாதிகளின் குணங்களும் அவைகளுக்குச் சிகிச்சைகளும் இவையிவையென்பது.

கர்ப்பிணிகள் மன ஆறுதலாயிருக்கவேண்டுமென்பதைப்பற்றிய விஷயம்.

பிரசவித்த ஸ்திரீ அனுசரிக்கவேண்டிய ஒழுங்குகள்.

பிரசவித்த குழந்தைகளுக்குச் செய்யும் பக்குவங்கள்.

குழந்தைகளுக்குப் பால் கொடுத்தல்.

பாலில்லாக்குழந்தைகளைக் காப்பாற்றும் வகை.

பிள்ளைக்குப் பால்கொடுக்கும் ஸ்திரீ அனுசரிக்கவேண்டிய ஒழுங்குகள்.

அன்பு சொல்லுகின்றது: “என்னைக் காப்பாற்றினால் நான் உன்னை உலகப்பிரசித்தனாக்குவேன்”.

மதராஸ் யூனானி மெடிக்கல் ஆல், 439 - நெ. சௌக்கார்பேட், சென்னை.

பால்கொடுக்கும் காலமும் கிரணயமும்.
பால் கொடுக்கும்போது மன ஆசோதை வேண்டும்.
குழந்தைக்குப் பால் கொடுக்கத்தகாத காலம்.
பால் கொடுக்குங்காலத்திற் சம்போகஞ்செய்யும் கிரமம்.
ஸ்தனங்களிற் பால் கட்டிக்கொள்வதற்குச் சிகிச்சை.
பால் விசேஷமாய்ச் சுரப்பிக்கச் சிகிச்சைகள்.
முலைப்புண் ஆறுவதற்குச் சிகிச்சைகள்.
பெண்பிள்ளைகளைப் பயிற்றும் முறைமை.

கைம்பெண்:—விதவைகளின் அந்தஸ்தும் அவர்களின் பரிதாபநிலைமையும் துன்பங்களும் இவ்வாறிவ்வாறென்பது.

மறுமணம்:—விதவைகளுக்குப் புனர்விவாகம் செய்வதைப்பற்றி.

அந்தியகாலம்:—மனிதர் பூலோகவாழ்க்கையைவிட்டு மேலுலகத்திற்குப்போய் சௌக்கியமடையவேண்டிய நிமித்தம் தங்கள் அந்தியகாலத்தில் அநுஷ்டிக்கவேண்டிய கடமைகள் இவையென்பது.

நிரந்தரமான தருமம்:—ஒவ்வொருவரும் தம்மாயுளுக்குள் அழியாத ஒரு தருமத்தை நிலைநாட்டிவைக்க முயற்சிசெய்யவேண்டும் என்பதைப்பற்றி.

இவைகள் முக்கியமானவையேனும் இன்னும் அனேக விஷயங்களும், உதாரணப்பாடல்களும், இன்பரஸம்பொருந்திய அனேக திருஷ்டாந்தக்கதைகளும் அடங்கியிருக்கின்றன.

நீதிவிநோதக்கதை இரண்டாம்பதிப்பு.

மேற்கூறிய புத்தகத்தின் முதற்பதிப்பு செலவானபிறகு அப்புத்தகத்தை தங்களுக்கனுப்பவேண்டுமென்று அனேகர் அடிக்கடி நமக்கெழுதிவந்ததால் முன்பதிப்பிலுள்ளவைகளோடு அவற்றிலும் விசேஷ அருமையுள்ள சில நூதனக்கதைகளைச்சேர்த்து அச்சிடப்பட்டிருக்கிறது. இதிலடங்கியுள்ளகதைகளில் மஹாயுக்தியும், புத்தியும், தந்திரமும், அனேகம் அடங்கியிருக்கின்றன. வாசிக்கவாசிக்க இன்பமும், கேட்கக்கேட்கப் பிரீதியும், கவனிக்கக்கவனிக்க மனோச்சாகமும் உண்டாக்கக்கூடியதாகையினால் கையிலெடுத்து வாசிக்கத் தொடங்கியபிறகு கீழேவைக்க மனம்வராது. கிரயம் புத்தகம் 1 - க்கு அணா - 4. வி. பி - யில் அணா - 7. ஐந்து அணாவுக்கு தபால்முத்திரையனுப்பினால் ஒரு புத்தகம் அனுப்பப்படும். இலங்கை ஸ்டாம்பானால் சதம் 35 - க்கு ஸ்டாம்பு அனுப்ப வேண்டும்.

பொறுமை சொல்லுகின்றது: நீ என்னைக் கைவசப்படுத்து உன்னைச் சயசீலனாக்கிவிடுகிறேன்".

வியசனம் சொல்லுகின்றது: "நீ என்னைத்தின்றால் நான் உன்னைத்தின்பேன்" என்பதே. அதாவது - துக்கமுற்றவன் துர்ப்பலனாகின்றான்.

விநோதவிசித்திரப்பத்திரிகையின் அட்டவணை.

நீ தி ஸா ர மஞ் ச ரி.

இப்பெயர்கொண்ட ஓர் அருமையான கதை நூதனமாய்ப் பிரசுரிக்கப்பட்டிருக்கிறது. இது வாசிக்கவாசிக்க இன்பத்தையும், கேட்கக்கேட்கப் பிரீதியையும் உண்டாக்கக் கூடியதாகவும், முன் ஒருபோதும் கேட்டிராத நூதனமான கதையாகவும், அனேக யுக்தி தந்திர சாமர்த்தியமான பதங்களாலும், வாக்கியங்களாலும் நிரம்பப்பெற்றதாகவும், அநேக நீதிகள் ஒருங்குதிரண்டிருப்பதாகவுமுள்ளது. இதை வாசிப்பதற்காகக் கையிலெடுத்தபிறகு, கதை முடியாமற் கீழேவைப்பதற்கு மனம்வராது, இதை ஸ்திரீ புருஷர்கள் ஒவ்வொருவரும் வாசித்துக் களிக்கவேண்டியதாதலின், யாவர்க்கும் உபயோகமாகும்படி, இதன் கிரயத்தைப் புத்தகம் 1-க்கு அணா நான்காகக் குறைத்து வைக்கப்பட்டிருக்கிறது. வி. பி.-யில் அனுப்புவதற்கு, அணா - 7. ஐந்து அணாவுக்குத் தபால்முத்திரையனுப்பினால் ஓர் காப்பியனுப்பப்படும்.

விநோத விசித்திரப் பத்திரிகை.

1900-ம் வருஷ ஜனவரியீ முதல் 1901-ம் வருஷ ஜூன்மீ வரையி லுள்ள பதினெட்டு சஞ்சிகைகள் ஒன்றாய்ச்சேர்த்து பயிண்டுசெய்தது.

இதில் அனேகம் சாமான்களைச்செய்து இலாபம் சம்பாதிக்கக் கூடிய கைத்தொழில் முறைகள், திரவியந்தேடுவதற்கு அநுகுணமான பலமுகாந்தரங்கள், அனேகவகை ருசிகரமான சமையற்பாகவகைகள், யுக்தியும் தந்திரமுமுள்ள அனேக புத்திகோசரக் கதைகள், வைத்தியத்திற் சிறந்த அனேகமுறைகள், இந்திரஜாலம் மந்திரஜாலம் முதலிய மஹாஜாலங்களின் இரகசியங்கள், கடவுளையறியும்படியான ஞானமார்க்கம், இன்னும் அனேகவகையான நூதனமும் அருமையும்வாய்ந்த அநேகம் விஷயங்கள் முதலியன அடங்கியிருக்கின்றன. ஆண்பெண் என்னும் இருபாலருள் ஒவ்வொருவரும் மிகவும் அவசியமாய் வாசித்துப் பார்க்கவேண்டிய நூல். இதனால் அனேக பிரயோஜனங்களடையலாம். இதன் விலை, புத்தகம் 1-க்கு ரூபா 1 - 3 - 0. வி. பி. சார்ஜ் உள்பட ரூபா 1 - 6 - 0. இதின அட்டவணையில் சில முக்கியமானவைகளை அடியில்பார்க்க.

விநோதவிசித்திரப்பத்திரிகையின்

முக்கியகுறிப்புகளின் அட்டவணை.

கடவுள் உண்டு.
வைத்தியத்தில் அனேகசிறந்தமுறைகள்.
பலவிதக் கைத் தொழில் முறைகள்.
பலவித பாக வகைகள்.
பலவிதஜால வேடிக்கைகள்
வெள்ளைக் கற்கண்டு, பனிக்கட்டிசெய்முறை.
பலவித இங்கிகள் செய்யுமுறை.
வெள்ளிமரம்.
மூட்டைப்பூச்சிகளைப் போக்கவகை.
பெஞ்சமின்பிராங்க்லின் என்பவருடைய நீதிவசனங்கள்.
சோடாவாட்டர் செய்யுமுறை.
துப்பாக்கிமருந்து செய்பாகம்.
சீசாவுக்குள் முட்டையைவிட.
நாடிப்பரீட்சை.
பகாராப்புலாவ். அஃனிபுலாவ்.
சிவப்புப் பச்சை நீல மத்தாப்பு திருசுகள் செய்முறை.
உடைகளில் தீப்பிடித்தால்.
நெருப்புக்காயங்களும்சிகிட்சைகளும்.
விஷநிவாரணி.
குழந்தைகளின் பாதுகாப்பு.
முத்திரைபோடும் அரக்குகளில் பச்சை சிவப்பு முதலிய நிறமுள்ளவைகள்.
தலைபேசும் ஜாலம்.
மாம்பழம் எலுமிச்சம்பழம் இவைகளை காப்படவைக்க உபாயம்.
பலவித வார்னிஷ்.
சாதா சொல்ஜி.
நாளித சொல்ஜி.
விநோதார்த்த பதங்கள்.
பொட்டைகிருப் பிடிக்கும்விதம்.
மக்கோபாப் புலாவ்.
மேகவெள்ளைக்குப் பீச்சமருந்து.
இருட்டறையில் பிசாசுருபங்காட்ட.
மோதிரவித்தை.
மாய இஞ்சி.
ஒருவன்நினைத்த எண்ணைச்சொல்ல.
தாகத்தைத் தீர்த்துக்கொள்வதற்கோர் சுலபமான மார்க்கம்.
தண்ணீரில்வீழ்ந்தவன் தப்பித்துகொள்ளவகை.
ஒரு மெழுகுவத்தியை இராமுழுதும் எரியவைக்க.
தூண்டிலில் மீன்பிடிக்க.
புஸ்தகத்தின் விளிம்புகளுக்கு கில்ட் கொடுக்க.
வெள்ளி கில்ட்கொடுக்கும் பவுடர்.
வெள்ளி கில்ட்கொடுக்குமுறை.
பிர்யாணி, தால்ச்சா, சட்னி.
புளியோரை, எள்ளுப்பொடி கலந்த சித்திரான்னம்.
எரிமலை ஜாலம்.
இரும்பை உருக்க,
வாங்கிபேதி சிகிட்சை.
மூலிகை குட்சம்.
கனிகளின் உருசியை அதிகரிக்கச்செய்ய.
தலைவெட்டும் ஜாலம்.
பிரசவத்தைப்பற்றி.
கருப்போற்பத்தி.
தாதுபுஷ்டி ஔஷதங்கள்.
தேன்மெழுகைச் சுத்திசெய்ய.
காட்டுச்சவுக்காரம் செய்யும்முறை.
ஜர்மன்சில்வர் செய்யும்முறை.
உதிரஓட்டம், சமுத்திரஜலத்தின் வித்தியாசம்.
பட்டுவஸ்திரங்களில் கறைபிடித்தால் அதைப்போக்கவகை.
வெள்ளிபொன் சரிகைகளைத்துலக்க.
பாக்குமரம்.
ஆயுதங்களில் பேர்போட.
மரங்களில் பூச்சிவிழுந்திருந்தால் அதற்கு பரிகாரம்.
பவழங்களின் நிறத்தைமாற்ற.
கோழிக்கறி குர்மா.
கோழிமாம்ஸ பொரியல்.
முட்டை ஜாலம்.
கத்தியில் துருப்பிடிக்காமல் செய்ய
ஆண் இராவிகளுக்குப் பூசும் மெருகெண்ணெய்.
திராட்சை.

துர்ச்சகவாசம் சொல்லுகிறது: "நீ என்னுடன் சகவாசஞ்செய், உன்னை யாவரும் நிந்திக்கும்படியான மதிப்பில்லா மனிதனாக்கிவிடுவேன்".

சாராயம் சொல்லுகின்றது: என்னைக் கொஞ்சம் முத்தமிடு, உன்னைச் சந்தியிலிழுத்து விடுகின்றேன்".

விநோதவிசித்திரப்பத்திரிகையின் அட்டவணை.

வெள்ளரி விரை
இனிப்பு மாதுளை.
புளிப்பு மாதுளை.
நூல் அல்லது வஸ்திரங்களுக்குச் சாயங்கொடுக்கு முறை.
மந்திரம்.
ரஸவாதம்.
தருமம்.
கிருஷித்தொழிலுக்கு மண்களைப்பற்றித் தெரிந்து கொள்ளவேண்டிய முக்கிய விஷயங்கள்.
சாஸ்திர விநோதம்.
பெண்களுக்குக் கல்வியேன்?
மைதார் கபூலிபுலாவ்.
மீன் குர்மா.
மீன் பொரியல்.
மீன் புளி.
பாதம் அல்வா.
பிர்னி.
ஸர்தா அல்லது மிட்டா காஜு.
வெள்ளிநகைகளைத் துலக்க.
தங்கம் வெட்டையாயிருந்தால்.
வஸ்திரங்களில் கறையெடுக்க.
அரோகநெறி வினுவிடை.
தாடி மீசை உரோமங்கள் வளர்ந்து கறுப்பதற்கு மருந்து.
பித்தளைசாமான்களைப் பிரகாசமாக்க.
இறைச்சியைகெட்டுப்போகாமல்வைக்க.
தலையிலுள்ள பொடுகுகளைநீக்க.
இரத்தக்கறையைப் போக்க.
வாயிலிருந்து நெருப்புப்பற்ற.
தண்ணீரில் அமிழ்ந்ததனால் பிரக்ஞையற்றுக்கிடப்பதற்குச் சிகிச்சை.
தத்துவசாஸ்திரம்.
பகுத்தறிவு.
என் மரணத்திற் கஞ்சவேண்டும்.
ஓர்யுக்தி.
பஞ்சத்தைத்தஞ்சவைக்கஓர்உபாயம்.
குடற்கிருமிகள்.
மரணத்தற்குத்தக்க மந்திரி.
ஒருவர்நினைத்த எண்ணைச்சொல்ல.
முட்டை நகர்ந்துபோகும் ஜாலம்.
புட்பங்கள் காய்ந்துபோகா திருக்கச் செய்ய.
உடைந்துபோன பீங்கான், கிளாஸ் முதலியவைகளை ஒட்டவைக்க.
ஈமெனவப்புக்கு மாற்று.
கண்ணாடியில் சித்திரவேலைசெய்ய.
மண்பவளம் செய்யும்முறை.
தேகாரோக்கிய அல்வா.
லெமனெட்செய்யும் முறை.
ஜிஞ்சர்பீர்செய்யும் முறை.
மின்னல் உண்டாக்க.
கருப்பந்தரித்த குறிகள்.
கருப்பவளர்ச்சி.
வசியம்.
களு.
துணிகளுக்கு பச்சை, சிவப்பு, மைதா முதலிய பலவித சாயங் கொடுக்கு முறை.
கட்குடியை நீக்க.
சீல்முத்திரைகள் செய்யச் சுளுவான முறை.
பிரஸ்இல்லாமல் காபியெடுக்கும் இங்கி.
புட்பத்தின் மொக்கை நெடுநாள் பத்திரப்படுத்திவைக்கு முறை.
சகாயமான ஐஸ்கிரீம் செய்யும் முறை.
இரும்புநெஞ்சனையும் இன்சொலினால் வெல்லலாம்.
கர்ப்ப ஸ்திரீகள் கவனிக்கவேண்டிய முக்கிய விஷயங்கள்.
கர்ப்ப பங்கமும் அகாலப்பிரஸவமும் நேரிடுவதற்கு முற்குறிகள்.
புகைக்கூடு.
பன்னீர்செய்யும் முறை.
கோரை, புல் முதலியவைகளுக்கு வர்ணங்கொடுக்க.
புட்பங்களின் சத்தெடுக்கும்விதம்.
வீடுகளில் தீப்பற்றிக் கொண்டால் அதைத் தணிக்கவும் அதிலிருந்து தப்பித்துக்கொள்ளவும் உபாயம்.
நெருப்புப் பிடித்த இடத்தி லிருந்து குதிரையை வெளியே கொண்டுபோக உபாயம்.

இன்னும் அனேக நூதனமுறைகளும் இதில் அடங்கியிருக்கின்றன.

யூனானி மெடிக்கல் ஹால், 439 நேம்பர், சௌக்கார்பேட்டை, சென்னை.

௮

மூக்குத்தூள் விகடம்.

விருத்தம்.

பொடியினை மடியில்வைத்தே போடுவோர்க் கில்லையென்னும்
படிதனைக் கீழேதள்ளிப் பதைத்திட விதைப்பதற்கே
துடியிடை யுமையாள்காணச் சொற்பொருள் கடந்தவீசன்
அடிதனைத் தூக்கிநின்றே யம்பலத் தாடினனே.

கலித்துறை.

வாசிக்கழகு மிருவேக வோட்ட மதித்தபர
தேசிக்கழகு பர்ஞானமும் பத்தியுஞ் சீருடைய
தாசிக்கழகு நல்லாடையும் பூணுமித் தாரணியில்
நாசிக்கழகு [illegible]கையிலைத் துவைத்த நாசிக்குமே.

சுலோகம்.

ஜபேஷு ஜபமத்யேஷு
ஜபாந்தேஷு புந: புந:
நாசிகா சூர்ணமாதாய
கோடி யக்ஞபலம் லபேத்.

பிரம்மாவினுடைய பத்தினியாகிய ஸரஸ்வதியும் ஸ்ரீமந்நாராயணனுடைய பத்தினியாகிய மஹாலக்ஷ்மியும் பரமேஸ்வரனுடைய பத்தினியாகிய பார்வதியும் ஒருநாள் ஒன்றாகச்சேர்ந்து கங்காதீர்த்தத்தில் ஸ்நானஞ் செய்து தத்தம் இருப்பிடங்கட்குத் திரும்பிச்செல்லாநிற்கையில், மார்க்கத்தில் மஹாலக்ஷ்மியானவள் துளசிச்செடியைப்பார்த்து அது தன் நாயகனுக்குகந்ததென்று சேர்த்துக் கட்டிக்கொண்டாள். பார்வதியும் பக்கத்திருந்த வில்வமரத்தைக்கண்டு தன் பர்த்தாவுக்குப் பிரீதியானதென்று அதைத் தழுவிக்கொண்டாள். பிரமபத்தினியாகிய ஸரஸ்வதியோ! முன்னும் பின்னும், மேலுங்கீழும், வலப்புறமும் இடப்புறமும், அங்கும் இங்கும், எங்கும் தேடிப்பார்த்தும் ஒன்றுமகப்படாமையால், பலவாறு யோசிக்கிறாள். ஆடா! என்ன மோசமாயிருக்கிறது. கஷ்டம் நம்பங்கிலன்றோ கவர்ந்து நிற்கின்றது. சகல சராசரங்களுக்கும் சிருஷ்டிகர்த்தாவாகிய நம் பர்த்தா இவ்விருவர்களுக்குமாத்திரம் இரண்டிலைகளைப் படைத்துவிட்டு நமக்கொன்றுமில்லாமல் நடுத்தெருவில் விட்டாரே என்று பலவாறாகச் சிந்தித்து சஞ்சலசித்தமுடையவளாய்த் தியங்கிநிற்கையில், லக்ஷ்மியும் பார்வதியும் இ இ இ இ

கள்ளுவிற்றுக் கலப்பணஞ் சம்பாதிப்பதைவிட கஸ்தூரிவிற்றுக் காற்பணஞ் சம்பாதிப்பது மேல்.

உண்டதே நன்மை கண்டதே உண்மை

மூடர்கள் எதைச்சொன்னாலுஞ் சொல்லட்டும் விவேகிகளின் மேன்மை ஒருபோதும் வீணாகமாட்டாது.

என்று கெக்கலிகொட்டிப் பரக்கச் சிரித்தார்கள். உடனே ஸரஸ்வதிக்குத் தாங்கொணாப் பெருங்கோபமூண்டு மனம் பதறி வாய்விட்டுக் கதறிக் கை கால்களை யுதறி ஐயோ அப்பாவென்று பெருங் கூச்சலிட்டுக்கொண்டு, ஓ பாழும் பிரம்மாவே! நீ யிருந்தென்ன இறந்தென்ன? இப்படியும் வஞ்சிக்கலாமோ? உமக்கு வாழ்க்கைப்பட்டு நானென்ன சுகமடைந்தேன்? உம்மைக் கட்டிக்கொண்டழுவதைப் பார்க்கிலும் உரலைக் கட்டிக்கொண்டாலும் குற்றிக் காய்ச்சிக் குடிக்கலாமே. நீரா எனக்குப் புருஷன்? போகத்திற்கேனும் யோக்கியராவென்று பார்த்தால் பல்லுபோன பொக்கைவாய்க் கிழவனாயிருக்கிறீர். போகம் குன்ம ரோகந்தான். தேகாதியந்தம் நரைத்துத்திரைத்துங் கிழக்குரங்காய்விட்டீர். நீர் சிருஷ்டி கர்த்தரென்றும் முதன்மைத்தொழில் படைத்தவராயிருப்பதால் நான் எல்லா தேவஸ்திரீகளிலும் மேம்பட்ட ஸ்திதியிலிருக்கவேண்டியதுபோக, யாவரிலுங் கடைப்பட்டவளாய் என்னைப் பார்த்தெல்லோரும் ஏளனஞ் செய்யும்படியாய்விட்டதே. அடா! உன் கோயிலிடிந்து குட்டிச்சுவராய்ப்போக என்று சபித்தாள். (அக்காரணத்தால்தான் பிரமனுக்குக் கோயிலில்லாமற் போச்சுதாம்). இந்த ஆரவாரங்களைக்கேட்ட பிரமன் ஓஹோ! ஹோ! இத்தது மோசம் வந்துவிட்டது. இனிப் பிரளயத்திற்கு வரும்போலிருக்கிறது என்று திடுக்கிட்டு, நடுநடுங்கி, இனி சும்மாயிருக்கப்படாது. வெள்ளம் வருமுன் அணை போலிக்கொள்ளவேண்டும் என்று பரபரப்புடன் ஓடோடியும்வந்து ஸரஸ்வதியைக்கட்டி நயமுடனணைத்து, ஹிதவார்த்தைகள் கூறி ஓ! கலைவாணியே! நித்யகல்யாணியே! இந்த அற்ப விஷயத்தின் பொருட்டா நீ இத்தனைக் கோபமும் மனஸ்தாபமுங்கொண்டனை. சிறிதும் அஞ்சாதே. வீணே பதறாதே. பதார்த்த காரியம் சிதறுது. நான் நினைத்தால் ஆகாததென்னிருக்கிறது? இதோ ஒரு நொடியில் உன் மனோபீஷ்டப்படி நிறைவேற்றுகிறேன். இருளன் பிள்ளைக்கு எலிக்குஞ்சு குறைவா? என்னருகே உட்கார்ந்திரு. அவர்களுக் கேற்படுத்தியுள்ள துளசி வில்வங்களைப்பார்க்கிலும் மிக்க மேலான இலையை உனக்குண்டாக்கித்தருகிறேன் பார் என்று கூறித் தனக்கெதிரிலிருந்த அக்னியிலிருந் துண்டாகும் புகையில் ஒரு பிடி புகையைக் கையிற்பிடித்து மந்திரோச்சாடனம்செய்து, ச்சல்—ச்சல்—ச்சல்—ச்சல் என்று இழுத்து ஒரு இலையுண்டாக்கி, ஸரஸ்வதியை நோக்கிப் பெண்ணே! இதோ இந்த இலையைப் பார்த்தாயா? இது புகையினின்றும் உண்டானமையால் இதற்குப் புகையிலையென்று பெயராம். துளசியானது வாயில் போடவும், வில்வம் தலையில் வைக்கவும் உதவும். உன்னுடைய புகையிலையோ! மூவகைப் பிரயோகத்தினால் எண்ணிறந்த பிரயோஜனங்களைத் தரத்தக்கதாயிருக்கின்றது. எங்ஙனமெனில்:—

முதலாவது:—அமுதப்பிரயோகம்—புகையிலையை ஜனங்கள் தாம்பூலத்துடன் மென்று கன்னத்திலடக்கிக்கொள்கிறார்கள்.

இரண்டாவது:—ஆஸனப் பிரயோகம்—மலபந்தம் நேர்ந்துவிட்டால் புகையிலைக்காம்பை ஆஸனவாயிற்செலுத்தி மலத்தை வெளிப்படுத்துகிறார்கள்.

மூன்றாவது:—நாசிப்பிரயோகம்—இந்தப் புகையிலையின் காம்பைக் கழித்துவிட்டுத் தூசிபோகத்தட்டி நெருப்பனலிற்காட்டித் திருப்பித் திருப்பி வாட்டி, தக்க நெய் கூட்டிச் சுண்ணாம்பைத்தீட்டிக் குண்டாவில் மாட்டி கோல்கொண்டு நீட்டி ஓட்டி போட்டி யரைத்து திப்பி நீக்கத்தெள்ளி, டப்பி

பூரணி மெடிக்கல் ஹால், 439 நெம்பர், சௌகார்பேட்டை, சென்னை.

யிலடைத்து ஒரு சிட்டிகை யெடுத்து (கஸ்யதானமஹாதானம்—வஸ்த்ரதானஞ்சமத்யமம்—அதமம் கன்னிகாதானம்—அன்னதானம் விர்தா விர்தா) என்னும் சுலோகப் பிரகாரம் தானஞ்செய்த பிறகு மறு சிட்டிகையை மூக்கில் வைத்து மாட்டினால் ஜலுப்பு என்னும் நாசி நீரோட்டத்தை ஜாடுஜாவென்று ஜாடிவிடும். தலைவலியைத் தாக்குதாக்கென்று தாக்கிவிடும். பீனஸவியாதியைப் புறங்காலடி புட்டத்திற்படும்படி ஓட்டுவோட்டென்று ஓட்டிவிடும். இன்னும் கண்டத்திற்கு மேற்பட்ட அநேக வியாதிகளைக் கதறக்கதறவாட்டிவிடும். ஆஹா—ஹா—ஹா—ஹா—ஹா—இப்பொடியின் பெருமையைப் புகழ்வதற்கு யார் தரம்?

இராகம், சங்கராபரணம். தாளம், ஆதி.

பல்லவி.

பொடியின் பெருமையைக் கேளும்—அதன்
முடிவைச் சொல்வதற்கு முடியாதெந்நாளும். (பொடி)

சரணங்கள்.

மடியினை யடியோடே போக்கும்—என்றும்
மண்டைக்குச் சலதோஷம் வாராமற் காக்கும்
மிடி யணுகாமலே நீக்கும்—சித்தம்
மெலிவினை யோட்டி யானந்த முண்டாக்கும். (பொடி)

புத்தியை விருத்தியாக நீட்டும்—இல்லாப்
புதிய புதிய யோசனைகளைக் காட்டும்
யுத்தியை மேன்மேலு மூட்டும்—பல
யோசனைத் தூரத்தில் துன்பத்தை யோட்டும். (பொடி)

நல்லவர் நேசத்தைக் கூட்டும்—போன
ஞாபக சக்தியை நன்றாகத் தீட்டும்
கல்விக் கிடர்களை வாட்டும்—நெஞ்சில்
கலங்காத தீரத்தைக் கடிதாக கூட்டும். (பொடி)

அநேகம் பாரிஸ்டர்கள், லாயர்கள் முதலிய கல்விமான்கள் ஓர் விஷயத்தை வாதித்துக்கொண்டே வருகையில் ஏதேனுமொரு முக்கியமான சங்கதி அவர்கள் கவனத்திற்கு வாராமலிருந்தால் பசபசவென்று விழிக்கிறார்கள். மேலுங்கீழும் சுற்றிலும் பார்த்துத் திகைக்கிறார்கள். விரலைக் கடிக்கிறார்கள். நெற்றியில் கையை வைக்கிறார்கள். ஆடையிலடித்துக் கொள்கிறார்கள். கையையுதறுகிறார்கள். பல்லைக் கடிக்கிறார்கள். இன்னும் பலபல விகாரங்களைச் செய்கிறார்கள். அப்படி யெல்லாஞ் செய்தும் அந்நேரத்தில் ஒன்றுந்தோன்றாமல் திகைப்படைக்கொண்டு நின்றுவிடுகிறார்கள். அந்த ஆபத்துக் காலத்தில் முன்னின்றுதவிசெய்வது நாவலிகா சூர்ணமென்னும் பொடியே. உடனே மெள்ள டப்பியை யெடுத்துத் திறந்து கையைத் துடைத்துக்கொண்டு ஒரே சிட்டிகை யெடுத்து மூக்கினருகே வைத்துச் சொர்—ச்சொர்—ச்சொர்—ப் என்று இழுத்தவுடன் மூக்கின்வழியே நுழைந்த தூளானது பிரமரந்திரம் வரைக்கும் ஏறி, மூளையையாட்டி, சோம்பலையோட்டி, கவனத்தைப்பூட்டி, நினைவைமூட்டி, பாயின்டைக் (Point) காட்டி விடுகின்றது. இவ்வாறு புத்தி கூர்மையையும் தேகாரோக்கியத்தையும் உண்டாக்குவதற்குத் தகுதியான பரமௌஷதம் இதுவேயென்று

கழலைகளைக் கரைக்கிடமும் விடாமுயற்சியும் கஷ்டமென்பனவைக் கண்காணுதே தாட்டிவிடும்.

உனக்குத்தெரியாத விஷயத்தில் நீ விணேதலையிடாதே.

சொல்லி பிரமாவானவர் உடனே கொஞ்சம் பொடியைத் தயார்செய்து தாமும் போட்டுக்கொண்டு ஸரஸ்வதிக்கும் ஒரு சிட்டிகை கொடுத்தா ஸரஸ்வதிக்கு அப்போதிருந்த தலைவலி, ஜலதோஷம் முதலிய வியாதிக நீங்கி சௌக்கியமடைந்தனள். பின்னர் சதுர்முகக்கடவுள் ஸரஸ்வதியை நோக்கி ஆ! என்னருமைக்கண்ணாட்டி! ஜனங்கள் தாம்பூலத்துடன் புகையிலை யையும் தாடையிலடக்கிக்கொண்டு கொழுக்கட்டைபோல் ஒரு பக்கத்தி கன்னம் பருத்திருக்க வைத்திருப்பதையும் மற்றும் சுருட்டு, சிகொட்டு, பீடி முதலியவற்றைப் பிடிக்கும்போது ரெயில்வே ஸ்பெஷல் வண்டி எஞ்சினி னின்றுமுண்டாகும் புகையைப்பார்க்கிலும் அதிகமான புகை கொண்ட கொண்டலாய்க் கிளம்பிச் சுற்றிலுமுள்ள ஜனங்களைச் சூழ்ந்துகொண்டு சுடு காட்டுநாற்றம் வீசும் ஷோக்கையும் நீ பார்க்கவில்லையா? கோடைக்காலத்தி வானம் குமுறுவது போல குடுகுடு வென்று சப்திக்கும் குடாக்கின் கும்மா ளத்தைப் பார்த்ததில்லையா? இத்தியாதி உபயோகங்களால் அநேகம் பிர யோஜனங்களை ஜனங்களடைகிறார்கள். ஆகையால் "புகையிலைப் பொடி சமானம் புண்ய கோடிவிமானம்," "நானை யுறிபவன் நாய்யன்—மூனை யுறிபவன் மெய்யன்," "பொடிதனை வைத்துக்கொண்டு போடுவோர்க்கில்லை யென்றால்-அடிதனில் ஆலங்கண்டிக்கப்போதே கெட்டுப்போவார்" என்னே பார்த்தாயா? உனக்கேற்படிப்பட்ட அருமையான மூலிகையை நானளித் திருக்கிறேன். இதற்கிணை உலகத்தில் வேறு ஏதேனுமொன்றுண்டா? அதன் அருமை பெருமை அநுபவித்தவர்க்கன்றோ தெரியும்? கலைமகளுக்கும் மலை மகளுக்கும் தந்த துளசியும் வில்வமும் ஏகதேச ஜனங்களால் மாத்திரம் பூசிக்கப்படுகிறது. உன்னுடைய உத்தமோத்தம மூலிகையோ உலகத்தி லுள்ள எல்லாச் சாதியாராலும் உபயோகிக்கப்பட்டுவருகிறது என்று நான் முகக் கடவுள் பிரஸங்கமாரி பொழிந்தவுடனே இவை யெல்லாம் கேட்டு வந்த திரிலோக டெலிகிராப் (Telegraph Master) மாஸ்டரான நாரதர் குடுகுடுவென்று கைலாஸத்திற்குச் சென்று ஓ! சிவபெருமானே! உம்முடைய தலையில் கங்கையிருப்பதினால் இடைவிடாத சீதளதோஷம் உமக்குண்டா யிருக்கிறதே. அதற்குப் பரிகாரமான பரமௌஷதமொன்று புதிதாக இப்போதேற்பட்டிருக்கிறது. அதாவது—ஸத்தியலோகத்திலிருக்கும் பெரி யடாக்டராகிய பிரமாவானவர் ஓர் அற்புதமான பௌடர் செய்திருக்கிறார். நீர் போய் அதிற்கொஞ்சம் வாங்கி நாசியிற் போட்டுப்பாரும். உடனே சௌக்கி யம் அடைவீர் என்றார். இது சங்கதி காதிற் புகுந்தும் புகாமலுமிருக்கை யிலேயே சிவபெருமான் ஓட்டமாய் பிரமாவினிடஞ்சென்றார். பிரமாவும் அவர்வந்தசெய்தியை யறிந்து ஒரேயொரு சிட்டிகை அவருக்கெடுத்துக் கொடுத்து இதற்குமேலினிக் கேட்கவேண்டாம் என்று கண்டிப்பாய்க் கூறி யனுப்பிவிட்டார். நாரதர் இப்படியே நின்றுவிட்டாரா? இல்லை, இவ்விட திருப்பாற்கடலுக்குப்போய் அங்குப் பள்ளிகொண்டிருக்கும் திருமாலை நோக்கி ஓ மாதவா! நீர் இந்த ஸப்தஸாகரத்திற்கப்பால் சண்டமாருதம் வீசப்பாற்கடலினடுவில் குளிரினால் அவஸ்தைபடுகிறீரே, ஐயோ பாவம்! ஸத்தியலோகத்தில் ஆஸ்பத்திரியொன்று புதிதாயேற்பட்டு அதற்குப் பிரம்மா ஹெட் டாக்டராயிருக்கிறார். அவரிடத்தில் அதிசயமான பௌடர் ஒன்று இருக்கிறது. அது குளிரினாலவஸ்தைப்படும் உமக்கு மிக்க அநு கூலமாயிருக்கும். அதை இக்கணமேசென்று வாங்கிக்கொண்டு வந்தால் நலமாயிருக்குமென்று சொல்ல அதைக்கேட்ட விஷ்ணு சாலவுஞ் சந்தோஷ

போனது, ஐயனே பின்பற்றிச் செல்லுவான்.

யூநானி மெடிக்கல் ஹால், 439 மின்ட், சௌகார்பேட்டை, சென்னை.

மடைந்து நாரதர் சொன்னவண்ணமே ஸத்யலோகஞ்சென்று சதுர்முகனிடத்தில் ஒரு சிட்டிகை வாங்கிக்கொண்டு இரண்டாவது சிட்டிகைக்கு குட்டிக்கரணம்போட்டும் அவருடைய ஜபம் சாயாமற்போய்விட்டபடியால் ஐயோ பாவம் வெட்கிப்போய்விட்டார். இத்தகைய அருமைவாய்ந்த மூக்குத்தூளை யாவரும் அபேக்ஷித்து சதா கையாண்டு வரவேண்டும். ஓம் சுபம்.

Shah Jehan Perfumed Snuff.

ஷா ஜஹான் சுகந்த மூக்குத்தூள்.

மானிடரிற்பலர் பலவகையான தூதன அப்பியாசங்களை மேற்கொண்டு பழகிவருகிறார்கள். அவையாவும் கெடுதிவிளைக்கத் தக்கவையென்றே பொதுவாய்ச் சொல்லப்பட்டிருந்தபோதிலும், அவ்வவரின் சரீர சுபாவத்திற்கேற்றபடி ஒருவாறு நன்மை பயக்குமென்றே திருப்திசெய்து தீர்மானித்துக்கொள்கிறார்கள். அவையெவையெனின், தாம்பூலமருந்தல், சுருட்டுப் பிடித்தல், தூள்போடுதல், லாகிரிவஸ்துக்கள் சாப்பிடல் முதலியவைகளே. மேற்கூறிய வழக்கங்களை அப்பியாசப்படுத்தியபின் அவற்றால் நேரும் வீண் செலவுகளாலும் பலவித கஷ்டங்களாலும் அன்னவற்றை விட்டுத்தொலைக்க வேண்டுமென்று மனப்பூர்த்தியாயெண்ணினபோதிலும், நீண்டகாலப்பழக்கத்தால் அவ்வப்பியாசங்களை யொழிப்பதற்கவர்களால் சாத்தியப்படுகிறதில்லை. ஆகையால் அவர்களுக்குள்ள பல துன்பங்களுடன் இவ்வொழியாத் துன்பமும் அவர்களோடு சதா போராடிக்கொண்டிருக்கின்றன. விவேகிகளாயுள்ளோர் அவற்றிற்கொருவாறு பரிகாரந்தேடிக்கொண்டு சுகஜீவிகளாய் வாழ்ந்துவருகிறார்கள்.

இவ்விடத்தில் நாம் மூக்குத்தூளைப்பற்றிச் சிறிது யோசித்துப்பார்ப்போம். இந்தியா, இலங்கை, பர்மா, சிங்கப்பூர் முதலிய மற்றும் பல தேசங்களில் அனேகர் மூக்குத்தூளை அதிகமாக உபயோகித்து வருகிறார்கள். முதலில் ஏதோவொரு காரணத்தினால் அதையாரம்பித்து அப்பியாசத்திற்குக்கொண்டுவந்த பிறகு அத்தூள்வழக்கத்தை எவ்வாற்றாலேனும் ஒழித்துவிட்டால் சர்வோத்தமமாயிருக்குமென்று கருதுவார்களென்பதற்கு அவர்களுடைய மனச்சாட்சியே சாக்ஷியாய் நிற்கும். இதற்சிறிதும் ஐயமில்லை. ஏனெனில் அதனால் அவர்களுக்கு நேரக்கூடிய துன்பங்களும் கெடுதிகளுமவர்களுடைய அநுபவத்தில் செம்மையாய்த் தெரிந்திருக்கின்றன. இதை உத்தேசித்தே அத்தகைய கெடுதிகளை ஒருவாறு நிவர்த்திசெய்யுநிமித்தம் ஒருவகையான சுகந்த மூக்குத்தூளை வைத்திய சாஸ்திரவிதிப்படி தயார் செய்திருக்கிறோம். இது மேற்கூறிய பலவித கஷ்டங்களுக்கு உள்ளாக்காமல் பலவித நன்மைகளைப் பயக்குமென்பதும் நாம் சொல்லவேண்டியதில்லை. அதை அவ்வவர்கள் தத்தம் அநுபவத்தில் திருஷ்டாந்தமாய்க் கண்டறியலாம். இதன் பெயர் ஷாஜஹான் சுகந்த மூக்குத்தூள். இது பலவகை மூலிகைகளையும் வாசனைத் திரவியங்களையும் சேர்த்துப் புகையிலையுடன்

இன்றைக்கு ஒருவேலையை முடிக்கத்திராணியற்றவன் நாளைக்கும் அதை முடிக்கமாட்டானென்பது உண்மை.

அன்பிற்குமுண்டோ அடைக்குந்தாழ்.

கலந்து செய்யப்பட்டுள்ளது. சாதாரண மூக்குத்தூளினால் சிலருக்குண்டாகக்கூடிய கெடுதிகளை இம்மூக்குத்தூள் நிவாரணஞ்செய்துவிடுவதல்லாமலும் கண்டத்திற்கு மேற்பட்ட பல வியாதிகளையும் சுலபமாக நிவர்த்தி செய்துவிடுகின்றது. இதை யாவரும் சிறிதும் அச்சமின்றி உபயோகிக்கலாம். இது மூக்குத்தூள் உபயோகிப்பவர்களுக்கு மிக்க அனுகூலத்தைத் தரக்கூடிய ஒரு பெரிய பரிகாரமாயிருக்கிறது. இதன் முக்கிய குணங்களாவன:—

1-வது முன்பொருபோதும் சுகித்தறியாத இன்பகரமான சுகந்தமும் மஹா சிரேஷ்டமான தூளுக்குரிய நல்லகாரமும் இதிலுண்டு.

2-வது நீண்டநாள் வரையில் காரம் கெடாமல் ஒரேவிதமாயிருப்பதன்றியும் இதில் ஒரு சிட்டிகையெடுத்து காலணா சாதாரண மூக்குத்தூளுடன் கலந்தால் அந்தத்தூள் முழுவதும் அதி மனோரம்மியமான வாசனை மயமாய் விடுவதல்லாமலும் அதன் காரத்தையும் நெடுநாள் பாதுகாக்கும்.

3-வது இந்தத்தூளை உபயோகித்தவுடனே இன்பமான பரிமளத்துடன் ஆநந்தத்தையும் மனோச்சாகத்தையும் கொடுக்கக்கூடிய ஒருவித ஜிலுஜிலுப்பும் சேர்ந்து 10 நிமிஷம் வரையில் நாசியில் நடனமாடிக்கொண்டிருக்கும். ஆனந்தத்தையும் அகக்களிப்டையுமுண்டாக்குமென்பதற் காக்ஷேபனையில்லை. இதன் மணத்தையும் குணத்தையும் அறிந்தவர்கள் வேறு எவ்வித வாசனைத்தூளையும் விரும்பார்கள் என்பதை அனுபோகத்திலறியலாம்.

4-வது அடிக்கடி தூள்போடும்படித் தூண்டும் அபேக்ஷையைத் தவிர்த்து அவ்வப்பியாசத்தைச் சிறுகச்சிறுகத் தாமதப்படுத்திவிடும். அதாவது நாள் 1-க்கு 10-தடவை தூள் உபயோகிக்கும் பழக்கமுடையோர் நாளாவர்த்தியில் முறையே 8, 6, 4, 2 தடவையாகக் குறைத்துக்கொண்டே வந்து கடைசியில் சிலர் தூள்போடும் அப்பியாசத்தையே முற்றிலும் விட்டுவிடும்படிச் செய்யும்.

5-வது ஜலதோஷம் நாசியிலிருந்து நீர்வடிதல், தலைநோய், மண்டைக்குற்று, ஒற்றைத்தலைவலி, நாசியில் துர்நாற்றம், நீர்ப்பீனசம், செருப்பீனசங்களும் இன்னும் சிரசைப் பற்றிய பலவியாதிகளும் சௌக்கியமாய்விடும். எவ்விதத்திலும் கெடுதியென்பதே கிடையாது. பல சுகுணங்களை நிறைந்துள்ளது அனுபவத்திலறியலாம்.

கிரயம் டப்பி 1-க்கு அணா 4.		டஜன் 1-க்கு ரூபா 2-4-0.
வி. பி. சார்ஜ் அணா 3.		வி. பி. சார்ஜ் அணா 7.

மதராஸ் சாதா மூக்குத்தூள் விலை 1-க்கு ரு. 3—8—0.

ஷை 24-நுபா இடையுள்ள சேர் 1-க்கு ரு. 0—12—0.

வி. பி. சார்ஜ் பிரத்தியேகம்.

ரயில்வே மூலியமாயனுப்பித்துக்கொண்டால் செலவு குறைவாய் வருமாகையால் கனவான்கள் தங்கள் ஊருக்குச் சமீபத்திலுள்ள ரெயில்வே ஸ்டேஷனை தெரிவிக்கவேண்டும்.

உன்னிடத்திலுள்ள பெரிய குற்றங்களைச் சிந்தையிற்கொண்டு பிறனுடைய சிறுபிழைகளைப் பொறுக்கணிக்கவிடு.

பூராணி மெடிக்கல் ஹால், 439 மின்ட், சௌகார்பேட்டை, சென்னை.

SHAH JEHAN PERFUMED SNUFF.

ஷா ஜஹான் சுகந்த மூக்குத்தூள்.

கிரயம் புட்டி 1க்கு அணு 4.
வி. பி. சார்ஜ் அணு 3.
டஜன் 1-க்கு ரூ. 2-4.
வி. பி. சார்ஜ் அணு 7.

இச்சுகந்ததூளை யுகந்தாயானால் சுகந்தானந்தம் அடைவாயதனால்

சம்பாஷணை.

சாமமூர்த்தி ஐயர்:— (My dear Sir) மை டியர் ஸார்! சகலவியாதிகளையும் சம்ஹாரம் செய்யக்கூடிய ஷாஜஹான் சுகந்த தூளை சுகித்திருக்கிறீரோ?

இதோ! ஒரு சிட்டிகை அதன் மாகிமையைச் சொல்லும்பார்ப்போம்.

சுப்பிரமணியன்:— வெகு நைஸா யிருக்கிறது பிரபு! ஷாபாஷ்! பேஷ்!! பேஷ்!!! இதன் காரமும் சாரமும் மணமும் குணமும், வெகுநைஸ்! வெகு நைஸ்!! வியக்கத்தக்க சுகந்தம்!!! பிரமிக்கத்தக்க சுகுணம்!!! ஸார் ஸார் இன்னொரு சிட்டிகை ஸார்.

மங்களம்:— என் தலைநோய் இருந்தவிடம் தெரியாமல் ஏகிவிட்டது. என் மகள் ஒற்றைத்தலை நோயால் ஓயாது துன்பமடைகிறாள். இன்னும் ஒரு சிட்டிகைத் தூள் தயை புரிய வேண்டும் சுவாமி.

கிருஷ்ணன்:— கண்டத்திற்கு மேற்பட்ட வியாதியெல்லாம் காணுதொழிந்து விடும். எனக்கிருந்த தலைநோயில்லாதொழிந்தது. உனக்கிருந்த சங்கடம் ஓடியே போயிற்று. உன்மகளும் சுகமடையட்டும். பிடிசிட்டிகை.

தேகசௌக்கியமே எல்லா பாக்கியத்திலும் சிறந்தது.

சமயத்தில்தைத்த ஒரே தையல் ஒன்பது தையலை மிகுதியாக்கும்.

சம்பாஷணை—(தொடர்ச்சி.)

தங்கம் :—அம்மா லட்சுமி! எனக்கு நாசியிலிருந்து சதா நீர் வடிந்துகொண்டேயிருக்கிறது. சிலசமயம் சளி கட்டிசிறுவைப் போல்வந்து விழுகிறது. இவையெல்லாம் இதில் சௌக்கியமாய் விடுமோ? உங்கள் ஆத்துக்காரர் கொடுத்ததூள் என்ன சொகுஸாயும் பரிமளமாயுமிருக்கிறதம்மா? இதை அவர் எங்கே வாங்கினார்?

லட்சுமி :—அடி தங்கம்! நோக்கேதுக்கடி சந்தேகம்! நீ இப்போது சொல்லிவந்த அத்தனை வியாதியையும் நிர்மூலமாக்கி விடுவதன்றியில் இன்னும் எத்தனையோ வியாதி அதில் சௌக்கியமாயிருக்கிறது. இது உலகப்பிரசித்தியான தூளாயிற்றே நோக்கித்தனை நாள் தெரியாதோ? நன்றாயிருக்கிறது! நம்ம சாயபுதானடி. சௌகார்பேட்டை, தங்கசாலை தெரு, 439 நெ. யூநானி ஔஷதசாலை மானேஜர்தான் விற்கிறார்.

உயர்த்தியான மதராஸ் சாதாமூக்குத்தூள் இரயம் வீசை 1-க்கு ரூ. 3–8.

ஷை 24-ரூபா எடையுள்ள சேர் 1-க்கு அணு 12.

வி. பி. சார்ஜ் பிரத்தியேகம்.

கணவன் மனைவி பேசும்போது குழந்தைக்குப்பேச அவகாசமில்லை.

தாய் :—குழந்தாய்! நான் உன்பிதாவுடன் வார்த்தையாடிக்கொண்டிருக்கும்போது இடையில்வந்து தொந்திரவு செய்யாதே.

சேய் :—அப்படியானால் நான் தங்களோடு பேசுவதற்கு எனக்கு அவகாசம் கிடைக்காதே அம்மா!

உண்மையில் நமக்கு கண்ணுடையக்கத்தக்கவைகள் நமக்கு ஸமீபத்திலேயே யிருக்கின்றன ஆனால் நாம் அவற்றைக் கவனிக்கிறதில்லை.

மதராஸ் யூனானி மெடிக்கல் ஆல், 439 நெ. சௌகார்பேட்டை, சென்னை.

வாசனை திரவியங்கள்.

சகல சுபமங்கள முகூர்த்தங்களுக்குரிய மஹா உன்னதமான பரிமளத்தையுடைய டில்லி அத்தர்களும், உயர்ந்த அத்தர் பில்லைகளும் அகக்களிப்பையுண்டாக்கக்கூடிய தூபத்தையுடைய உயர்ந்த ஊதுவத்திகளும், இன்னும் பலவிதமான வாசனைத்திரவியங்களும் அடியிற்கண்ட சாசமானவிலைக்கு இவ்விடத்தில் பெற்றுக்கொள்ளலாம். நம்மிடத்திலுள்ள பரிமள சாமான்கள் முழுமையும் உயர்ந்தவைகளாகவும் கலப்பில்லாமல் அப்பட்டமானவைகளாகவுமிருக்கின்றன. மனிதர்கள் சதாகாலம் வாசனைத் திரவியங்களை அணிந்துகொள்வதினால், துர்வியாதிகள் நீங்கி மூளை, இருதயம், ஈரல் முதலிய இராஜகருவிகள் பலப்பட்டு மனதிற்கு உற்சாகமும் சந்தோஷமுமுண்டாவதன்னியில் அருகிலிருக்கும் அன்பர்களுக்கும் முற்கூறிய பிரயோசனங்களுண்டாகும்.

அத்தர் தினுசுகளின் கிரயம்.

தொகை.	அத்தர் தினுசுகளின் பெயர்.	1-டெ. துலா 1க்கு		2-டெ. துலா 1க்கு		3-டெ. துலா 1க்கு		4-டெ. துலா 1க்கு		5-டெ. துலா 1க்கு		கூடா.
		ரூ.	அ.	ரூ.	அ.	ரூ.	அ.	ரூ.	அ.	ரூ.	அ.	
1	இஸ்தம்பூல் அல்லது ஈரான்	25	0	6	0	0	0	0	0	0	0	
2	* அகர் அத்தர் ...	8	0	0	0	0	0	0	0	0	0	
3	குலாப் அல்லது ரோஸ் ...	10	0	5	0	3	0	1	0	0	12	
4	சுஹாக் ...	5	0	3	0	1	8	1	0	0	12	
5	கஸ்தூரி அத்தர் ...	5	0	0	0	0	0	0	0	0	0	
6	மல்லிகைப்பூ அத்தர் ...	3	0	1	0	0	12	0	0	0	0	
7	சம்பங்கி அத்தர் ...	3	0	1	0	0	12	0	0	0	0	
8	தாழம்பூ அத்தர் ...	3	0	1	0	0	12	0	0	0	0	
9	மருக்கொழுந்து அத்தர் ...	3	0	1	0	0	12	0	0	0	0	
10	அம்பர் அத்தர் ...	3	0	1	8	1	0	0	0	0	0	
11	மருதோன்றிப்பூ அத்தர் ...	2	8	1	0	0	12	0	0	0	0	
12	† வெட்டிவேர் அத்தர் ...	1	0	0	0	0	0	0	0	0	0	
13	மகிழம்பூ அத்தர் ..	2	8	0	0	0	0	0	0	0	0	
14	சந்தன அத்தர் ...	0	8	0	0	0	0	0	0	0	0	
15	மௌலஸிா ...	0	8	0	0	0	0	0	0	0	0	

* அகர் அத்தரை சுல்தான்கள், நவாபுகள், தாம்பூலத்துடன் சேர்த்து சாப்பிடுகிற வழமையுண்டு அதினால் முகவஜ்சீகரம் தேககாந்தி தாதுபுஷ்டி முதலியவையுண்டாகும்.

† வெட்டிவேர் அத்தரில் 10-சொட்டு எடுத்து கொஞ்சம் ஜலத்தில் அல்லது ஷர்பத்தில் விட்டுக்கலக்கி சாப்பிட்டால் அதிக ருசியாகவும் வாசனையாகவும் இருப்பதன்னியில் தேகத்தின் அழலை, அஸ்திச்சூடு, மேக வெட்டை, கை, கால், கண், எரிச்சல் முதலியவைகளை சுவஸ்தமாக்கிவிடும்.

8

பலரால் அபேட்சிக்கப்பட்டதை வைத்திருப்பதால் துன்பமுண்டாகும்.

முதல் நம்பர் மூடன்.

யோசியாமற் செய்யுங்காரியங்கள் மூடத்தனத்தைக் குறிப்பிடுகின்றன.

ஒரு தேசத்தரசனிடத்தில் சில வர்த்தகர்கள் நான்கு குதிரைகளை விற்பனைக்காகக் கொண்டுபோனார்கள். அரசன் அவ்வசுவங்களைக்கண்டவுடனே அவைகளின்மேற் பேராவல் கொண்டவனாய் அவற்றின் விலையை வினவினான். வியாபாரிகள் நான்கு புரவிகளும் இரண்டு லட்சம் ரூபாயென்று சொன்னார்கள். உடனே அவர்களுக்கு இரண்டு லட்சம் ரூபாய் கொடுக்கும்படி உத்திரவளித்ததன்றியில் அதிகமாய் இரண்டு லட்சம் ரூபாய் கொடுத்து இன்னும் இவ்விதமான நான்கு குதிரைகள் கொண்டுவரும்படி அவர்களுக்குக் கட்டளையிட்டனுப்பினான். வர்த்தகர்கள் நான்கு லட்சம் ரூபாயையும் பெற்றுக் கொண்டு போய்விட்டனர். சில காலத்துக்குப் பின்னர் அரசன் உல்லாசமாயிருக்குமொருநாளில் தன் மந்திரியையழைத்து தன்னுடைய ராஜ்ஜியத்தில் விவேகிகள் இத்தனைபேரென்றும் அவிவேகிகள் இத்தனைபேரென்றும் கணக்கெடுக்கும்படி ஆக்ஞாபித்தான். மந்திரி அரசனை நோக்கி, "எங்களை ரட்சிக்கும் இறைவனே! தாங்கள் கட்டளையிட்டவாறே கணக்கெடுத்து வைத்திருக்கிறேன். எடுத்த கணக்கிற் சிறிதும் தவறுபடமாட்டாது. நம் தேயத்துக்குடிகளில் விவேகிகளாயுள்ளோர் தொகை 3,52,090, மூடர்களின் மொத்தம் 4,82,505. மூடர்களுடைய பதிவு ஏட்டில் அக்ரகண்ணியராகத் (முதன்மையானவர்) தங்கள் திருப்பெயரையே பதிவுசெய்திருக்கிறேன் என்றான். அரசன் தக்ஷணமே கோபாவேசசித்தனாய் கண்களில் தீப்பொறி சிதற மந்திரியை நோக்கி "ஹாங்! ஏன் என்னை அவ்வாறு பதிந்தனை என்பதை யாது மூடத்தனங்கண்டாய் உடனே சொல்லாவிட்டால், சிரச்சேதஞ் செய்வேன் என்றனன்" மந்திரி பயபக்தியுடன் அரசனை வணங்கி, மஹாராஜனே! என்னை ரட்சிக்கவேண்டும். இதோ சொல்லுகிறேன் என்று கூறலுற்றனன். சிலகாலத்திற்குமுன் அசுவ வியாபாரிகள் நான்கு புரவிகளைக் கொண்டுவந்து அவற்றின் கிரயம் இரண்டு லட்சம் ரூபாயென்று சொன்னவுடனே தாங்கள் பரீட்சகர்களைக்கொண்டு அசுவலட்சணங்களைச் சோதிக்காமலும் மந்திரிமார்களிடத்தில் யோசிக்காமலும் அக்குதிரைகள் அவ்வளவு விலைபெறுமோ பெறாதோ என்று பிறரைக்கேட்டறியாமலும் உடனே பணத்தைக்கொடுத்துவிட்டீர். அதன்றியும் அவர்கள் எவ்வகையினரென்றும் எங்குள்ளவர்களென்றும் தெரிந்துகொள்ளாமலும் அவர்களிடத்தில் எழுத்து மூலமான தஸ்தாவேஜொன்றும் வாங்காமலும் அதிகமாக இரண்டு லக்ஷம் ரூபாயும் கொடுத்துவிட்டீர். இக்காரியங்கள் முழு மூடத்தனத்தைக் குறிப்பிக்கிறபடியால், அந்த ஏட்டில் தங்கள்நாமத்தை முதல் நம்பராகப்பதிந்தேன் என்றான். அதைக்கேட்ட அரசன் தன்னறியாமைக்காக நாணியும் மந்திரியின் புத்திசாதுர்யத்திற்காக வியந்தும், மந்திரியை நோக்கி, நல்லது, வர்த்தகர்கள் அந்த நான்கு குதிரைகளையும் கொண்டுவந்துவிட்டால் என்ன செய்கிறாயென்றான். மந்திரி அட்டியாதல் உடனே அவ்வேட்டினின்றும் தங்கள்பெயரை நீக்கிவிட்டு அவ்விடத்தில் அவ்வர்த்தகர்களுடைய பெயரைத் தாக்கல் செய்துவிடுவேன் மஹாராஜனே! என்று மறுமாற்றங்கூறினான்.

மதராஸ் பூரணி மெடிக்கல் ஹால், 439 கெ. சௌகார்பேட்டை, சென்னை.

வாஸனை திரவத்தினுல் வல்பிணிகள் நீங்கும்.

சுகந்த தூப ஊதுவத்தி.

இவைகளைக் கொளுத்திவைத்தால் குளிர்ந்ததாகவும், சபையோர்களால் மெச்சும்படியானதாகவும் வெகு துலையில் இன்பமான பரிமளவாசனையை வீசத்தக்கதாகவும் தூபமுண்டாகும்.

			ரூ.	அ.	ப.
1 கெ. அம்பர்வத்தி ...	...	பலம் 1-க்கு	1	0	0
2 கெ. * மத்தாப்புவத்தி	...	,,	0	12	0
3 கெ. மஹமால்வத்தி ...	...	,,	0	10	0
4 கெ. அகர்வத்தி ...	...	,,	0	6	0
5 கெ. மைசூர்வத்தி ...	...	,,	0	4	0
6 கெ. சாதாவத்தி ...	...	,,	0	2	0

அத்தர்பில்லை தினுசுகள்.

அதில் இன்பமான வாசனையையுடையவைகள்.

			ரூ.	அ.	ப.
1 கெ. கஸ்தூரிபில்லை ...	...	1-க்கு	0	8	0
2 கெ. ஜவ்வாதுபில்லை ...	...	,,	0	4	0
3 கெ. புனுகுபில்லை ...	...	,,	0	2	0
4 கெ. சாதாபில்லை ...	...	,,	0	1	0

சுகந்தபரிமள கூந்தல் தைலதினுசுகள்.

கலியாணப் பெண்களுக்கும், கனவான் தனவான்கள் வீட்டு ஸ்திரீகளுக்கும் கூந்தலுக்குப் பூசும் சுகந்த பரிமளத்தைலங்களில் மிகவும் உயர்ந்தவைகள் :—

	ரூ.	அ.	ப.
1. மல்லிகைப்பூ எண்ணெய் 4-அவுன்ஸ் புட்டி 1-க்கு	0	8	0
2. சம்பங்கி எண்ணெய் 4-அவுன்ஸ் புட்டி 1-க்கு	0	12	0
3. கூந்தர்பரிமளன் 4-அவுன்ஸ் புட்டி 1-க்கு	0	12	0

சாமான் தினுசுகள்.

			ரூ.	அ.	ப.
1 உயர்ந்த அம்பர்	...	துலா 1-க்கு	60	0	0
2 உயர்ந்த கஸ்தூரி	...	,,	30	0	0
3 உயர்ந்த ஜவ்வாது	...	,,	13	0	0
4 உயர்ந்த புனுகு	...	,,	6	8	0
5 உயர்ந்த பச்சைக்கற்பூரம் ...		,,	2	8	0
6 தங்கரேக்கு ஒன்றுக்கு	...	,,	0	4	0
7 வெள்ளிரேக்கு ஒன்றுக்கு ...		,,	0	0	6

* மத்தாப்புவத்தியைக் கொளுத்திவைத்தவுடன் அதிக பரிமளத்துடன் மத்தாப்பைப்போன்ற பிரகாசத்தை அடிக்கடியுண்டாக்கும். அது சிறுவர்களுக்கு மிகவும் வேடிக்கையாயிருக்கும்.

பையனுடைய சாமர்த்தியத்தை வாத்தியார் மெச்சுதல்.

ஒரு பள்ளிக்கூடத்தில் வாசிக்கும் சிறுவனொருவன் தன் படிப்பைக் கவனியாமல் அதிகமான சேஷ்டைசெய்துகொண்டிருந்தான். அதை அங்குவந்த ஒரு பெரியமனிதன் கவனித்து உபாத்தியாயரை நோக்கிக் கேட்கிறார்.

பெரியமனிதன் :—ஐயா, வாத்தியாரே! இந்தப்பையனைப்பார்த்தால் அதிக புத்திசாலியாகத் தோன்றுகிறதே. ஏதாவது எழுதக்கிழிக்கத் தெரியுமா?

உபாத்தியாயர் :—ஐயா! முன்சொன்னதிலே இந்தப்பேர்வழி அப்படியிப்படி இருந்தபோதிலும் பின் சொன்னதில் சண்டப்பிரசண்டன். அது விஷயத்தில் அவனை வெல்ல இங்கொருவருமில்லை.

வயிறு நிறைந்தவன் காதில் உபதேசம் ஏறுவது கஷ்டசாத்தியமாகும்.

நாயகரின் சாமர்த்தியத்தை நாயகிமார் மெச்சுவது.

நான்கு பிராமணஸ்திரீகள் ஓரிடத்தில் கூடிப்பேசிக்கொள்ளும் விதம்.

தங்கம் :—எங்கள் ஆத்துக்காரர் மதுரையிலே டெப்டி கலெக்டரா யிருக்கிறார். மாதம் 1-க்கு ரூபா 500 சம்பளம் வருகிறது.

மங்களம் :—என்னடி ! அதிக பெருமையாய்ப் பேசுகிறாய். எங்க ஆத்துக்காரர் கும்பகோணம் முன்ஸீப் கோர்டில் எட்குமாஸ்தாவாயிருக்கிறார். சம்பளம் மாதம் 1-க்கு ரூபா 25 தான். ஆனால் மேல் வரும்படி மாதம் 1-க்கு ரூபா 700 கிடைக்கிறதடி.

லட்சுமி:—ஆமாம் போங்கோ, மஹா பெருமையாய்ப் பேசிவிட்டீர்களோ எங்க ஆத்துக்காரர் சேலத்தில் சப்மாஜிஸ்ட்ரேட்டாயிருக்கிறார். எத்தனையோ மிட்டாதார்களும், ஜமீன்தார்களும் எங்கள் வாசலிலே பிரதிதினம் வந்து காத்திருக்கிறார்கள். ஆயிரம் ஆயிரமாகக் கொண்டுவந்து கொடுத்துவிடு கிறார்கள். ஆனால் ஐயருக்குச்சம்பளங் கொஞ்சந்தான். அது அவருக்கு லட்சியமேயில்லை. எங்க ஆத்திலே தினம் என்ன செலவு ஆகிறது தெரியுமா? இதுவன்றியும், வாழைக்கா, வாழை இலை, கத்தாரிக்காய் முதலிய காய்கறிகளும் அரிசி, பருப்பு, நெய் முதலியவைகளும் இனாம் வந்துகொண்டே தானிருக் கின்றன. அடி அக்கா! இதை ஒருத்தருக்கும் சொல்லவாண்டாண்டி. எங்க ஐயர் இதைக்குறித்து ஒரு துளிகூட வெளியே பேசவாண்டாமென்று உத்தரவுசெய்திருக்கிறார்.

விசாலாக்ஷி :—(தன் புருஷனுக்கு உத்தியோகமில்லை.) அடி அக்கா! அடிக்கா! இருக்கே—இருக்கே. எ. எ. எ. எங்க ஆத்துக்காரரும் கச்சே ரிக்குத்தினம் போய் வருகிறாரடி.

தங்கம் :—கச்சேரிக்குப்போய் என்ன உத்தியோகம் செய்கிறார்?

விசாலாக்ஷி :—எ. எ. எ. என்ன உத்தியோகமா? நல்லாச்சொன்னேயடி. உத்தியோகமென்னத்திற்கு? கலெக்டர், டெப்டி கலெக்டர், தாசில்தார், மாஜிஸ்ட்ரேட், ஸப் மாஜிஸ்ட்ரேட், முன்ஸீப்தார் இவர்களெல்லாம் மெத்த அன்னியோன்னியமான சிநேகம். பிரதிதினம் அவர்களையெல்லாம் போய் பேட்டிகண்டுவருகிறார். இவர் ஒரு நாளைக்குப் போகாவிட்டால் உடனே ஆள்வந்துவிடும். வரும்படி குறைவாகவாயிருக்கிறது? அது யதேஷ்டம். எங்க வீட்டில் சாப்பாட்டிற்கென்ன குறைவா? பட்டுபட்டாவளிக்குக் குறைவா? ஆபரணங்களுக்குக் குறைவா? வண்டி குதிரைகளுக்குக் குறைவா? என்னகுறையிருக்கிறது. ஆனால் நான் மாத்திரம் சில நேரத்தில் ஒத்தாசையாய் நிற்கவேண்டும். அப்படிச்செய்யாவிட்டால் ஐயரால் ஒன்றுஞ்சாயாது.

ஆச்சரியம்.

ஒரு மந்திரவாதி ஒரு கூனனைப்பார்த்து "என்னால் நீ நன்மை பெற வேண்டுமென்று விரும்பினால் நான் சொல்லும் இரண்டுவிஷயங்களி லொன்றைக்கேள். அதுவொன்று மாத்திரம் என்னால் சாத்தியமாகும்" என்று கூறினான். கூனன் அது என்னவென்று கேட்டான். மந்திரவாதி,

௬௨-ம் பக்கம் பார்க்க.

என்னுடைய சொந்த ஊரில் என் பெயரும் அயல் ஊரில் என் உடையும் எனக்கு மரியாதையை உண்டாக்கும்.

மதராஸ் யூனானி மெடிக்கல் ஆல், 439 செ. சௌகார்பேட்டை, சென்னை.

கஸ்தூரி தாம்பூல மாத்திரை.

தாம்பூலத்துடன் ஒரு மாத்திரை போட்டுக்கொண்டால் அதி மனோ ரம்மியமான வாசனையும், அகக்களிப்பும், மனோத் சாகமும் உண்டாகும். வாய்நாற்றத்தைப்போக்கி பல்வலியை நீக்கி அசைகிற பல்லை கெட்டிப்படுத்தும். கபம், கோழை முத லியவைகளை நீக்கும். வெற்றிலைச்சாற்றில் கொடுத்தால் ஜன்னி சயித்திய முதலியவைகளை உடனே முறிக்கும். சீதபேதியைக் கேட்கும்.சிறு குழந்தைகளுக்கு கபத்தைப்போக்கி இருமலைத் தணித்து ஜுரத்தை நீக்குவதற்கு இது மேலான மருந்து வெற்றிலைச்சார், பிர்மதண்டு இலைச்சார், இஞ்சிரசச்சார் முதலிய வைகளிற் கொடுக்கலாம். கலியாணப் பெண்ணுக்கும் பிள்ளைக் கும் ஆனந்தத்தையும் அகக்களிப்பையும் கொடுக்கக்கூடியதும் இதுவே.

கிரயம் 200 மாத்திரைகளடங்கிய புட்டி 1-க்கு ரூபா 0 4 0

ஷை 12 புட்டி மாத்திரைக்கு ரூபா 2 8 0

சுகந்த சந்தனக்கலவை.

இதில் கொஞ்சமெடுத்து சந்தனத்துடன் கலந்தால் அதி சிலாக்கியமான வாசனையும், மாதுர்யமான சுகந்தமும், மனோத் சாகமுமான பரிமளமும் உண்டாகும். சந்தனத்தில் அத்தர் பன் னீர் குங்குமப்பூ முதலியவைகளைச் சேர்க்கிறதற்குப்பதிலாய் இந்தக்கலவை மிகவும் சிரேஷ்டமாயிருக்கிறது. அனேகம் பிரபுக்கள் பன்னீர் குங்குமப்பூ சேர்க்கிறதற்குப்பதிலாய் இந் தக் கலவையையே தற்காலத்தில் சந்தனத்துடன் சேர்த்து வருகிறார்கள். அது மிகவும் சிலாக்கியமாகவே யிருக்கிறது.

கிரயம் டப்பி 1-க்கு ரூபா 0 4 0. 12 டப்பிக்கு ரூபா 2 8 0.

நறுமணத் தம்பாக்கு.

இதில் உயர்ந்த புகையிலையுடன் அம்பர்கஸ்தூரி முதலிய வாசனைத் திரவியங்கள் சேர்த்துச் செய்யப்பட்டிருக்கிறபடி யால், தாம்பூலத்துடன் புகையிலை உபயோகிப்பவர்களுக்கு இது அதிகமேலான பிரயோகம் இது வாய்க்கு அதிக சிறப்பையும் வாசனையையும் இன்பத்தையும் கொடுப்பதன்றி, கறைந்த ஈறை வளரச்செய்து பல்லைகெட்டிப்படுத்தி பல்வலியைப் போக்கும். 100 மாத்திரை அணா 4.

மூடனை மூடன் திருத்துதல்.

வாத்தியார் :—ரங்கா! சர்க்கரை எப்படி யிருக்குமென்று சொல்லுவாயா ?
ரங்கன் :—என்ன ஸார்! எனக்கவ்வளவு தெரியாதா ? இஞ்சியைப்போல் புளிப்பாயிருக்குமல்லவா?
கிருஷ்ணன் :—(பக்கத்திலிருந்தவன்) ஆ ஹா! ஹா, ஹா, ஹா! வெகுநன்றாய்த் தெரிந்து சொன்னான் ஸார். மூட்டாள் பயல், கடுக்காயென்று எண்ணியன்றோ அவசரப்பட்டுச்சொல்லிவிட்டான்.

அசங்கியமானதும், ஆபாசமானதுமான வார்த்தைகளில் உன் நாவை நனைக்காதே.

ஆச்சரியம்—௬௰-ம் பக்கம் (தொடர்ச்சி)

"என்னுடைய மந்திரசக்தியால் உனக்குள்ள கூனை நிவர்த்திசெய்து உன்னை ரூபலாவண்ணியமுள்ள மனிதனாக்குவேன், அல்லது ரூபலக்ஷணமுள்ள உன் அண்டைவீட்டுக்காரனைக் கூனனாக்கிவிடுகிறேன். இவ்விரண்டில் ஏதேனு மொன்றுமாத்திரம் என்னால் செய்யக்கூடும். நீ எதை யபேக்ஷிக்கின்ற னையோ அதனை விரைவில் கூறுக" என்று கேட்டான். உடனே கூனன், "ஐயா! இதுதான் வெகுகாலமாய் நான் தேடிக்கொண்டிருந்த விஷயம் அல்லும்பகலும் கடவுளைப்பிரார்த்தித்துக் கொண்டிருந்தேன். இப்போது தான் என்னெண்ணம் கைகூடுங்காலம் வந்தது. எனக்குக் கூனிருந்தாலு மிருக்கட்டும் பெரிதல்ல அண்டைவீட்டுக்காரப்பாவிப்பயல் என்னைப் பார்த்த போதெல்லாம் பரிகாசஞ்செய்கிறான். அவன் என்னைப்போல் கூனனாகிக் குனிந்து நடந்துபோவதை என் கண்ணாரக்கண்டு களிகூரவேண்டும் அப்பனே! இக்ஷணமே அவனைக் கூனனாக்கும்படிக் கேட்டுக்கொள்ளுகிறேன்" என்று பேராவலுடன் சொன்னான்.

கெடுவான் கேடு நினைப்பான்.

"மகன் செத்தாலுஞ் சாகட்டும், மருமகள் கொட்டம் அடங்கினால் போதும்" என்பதுபோல் பொறாமையுடையோர் தங்கட்கு நேரக்கூடிய கெடுதிகளையும் பாராமல் பிறருடைய நஷ்டத்திலேயே சதா திருஷ்டியுடைய வர்களாய் அவர்களுக்கு ஆபத்து நேர்ந்தால் கண்குளிரக்கண்டு களிகூறு வார்கள்.

ஒரு மனிதன் பெரிய ஊதியந்தரத்தக்க ஒரு முக்கியகாரியத்தினிமித்தம் தன் வீட்டைவிட்டு வெளியே புறப்பட எத்தனிக்கையில், அவனுடைய நன்மை யைப்பொறாத அயல்வீட்டுக்காரன், சகுனத்தடை நேர்ந்தால் அவன் வெளியே புறப்படமாட்டான். அதனால் அவனுடைய நன்மை கெட்டுப்போமெனக் கருதிப் பொறாமை எண்ணமுடையவனாய்த் தன் மூக்கின் முனையை அறுத் துக்கொண்டு ரத்தம் வடியும்படி யவனுக்கு முன்னேபோய் நின்று துர் நிமித்தங்காட்டினான்.

"கெடுவான் கேடு நினைப்பான்" என்னும் பழமொழிபோல், பிறர் நன்மையைப் பார்க்கச் சகியாமல், அவர்களுக்குக் கேடுசெய்ய நினைப்பவன் தான் கெட்டுச்செல்வமிழந்து வறியனாய்த் துன்புறுவன்.

"அவ்வித் தழுக்கா றுடையானைச் செய்யவள்
தவ்வையைக் காட்டி விடும்" என்று மேலோருங் கூறியிருக்
கின்றனர்.

விவாககாலத்தில், சமயத்தில் போட்ட ஓரே முடிச்சு இருவரையும் ஒன்று சேர்த்துவிடும்.

மதராஸ் பூசாகி மெடிக்கல் ஹால், 439 செ. சௌகார்பேட்டை, சென்னை.

தாஜ் கூந்தல் பரிமளத்தைலம்.

இது மஹா மேன்மையான வாசனையுடையது. பிரதினமும் சிரஸில் பூசிவந்தால் சதாகாலம் கூந்தல் பரிமளித்துக்கொண்டேயிருக்கும். தொத்து வியாதிகளொன்றும் கிட்டத்திலணுகாது. பலகாரணங்களினுல் மயிர் உதிர்வதைத் தடுத்து மயிர்க்கால்களுக்குப் பலத்தைக் கொடுத்து கூந்தல் குதிகாலில்வந்து விழும்படி நீட்டமாய் வளர்த்திவிடுவதன்றியில் தலையிலுள்ள உரோமங்கள் நெருங்கி செழித்து ஓங்கி வளர்வதினுல் இரண்டு கைகளால் கூந்தலை நெருக்கிப்பிடித்தாலும் பிடிக்கடங்காது. உலகத்தில் அளவிறந்த பிரயோகங்களிருந்தபோதிலும் இவ்வற்புதகுணத் தைலத்திற்கு நிகர் வேறென்றுமேயில்லை. பரீட்சித்துப் பாருங்கள்.

கிரயம் புட்டி 1-க்கு ரூபா 0 12 0. 12 புட்டிக்கு ரூபா 8 0 0.

அர்கஸ்.

இது ஓர்விதமான சுகந்தக்கலவை. இதிற் கொஞ்சம் எடுத்து தண்ணீரிற்கலந்து தேகத்திற்பூசினுல் மஹா மேன்மையான பரிமளத்தைக் கொடுக்கும். சுகந்த கலவைப் பரிமள வஸ்துக்களில் இது பிரபுக்களால் புகழத்தக்க வஸ்து. இதை ஒருதடவை பூசினபிறகு பிரதிதினம் ஸ்நாநம் செய்தாலும் மூன்றுநாள் பரியந்தம் தேகத்தில் பரிமளம் தங்கி நிற்கும். ஒரு விராகனிடை இந்தக் கலவையில் எடுத்து ஒருபலம் சந்தனத்திற் கலந்தால் மஹா மேன்மையுள்ள திவ்வியமான பரிமளத்தை யுண்டாக்கிவிடும். கிரயம் துலா 1-க்கு ரூ. 2—0—0.

சுகந்த ஸ்நாநப்பொடி.

இதை மேனுக்குப்பூசி பிரதிதினம் ஸ்நாநம்செய்துவந்தால் தேகத்திற்கு சுகந்தபரிமளவாசனையைத்தந்து தேமல், அரிப்பு, சொரிசிரங்கு முதலியவைகளை போக்கிவிடும் கிரயம் டப்பி 1-க்கு அணு 4. டஜன் 1-க்கு 2—8—0.

கூந்தலுக்கெழுகு—ஸ்ரீகளுக்கு குதிகாலிற் கலிழ்ந்துவிழுங் கூர்மையும் மதிவதன மேற்பார்த்த நேர்மையும் கரிவண்டுபோற் கருத்த மேன்மையும் சரிகண்ட வெல்வெட்டிடை சீரையும் (ஐயா! எது வெல்லெடுத்தும்?) ஆ! ஆ! இந்த அழகான தைலம். இதன் குணமும் மணமும் கனமுந்தனமும் வியக்கத்தக்கதே! கூந்தலிற் சிக்கு குருகுபேன் கூட்டம் நாற்றம் துர்நாற்றம் நற்கூந்தல் முறைப்பு மயிருதிருங்கோட்டம் மகள்பாடு வாட்டம் இதற்கென்ன மருந்து. இதோ! இதோ! அட்லன்ஸ் அழகாக்கும் மருந்து கூந்தலழகும் குணமலர் நன்னாற்றமும் மயிர்க்கால்கள் தேற்றமும் மகள்பாடு கொண்டாட்டமும் பஞ்சுபோற்கூந்தல் பழபழப்புமேகம். வல்லபோற்கார் சிரத்தாலைவாங்கு.

தமாஷ்.

முதியோர் வார்த்தை முற்றிலும் உண்மையே.

ஒரு வித்வான் இரவில் தீபவெளிச்சத்தில் ஒரு புத்தகத்தை வாசித்துக் கொண்டிருக்கும்போது, அதில் ஓரிடத்தில் "தலை சிறுத்தும் தாடி நீண்டுமிருத்தல் மடையனுக்கடையாளம்" என்று எழுதியிருக்கக்கண்டனன். அவ்வித்வான் மேற்கூறிய இரண்டு அடையாளங்களும் தனக்கிருந்ததை நோக்கி வெட்கமும் விசனமுமடைந்து, சிறுத்திருக்கும் நம்முடைய சிரசைப் பெருக்கச்செய்வதோ அசாத்தியம். நீண்ட தாடியைக் குறுக்கிவிடுவது சுலபமாய் முடியும். அவ்வாறு செய்துவிட்டால் இம்முதுமொழிக்கு நாம் இலக்காகோம். மடையன் என்னும் பட்டமும் நம்மை யணுகாது என்று தீர்க்காலோசனைசெய்து தீர்மானித்துக்கொண்டு, அவ்வாறே தாடியைக் குறைப்பதற்கு கத்தரிக்கோல் தேடிக்கிடையாமையால் வித்வானுக்குப் பதட்டம் மேலிட்டு "ஆத்திரக்காரனுக்குப் புத்திமட்டு" என்பதுபோல், தன் கையினால் தாடியை ஒரு பிடியளவில் பிடித்துக்கொண்டு மிகுதியை விளக்கில் பிடித்தான். உடனே தாடிமயிர் பற்றிக்கொண்டு அனலைக் கையிலேறவே சகியாமல் பிடித்தகையை எடுத்துவிட்டான். அப்போது தாடிமயிர் முற்றிலும் பற்றி யெரிந்து முகத்தையும் வெதுப்பிவிட்டது. அந்தோ! முதுமொழியினுண்மையைப் பொய்யாக்கப்பார்த்த நம்முடைய குயுக்தியொன்றும் நிறைவேறாமல் நாமே நன்கு திருஷ்டாந்தப்படுத்திவிட்டோமே.

"எண்ணித் துணி கருமந் துணிந்தபின்
எண்ணுவோ மென்ப திழுக்கு"

ஒரு காரியத்தைத் தீரயோசித்துச் செய்யத்துணியவேண்டும். தொடங்கியபிறகு யோசிப்பது பிசகாம் என்று பெரியோரும் கூறியிருக்கின்றனரே. நாம் என்ன மூடகாரியஞ்செய்தோம் குளிக்கப்போய்ச் சேற்றைப் பூசிக்கொண்டோமே என்று வித்வான் முதுமொழியின் உண்மைக்குச் சந்தோஷமும் தன் மூடத்தனத்துக்குக் கவலையுமுற்றவனாயினன்.

"பெருமைக்கு மேனைச் சிறுமைக்குந் தத்தங்
கருமமே கட்டளைக் கல்"

என்னுங் குறள் வாக்கியத்தின்படி அவரவர்களுக்குண்டாகும் பெருமைக்கும் சிறுமைக்கும் அவ்வவர்களுடைய செய்கைகளே உரைக்கல்லாயிருக்கிறது.

புதிதாய் வந்த தாயார் பழமையாகவே யிருந்தாள்.

மூன்று பிள்ளைகளை விட்டுவிட்டு இறந்துபோன ஒரு ஸ்திரீயினுடைய புருஷன் 45 வயதுடைய ஒரு விதவையை விவாகஞ்செய்து வீட்டுக்கழைத்துக்கொண்டுவந்து தன் மூத்தபெண்ணையழைத்துச் சொல்லுகிறான்.

தகப்பன் :—அம்மா! விசாலாக்ஷி! இதோ உன் புதிய தாயார் வந்திருக்கிறாள். நீ யவளை உன் தாய்போற் பாவித்துப் பணிந்து ஒற்றுமையாய நடக்கவேண்டும்.

மகள் :—ஐயா! அந்தம்மாள் புதிய தாயாராகத் தெரியவில்லையே, அதிக பழமையாகவன்றோ தோன்றுகிறது. ஆகிலும் தங்களுடைய சொற்படியே எங்கள் கடமையைத் தவறாமல் செய்துவருவோம்.

மதராஸ் பூரணி மெடிக்கல் ஹால், 439 மெ. சௌகார்பேட்டை, சென்னை.

மாரனைதன்.

ஆவலோ பிருதி, அம்மாணிடத்திற் போனும் ஐயா சம்மானம் வீசுகிறார்?
அம்மாணுக்குச் சம்மானங்கொடுத்த ஐயா மெய்யாகவேண்டும்.
ஐயாவும் அம்மாளும் ஆனந்தக்கடலில் மூழ்கி அமர்ந்திருக்கவேண்டும்.
இதற்கென்ன உபாயம் ஐயா! மாரனைதனைக் கைப்பிடித்தால் மாறாத இன்பமே.



மாரனைதன்

அல்லோ!! அவனை ஆண்பிள்ளையாக்கு. தாது நஷ்டத் துன்பத்தை நீக்கி, மாதுகாற்றுப் பழிப்பை வெல்லுவது—எது? மாரனைதன் என்னும் மஹா சஞ்சீவியே? ஒலைந்து ரூபாய்க்கு ஒருடப்பி வாங்கிடில், பார்மீது மாந்தரின் பழிப்பை யகற்றிடும் இனிய காம்மை இறுக்கி முறுக்கேற்றிச் தளர்ந்த தேகத்தைத் தாக்கி வலுவேற்றும்; ஒன்றேவார்த்தை யுண்மையாய்ச் சொன்னேம் இன்றேவாங்கி இன்பத்தைப்பாரும். ஒரயம் டப்பி 1-க்கு ரூபா 5–0–0.

வி. பி. சார்ஜ் ... ... 0–12–0.

மதறாஸ் யூநானி மெடிக்கல் ஹால், 439 செ. சௌகார்பேட்டை, சென்னை.

மாதைன்

(தாதுபுஷ்டி ஔஷதம்.)

தாதுபுஷ்டியையுண்டாக்குவதற்கு இதுவேதனிமருந்து. இதற்கு மேலான மருந்து வேறெங்குங் கிடையாதென் பதைஒவ்வொருவரும் அனுபவத்திலறிந்துகொள்ளலாம்.

இந்த அதிசயிக்கத்தக்க மருந்து சாப்பிடுவதற்கு மிகவும் மாதுர்யமாயிருப்பதன்றியில் கெட்ட ரத்தத்தை சுத்திப்படுத்தி புதிய ரத்தத்தை யதிகமாயுண்டாக்கி பல தொல்லையான வியாதிகளையும் தொலைத்து விடுகின்றது எங்ஙனமெனில்—தேகத்தில் கமைச்சல், சொரி, ரணம், மேகவெள்ளை, வெட்டை முதலியவைகளை நீக்கி தேகாரோக்கியம், தேக தாருட்டியம், தேஜஸ முதலியவைகளை யுண்டாக்கிவிடுகின்றது மூளைக்கு வலுவைக் கொடுத்து புத்தி தீட்சணியம், ஞாபகசக்தி இவற்றை அதிகப் படுத்தியும் சோர்ந்து தளர்ந்துபோன நரம்புகளுக்கு முறுக் கேற்றி பிகுவாக்கி வீரியத்தைக்கொடுத்து நீர்த்துப்போயிருக்கிற தாதுவை கெட்டிப்படுத்தியும் விடுகின்றது. இதன் குண விசேஷம் அனேகமிருக்கிறது சுருக்கிச் சொல்லில் மானிடர் பல காரணங்களால் ஆண்தன்மை யிழந்து பெண் முகத்தைப் பார்க்க வெட்கித் தலைகவிழ்ந்து புத்திரஸந்தானத்திற்கு வகை யற்று துக்கக்கடலில் ஆழ்ந்து இடக்கும் துயரத்தை நீக்குவதற்கு இது ஒரு ஆபத்சகாயவிடும் இதனால் ஆண்பிள்ளை தத்துவ முண்டாய் ஆநந்தக்கடலில் மூழ்குவானென்பதற் காட்சேபனை யில்லை. துர்ப்பலப்பட்ட ஸ்திரீகளும் இதை சாப்பிடலாம்.

கிரயம் 24 ரூபாயிடையுள்ள டப்பி 1-க்கு ரூபா 5—0—0.

வி. பி. சார்ஜ் ... ... 0-12-0.

அம்பர் பவுடர்.

இந்த சுகந்தவாசனைத்தூளில் கொஞ்சமெடுத்துத் தண்ணீரிற்கலந்து முகத்தில்தேய்த்து முகத்தைக் கழுகிவிடவேண்டியது. பிரதிதினம் இவ்விதம் செய்துவரில் முகத்தில் படருகிற மேகப்படை, பரு, மாசு முதலியவைகளை நீக்கி முகத்தில் வஜீகரத்தை யுண்டாக்கிவிடும். கிரயம் டப்பி 1-க்கு அணா 4.

பேட்டல் டஸ்ட்.

இது ஓர்வித சுகந்தக்கலவை பொட்லம். இதை பிடவைகள் வைக்கிறபெட்டி அல்லது அல்மாரியில் வைத்திருந்தால் பிடவைகளெல்லாம் அதிக வாசனையாய்விடுவதன்றியில் வண்டு முதலிய பூச்சிகள் பிடவைகளிலணுகாது பெட்டி அலுமாரி முழுவதும் ஏகவாசனையாய்விடும் ஒருபொட்லம் ஒருவருஷத்திற்கு உபயோகிக்கலாம். கிரயம் பொட்லம் 1-க்கு அணா 4.

துரையைப்பார்த்து வெறுப்புற்றாள்.

ஒரு இந்திய பிரபுவின் வீட்டில் ஒரு ஐரோப்பிய துரைமகன் வந்து அவ்வீட்டுப்பிரபுவோடு சம்பாஷித்துக்கொண்டிருக்கையில் அங்கு நின்று விளையாடிக்கொண்டிருந்த ஒரு பெண்குழந்தை அந்த ஐரோப்பியனைப்பார்த்து ஐயா! துரை, துரை, என்று சொல்லுகிறார்களே நீர்தானா துரை? நான் நெடுநாளாக துரை யென்பவரைப்பார்க்க வெகு ஆவல்கொண்டிருந்தேன் என்று சொன்னாள். அதைக்கேட்ட ஐரோப்பியன் சிரித்துக்கொண்டே ஆம் அம்மா, நான்தான் துரை. என்னைப்பார்த்தாயே உனக்குச்சந்தோஷ முண்டாயிற்றா என்றார். அதற்குக்குழந்தை இல்லை இல்லை. வெறுப்புண்டாயிற்று என்றாள்.

உண்மை தெரிந்துகொள்வதற்கு முன் ஒருதலைப்பட்சமாய்ப் பேசாதே.

புத்திவான் பலவான்.

அருவெருப்பைத்தரும் அசப்பமானவார்த்தையாயிருப்பினும் சொல்வன்மையினால் மங்களகரமாய் கூறின் ஒருவரையும் பாதிக்கமாட்டாது.

ஒரு அரசன் தன்னுடைய பற்கள் முழுதும் விழுந்துபோய்விட்டதாகச் சொப்பனம் கண்டெழுந்து உடனே சொற்பனம் விளக்குவோனை யழைப்பித்து அதன் தாத்பரியம் என்னவென்று கேட்டான். சொற்பனம் விளக்குவோன் அரசனுடைய புத்திரகளத்திராதி சுற்றத்தினர்யாவரும் அரசனுக்கு முன்னாலேயே இறந்துபோவார்களென்று கூறினான். உடனே அரசன் அவனைச்சிறையிடும்படிக் கட்டளையிட்டு மற்றொரு சொற்பனம் விளக்குவோனை வருவித்துத் தன்கனவின்கருத்தை வினவினான். அவன் அரசன் தன்மனைவி மக்கள் சுற்றத்தினரைப்பார்க்கிலும் நெடுங்காலம் ஜீவதசையோடிருப்பாரென்று மங்களகரமான மறுமொழி கூறினான். அரசன் அவனுடைய புத்திசாதுர்யத்திற்காகச் சந்தோஷித்து நல்லபரிசளித்தனுப்பினான். புத்திமான்கள் எப்போதும் மங்களகரமான மதுரமொழியே வசனிப்பார்கள். அது யாவருக்கும் சந்தோஷத்தையே கொடுக்கும்.

விநோத விகடம்.

ஒரு வித்வான் நெடுநாளாக விவாகஞ்செய்துகொள்வதில்லையென்று நிர்ணயஞ்செய்துகொண்டிருந்தான். பிறகு தன் சுற்றத்தினருடைய பலவந்தத்தினால் ஒரு பெண்ணை மணம்புரிந்தான். அப்பெண் விவாகமான நான்காவது மாதத்திலேயே அழகிற்சிறந்த ஒரு புத்திரனைப் பயந்தாள். மனைவி தன் புத்திரனுக்கு நல்ல சுபமுகூர்த்தத்தில் அழகிய நாமம் ஆராய்ந்திடவேண்டுமென்று கணவனைவேண்ட அவன் பிள்ளைக்கு ஓட்டக்காரன் என்று பேரிட்டான். அப்போது அவனுடைய சுற்றத்தினர் முதலிய யாவரும் நல்லபேர் வைக்காமல் ஏன் இத்தகைய நாமம் கொடுத்தீரென்று கேட்டார்கள். அதற்கு வித்வான் இப்பிள்ளை பத்துமாதப்பிரயாணத்தை நான்கே மாதத்தில் துரிதமாய்க்கடந்து ஓடிவந்தமையால் ஓட்டக்காரன் என்னும் நாமம் நல்ல பொருத்தமுடையது என்றான், புத்திமான்கள் குறிப்பினாலேயே தங்கள் அபிப்பிராயத்தை விளக்குவார்கள்.

ராமன் :—உலகத்தில் பொய்யே பேசாதவரும் மெய்யே பேசாமலிருப்பவரும் ஒருவருமே யில்லை. ஆனால் நான் மாத்திரம் என் வாழ்நாள் முழுதும் மெய்யொன்றும் பேசாமலே தப்பித்துக்கொண்டு வருகிறேன்.

ரங்கன் :—நீ மெய்பேசவில்லை என்று சொல்லியவார்த்தை மெய்யே யல்லவா?

எட்டிமரத்தில் இனிப்புள்ள கனிகள் எப்படிக்கிடையாவோ அதுபோல் துஷ்டமனிதனிடத்தில் நற்குண நற்செய்கைகள் கிடையா. ஆகையால் ஒரு மனிதன் உருவினாலன்றி நன்காராய்ந்தபின் அவனோடு சிநேகம் செய்யவேண்டும்.

மதருஸ் யூனானி மெடிக்கல் ஹால், 439, கெ. சௌகார்பேட்டை, சென்னை.

நவநீத சுகந்தம்.

இது திவ்வியமான ஓர்வகை சுகந்தக்கலவை. தேகத்திலும் கைகுட்டைகளிலும் பூசிக்கொள்ளலாம். அதிக இன்பமான பரிமளத்தைக் கொடுக்கும். கிரயம் டப்பி 1-க்கு அணு 4.

ஊல்நணா சமனஹாரி.

இந்த ஹல்வாவை வேளை ஒன்றுக்கு அரை தோலாவிடையாக காலை மாலை இரண்டுவேளையும் 15 நாளைக்கு சாப்பிட்டுவந்தால் பித்தகாங்கை, மேககாங்கை, கண், கை கால் எரிவு, தேகவரக்ஷி, சோர்வு, அசதி, சோகை, பாண்டு, நீரெரிவு, நீர் குத்தல், பசியின்மை முதலியவைகளை நீக்கி தேகத்தைக்குளிரப்பண்ணி தேக திடகாத்திரத்தை யுண்டாக்கும். கிரயம் டப்பி 1-க்கு ரூபா 2-0.

சுகபேதி ஷர்பத்து.

இதில் அரை அவுன்ஸ் கொஞ்சம் சுடுதண்ணீரிற் கலந்து காலையில்மட்டும் ஆகாரத்திற்குமுன் சாப்பிட்டால் 2, 3, தடவை செம்மையாய் பேதியாகும், இந்த ஷர்பத்து வாய்க்கு ருசியாயிருப்பதன்றியில் வாந்தி, நெஞ்சு சரிவு, ஆசனக்கடுப்பு, வயிற்றுநோய் முதலிய துர்க்குணங்க ளொன்றுமிராது 10 நாள் தொடர்ந்து சாப்பிட்டுவரின் மலச்சிக்கலை நீக்கிவிடும். கிரயம் 4 அவுன்ஸ் புட்டி 1-க்கு அணு 12.

குல்கந்து.

இதுவாய்க்கு மெத்தருஜியாயிருக்கும். மலச்சிக்கலுடைய பேர்கள் வேளைக்கு ஒரு துலாவீதம் காலை மாலை இருவேளையும் சாப்பிட்டுவரின் மலச்சிக்கலை நீக்கி இறைப்பைக்கும் தலைமூளைக்கும் பலத்தைகொடுக்கும். பக்கவாதம் முதலிய நரம்பைப் பற்றிய வியாதிகளுக்கு மலத்தை இளக்குவதற்கு இது தகுதியான மருந்து. கிரயம் 8-பலம்கொண்ட சேர் 1-க்கு அணு 8.

மலபந்த நிவாரணி.

இதில் ஒரு துலா எடுத்து இரவைக்குப் படுக்கைக்குப்போகுமுன் சாப்பிட்டு வெந்நீர் சாப்பிட்டுவிடவேண்டியது. தாராளமாய் மலத்தைப்போக்கும். வாயுதேகக்காரர்களுக்கு இது நல்ல பிரயோகம் 8-பலம்கொண்ட சேர் 1-க்கு ரூபா 2.

ஜீரணசக்தி மாத்திரை.

ஆகாரத்திற்கு முன் 2 மாத்திரை சாப்பிட்டு சுடுதண்ணீர் குடிக்கவேண்டியது பசியில்லாதபேர் 10 நாள் சாப்பிட நல்ல பசியைக்கொடுக்கும். கிரயம் டப்பி 1-க்கு அணு 8.

மாஜிஸ்திரேட்டா துஷ்டன்?

ஒரு மாஜிஸ்ட்ரேட் ஒரு குற்றவாளியை விடுதலை செய்தபின், இனி நீ இவ்விதமான துஷ்டர்களிடத்தில் சகவாசஞ்செய்யாதே, அவர்களிருக்குமிடத்திற்கும் போகாதே யென்று நற்புத்தி கூறினர். விடுதலையடைந்தவன் மாஜிஸ்ட்ரேட்டை நோக்கி, துரைகளே! புத்தி, புத்தி. இவ்வளவு கஷ்டத்துக்காளானேனே! இந்தப்புத்திபோதாதா? இனி உங்களிடத்திலேனும் வருகிறேனு பாருங்கள்.

இருவர் பேசிக்கொண்டிருக்கையில் எட்ட நில். குறுக்கே பேசாதே.

யுக்திக்கு மேல் யுக்தி.

புத்திசாலியாயுள்ள ஒருவனை மற்றொருவன் ஏமாற்றுவானென்றால் அவ்வண்ணம் முயற்சித்தவனே ஏமாற்றப்படுவானென்பதிற் சந்தேகமில்லை.

இரண்டு சிநேகர்கள் ஒரு மேஜையினிடத்தில் எதிர்முகமாயுட்கார்ந்து பேரீச்சம்பழம் சாப்பிட்டுக்கொண்டிருந்தனர். அவர்களில் ஒருவன் தான் தின்ற பழங்களின் கொட்டைகளை மற்றவனுக்குப் பக்கத்திலேயே போட்டுக் கொண்டிருந்தான். ஆகையால் முதலாவது மனிதன் பக்கத்தில் ஒரு கொட்டையேனுமின்றி எல்லாக்கொட்டைகளும் இரண்டாவது மனிதன் பக்கத்திலேயே பெருங்குவியலாய்க் குவிந்துகிடந்தன. பழஞ்சாப்பிட்டு முடிந்த பிறகு முதல் மனிதன் இரண்டாம் மனிதனைநோக்கி "நண்பனே! உன்சமீபத்தில் பார்த்தனையா, எத்தனை ஈச்சம்பழவிதைகள் குவிந்திருக்கின்றன. ஒருவன் இவ்வளவு பழங்கள் புசித்தால் ஜீரணக்கருவியின் சக்திகெட்டுப் போய்த் தேகத்திற்குக் கெடுதி சம்பவிக்குமல்லவா"? என்றான். உடனே மற்றவன் "அப்பீ! நாமிருவரும் இவ்விடத்திருந்து பேரீச்சம்பழம் புசித்ததை அனேகர் பார்த்திருக்கின்றனர். நான் பழங்களைமட்டுஞ்சாப்பிட்டு விதைகளை என்பக்கத்தில் போட்டுவைத்திருக்கிறேன். நீயோ ஒரு கொட்டையையும் கீழே உமிழாமல் பழத்துடன் விதைகளையும் ஒன்றாய்ச்சேர்த்துச் சாப்பிட்டனை. ஆகையால் உனக்கன்றோ ஜீரணசக்திகுன்றிச் சரீரத்திற்கு நாட்டியமுஞ் சம்பவிக்கவேண்டு" மென்று பிரதியுத்தரமளித்தான்.

மூடபுத்தியின் பிரகாசம்.

மூடர்களுக்குத்தாம் செய்யுந்தப்பிதங்கள் தங்களுக்குப் புலப்படமாட்டா.

ஒருவன் தன்சிநேகனுக்குக் கடிதம் எழுதிக்கொண்டிருக்கையில் வேறொருவன் அவனுக்குச் சமீபத்திற் போயுட்கார்ந்து அவன் எழுதுவதை மிகவும் கவனத்துடன் பார்த்துக்கொண்டிருந்தான். கடிதமெழுதுவோன் அவனுடைய அதிக்கிரமச்செய்கையையுணர்ந்து. "எனக்குச்சமீபத்தில் ஒரு மூடக்கழுதை யுட்கார்ந்து நான் எழுதுவதைக் கவனித்துக்கொண்டிருந்தபடியால் என் அந்தரங்க விஷயங்களை இப்போதுனக்கு எழுதக்கூடவில்லை. மறுகடிதத்தில் எழுதுகிறேன் என்று அக்கடிதத்தில் எழுதினான். அருகிருந்து பார்த்துவந்தோன் மிகவுஞ்சினங்கொண்டு, "அடாபயலே! ஏன் என்னை மூடனென்று சிந்தித்தெழுதினாய், உன் கடிதத்தை நான் எப்போது பார்த்தேன்" என்று கண்டிப்புடன் கேட்டான். அதுகேட்ட லிகிதன் (எழுதுவோன்) அவனை நோக்கி "நன்கு வினவினாய், உன் குசாக்ரபுத்திக்கு நான் மிகவுமெச்சினேன். நீயென் கடிதத்தைப்பார்த்திராவிட்டால், உன்னை நான் மூடனென்றெழுதியதை நீயெப்படி யுணர்ந்தனை" என்றுகேட்டான். அவன் நாணித்தலைகுனிந்தனன். அவிவேகிகள் தங்குற்றத்தை யுணராமலே பிறரிடத்தில் வியாய விரோதமாய் விவாதஞ்செய்து சண்டைபிடிப்பார்கள்.

கீர்த்தியை நாடுகிற ஒவ்வொருவனும் தன் கடமைகளைக் கவனித்து விடா முயற்சியுடன் நடக்கவேண்டும்.

மதராஸ் யூனாகி மெடிக்கல் ஆல், 439 நெ. சௌகார்பேட்டை, சென்னை.

காதுநோய் மருந்து.

இதை டைரக்ஷனிற் சொல்லியபடி உபயோகித்துவந்தால் காதில் சீழ்வடிதலைநிற்பாட்டி வலி, குற்றல், குடைச்சல், முதலிய பாதைகளை நீக்கிவிடும். கிரயம் புட்டி 1-க்கு அணு 8.

சர்வநோய் சங்காரி.

இந்தத்தைலத்திற் கொஞ்சமெடுத்து தேகத்தில் நோயுள்ள எந்தவிடத்திலும் பூசினுல் 5-வேளையில் ஆச்சரியப்படத்தக்க விதமாய் எவ்வித நோய்களையும் கண்டிக்கும். இன்னும் கை கால் முடக்கம், கணுக்களில் வீக்கம் முதலிய எவ்வித வாதங்களையும் சகல ஜன்னிதோஷம் முதலிய குரூரமான வியாதிகளையும் வெகு சீக்கிரத்தில் கண்டித்துவிடும். 1 அவுன்ஸ் புட்டி 1-க்கு அணு 12.

கைகால் வியர்வைக்குப் பவுடர்.

சிலருக்கு கையும் காலும் வியர்வையினுல் சதா கசிந்துக்கொண்டேயிருக்கும். இவர்கள் இந்த பவுடரை டைரக்ஷனிற் கூறியபடி உபயோகித்தால் டிெ வியாதி நீங்கிவிடும். கிரயம் டப்பி 1-க்கு ரூபா 1.

பெரும்பாட்டுக்கு மருந்து.

ஸ்திரீகளுக்கு உதிரம் ஜாஸ்தியாகக்கண்டு தேகம் வெளுத்து பலத்தைக் குன்றவைக்கும் இந்த அபாயகரமான வியாதியைத் தீர்க்க இதுவே சஞ்சீவி 5 நாளையில் கட்டாயமாய் வியாதியை முற்றிலும் கண்டித்துவிடும். கிரயம் டப்பி 1-க்கு ரூபா 2–8

சர்வமூல குடோரி.

சகலவகை மூலங்கள் பவுத்திரங்கள் இவைகளை நிர்மூலமாக்கக்கூடிய இந்த ஔஷதம் மிகவும் மெச்சத்தக்கது. இவ்வியாதிகள் அநேகம் மருந்துகளுக்கு வசப்படாதவைகளானபோதிலும் இம்மருந்தை ஏமாற்றுதற்கு அவைகளுக்கு சக்தி குறைவாதலால் அவசியம் இதில் தீர்ந்துபோகின்றன. இதற்குதாரணமாக அநேகருக்கு இம்மருந்தைக்கொடுத்து சௌக்கியம் கண்டிருக்கிறது. இதின் கிரயம் டப்பி 1-க்கு ரூபா 5.

அவளுடைய தலையின் பாதை சீப்புடன் முடிந்தது.

சுப்பு :—என் மனையாள் அவளுடைய தலையினுல் பெருத்த வாதைப்பட்டுக் கொண்டுகிடக்கிறுள்.

குப்பு :—தலைவலியோ? ஏன் தலைநோய் மருந்து வாங்கிக் கொடுக்கக்கூடாது.

சுப்பு :—இல்லை! இல்லை! ஒரு சீப்பு வேண்டுமாம்.

காதுநோய்! காதுநோய்!
காதுநோய்த் துன்பத்தைக்
காதினுற் கேட்கொணு
ஏதுஞ் செய்யாமலித்
தைலத்தை யீந்திடு.

பார்! பார்!
சர்வநோய் சங்காரி
தேகத்தினெந்தப் பாகத்திநோவும்
ஏகுமேதொட்டுத் தேய்த்திடுமன்னேரம்.

தேகத்தைப்பேணித் தெய்வத்தைப்போற்று,
ஆகச்சுகத்தினுல் அவனையுமறியலாம்,
பிணியொன்றிருந்தால் துணிவகன்றுபோகும்,
பிணியைப்போக்கி மணியைக்காறு.

பிறரால் நீ எவ்விதம் நடத்தப்படவேண்டுமென்று உத்தேசிக்கிறாயோ அது போல் நீ பிறருக்கு நடந்துகொள்.

தன் அந்தஸ்துக்குத்தக்க தருமம்.

தன் அந்தஸ்தையும் எதிரியினுடைய அந்தஸ்தையுந் தெரிந்துகொள்ளாமலே ஒருவரிடத்தில் ஒன்றைக்கோரினால் அதனால் பின்னுக்கு அவமானம் நேரிடும்.

ஒருபக்கிர் ஒரு அரசனிடத்திற் போய்த்தனக்கு ஒருபைசா தர்மங்கொடுக்கவேண்டுமென்று யாசித்தான். அரசன் தன்னுடைய அந்தஸ்துக்கு ஒருபைசா தர்மஞ்செய்வது தகுதியற்றகாரியமென்றுமறுத்துக்கூறினான். அதற்கு அந்தப்பக்கிர் அப்படியானால் தனக்கொருராஜ்ஜியம் தானஞ்செய்யும்படி வேண்டினான். அப்போது வேந்தன் அது உனக்குடைய அந்தஸ்துக்கு மிகவும் மேற்பட்டதென்றும் அவன் வேண்டிய இரண்டு தர்மங்களும் தன் நிலைமையையும் எதிரியின் ஸ்தானத்தையும் தெரிந்துகொள்ளாமல் கேட்டபடியால் அவை நிஷ்பிரயோஜனமாயினவென்றும் கூறவே, பக்கிர் வெட்கமடைந்து போய்விட்டான்.

முத்தியின் கிரயம் ரூபாய் ஒன்று.

ஜான் என்னும் ஒரு சிறுவன் தன் மூத்தசகோதரியை மான் என்பவன் முத்தமிட்டதைக்கண்டு, ஷை மானென்பவனை நோக்கிக்கேட்கிறான்.

ஜான் :—ஓ மானே! நீ யென் சகோதரியை முத்தமிட்டாயல்லவா?

மான் :—ச்சா. ச்சா! என்னபேச்சுப் பேசுகிறாய் தம்பி! அவள் கன்னத்தில் ஒரு கரும்புள்ளி யிருந்ததையல்லவா யான் கவித்து பார்த்தேன். அதைத்தள்ளு. இதோ! இந்த நான்கு அணாவை வைத்துக்கொள். அதைப் பற்றி யாதொரு பிரஸ்தாபமும் வேண்டாம்.

ஜான் :—இல்லை! இல்லை! அதற்கு அத்தனை சொற்பக்கிரயமா? ரூபா ஒன்றுக்குக் குறைய நான் வாங்கமாட்டேன்.

பிறனை ஏமாற்ற எண்ணினவன் தானே ஏமாந்தான்.

மகன் :—ஐயா! ஏன் உங்களுடைய கருப்பு மயிரெல்லாம் நாளாவர்த்தியில் நரைத்துக்கொண்டே வருகிறது. அதைப்பார்க்க எனக்கு மனம் சகிக்கவில்லையே.

தகப்பன் :—மகனே! என்கண்மணீ! நீ துஷ்டநடத்தை நடக்கவேண்டாமென்று எத்தனையோமுறை உன்னைக்கண்டித்து வந்தும் நீ அதைச் சிறிதும் கவனித்தாயில்லையே. உன்னுடைய ஒவ்வொரு துஷ்டநடத்தைக்கும் என்னுடைய வொவ்வொரு கருப்பு மயிரும் நரைத்துக்கொண்டே வருகிறது. நீ துஷ்டத்தனம் செய்யாமலிருந்தால் என் மயிர் எப்போதும் கருமையாகவேயிருக்கும்.

மகன் :—தந்தையே! என் பாட்டனுக்கு ஒரு கருப்பு மயிரேனுமில்லாமல், தேகமுழுதும் வெளேலென்று நரைத்துப்போயிருக்கிறதே. இதனால் நீர் பரமதுஷ்டராயிருக்கவேண்டுமென்று நினைக்கிறேன்.

கரிய மேகத்தினின்றும் பிரகாசமுள்ள தெள்ளியநீர்த்தாரைகள் ஜனிப்பது போலவும், காரிருள் ...ருப்பின் வெள்ளிய சந்திரோதயம் உண்டாவது போலவும், உன் தரித்திர தசைக்குப்பின் உனக்குச் சுபிட்சகாலம் உண்டாகும். அதைரியப்படாதே.

மதராஸ் யூனானி மெடிக்கல் ஹால், 439 கெ. சௌகார்பேட்டை, சென்னை.

பணமேபிரதானம்.

ஸர்த்திபசர் :—ப்ரயோகத்தில் பணத்தைப் பார்க்கிலும் மிக்க மதிப்புள்ளவஸ்துக்கள் அநேகமிருக்கின்றன.

டையன் :—ஆம், ஆம். அதற்குச் சந்தேகமில்லை. அவ்வருமையானவஸ்துக்களைப் பெறுவதற்கும் பணமே பிரதானமாயிருக்கிறது.

மேகராஜாங்க எண்ணெ.

மேகத்தினுலுண்டாகும் ரணம், குழிப்புண், படை, சொரி சிரங்கு, தினவு முதலியவைகளை குணப்படுத்துவதில் இது மஹா சஞ்சீவி. இதை உபயோகித்துப்பார்த்தவர்கள் பெரும் ஆனந்தம் அடைந்திருக்கிறார்கள். கிரயம் புட்டி 1-க்கு ரூபா 3–8.

பாதம் எண்ணெ.

இதைத்தலையில் பூசிவந்தால் கபாலத்தின் ஊஷ்ணத்தைத் தணித்து மூளைக்கு பலத்தைக்கொடுத்து கணகளுக்குக் குளிர்ச்சியை யுண்டாக்கும். கிரயம் பலம் 1-க்கு அணு 6.

அஜீர்ண சூர்ணம்.

இதை டைரக்ஷனிற் சொல்லியபடி உபயோகித்துவரின் வயிற்றிரைச்சல், உப்புசம், அஜீரணம், புளியேப்பம், பசியில்லாமை முதலியவை சொஸ்தமாகும். கிரயம் டப்பி 1-க்கு அணு 12.

கபால வீரியவிர்த்தி மாஜுன்.

கல்விகற்கும் மாணுக்கர்களுக்கும் கவனசக்தியினுல் வேலை செய்யும் உத்தியோகஸ்தர்களுக்கும் மூளைக்குப் பலத்தைக் கொடுத்து கவனசக்தியை விர்த்திசெய்வதில் இதற்கொப்பான ஔஷதம் கிடையாது. பரீக்ஷித்துப்பார்க்கலாம். கிரயம் டப்பி 1–க்கு ரூபா 2.

வயிற்றுநோய் சஞ்சீவி.

அஜீரணத்தினுலும் • உஷ்ணத்தினுலும் உண்டாகும் வயிற்றுவலியைப்போக்க இது மகாவல்லமையுள்ள மருந்து, சாப்பிட்ட 5-நிமிஷநேரத்தில் வேலையை அதஞ்செய்துவிடும். ஒவ்வொரு குடும்பத்திலும் இது அவசியம் இருக்கவேண்டும். கிரயம் டப்பி 1-க்கு அணு 12.

குன்மபரிகாரி.

வயிற்றுநோய், அஜீரணம், வாந்தி முதலிய துன்பங்களை நெடுநாள் அநுபவித்து கஷ்டப்படுகிறவர்களுக்கு இது ஒரு ரக்ஷகனைப்போல் காப்பாற்றக்கூடிய அருமையான ஔஷதம். கிரயம் டப்பி 1-க்கு ரூபா 1.

வாயுசங்காரி.

கைகால்கடுப்பு, தேகத்தில் உளைச்சல், நெஞ்சு விலாப்பக்க முதலியவைகளில் நோய், பசியின்மை, முதலியவைகளுக்கு இது மகா மேன்மையான ஔஷதம். கிரயம் டப்பி 1-க்கு அணு 12.

கோயிலுல் என்ன பிரயோஜனம்?

வைத்தியன்பாடு கொள்ளை வியாதிஸ்தன்பாடு சள்ளை.

பிரபு மானபங்கமடைந்தான்.

கல்வி எவ்வளவு கற்றாலும் நுட்ப புத்தியுடன் அதனைச் சமயோசிதமாய் உபயோகிக்கும் சாமர்த்தியமில்லாவிட்டால் மணமில்லா மலரைப்போல் சிறிதும் பயன்படாது.

ஒரு வித்வான் ஒரு பிரபுவின் பேட்டியைக்காணப் போனபோது, அப்பிரபுவைச் சுற்றிலும் ஜனங்கள் நிறைந்திருந்தமையால் சிறிதும் இடங் கிடையாமல், பிரபுவின் அதி சமீபத்திலுள்ள ஒரு சிறிய இடத்தில் தான் உட்காரும்படி நேர்ந்தது. வித்வான் அச்சமும் மரியாதையுமின்றி தனக்கு அதியருகாமையில் வந்துட்கார்ந்ததினிமித்தம் பிரபு பெருஞ்சினங்கொண்டு அவ்வித்வானை நோக்கி "உனக்கும் கழுதைக்கும் என்ன வித்தியாசம்" என்றான். உடனே வித்வான் தனக்கும் பிரபுவுக்கும் இடையிலுள்ள காலி யிடத்தைத் தன்கையால் அளந்துபார்த்து "எனக்கும் கழுதைக்கும் இடையில் ஒருசாண் அளவுதான் வித்தியாசம்" என்றார். பிரபு மிகவும் நாணி அவ்வித் வானுக்கு வேண்டிய மரியாதை செய்தனுப்பினான். ஆகையால் தான் சொல் லும்சொல்லை வேறொருவர்சொல் வெல்லாதிருக்கும்படி யோசித்துச்சொல்ல வேண்டும். "சொல்லுக சொல்லைப் பிறிதோர்சொலச் சொல்லை வெல்லுஞ் சொலின்மையறிந்து" என்று திருவள்ளுவர் கூறியுள்ளதைக்காண்க.

சமயோசித சாமர்த்தியம்.

முற்காலத்தில் ஹிமாலய பர்வதத்தின் வடபாகத்திலிருந்து அனேக மூஹம்மதிய அரசர்கள் இந்ததேசத்தின்மேற் படையெடுத்து வந்திருக்கிறார் கள். அவர்களுள் தைமூர்லங் என்று ஒரு நொண்டியரசனிருந்தான். அவன் சங்கீதங்கேட்பதில் அதிவிருப்புள்ளவனாயிருந்தபடியால் அனேக சங்கீதவித் வான்கள் அவனிடத்திற்போய்ப் பாடிப் பரிசுபெற்றுப்போவது வழக்கமா யிருந்தது. அவ்வித்வான்களுக்குள் ஒரு அந்தகன் அதிசாமர்த்தியமாகவும் யாரும் கேட்டானந்திக்கும்படியாகவும் சங்கீதம்பாடினமையால் அரசன் அவ் வந்தக வித்வான்மேல் அதிபிரீதிகொண்டு அவனுடைய பெயர் என்னவென்று கேட்டான். வித்வான் தன்பெயர் 'செல்வம்' என்றுகூறினான். அதுகேட்ட அரசன் செல்வத்திற்கும் கண்கெட்டுப்போகுமா என்று பரிகாசமாய்க்கேட் டான். வித்வான் செல்வத்திற்கு கண்குருடாயிராவிட்டால் நொண்டியிடத் திற்கு எப்படிவரக்கூடும் என்று விடைபகர்ந்தான். அரசன் வித்வானுடைய சமயோசிதவார்த்தைக்காக அகமகிழ்கூர்ந்து பரிசளித்தனுப்பினான்.

ஒருபொழுது.

"ஏகாதசியும் அமாவாசையும் ஒரேதினத்தில் வந்தால் ஏகாதசிப் பட்டி னியிருக்கிறதா அமாவாசை ஒருபொழுதிருக்கிறதா?" என்று ஒரு பையன் கேட்டான்.

காய்த்த மரத்தில் கல்லேறு அதிகம் என்பதுபோல் அதிக கெட்டிக்காரனுகவும் யதார்த்த வாதியுமாயிருந்தால் அவன் பலவித கஷ்டத்திற்குள்ளாகிறான்.

மதராஸ் பூநாணி மெடிக்கல் ஹால், 439 செ., சௌகார்பேட்டை, சென்னை.

கண்டசுத்தி மெழுகு.

டைரக்ஷனிற் சொல்லியபடி இதை சாப்பிட்டுவந்தால் தொண்டைக்கம்மலை நீக்குவதன்றியில் இன்பமாய்ப் பாடுவதற்கு இசைந்தகுறலை யுண்டாக்கிவிடும். சங்கீத வித்வான்களுக்கு இது ஓர் அருமையான ஔஷதம். எத்தனை நேரம் பாடினாலும் குறல்கம்மாது இனிமையான ஓசையாயிருக்கும். கிரயம் டப்பி 1-க்கு ரூபா 3.

பிரமேக நிவாரணி.

[illegible]லகாரணங்களினாலுண்டாகும் மேகவெட்டை, வெள்ளை, நீர்குத்தல், நீரெரிச்சல், சீழ், இரத்தம் வடிதல் முதலிய வியாதிகள் ஆண் பெண் இருதிறத்தவர்களுக்குமிருந்தாலும் அவைகளை சௌக்[illegible]ப்படுத்தி தேகத்திற்கு ஆரோக்கியத்தைக் கொடுப்பதற்கு இது மஹா[illegible]தமான மருந்து. கிரயம் புட்டி 1-க்கு ரூபா 1–0–0.

மேக வெள்ளைச் சூரணம்.

இது பல காரணங்களினாலுண்டாக்கப்படுகிற மேக வெட்டை, நீர்குத்தல், நீரெரிச்சல், நீர்தாரையிலிருந்து சீழிரத்தம் வடிதல் முதலிய வியாதிகள் ஆண் பெண்பால் இருதிறத்தவர்களுக்கும் எத்தனை நாட்பட்டதாயினும் எம்மருந்திலும் தீராததாயிருந்தாலும் இம்மருந்தை யுபயோகித்த பத்தே நாளில் ஆச்சரியப்படத்தக்க அனுகூலத்தைக் கொடுக்கும். கிரயம் டப்பி 1-க்கு அணா 12.

சூதகபந்த நிவாரணி.

பல காரணங்களினால் சூதகம் நின்றிருப்பதும் கிரமந்தப்பி வருகிறதும் ஆகிய வியாதிகளைப்போக்கி அதனாலுண்டாகும் வயிற்றுவலி, தலைநோய், தேகவுளைச்சல் முதலிய துற்குணங்களைப் போக்கிவிடும். கிரயம் டப்பி 1-க்கு அணா 8.

ஜுரகுடோரி.

ஆச்சரியப்படத்தக்க விதமாய் எவ்வித ஜுரங்களையும் வெகு சீக்கிரத்தில் சொஸ்தப்படுத்தக்கூடிய இந்த மாத்திரைகள் குளிர்ஜுரம் முறைக்காச்சல் மலைச்சுரம் முதலிய சகல கொடூரமான ஜுரங்களையும், அவைகளாலுண்டாகும் தலைநோய், சிரபாரம், கைகால், தேகம் முதலியவைகளிலுண்டாகும் உளைச்சல், வலிகடுப்பு முதலிய வியாதிகளையும் வெகுசீக்கிரத்தில் சொஸ்தப்படுத்திவிடும். கிரயம் டப்பி 1-க்கு அணா 8.

முத்தங்கொடுத்த 5-நிமிஷத்திற்குள் முழுதும் வெளிப்பட்டது.

மீனாட்சி:—அப்பப்பா! புருஷரை ஒருபோதும் நம்பவேகூடாது.

சுந்தரம்:—ஏன் அக்காள் அப்படிச் சொல்லுகிறாய்?

மீனாட்சி:—ராமசாமி என்னிடம் தனியேவந்து ஒரேவொரு முத்தந்தா, ஒருவரிடத்தும் நான் சொல்லமாட்டேனென்று சத்தியஞ்செய்தான். நான் துளிகூடசம்மதிக்கவில்லை. சண்டாளன் பலவந்தம் செய்தான். என்னசெய்கிறது தாட்சணியந்தட்டக்கூடவில்லையே! இன்னும் ஐந்து நிமிஷங்கூட ஆகவில்லையம்மா! இதற்குள்ளே எப்படியோ சங்கதி பிரஸ்தாபத்திற்கு வந்துவிட்டது. பார்த்தாயா! சுந்தரம்?

மதராஸ் யூனானி மெடிக்கல் ஆல், 439 நெ., சௌகார்பேட்டை, சென்னை.

சீதபேதி இரத்தபேதி ஹல்வா.

எத்தனை நாட்பட்டதானாலும் இதை யுபயோகித்து வந்தால் வயிற்றுக்கழிச்சல், சீதபேதி, இரத்தபேதி, கிராணி, வயிற்றுக் கடுப்பு முதலியவைகள் தீரும். கிரயம் டப்பி 1-க்கு அணா 8.

ஜ்வர ஸம்ஹாரி.

குளிர்ஜ்வரம், முறைக்காய்ச்சல், மலேஜ்வரம் முதலிய வைகளையும் அவைகளாலுண்டாகும் தலைநோய், சிரபாரம், தேக உளைச்சல் முதலிய பாதைகளையும் வெகு சீக்கிரத்தில் சுவஸ்தப் படுத்தக்கூடிய ஆச்சரியமான சஞ்சீவி இதுவே. கிரயம் புட்டி 1-க்கு அணா 12.

கார்சல்கட்டிக்கு மருந்து.

இதை டைரக்ஷனிற் சொல்லியபடி உபயோகித்துவரில் 20 நாளில் இந்த வியாதி சௌக்கியமாகும். இதற்கு இரண்டு வித மருந்தின் கிரயம் ரூபா 2.

பித்த ஸமான ஹாரி.

டைரக்ஷனிற் கூறியபடி இதை உபயோகித்துவரில் பித்த மயக்கம், கிறுகிறுப்பு, வாந்தி, வாய்கசப்பு முதலியவைகளை நீக்கிப் பசிதீபனத்தை யுண்டாக்கும். கிரயம் 2 அவுன்ஸ் புட்டி 1-க்கு அணா 8.

இருமல் மருந்து.

இந்தக் கொடிய வியாதியைத் தீர்ப்பதற்கு இதுவே தகுதி யான மருந்து 10 நாளையில் வியாதியைத் தீர்த்துவிடும், தவர்தல் கிடையாது. கிரயம் புட்டி 1-க்கு ரூபாய் 1.

தந்தசுத்தி மெழுகு.

இதைப் பல்லில் தேய்த்து பிரதிதினம் பல்துலக்கிக் கொண்டுவந்தால் பல்லில் முத்தைப்போன்ற வெண்மை நிறமும், பிரகாசமும் உண்டாவதன்றியில் ஈரில் இரத்தம்வருதல், பல் லசைவு, வாய்நாற்றம் முதலிய வியாதிகள் சவுக்கியமாகும். கிரயம் டப்பி 1-க்கு அணா 4.

நீரிழிவு ரோக நிவாரணி.

அதிக குரூரமாகிய இவ்வியாதியை மிகவும் ஆச்சரியப்படத் தக்க விதமாய் சௌக்கியப்படுத்தத்தக்க இவ்வௌஷதத்தை 40 நாள் பிரயோகம்செய்ய எத்தனை நாட்பட்ட வியாதியானாலும் சௌக்கியமாய்விடும். 10 நாளையில் அதின் அனுகூலம் செம்மை யாய்த்தெரியும். 40 நாள் மருந்தின் கிரயம் ரூபா 4—8—0.

பிள்ளையின் சமத்தே சமத்து!

மகன்:—ஐயா! உம்மால் செய்யக்கூடாத வேலையை நான் செய்துவிடுவேன். என்சாமர்த்தியத்தைப் பார்த்தீரா?

தகப்பன்:—என்னருமைக்கண்மணியே! அது என்ன அருமையான வேலை?

மகன்:—நான் உம்முடைய வயதுக்கு வந்துவிடுவேன். நீர் என் வயதுக்கு வருவீரா? ஆஹா!—ஹா!—ஹா!—ஹா!

மீன்குஞ்சுக்கு நீத்துப்பழக்கவேண்டியதில்லை.

உண்மை அறிவு.

ஒரு அரசனிடத்தில் சிறந்த புத்தியுடைய ஒரு அமைச்சனிருந்தான். அவனை, அரசன் அதிக பிரீதியுடன் ஆதரித்துவந்தான். மந்திரியும் வேந்தனுக்குக் கண்ணும் கவசமும்போலிருந்து ராஜகாரியங்களைச் செவ்வனே பார்த்துவந்தான். ஆனால் ஆற்றங்கரையிலுள்ள விருக்ஷமும் அரசரைசேவித்து வாழும் வாழ்க்கையும் எப்போதும் கேடடையும் "ஆற்றங்கரையின் மரமுமரசறிய வீற்றிருந்த வாழ்வும் விழுமன்றே" என்று ஔவை மூதாட்டியார் கூறியுள்ளபடி ஒருகாலத்தில் மந்திரி ஏதோவொரு தப்பிதஞ் செய்தநிமித்தம் வேந்தன் சினமேற்கொண்டு அவனை அவ்வேலையினின்றும் நீக்கிவிட்டான். மந்திரி அவனிடத்தில் பலவாறு கெஞ்சித் தன்னை மன்னிக்கும்படி கேட்டும் அரசன் மனமிரங்கினானில்லை. அப்போது மந்திரி அதிக துக்காக்கிராந்தனாய் தனக்குள்ளே சிந்திக்கலாயினான். நாம் அநேக வருஷகாலமாக இவ்வரசனுடைய ஆஞ்ஞைகளுக்குக் கிஞ்சித்தேனும் குறைவுசெய்யாமல் அவனிஷ்டப்பிரகாரம் எல்லாவகையிலும் அவனுக்குத் திருப்தியுண்டாகும் வண்ணம் நடந்துவந்திருக்கிறோம். அவ்வாறிருந்துவந்தும் ஒரு அற்பகுற்றத்தினிமித்தம் சிறிதேனும் முன்பின் யோசியாமல் அரசன் நம்மைமுற்றிலும் கைவிட்டுவிட்டான்.

அந்தோ! இத்தனைக்காலமாக நாம் அவனுக்குச் செய்துவந்த ஊழியமெல்லாம் ஆற்றிற்கரைத்த புளியும் காட்டுக்கெறித்த நிலவும்போல் வியர்த்தமாய்விட்டதே நம்முடைய வாணாள் முழுவதையும் வீணாளாக்கி விட்டோமே.

"சென்றன சென்றன வாழ்நாள் செறுத்துடன்
வந்தது வந்தது கூற்று"

என்னும் முதியோர் மொழிப்படி, வாணாள் கழிந்துபோயின, மரணமோ நெருங்கியிருக்கின்றது. அது எந்தச் சமயத்தில் நம்மை யணுகிப்பட்சித்துவிடுமோ நாமறிகிலேம்.

"இன்று கொலன்று கொலென்று கொலென்னாது
பின்றையே நின்றது கூற்றமென் றெண்ணி
யொருவுமின் தீயவை யொல்லும் வகையான்
மருவுமின் மாண்டா ரறம்"

என்று பெரியோர் கூறியுள்ள பிரகாரம் இன்றைக்கோ அன்றைக்கோ மற்றென்றைக்கோ என்று கருதாமல் நமக்குப் பின்னாலேயே மரணம் காத்து நிற்கிறதென்றெண்ணித் தீமைநீக்கி நன்மைபுரிந்து பின்னே நாமடைய வேண்டிய கதியைப்பற்றிச் சதா சிந்தனையுடையவர்களாயிருக்கவேண்டும். அவ்வாறின்றி லௌகிக விவகாரத்திலேயே காலங்கழித்தால் உயர்வான அரிய மனுஷ்ய ஜன்மமெடுத்ததனாற் பயனென்னை?

"கற்றதனா லாயபயனென் கொல்வா லறிவன்
நற்றா டொழா ரெனின்"

என்னும் சான்றோர் வாக்கின்படி, நாம் பல சாஸ்திர ஆராய்ச்சியும் கேள்வியும் பெற்றிருந்தாலும் நம்மைப்படைத்த கடவுளுடைய திருவடிகளைத்

எஅ-ம் பக்கம் பார்க்க.

தநட்டுச்சைசகை.—விதவை :—என் கணவன் இறந்த துக்கத்தால் என்னிதயத்தில் ஒரு குழி விழுந்துபோயிற்று.
பக்கத்திலிருந்த மனிதன் :—அப்படியானால் என்தேகத்திலுள்ள ஒருதுண்டுத்தசையால் அதையடைத்துவிடுவோமே.

மதராஸ் யூனானி மெடிக்கல் ஆல், 439 செ., சௌகார்பேட்டை, சென்னை.

தந்தப்பொடி.

இது பல்நோய், கூச்சம், பல்லசைவு, ஈறு கரைந்து இரத்தமுண்டாதல் முதலியவைகளை நீக்கி ஈரை கெட்டிப்படுத்திபற்களை இருக்கி சகல துன்பத்தையும் ஓட்டிவிடும்.

கிரயம் டப்பி 1-க்கு அணா 4

அப்பா! பல்வலியா?

பல்லின் வலியைப் பகரவும் வேண்டுமோ! அப்பப்பா!
வல்லாள கண்டரையும் வட்டிவிடும் வாட்டிவிடும்,
போக்கிச் சுகங்கொடுக்கப் பொல்லாத சத்ரு,
தாக்கு எங்கள் பற்பொடியைத் தான்.

பல்லையிழந்தார்க்குச் சொற்போச்சு, பதம்போச்சு, இதம்போச்சு, பல இன்பமுந்தான்போச்சு. ஒவ்வொருவரும் பற்களைப் பத்திரமாய்க் காப்பாற்றிக்கொள்ளவேண்டியது ஆவசியகமான காரியமாதலால், எங்குருவின் பற்பொடியைத் தீட்டினால் மிஸிடேரியை மாட்டலாம். பற்களை வெண்முத்தைப்போல் பிரகாசப்படுத்தி இரும்பைபபோல் இறுக்கி விடும். கரும்பைக்கடித்துத் தூளாக்கிவிடலாம்.

ஆ! ஆ! ஆ! இதையன்றோ பற்பொடியென்று புகழவேண்டும்? மற்றவைவெயல்லாம் கற்பொடியென்றே கழிக்க வேண்டும்.

ஹாஜுஹான் நரைமயிர் கருக்கத் தைலம்.

தற்காலத்தில் பலவிதமாய்செய்து விற்கப்பட்டுவருகிற டைப்புகள் மயிரை செம்மட்டையாகவும் பசுமைநிறமாகவும் சாம்பல் வர்ணமாகவுமாக்கி விகாரப்படுத்திவிடுகின்றது. நம்முடைய தைலமோ நரைத்த மயிருக்குப் பூசிய 5 நிமிஷத்திற்குள்ளாக நரைப்பதற்கு முன்னிருந்த கருமை நிறத்தையும் பளபளப்பையும் உண்டுபடுத்தும். மேலேகூறியுள்ள விகார குணங்கள் இதில் கிடையாது. இதைப்பூசிய பிறகு முக லட்சணமும் வசீகரமு முண்டாகிறபடியால் வயோதிகரும் வாலிபரைப்போல் தோற்றப்படுவார்கள். இது உண்மை. இதைப்போன்ற தைலம் வேறொன்றும் கிடையாது. வேறு எவ்வித மான கெடுதிகுணங்களுமிதில் இல்லை.

கிரயம் புட்டி 1-க்கு ரூபா 0-12-0. 12 புட்டிக்கு ரூபா 8-0-0.

சிரரோகசங்காரன்.

இந்தத் தைலத்தை வாரத்திற் கிரண்டுதடவை தலையிற்பூசி ஸ்நானம், செய்துவந்தால் தலைவலி, ஜலதோஷம், ஒற்றைத்தலைவலி, பீனிசம், நாசியிலிருந்து நீர்வடிதல் முதலிய வியாதிகளை 20 நாளையில் சௌக்கியமாக்கிவிடும். கிரயம் 4 அவுன்ஸ் புட்டி 1-க்கு அணா 10.

மட்டி யுத்தி.

எஜமானி:—அந்த மீனைப்பொரிப்பதற்குமுன் நன்றாய்க்கழுவினையா?

வேலைக்காரி:—என் அம்மா அதைக்கழுவவேண்டும்? அது தன் ஆயுசுமுழுதும் ஜலத்திலிருந்தே காலத்தைக்கழித்திருக்கிறதல்லவா?

பிரமாதபேச்சுக்காரன் பெரியபொய்யன்.

உண்மை அறிவு—எசு-ம் பக்கம் (தொடர்ச்சி.)

தொழாவிட்டால் என்ன பயனுளது. இம்மையில் பகவானைப் பூஜித்தா லன்றோ மறுமையில் சுகவாழ்வடையலாம். அத்தகைய தெய்வபக்தி வழி பாட்டில் நாமிதுபரியந்தம் மனஞ்செலுத்தினோமில்லையே. பாவத்திலேயே மூழ்கிக்கிடக்கின்றோமே. இனிமேலாகிலும் நற்கதியடைவதற்கேற்ற முயற்சியை விரைந்து செய்யவேண்டுமென்று பலவிதம் சிந்தனைசெய்து தெய்வத் தியானத்தில் கிலைத்துட்கார்ந்தான். சிலகாலத்திற்குப் பிறகு மந்திரியின் மேல் அரசனுக்குக் கிருபையுண்டாகி அவனைப் பார்ப்பதற்குப் பேராவலுள்ள வனாய் அவனிருப்பிடம் விசாரித்துச்சென்று அவனைக் கண்டனன்.

அத்தருணத்தில் அமைச்சன் நிஷ்டாபரனாயிருந்தமையால், அரசன் சிறிதுநேரம் நின்றுகொண்டிருந்து மந்திரியினுடைய நிஷ்டை முடிந்தபிறகு அவனை நோக்கி, மந்திரீ! நீ நெடுங்காலம் என்னிடத்தில் மந்திரித்தொழில் பார்த்துவந்தனை. ஒரு கணமேனும் என்னைவிட்டுப் பிரிந்ததில்லை. யானுன் பேரில் எவ்வளவோ அன்பு பாராட்டிவந்தேன். காலவித்தியாசத்தினலே நீ செய்த ஒரு சிறுபிழையினிமித்தம் உன்பேரில் கோபமூண்டு உன்னை உத்தியோகத்தினின்றும் நீக்கிவிட்டேன். அதன்பொருட்டு இப்போது நான் மிகவும் கிலேசப்படுகிறேன். அதையோர் பொருளாக மனத்திற் கொள்ளாமல் என்னுடனேவந்து மீட்டும் அம்மந்திரித்தொழிலை யேற்றுக் கொள்ளவேண்டும் என்றான். அதுகேட்ட மந்திரி, மஹாராஜாவே! சில காலம் உம்மிடத்தில் ஊழியஞ்செய்துகொண்டிருந்தேன். இப்போது வேறு எஜமானுக்குத் தொண்டுசெய்துகொண்டிருக்கிறேன். உமக்கும் என்னுடைய தற்கால எஜமானுக்கும் ஏராளமான வித்தியாசங்களுண்டு. நீர் என் சரீர ரக்ஷகர். அவர் என்னுடைய ஆத்மரக்ஷகர். நீர் ஏகதேசமாய் ஒருருக்கு அதிபதி. அவர் சர்வலோகாதிபதி. நீர் உட்கார்ந்திருக்க, நான் நின்று கொண்டு ஊழியஞ்செய்யவேண்டும். ஆனால் என்னுடைய எஜமானுக்கோ நான் உட்கார்ந்துகொண்டு தொண்டுசெய்யலாம். நீர் உறங்கும்போது நான் விழித்திருந்து உம்மைக் காத்துக்கொண்டிருக்கவேண்டும். என்னுடைய எஜமானோ நான் செயலற்று நித்திரை செய்யும்போது, அவன் பரமகருணாநிதியாகையால் தான் விழித்திருந்து எனக்கு எவ்விதத்தீங்கும் வாராமல் காவல்புரிகின்றனன். நீர் ஆகாரம் உட்கொள்ளுகையில் நான் பசியுடன் உம்மைப் பார்த்துக்கொண்டிருக்கவேண்டும். ஆனால் என் எஜமானோ நான் உணவருந்தும்போது தான் பட்டினிகிடந்து என்னைப் பாதுகாக்கிறான். நீர் சிலநேரம் என்னுடனிருந்து பிறகு என்னைவிட்டுப் பிரிந்துபோய்விடுவீர். என் எஜமானோ என்னைவிட்டு ஒரு கணமேனும் பிரிகிறதில்லை. நான் உமக்கு ஒரு அற்பகுற்றம்புரிந்து அதனை மன்னிக்கும்படி பலகால் வருந்திக் கேட்டும் நீர் சிறிதும் மனமிரங்கி மன்னித்திரில்லை. உம்மிடத்திற் செய்த தப்பிதத்தைப்போல் அனந்தகோடி தப்பிதங்கள் என் எஜமானிடத்திற் செய்தேனாகில் ஒரேதடவை மனமுருகி மன்னிக்கும்படி கேட்டால்,

"ஏதுபிழை செய்தாலு மேழையேனுக் கிரங்கித்
தீதுபுரியாத தெய்வமே"

என்ற ஆன்றோர் வாக்கின்படி, ஒரு சிறிதும் குற்றமாகக்கொள்ளாமல் உடனே மன்னித்திருப்பான். ஆகையால் எஜமான் என்னும் பட்டம் அவ

அ0-ம் பக்கம் பார்க்க.

தவறுபாடு எல்லாரிடத்திலுமுண்டு. ஆனால் அதைத் தான் மாத்திரம் தவறுபாடில்லாதவனென்று எண்ணுவான்.

காக்கைவலிக்கு மாத்திரை.

வேளைக்கு இரண்டு மாத்திரையாக காலை மாலை இரண்டு வேளையும் 40 நாளைக்குச் சாப்பிட்டுவரின் இவ்வியாதி முற்றிலும் சௌக்கியமாய்விடும். கிரயம் 40 நாள் மருந்துக்கு ரூபா 3.

தலைநோய் குளிகை.

இதைக் காலைமாலை மத்தியானம் 3 வேளைகளிலும் ஒவ்வொரு மாத்திரையாக சாப்பிட்டுவந்தால் பல காரணங்களினுலும் வரப்பட்ட தலைநோய், சிரபாரம் முதலிய வியாதிகள் எத்தனை காட்பட்டதாயினும் எவ்வளவு கடினமானதாயிருப்பினும், 7 நாளைக்குள் சௌக்கியமாய்விடும். கிரயம் டப்பி 1-க்கு அணு 12.

இத்துடன் சிரரோக சங்காரன் என்னும் தைலத்தை ஸ்நானம்செய்துவந்தால் பிற்பாடெக்காலத்தேனும் ஷெ வியாதி திரும் வராது.

நேத்திரரோக நிவாரண ஸ்நானத்தைலம்.

நல்லெண்ணெய் தேய்த்து ஸ்நானஞ்செய்கிறதற்குப் பதிலாய் இந்தத் தைலத்தை வாரத்திற்கிரண்டுதரம் தலையிற்பூசி ஸ்நானம் செய்துவந்தால் கண்குத்தல், உருட்டுதல், கண்ணீர் வடிதல், கண்மங்கல் முதலாகிய நேத்திரங்களிலுண்டாகும் பலவித தொந்திரவை இலகுவாய் நீக்கி கண்ணிற்குப் பிரகாசத்தைக் கொடுப்பதன்றி, கண்களைக் குளிரச்செய்யும். கிரயம் 4 அவுன்ஸ் புட்டி 1-க்கு அணு 12.

சுகந்தபரிமள ஸ்நானத்தைலம்.

இந்தத் தைலத்தை முற்சொல்லியதுபோல் ஸ்நானம் செய்துவந்தால், தலைநோய், வரக்ஷி, சிரபாரம், பீனிசம், கண் கைகால் எரிவு, மயக்கம் முதலிய சிரசிலுண்டாகப்பட்ட சகல வியாதிகளையும் நீக்கி மூளையைப் பலப்படுத்தி புத்திதீக்ஷணியத்தையும் ஞாபகசக்தியையும் அதிகப்படுத்தி தேக ஆரோக்கியத்தையும், கண்பிரகாசத்தையும் முகவஜீகரத்தையும், தேகத்தில் மினுமினுப்பையுந் தந்து தேகசந்தோஷ பதிசப்படுத்தி மனதிற்குக் களிப்பையுண்டாக்கும். இது மஹா உயர்ந்த தைலம் இதன் பெருமையை அனுபவித்தவர்களே கண்டுகொள்வார்கள். கிரயம் 4 அவுன்ஸ் புட்டி 1-க்கு ரூபா 1—8.

கண் இமைக்களிம்பு.

இதில் கொஞ்சமெடுத்த டைரக்ஷனிற் சொல்லியதுபோல் உபயோகித்துவந்தால், கண், இமை, புருவம் இவைகளிலுண்டாகும் வீக்கம், அரிப்பு, புண், மயிருதிர்தல், சொரி முதலிய துன்பங்களை நீக்கி உதிர்ந்தமயிரை முளைக்கச்செய்யும். கிரயம் டப்பி 1-க்கு அணு 8.

அத்தானுக்கும் மைத்துனிக்கும் அன்பான சம்பாஷணை.

அத்தான் :—ஸ்திரீக்கும் குரங்குக்கும் என்ன வித்தியாசமென்று உனக்குத் தெரியுமா?

மைத்துனி :—நீர் உட்கார்ந்திருக்கிற நாற்காலிக்கும் நான் உட்கார்ந்திருக்கும் நாற்காலிக்கும் இடையில் எவ்வளவு வித்தியாசமிருக்குமென்று நீர் சொல்லும் பார்ப்போம்.

அத்தான் :—ஆறு அடி வித்தியாசமிருக்கலாம்.

மைத்துனி :—சரிதான். ஸ்திரீக்கும் குரங்குக்கும் அவ்வளவு வித்தியாசந்தான் இடையிலிருக்கும்.

உன்குதிரையின் கடிவாளத்தை நீயே பிடித்துக்கொள்.

துர்ப்பாக்கியம் வரும்போது ஆடம்பரமாய்க் குதிரைமேலே, போகும்போது பெருஞ்சோர்வுடன் கால்நடையின்மேலே.

உண்மை அறிவு—எஅ-ம் பக்கம் (தொடர்ச்சி.)

ஞொருவனுக்கே தகும். அவனைத்தவிர வேறொருவருக்கும் அது பொருந்தாது. ஆதலால் இனிமேல் அந்த ஒப்புயர்வில்லா வொரு எஜமானனுக்கே தொண்டு புரிவதல்லாமல் இதராளுக்குச் செய்வதில்லையென்று தீர்மானித்துவிட்டேன். ஏ! மஹாபிரபுவே! இனி என்னை எதிர்பார்ப்பதிற் பயனில்லையென்று கூறினன். இவைகளைக்கேட்ட அரசன் "துறவிக்கு வேந்தன் துரும்பு" என்பதுபோல் நாம் என்ன, இப்பெரியோனுக்கு லக்ஷியமா? என்று வெட்கி வெளியே சென்றான்.

இதனால் நாம் கற்றுக்கொள்ளவேண்டிய தென்னையெனின், இகம்பரம் என்னும் இருவாழ்க்கையிலும் இம்மைவாழ்வு துக்கமும் அநித்தியமுமாகையால், அதை வெறுத்து சாஸ்வதமும் பேரானந்தகரமுமாகிய பரலோக வாழ்க்கையை யடைவதற்கே துவான மார்க்கத்தை இம்மையிலேயே தேடிக்கொள்ள வேண்டும். நமக்கு மரணம் எப்போது வருமென்று தெரியாதாகையால் நாம் செய்யும் சற்கருமங்களை நாளைக்கென்று வையாமல் இன்றைக்கே தொடங்கிச்செய்யவேண்டும். நாளையென்பது நம்முடைய நாளல்ல; ஜீவனோபாய முயற்சியிலுண்டாகும் பல தொல்லைகளால் கடவுளைத்தொழ அவகாசம் கிடைக்கிறதில்லை. இத்தொல்லைகளையெல்லாம் ஒருவாறொழித்துப் பின்னர் கடவுள் வழிபாட்டில் நிற்கவேண்டும் என்று சிலர் கூறுவார்கள். இது கடலில் அலையொழிந்த பிறகு ஸ்நானஞ்செய்யவேண்டும் என்னும் அவிவேகிகளுடைய சங்கதியையொத்தது. விவேகிகளாயுள்ளோர் கடலில் அலைகள் வீசிக்கொண்டிருக்கும்போதே தங்கள் காரியத்தில் தலைநின்று ஸ்நானஞ்செய்து முடிப்பார்கள். அலைகள் ஒருபோதும் ஒழிந்திருப்பதில்லை. அதுபோல் குடும்ப விவகாரத்தில் தொல்லைகள் சதா இருந்துகொண்டேயிருக்கும். நாம் அதில் தலைநுழைத்துக்கொண்டு நம்முடைய முக்கிய காரியமாகிய கடவுள் வழிபாட்டை மறந்திருப்பது உசிதமான கொள்கையன்று. தினந்தோறும் கடவுளைத் தொழும்பொருட்டு ஒரு காலத்தை நியமனஞ்செய்துகொண்டு அக்காலக்கிரமப்படி வைராக்கிய சிந்தையுடன் மனமொழி மெய்களால் அவரை வழிபாடு செய்வதற்கேற்ற முயற்சிகளை ஒவ்வொருவரும் கைக்கொள்ளவேண்டுமென்பதை யுணரவேண்டும்.

அடிக்கும்போது என் மணி பார்க்கவில்லை.

பிரதிவாதியினுடைய வக்கீல்:—(வாதியைப்பார்த்து) பிரதிவாதி உன்னையடிக்கும்போது என்ன மணி?

வாதி:—இத்தனை மணி இருக்குமென்று எனக்குத்தெரியாது.

பிரதிவாதியினுடைய வக்கீல்:—ஏன் தெரியாது.

வாதி:—அப்போது மணி பார்ப்பதற்காகக் கடியாரத்திற்குச் சமீபமாய்ப்போனேன். என்னுடைய கேஸைக் கெடுத்துவிடவேண்டுமென்றும் துர் எண்ணத்துடன் பிரதிவாதி அதைத் தன்கையில் தூக்கிக்கொண்டான். பிரபு. நான் என் செய்வேன்.

மதராஸ் யூனானி மெடிக்கல் ஹால், 439 கெ., சௌகார்பேட்டை, சென்னை.

கோரோஜன குளிகை.

குழந்தைகளுக்கு இது மிகவும் முக்கியமான மருந்து ஒவ்வொரு குடும்பத்திலும் அவசியம் இருக்கவேண்டும் மலத்தைத் தாராளமாய் போக்கும். இருமல், கோழை, கபம், முதலியவைகளை நிவாரணையாக்கும். சுரம், வாய்வு, முக்கல், திணரல் முதலியவைகளையும் சௌக்கியமாக்கும்.

100 மாத்திரை கொண்ட புட்டி 1-க்கு ரூபா 0 8 0
12 புட்டிக்கு ரூபா 5 0 0

பீனிசப்பொடி.

இதில் ஒரு சிட்டிகை எடுத்து மூக்குத்தூள் போடுவதுபோல் உபயோகித்துவந்தால் நீர் நாசியிலிருந்து சதா வடிந்துகொண்டிருப்பது, தலைவலி, ஒற்றைத்தலைநோய், மண்டைக்குற்று, சிரபாரம், மயக்கம், நாசியில் துர்நாற்ற முதலிய வியாதிகளைக் கண்டிக்கும். கிரயம் டப்பி 1-க்கு அணா 4.

இத்துடன் சிரரோக சங்காரன் என்னும் தைலத்தையும் ஸ்நானம் செய்துவருவது அதிகமேன்மை.

நேத்திராரோக்கியன்.

இந்த மருந்தை டைரக்ஷனிற் சொல்லியபடி கண்ணில் பிரயோகம் செய்துவந்தால் கண்நோய், கண்குத்தல், நீர்வடிதல், கண்மங்கல் முதலிய ரோகங்களை நிவர்த்திசெய்வதன்றியில் இதைச் சதாகாலம் உபயோகித்துவருவதினால் எவ்வித கண் ரோகமும் வராது. கிரயம் புட்டி 1-க்கு ரூபா 1.

இத்துடன் நேத்திரரோக நிவாரண ஸ்நானத்தைலமும், பிரயோகித்துவந்தால் அதிக குணம்.

விகட கண்டாவிஷ்தம்.

கும்பகோணம் கோமுட்டி, மன்னார்கோவில் மண்வெட்டி, திருவாரூர் தேர்முட்டி, கன்னிலத்து நாய்க்குட்டி, உலக்கைவேர், குந்தாணிக்கொழுந்து, சக்கம்வேர், ரங்கன்கண், ஆதண்டம் இலை, கோதண்டன் தலை இவற்றைக் கொண்டுவந்து உலக்கையில் வைத்து உரலாலிடித்து குடிப்போனவீட்டில் அடிப்போன சட்டியில் இத்தினைப்போட்டு கால்படி ஜலம்விட்டு ஒரு படி ஜலமாய் சுண்டக்காய்ச்சி உள்ளங்கையில்விட்டுப் புறங்கையை நக்க வந்த வியாதி முற்றிலும் வழியே போகிறவர்களுக்கு உடனே தீர்ந்துபோகும். கைகண்ட ஔஷதம்.

மூட சிகாமணி.

"உன் பெண்ஜாதி தாலியறுத்துப்போனால், உனக்கு யார் சமையல் செய்துபோடுவார்?" என்றதற்கு, "என் பாட்டியிருக்கிறாள் எனக்குப் பயமில்லை," என்றான்.

கேள்விக்குத்தக்க விடை.

துரை :—(தீனிதின்னும்போது) பட்லர்! என்னுடைய சூப்பில் ஒரு கிழிந்த கந்தைத்துண்டு கிடக்கிறது பார்த்தாயா?

பட்லர் :—துரைகளே! பட்டு பட்டாவளிக்கும்ஸாட்டின் முதலிய உயர்ந்த துணிகளுக்கும் நானெங்கேபோவேன்? நான் ஏழையாச்சுதே, சார்!

அதிககூர்மை முழுமொட்டை.

பிச்சைகேட்டானேதவிர பெண்ணைகேட்கவில்லை.

விவேகிகள் ஒருவனுடைய கேள்வியைச் செவ்வனே தெரிந்துகொண்ட பிறகே அதற்குத் தக்கவிடை பகர்வார்கள். அவிவேகிகளோ வினவொன்றிருக்க விடைவேறாகக்கூறிப் பரிபவமடைவார்கள்.

ஒரு யாசகன் ஒருதனிகன் வீட்டிற்குப்போய் ஐயா! "இவ்வேழைக்குக் கொஞ்சம் பிச்சையிடுங்கள்" என்று கெஞ்சிக்கேட்டான். வீட்டெஜமான், "இத்தருணம்வீட்டில் பெண்பிள்ளையில்லைபோ", என்று பதில் கூறினான். யாசகன் "தனவானே! நான் பெண்பிள்ளையைக்கேட்க வரவில்லையே, ஒரு பிடி அமுதுதானே கேட்டேன், என் கேள்விக்குப் பதில் சொல்லிய தப்பாமல் வேறு ஏதோ வீண்போக்குச் சொல்லுகிறீர்களே" என்று சொல்லிப்போனான். தனவான் தான் மௌட்டியமான விடைபகர்ந்ததற்காக வெட்கி விசனங்கொண்டு அது முதல் பிறர்கேள்வியைச் செம்மையாய்த் தெரிந்துகொண்ட பின்னரே விடைகூற அப்பியாசஞ் செய்துகொண்டான்.

அரைப்பங்கு கலியாணம் நிறைவேறிற்று.

நெடுங்கழுத்தன் :—கடைசியாய் இம்மகுடி ஜமீன்தாருடைய மகளைக் கலியாணஞ்செய்வதாகத் தீர்மானித்துவிட்டாய்.

அருங்கழுத்தன் :—ஆம்—ஆம்—அதுவே முடிவு.

நெடுங்கழுத்தன் :—அது நிறைவேறிப்போமா?

அருங்கழுத்தன் :—வெகுசாய் நிறைவேறுமெனவே நிச்சயிக்கவேண்டியதாயிருக்கிறது. எங்ஙனமெனில், ஒரு விவாகம் பூர்த்திபெறுவதற்குப் பெண் வீட்டார் பிள்ளை வீட்டார் இவ்விருதிறத்தாருடைய சம்மதமும் வேண்டும். பிள்ளைவீட்டாரில் பிரதான புருஷனாகிய நான் முற்றிலும் சம்மதப்பட்டிருக்கிறேன். அதனால் கலியாணம் அரைப்பங்கு ஆய்விட்டதென்றே நிதானிக்கவேண்டும். பெண்வீட்டாரும் எளிதாய்ச் சம்மதித்துவிடுவார்களென்றே தோன்றுகிறது. ஏனென்றால் எனக்குள்ள முழுக்கடனுக்கும் ஒரு லிஸ்டு தயார்செய்துவரும்படி அவர்களெனக்கு உத்தரவுசெய்திருக்கிறார்கள். அதையும் சித்தஞ்செய்துவிட்டேன். இனி அதிகமான கடன் ஒன்றுமில்லை. இரண்டு லட்சம்ரூபாய்தான் கடனிருக்கிறது. அதோடேபோய்விட்டதென்று நினைக்கிறாயோ? இல்லை, இல்லை. வரவேண்டியதும் ஒரு லட்சத்திற்குச் சமீபமாயிருக்கிறது. என்னுடைய ஆஸ்தியோ தெள்ளிப் புடைத்துச் சீர்தூக்கிப்பார்த்தாலும் இருபத்தையாயிரத்திற்குக் குறைவில்லை. அப்பப்பா! அதை நான் விட்டுவிடுவேனோ? அதற்கும் லிஸ்டு போட்டுவிட்டேன்.

தலைமேல் உமி.

ஒருவன் சாப்பிட்டுக்கொண்டிருந்தபோது பாலையிலிருந்து தன் தலைமேல் உமி உதிருவதைக்கண்டு, "அடி, தலைமேல் உமி" என்றான். குழம்பு பரிமாறிக்கொண்டிருந்த அவன் மனைவி, தன் கையிலிருந்த கரண்டியால் அடித்து, காரிக்காரி அவன் தலைமேல் உமிழ்ந்தாள்.

"காலடி பார்த்திருக்கிறாயா" என, "மதுரைக்குப் பக்கத்திலுள்ள கிராமந்தானே," என்றான்.

மதராஸ் யூநானி மெடிக்கல் ஹால், 439 செ., சௌகார்பேட்டை, சென்னை.

இராஜானந்த விரோசனம்.

பேதிக்குச் சாப்பிடும் ஔஷதங்களில் இது மஹா மேன்மையுடையது. வெகுட்டல், குமட்டல், வயிற்றுநோய், நெஞ்செரிவு, ஆசனக்கடுப்பு முதலிய யாதொரு துர்க்குணங்களும் இஞ்சிற்றும் இல்லாமல் சாப்பிடுவதற்கு அதிகருசியைக்கொடுக்கக்கூடிய இந்த விரோசன பில்லையில் ஒன்றெடுத்து இராப்போஜனத்திற்கு 2 - மணிக்குப் பிறகு சாப்பிட்டுப் படுத்துக்கொண்டால் காலை 7 - மணிக்குள்ளாக செம்மையாய் 2, 3 - தடவை பேதியாய்விடும். 2 - பில்லைகள் சாப்பிட்டால் 6, 7 - தடவை குளிர்ந்த சுகபேதியாய்விடும். இது தேகத்திலுள்ள மாசுகளையும் துர்நீர்களையும் நீக்கி இரத்தத்தைச் சுத்திப்படுத்தி ஆரோக்கியத்தைக் கொடுக்கும். தினம் ஒவ்வொரு பில்லையாக 20 - நாள் சாப்பிட்டுவந்தால் சகல சர்மரோகங்களையும் நிவாரணஞ்செய்துவிடும். குழந்தைகளுக்கு வயதிற்கும் தேகபலத்திற்கும் தக்கபடி அரை அல்லது ஒருபில்லை கொடுக்கலாம். குழந்தைகள் அதிக பிரீதியாகவும் சந்தோஷமாகவும் சாப்பிடுவார்கள். கிரயம் 12 பில்லைகள்கொண்ட டப்பி 1 - க்கு ரூபா 1 - 2 - 0.

போசன குளிகை.

இந்த மாத்திரையில் ஒன்றை இராப்போஜனத்திற்கு 4 - மணிக்குப் பிறகு சாப்பிட்டு கொஞ்சம் வெந்நீர் குடித்து சயனித்துக்கொள்ளலாம். காலை 4 - மணி முதல் 6 - மணிவரைக்கும் 7, 8 - தடவை சுகமாய் பேதியாகும். இது சகல வாய்வு, வாதம், இடுப்பு, கைகால் முதலிய அவயவங்களில் உளைச்சல், வலி, கடுப்பு முதலியவைகளை சொஸ்தமாக்கி இரத்தத்தைச் சுத்திப்படுத்தி, தேகாரோக்கியம் உண்டாக்கிவிடும். கிரயம் 12 மாத்திரைகள் அடங்கிய டப்பி 1 - க்கு அணா - 12.

உண்மையையுரைக்க பரியாஸமாய் முடிந்தது.

ஒரு ஐரோப்பிய துரை ஓர் ஆற்றங்கரையில் நின்று குளித்துக்கொண்டிருக்கையில், அவன் கழுத்தில் ஒரு அட்டை கடித்துக்கொண்டிருந்தது. அவனுக்கருகே குளித்துக்கொண்டிருந்த ஒரு முஹம்மதியன் அதைப்பார்த்து—

முஹம்மதியன் :—சார்—சார்! கல்லேமேஜோக் (கழுத்தில் அட்டை) என்று விரலினால் சுட்டிக்காட்டி ஹிந்துஸ்தானி பாஷையில் சொன்னான். துரை தன் கழுத்தைத்தடவிப் பார்த்து மிகுந்த கஷ்டத்துடன் அவ்வட்டையை எடுத்துவிட்டு அந்த முஹம்மதியனைப்பார்த்து—

துரை :—அட்டை என்னுடைய ரத்தத்தை யுறிஞ்சியது உனக்குப் பரிகாசமாய்விட்டதோ? யூ டாம் பகர்! என்று கோபித்து அவனை யடிக்கப்போனான்.

ஹிந்துஸ்தானியில் ஜோக் என்றால் அட்டை, இங்கிலீஷில் ஜோக் என்றால் பரிகாசம்.

முத்தங்கொடுத்ததை மெச்சுதல்.

"அப்பா! கோடிவீட்டுக் கோபாலன் மிகவும் நல்லவன். நீ ஊருக்குப்போயிருந்தபோது நிதமும் நம்முடைய ஆத்துக்கு வருவான். எனக்கு ஒரு காசு கொடுப்பான். போகும்போது அம்மாளைக் கட்டிக்கொண்டு முத்தமிட்டும் போவான்" என்று பிள்ளை தகப்பனிடத்தில் சொன்னான்.

மரணம் அஞ்சத்தக்கதென்று நீ நினைத்தால், குற்றம் உன்னுடையதேயன்றி மரணத்தினுடைய தன்று.

அதிக தந்திரம் அகல அந்தரம்.

துடைப்பக்கட்டையால் துடைப்பதற் கொருவருமில்லையே என்று துக்கித்தழுதான்.

ஒருவன் தன் மனைவி இறந்துபோனதினிமித்தம் மிக்க துக்கப்பட்டுக் கொண்டிருக்கையில் அவனுடைய சண்டனொருவன் அவனுக்குத் தேறுதலான உபசாரவார்த்தைகள் கூறிக்கொண்டிருந்தான். அப்போது—

துக்கங்கொண்டவன் :—என் மனைவி மிகவும் அழகுடையவள். மஹா புத்திசாலி. மிக்க பொறுமையுடையவள். வாயைச் சிறிது திறந்துவிட்டால் அவளுடைய இனியமொழிகள் இடியோசையைக்கடந்து நிற்கும். ஆறிலுஞ் சாவு நூறிலுஞ்சாவுதான். அவள் இறந்ததற்காக நானழவில்லை. ஆனால் துடைப்பக்கட்டையின் மிருதுவான முனைபாகத்தினால் சதா என்னைத் துடைத்துக்கொண்டேயிருப்பாள். அவ்வேலையை இனியார் ஏற்றுக்கொள்ளப் போகிறார்களென்று நினைக்குந்தோறும் துக்கம் அடைத்துக்கொண்டு வருகிறது, அண்ணை! என்று அவனைக்கட்டிக்கொண்டு ஓ வென்று கதறிக்கதறியழுதான்.

“ஒரு ரூபாய்க்குச் சில்லரை இருக்கிறதா ?” என “பணமாய்வேண்டுமோ காசாய் வேண்டுமோ ?” என்று கேட்டான். “எப்படியிருந்தாலுஞ் சரிதான்” என்று சொல்ல, “என்னிடத்தில் இல்லேப்போ” என்றான்.

உன் புத்திக்காக மெச்சினேன்.

சிஷ்யன் :—ஐயா! நாளொன்றுக்கு நாம் எத்தனை சுவாஸம் விடுகின்றோம்?

குரு :—பிள்ளாய்! நல்ல கேள்வி கேட்டாய். உன் புத்திக்காக மெச்சினேன். இதோ அறிவித்துவிடுகிறேன் கேள். நாம் விடுகின்ற சுவாஸத்தினின்றே யுகமுதலியன உண்டாகின்றன. எங்ஙனமெனின்,

ஆறு சுவாஸம் கொண்டது ஒருகலை.
அறுபதுகலை கொண்டது ஒரு நாழிகை.
அறுபது நாழிகை கொண்டது ஒருநாள்.
ஆகவே நாள் ஒன்றுக்கு ஒவ்வொரு மனிதனும் 60 × 60 × 60 =21,600 மூச்சுகளை வெளிப்படுத்துகிறான்.

இதில் மூலாதாரத்தில்	...	600
சுவாதிட்டானத்தில்	...	6,000
மணிபூரகத்தில்	...	6,000
அநாகதத்தில்	...	6,000
விசுவத்தியில்	...	1,000
ஆக்கினையில்	...	1,000
நாதாந்தத்தில்	...	1,000
ஆக மொத்தம்	...	21,600

மதராஸ் யூனானி மெடிக்கல் ஆல், 439 செ., சௌகார்பேட்டை, சென்னை.

சொரிசிரங்கிற்கு மருந்து.

இதில் கொஞ்சம் கையிலெடுத்து சொரி, நமைச்சல் உள்ள விடங்களில் செம்மையாய்த் தேய்த்து கால் மணிக்குப்பிறகு குளிர்ந்த ஜலத்தில் ஸ்நானம் செய்துவிடவேண்டியது. இவ்விதம் மூன்றே நாள்கள் காலைவேளைகளிற் செய்துவந்தால் எவ்வித மான நமைச்சல்களும், சொரிசிரங்கு, வரட்டுச்சொரி முதலிய வைகள் சௌக்கியமாய்த் தேக ஆரோக்கியமுண்டாகும். கிரயம் 4 - அவுன்ஸ் புட்டி 1 - க்கு அணா 8.

மேகப்புண் ரணங்களுக்குக் களிம்பு.

இதை டைரக்ஷனிற் சொல்லியபடி உபயோகித்துவந்தால் சகல மேக ரணங்களையும் ஜனனேந்திரியங்களிலுண்டாகும் ரணங்களையும் ஆற்றிவிடும்.

கிரயம் டப்பி 1 - க்கு அணா 4.

ஒரு நாட்டுப்புறத்திலுள்ள ஒரு பிராமணஸ்திரீ அமாவாசைக்காக வீடு மெழுகிக்கொண்டிருக்கையில் 8 - வயதுடைய அவன் குமாரன் தாயைப்பார்த்து, அம்மா! நீ எதற்காக வீடு மெழுகுகிறாயென்று கேட்டான்.

தாய் :—அப்பா! அமாவாசைக்காக மெழுகுகிறேன்.

மகன் :—அடி அம்மா! அமாவாசை எப்படியிருக்குமடி?

தாய் :—மொட்டைத்தலையாயிருக்கும். அந்த விசாரணை உனக்கேதுக்கு?

மகன் :—அது நம்முடைய வீட்டுக்கு எப்போது வரும்?

தாய் :—இன்றிரவுக்கு வரும். அதனாலுனக்கென்ன? போ, உன்வேலையைப்பார்.

மகன் :—அதை என்னசெய்யவேண்டும்?

தாய் :—(விளையாட்டாய்) 3 - குட்டு குட்டவேண்டும்.

அன்று அஸ்தமன காலத்திற்குப்பின் பையன் வெளியே விளையாடிவிட்டு வீட்டுக்குப்போனான். தெருத்திண்ணையின்மேல் ஒரு ஏழை மொட்டைக்கிழப்பாப்பாத்தி உட்கார்ந்திருந்தாள். அவளைப்பார்த்தவுடனே தலையில் ஓங்கி 3 - குட்டு குட்டிவிட்டு, அம்மாடி, யம்மாடி! இதோ அமாவாசைவந்து விட்டது என்று சொல்லிக்கொண்டு தாயிடத்திற் கோடினான்.

சத்தியாவர்த்தனம்.

“சந்தியாவந்தனம் பண்ணினையா?” என்று தகப்பன் பிள்ளையைக் கேட்க, “பெருமாள்கோவில் குளத்தில் பண்ணினேன்,” என்றான். “அதில் தண்ணீரில்லையே,” என, “தண்ணீர் இருக்கிறதென்று அடுத்தவீட்டுக் குப்பனுக்கு யாரோ சொன்னதுண்டே” என்றான்.

மூடன் தன்கத்தியினாலே தன்கையையே வெட்டிக்கொள்வான்.

தூட்டுணிக்குத்தக்க துண்டு.

ஒரு மனிதன் தன்மனைவியை அடித்ததினிமித்தம் அவள் வியாகூலமாயிருக்கும்போது அடுத்த வீட்டுக்காரி வந்து அவளிடத்தில் சம்பாஷிப்பது.

மங்களம்:—உன் கணவன் உன்னைத் தடிக்கத்தடிக்க அடித்தாரே. இதுஎன்ன அனியாயம்? இத்தோடே எத்தனையோமுறை யடித்திருக்கிறார்: நீ வாயில்லாப்பூச்சியாயிருக்கிறபடியாலன்றோவரவர உன்னையதிக கொடுமையாக நடத்திக்கொண்டேவருகிறார். உன் கண்ருவியைப்போலே எங்குங் கண்டதில்லையம்மா! உடம்பு முழுதும் கொழுக்கட்டையைப்போல் தடித்துப்போய்விட்டதே, கன்றுயிருக்கிறது!

லட்சுமி:—ஆம்—ஆம். நீ ஏனம்மா கிலேசப்படுகிறாய்? என் கணவனன்றோ என்னையடித்தார். பட்டவள் நானிருக்க நீயேன் பதைபதைக்கிறாய். அவர் எனக்கெஜமானன், அவரிஷ்டப்படி என்னை நடத்துவார். அவருக்குத் தெரியாததல்ல. நீ எனக்குப் புத்தி புகட்டவேண்டாம், தாயே போய் வா.

அறுத்தது ஒரேகோழிதான் தலைமட்டும் இரண்டு.

ஒரு காட்டுப்புரத்தில் ஒரு முஹம்மதியனுடைய வீட்டில் (பாத்திஹா) என்னுஞ் சடங்கு நிறைவேற்றும்பொருட்டு அவ்வீட்டெஜமானி மவுலன் என்னும் மஸ்ஜித் ஊழியக்காரனிடத்தில் ஒரு கோழியை அறுத்து வாங்கிக் கொண்டாள். (முஹம்மதியர் கோழி, ஆடுகள்போன்ற பட்சி மிருகங்களை மந்திரஞ்சொல்லியே அறுக்கவேண்டியது அவர்கள் கடமை. அம்மந்திரம் தெரிந்தவர்களாலேயே அறுக்கப்படுவது வழக்கம். முக்கியமாய் மவுலன் என்னும் பள்ளிவாசல் ஊழியக்காரர்களாலேயே மந்திரங்கூறி, அறுக்கப்பட்டு உயிர் நீங்கிய பின்பு வீட்டுக்குக்கொண்டுபோய் மயிர், குடல் முதலியவற்றை நீக்கி சுத்தப்படுத்திப் பாகஞ்செய்வது வழக்கம்.) அந்தக் கோழியை வீட்டெஜமானி சுத்தஞ்செய்கையி லண்டைவீட்டுக் கோழி வந்து இவளது வாசலில் நின்றது. அதைக்கண்ட எஜமானி அக்கோழியைப்பிடித்து ஒருவருமறியாதபடி அதன் கழுத்தைத் துண்டித்து முன் கோழியுடன் சேர்த்துப் பாகஞ்செய்துவிட்டாள். அன்றிராத்திரி பாத்திஹா என்னும் சடங்கை நிறைவேற்றுநிமித்தம் அந்த மவுலன் அவ்வீட்டிற்குவந்து சடங்குகளை முடித்து அங்குப் போஜனஞ்செய்துகொண்டிருக்கையில்—

மவுலன்:—அம்மா! நானறுத்தது ஒரே கோழியாயிற்றே. ஏன் கறிக்கோட்டையில் இரண்டு கோழித்தலைகள் கிடக்கின்றனவே இவை ஏது?

வீட்டெஜமானி:—இல்லங்கோ ஹஸரத்! நான் தங்களுக்கு தலையொன்றே போட்டேன்.

மவுலன்:—அம்மா! சற்று தயைசெய்து இங்கேவந்துபாருங்கள்.

வீட்டெஜமானி:—(கறிக்கோப்பையைப் பார்வையிட்டு) இவ்வதிசயத்தை நீங்கள் எங்காவது பார்த்தேனும் கேட்டேனும் இருக்கிறீர்களா ஹஸரத்? அந்தக் கோழிக்கு இரண்டு தலைகளிருந்தன. அறுக்கும்போது நீங்கள் கவனமாய்ப் பார்த்தீர்களில்லை. ஆனால் இரண்டு தலையுள்ள கோழியையாரேனுங்கண்டால் அதை வெளியே பேசக்கூடாதென்றும் அவ்வாறு பேசினால் அவர்களுக்கு அலப்பவங்கள் நேரிடுமென்றும் உலகத்தார் சொல்வார்கள். ஆகையால் இது சங்கதியை ஒருவரோடும் பேசாதீர்கள்.

“உன் மூத்தமாப்பிள்ளைபேரில் ஏன் விசேஷப்பிரியம்?” என, “அவர்தான் என் உடம்புக்கு ருத்தவர்,” என்றாள்.

மதறாஸ் யூநானி மெடிக்கல் ஹால், 439 நெ., ஸௌகார்பேட்டை, சென்னை.

ஸ்கலிதரக்ஷணி.

பலஹீனத்தினாலும் அதிக ஊஷ்ணத்தினாலும் தூக்கத்தில் ஸ்கலிதமாய் விடுவதற்கு இம்மாத்திரைகளை டைரக்ஷனிற் சொல்லியபடி உபயோகித்துவந்தால் ஊஷ்ணத்தைத் தணித்து எக்காலத்திலும் ஸ்கலிதமாகாமல் காக்கும். கிரயம் டப்பி 1-க்கு அணா 8.

சகல ரணங்களுக்கும் பிளாஸ்திரி.

இதை டைரக்ஷனிற் சொல்லிய பிரகாரம் உபயோகித்து வந்தால் ஆறாத புண்களை ஆற்றிவிடும். துண்டு 1-க்கு அணா 4.

சுவாசகாசத்திற்கு மருந்து.

இந்த மருந்தை 30-நாள் சாப்பிட்டு வந்தால் எத்தனை நாட்பட்ட வியாதியாயிருந்தாலும் சௌக்கியமாய்விடும். அநேகர் சௌக்கியமடைந்திருக்கிறார்கள். கிரயம் புட்டி 1-க்கு ரூபா 2-8-0.

சுவாசகாசச் சுருட்டு.

சுவாசம் அதிக தொந்தரை செய்யும்போது இந்த சுருட்டை உபயோகப்படுத்தினால் உடனே தொந்தரையை நீக்கும் இவ்வியாதிக்கு மருந்து சாப்பிடும்போதும் இந்தச் சுருட்டையுமுபயோகித்து வரவேண்டும். கிரயம் பாக்கெட் 1-க்கு அணா 8.

முழுச்சோம்பேரி.

வழிப்போக்கன் :—ஐயா! இந்தச்சுமையை என் தலையேல் தூக்கச் சற்று உதவிசெய்யவேண்டும்.

சோம்பேரி :—என்னிரண்டு கைகளும் என் சொக்காயின் ஜோபுகளில் புகுந்திருக்கின்றன. அவற்றை நீவெளியே எடுத்தன்றோ உம்முடைய சுமையைத் தூக்கவேண்டும். நன்றாய்ச் சொன்னீரே!

புருஷன் பெண்சாதி விகடம்.

மனைவி :—என்னருமைக்கண்ணாளா! நான் நேற்றுப்பகல் தங்கள் காதில் அதிரகசியமான சங்கதியொன்றைச் சொன்னேனே. அது கவனத்திலிருக்கிறதா?

கணவன் :—என்னருமைக்கண்ணாட்டி! உன்னுடைய கண்ணுக்குப் பார்வை சற்று மட்டாயிருக்கிறதுபோல்தோன்றுகிறது. என் வாயையன்றோ நீ காதென்று நினைத்தாய்? வாய்க்குப் பேசுஞ் சக்தியேயொழியக் கேட்குஞ் சக்திகிடையாதே.

சாட்சிக்கு முன்பாகவா திருடுவான்.

ஜட்ஜ் :—அடே ராமா! நீ வாதியின் கோழியைத் திருடினையென்று வாதி தக்கசாட்சிகளால் நன்றாய் ருசுப்படுத்தியிருக்கிறான். நீ திருடவில்லை என்பதை ருசுப்படுத்துவாயா?

குற்றவாளியாகிய ராமன் :—தருமதுரைகளே! நான் ஒருபோதும் சாட்சிகளின் முன்பாகத் திருடுகிறவழக்கமேயில்லை. ஆகையால் அத்தனைச் சாட்சிகளும் பொய்சாட்சிகளே.

சோம்பலானது சகல கேடுகளுக்குந் தாய்.

மூடன் மொட்டை யடிக்கப்பட்டான்.

ஒரு அம்பட்டன், ஒரு மூடன், ஒரு மொட்டைத்தலையனாகிய மூவருஞ் சேர்ந்து ஒரு தேசத்திற்குப் பிரயாணஞ் செய்கையில், மார்க்கத்தில் ஒரு நாளிரவு ஒரு சத்திரத்திற்றங்கினார்கள். அவ்வூரில் கள்ளரச்சம் அதிகமாயிருந்தமையால் அவ்விராக்காலத்தை மூன்று பகுதியாய்ப்பிரித்து ஒவ்வொரு பாகத்திற்கும் ஒவ்வொருவன் விழித்திருந்து காவல்செய்யவேண்டுமென்று சீட்டுப்போட்டு முறை யேற்படுத்திக்கொண்டார்கள். அதில் முதல் முறை அம்பட்டனுக்கு வந்தது. ஏனைய இருவரும் படுத்துத் தூங்கிவிட்டார்கள். அப்போது விழித்திருந்த அம்பட்டன் பரிகாச விஷயமாகத் தூங்கிக்கொண்டிருந்த மூடனுடைய தலையைச்சிரைத்து மொட்டை யடித்துவிட்டான். அடுத்த காவல் முறை மூடனுடையதாகையால் அவன் அம்பட்டனலெழுப்பப்பட்டு விழித்துக்கொண்டவுடனே தலையைச் சொரியத்தொடங்கியபோது, தன் தலைமொட்டையா யிருத்தலைக்கண்டு அடே அம்பட்டா! நீ என்ன மூடத்தனஞ் செய்துவிட்டாய்? மூன்றாவதெழுப்பவேண்டிய மொட்டைத்தலையனை இரண்டாவது முறையிலேயே எழுப்பிவிட்டாயே. இது வெகு நன்றாய் இருக்கிறது. நீ மஹா புத்திசாலியடாவென்று அவன்மேற் கோபித்துப் படுத்துக்கொண்டான்.

அவளுடைய குறிப்பை அறிந்துகொண்டான்.

அவன் :—இவ்வளவு தூரம்பேசியும் உன் மனம் இரங்கவில்லையே. என் தங்கையென்று நீ சொல்லுகிறாயே, அப்படியானால் நான் போகட்டுமா?

அவள் :—தங்கைக்கு முத்தந்தருவது உங்கள் ஜாதி வழக்கம்போற் றெரிகிறது. என்னவோ வீண் மிரட்டு மிரட்டுகிறாயே? பனங்காட்டு நரி சலசலப்புக்கஞ்சுமா? இதெல்லாம் எனக்கு ஆயிரம் அரைக்காற்பணம். போகிறதாயிருந்தால் போங்களேன்.

அவன் :—உன் குறிப்பு மிகவும் சிலாகிக்கத்தக்கதே! நானென்னவோ நினைத்தேன் அப்பப்ப! இனி நான் போகமாட்டேன்.

மகனுடைய துக்கமும் தாயுடைய திடுக்கமும் வேறுபட்டது.

தாய் :—மகனே! ஏன் இவ்வளவு கூச்சல் போட்டழுகிறாய்? உனக்கென்ன அசம்பவம் நேர்ந்தது.

மகன் :—என்—என்—என்—வாத்தியார்—அம்மா ஆங்—ஆங்—(தேம்பித் தேம்பி யழுதுகொண்டு) ஒரு—ஒரு—ஒரு—வாரமாக அதிக வியாதியாயிருந்தார். (அப்பால் பையனுக்குப் பேசவாவெழவில்லை. அதிகமாய்த் தேம்பி யழுகிறான்).—

தாய் :—ஏன் அப்பா! உன் வாத்தியார் இறந்தாபோய்விட்டார்? ஆஹா! வெகு நல்ல மனிதனாயிற்றே.

மகன் :—இல்லை அம்மா இல்லை. சவுக்கியமடைந்து இன்று காலையில் பள்ளிக்கூடத்திற்கு வந்துவிட்டாரே.

“உனக்கு எத்தனை பிள்ளை?” என “எனக்குப் பிறக்கநின்றது நான் காசிக்குப் போயிருக்கிறபோது கோடி வீட்டுக் குப்பனுக்குப் பிறக்கநின்றது ஆக உருப்படி இரண்டு” என்றான்.

மதராஸ் பூகானி மெடிக்கல் ஹால், 439 கெ., சௌகார்பேட்டை, சென்னை.

மேகச்சூலை சங்காரன்.

இந்த ஹல்வாவில் வேளையொன்றுக்குக் கால்ரூபாயெடையாக காலைமாலை இருவேளைகளிலும் 7-நாள் சாப்பிட்டுவந்தால் கைகால் முடக்கு, கணுக்களில் வீக்கம், தேகத்தில் வலிகெடுப்பு, குற்றல், உளைச்சல் முதலியவைகளைப்போக்கித் தேகத்திற்கு ஆரோக்கியத்தைக்கொடுக்கும். கிரயம் டப்பி 1-க்கு அணு 12.

இந்த ஔஷதத்தைச் சாப்பிடும்போது சர்வரோக சங்காரி என்னும் தைலத்தையும் தேகத்திற் பூசிவருவது நலம்.

செவிட்டுச் சாமர்த்தியம்.

ஒரு வர்த்தகன் நெடுநாள் பிரிவுற்றிருந்த தன் நண்பனைக் காணும்பொருட்டு அவனைத்தேடிச் சென்றான். மார்க்கத்தில் அவன் நோயாயிருப்பதாகக் கேள்விப்பட்டான். இவ்வர்த்தகனுக்குச் சமீபகாலத்தில் காது செவிடுபட்டுப்போன சங்கதி சிநேகிதனுக்குத் தெரியாது. தன் செவிட்டுத் தன்மையைச் சிநேகன் அறிந்துகொள்ளாவண்ணம் சமர்த்தித்து வரவேண்டுமென்னும் நோக்கத்துடன் அங்கேபோய் இவ்வாறு பேசவேண்டுமென்று தீர்மானித்துக்கொண்டான். எவ்வாறெனில், நான்போய் என் நண்பனைக் கண்டவுடன் ஸலாஞ்செய்து அருகிலுட்காருவேன். அவன் என்வரவை அன்புடனேற்றுக்கொள்வான். நான் அவனைநோக்கி உம்முடைய தேக சௌக்கியம் இன்றைக்கு எப்படியிருக்கிறது என்பேன். கொஞ்சங்குணமாயிருக்கிறதென்று சொல்லுவான். என்ன ஆகாரம் புசிக்கிறீர் என்பேன். கஞ்சி குடிக்கிறேன் என்று சொல்வான். எந்த வைத்தியர் உமக்குச் சிகிச்சை செய்கிறார் என்பேன். இன்னபெயருடைய வைத்தியர் என்று சொல்வான். கடவுள் அவருக்குக் கருணைபுரியட்டும் என்று கூறி பிறகு அவரிடம் உத்தரவு பெற்றுக்கொண்டு திரும்பிவிடுவேனென்று, இவ்வாறு தீர்மானித்துக்கொண்டு சிநேகனிடத்திற்சென்று ஸலாஞ்செய்து பக்கத்திலுட்கார்ந்தான். அவனும் இவனைப்பட்சத்துடன் வரவேற்றுமகிழ்ந்தான். முன்தீர்மானஞ்செய்துகொண்ட வண்ணம்:— '

வர்த்தகன் :—இன்று உம்முடைய சௌக்கியம் எப்படியிருக்கிறது ?

சிநேகிதன் :—ஜுரம் மும்முரமாயிருக்கிறதும் தேகமுழுதும் அதிக நோக்காடாயிருக்கிறது.

வர்த்தகன் :—மெத்த சந்தோஷம். என்ன ஆகாரம் புசிக்கிறீர் ?

சிநேகிதன் :—கஞ்சிகூட ஏற்றுக்கொள்ளவில்லை.

வர்த்தகன் :—அது மிகவும் நன்மை. எந்த வைத்தியர் உமக்குச் சிகிச்சைசெய்கிறார் ?

சிநேகிதன் :—டாக்டர் ஸதாஸிவராவ்.

வர்த்தகன் :—கடவுள் அவருடைய பரிகாரத்திற்குக்கருணை செய்வாராக. குட் மார்னிங் ஸார், நான் போய்வருகிறேனையாவென்றுகூறி விடைபெற்றுக்கொண்டு போய்விட்டான்.

கணக்கில் கெட்டிக்காரன்.

வாத்தியார் :—ஆறில் பாதியென்ன ?

பையன் :—அந்தக் கணக்கு எனக்குத் தெரியவில்லை சார் !

வாத்தியார் :—இரண்டு மனிதர் ஆறு ரூபாய்களைத் திருடினார்களென்று வைத்துக்கொள். அதைப் பங்கிட்டுக் கொண்டால் ஒவ்வொருவனுக்கும் எத்தனை ரூபாய் கிடைக்கும்.

பையன் :—(அவனுடை தகப்பன் மாஜிஸ்டிரேட்) ஒவ்வொருவனுக்கும் 14 நாள் கடுங்காவல் தண்டனை கிடைக்கும் சார்.

தளோப்பர் வாஸனையும் ரவிக்கைமணமும் கம்மென்றிருந்தது.
“சதிராடின இடத்தில் வெகுமணமாயிருந்தது” என, “ஆம். குளோப்பர்வாஸனையும் ரவிக்கைமணமும் கம்மென்றிருந்தது” [என்றான்.

மெல்லிய கம்பியாயினும் மிருக்க பளுவைத் தூக்கும்.

விநோதக்கொத்து.

யுத்தசமயத்தில் ஓர் கப்பல்க்காரன் தன் கைகெடியாரத்தை ரிப்பேர் செய்யவேண்டி ஓர் வாச் ரிப்பேரரிடம் சென்றான்.

வாச் ரிப்பேரர் :—இப்போது என்ன செய்யவேண்டும்?

கப்பல்க்காரன் :—இதை சரிப்படுத்திக்கொடுக்கவேண்டும்.

வா—ரி :—இதை சரிப்படுத்துவதைப்பார்க்கிலும் புதிது ஒன்று வாங்கிக் கொள்ளலாம். இதை சரிப்படுத்துவதற்கு இதன் புதுவிலையைவிட இரண்டு மடங்கு பிடிக்கும்.

க :—இதன் சரியான விலையைவிட இரண்டு மடங்கு தருகின்றேன். ஏனென்றால் இதிலிருக்கும் ஆசை எனக்கவ்வளவு.

வா—ரி :—சரி, இதற்கு விலை என்ன கொடுத்தீர்கள்?

க :—ஏன்? இதற்கு தலையில் ஓங்கி ஒரு அறை அறைந்து வாங்கினேன். உனக்கு 2 அறை தருகின்றேன்.

வா—ரி :—வேறே ஒருவரிடம் போய் பார்த்துக்கொள்ளுங்கள். என்னிடம் இதற்கு சரியான ஆயுதமில்லை. காலை வந்தனம் ஐயா.

உன்னிடத்தில் ஒரு முத்தங்கொடுக்கிறேன் அதை அவளுக்கு சேர்ப்பித்து விடு.

ஓர் பெண்பிள்ளை கழுதைகளை ஓட்டிக்கொண்டு போகும்போது ஒரு கனவான் பெண்ணே! நீ எந்த ஊர் என்று கேட்டார்.

பெண் :—ஐயா! எவ்வளவு அருமையாய் கூப்பிடுகின்றீர்கள் நான் இருப்பது வள்ளியூர்.

கனவான் :—வள்ளியூரில் கிருஷ்ணம்மாளைத் தெரியுமோ?

பெண் :—தெரியும், அவளுக்கென்ன?

கனவான் :—நான் ஒரு முத்தம் கொடுக்கிறேன் கொண்டுபோய் தயவு செய்து அவளுக்குக்கொடுத்துவிடு, என்று சொல்லிக்கொண்டு தன்னிருகாங் கைளைவிரித்து கட்டியணைத்து அவளைமுத்தங்கொடுக்க வருகையில் பெண்ணானவள் பார்த்து, ஐயா! நீர் இவ்வளவு அவசரமாய் முத்தம்கொண்டுபோய் கொடுக்கச்சொல்லுவதால் என்னால் முடியாது எனக்கு முன்னாலேயே ஓடிப்போய் சேரும் கழுதையிடம் தயவுசெய்து கொடுத்தனுப்புங்கள்.

ஆசையால் மூண்டதீ அகத்தின்மேல்.

ஒரு கனவான் ஒரு பெண்ணின்மேலாசை கொண்டிருந்தும் அவள் கிட்டாததாய் அதிக வருத்தப்பட்டு ஒருநாள் அவள் வீட்டின் வாசலண்டை போய் தீ. தீ. தீ. தீ. என்று சத்தமிட்டார். இதைக்கேட்ட பெண் வெகு அவசரமாய் கதவைத் திறந்து எங்கே. எங்கே. எங்கே. எங்கே என்று பரபரப்பாய் கேட்டாள். அக்கனவான் தன்னெஞ்சின்மீது கையை வைத்துக் கொண்டு இங்கே. இங்கே. இங்கே. இங்கே. என்றார்.

மதராஸ் யூனானி மெடிக்கல் ஆல், 439 நெ., சௌகார்பேட்டை, சென்னை.

வாந்திபேதி, சீதபேதி, ரத்தபேதிக்கு மருந்து.

வாந்திபேதி என்னும் கொடியவியாதிக்கு இம்மருந்து ரொம்பவும் அநுகூலத்தைக் கொடுக்கக் கூடியதாயிருப்பதால், ஒவ்வொருவரும் இம்மருந்தைக் கைவசத்தில் வைத்துக்கொள்வதுநலம். அரை அல்லது ஒருமணி நேரத்திற்கொருதரம் டைரக்ஷனிற் கூறியுள்ளபடி வியாதி சுகப்படும் வரையில் கொடுத்துவரவும். கடவுளின் கிருபையினால் இவ்வியாதியை வெகுசுளுவாய் சவுக்கியப்படுத்தி விடுகின்றது. அநேகர் சௌக்கியமடைந்திருக்கிறார்கள். இன்னும் சீதபேதி, ரத்தபேதி எவ்வளவு கோரமாயிருப்பினும் இதை உபயோகப்படுத்திய மூன்றே வேளையில் யாவரும் பிரமிக்கும்படியான சுகுணத்தைக் கொடுக்கின்றதாகையால் இதை மஹா சஞ்சீவியென்று சொல்லலாம். கிரயம் புட்டி 1 - க்கு அணா 8.

பெண்டாட்டி சொல்கேட்க பத்துரூபாய் மிகுதி.

வர்த்தகன் :—நான் இன்றைத்தினம் சிறிதும் பிரயாசமின்றி ரூபாய் பத்து சம்பாதித்தேன்.

விவசாயி :—அது எவ்வாறையா ?

வர்த்தகன் :—ஒரு ஜண்டிக் கடன்காரப்பயல் எனக்கு ஐம்பது ரூபாய் கொடுக்கவேண்டியிருக்கிறது. அதைக் கோர்ட்டு மூலமாக வசூல்செய்ய ஒரு வக்கீலை அபிப்பிராயங் கேட்டேன். அவர் ஒரு வாரத்திற்குள் ஜட்ஜ்மெண்டு வாங்கிப் பணத்தை வசூல்செய்து தருவதாக எனக்குத் தைரியங்கூறினார். என் மனைவி அதைக்கேட்டுத் தோலே தோல் அநுகூடவேகூடாது. அங்கேபோய்ச் செலவிடும் ரூபாய் பத்தும் இன்று நடக்குத் தெருவிற்கிடந்தகப்பட்டதாக எண்ணிக்கொள்ளுங்கள். கெட்டமாட்டைத் தேடுவதற்குள் எட்டுமாட்டைச் சம்பாதித்துக் கொள்ளலாம் என்றாள். இது உண்மையேயாகையால் கோர்ட்டுக்குப்போகாமல் நின்றுவிட்டேன். பத்து ரூபாய் எனக்கு மிகுதியாயிற்று. இது கஷ்டமில்லாத சம்பாத்தியமல்லவா ?

அவளே வந்தழைத்தாள்.

துரைசானி :—ஓ டாக்டர்! தயைசெய்து சீக்கிரம் என் வீட்டுக்கு வரவேண்டும்.

டாக்டர் :—அவ்வளவு அபாயஸ்திதியில் வியாதியாயிருக்கிறவர் யாரம்மா ?

துரைசானி :—டாக்டரே! நான் தான். தங்களை வந்து அழைத்துக்கொண்டுபோக என் வீட்டிலொருவருமில்லை. நான் தனிமையாயிருக்கிறேன். ஆகைபால் நானே நேரில் வந்தேன்.

சாட்சியை மரியாதையாய்ப் பேசவேண்டுமாம்.

மாஜிஸ்டிரேட் :—(சாட்சியைப்பார்த்து) இப்போது உனக்கு வயதென்ன ?

சாட்சி :—என்வயது 65 - இருக்கலாம். ஆனால் தங்களுக்கு 30 - வயதுதானிருக்குமென்று நிதானிக்கிறேன், தங்களைப் பார்க்கிலும் நான் பெரியவனன்றோ? சற்று மரியாதையாகவே பேசுங்கள், துரைகளே.

கெட்ட நடத்தைகள் ஒட்டு வியாதியையொக்கும்.

விநோதக்கோத்து—(தொடர்ச்சி.)

புதிதாய் கலியாணஞ்செய்துகொண்ட துரையொருவர் இறக்கும் தருணமாயிருந்தமையால் தன் மனைவியையழைத்து என்னருமைக் கண்ணே! என்செல்வப்பெண்ணே! நானிவ்வுலகைவிட்டுப் போகும்காலம்வந்துவிட்டது. ஆதலால் நான் உனக்குக் கடைசியாய் கூறும் புத்தியாவது, நமது ஜானை மணந்துகொள். அவன் ரொம்ப நல்லவன் பலவான். உன் வேலைகளுக்கெல்லாம் தக்கவனே என்று சிபார்சு செய்தார். இதைக்கேட்ட மனைவி, என்னருமைக் காதலா! அவ்வருத்தத்தை தாங்களடையவேண்டியதில்லை. ஏனென்றால் ஜானும் நானுமாக இதைப்பற்றி முன்னமேயே கலந்துகொண்டோம்.

வாலிபன் :—உன் கன்னத்தில் கற்கண்டு இருக்கிறாப்போலிருக்கின்றதே.

பெண் :—அது தின்பதற்கு யோக்கியமானதல்ல.

கிழமனிதன் :—உன் நாய் என்காலை கடித்து ஒரு துண்டை எடுத்துக்கொண்டு போயிற்று. எனக்கு நோய்பலமோ ஜாஸ்தியாகவே யிருக்கின்றது. நாய்களை இப்படி வளர்ப்பது தகுதியல்ல.

நாயின் சொந்தக்காரன் :—நான் அதை சைவமாகக் கொண்டுவரவேண்டுமென்று பல முயற்சிகள் செய்தும் பயன்படவில்லையே! என்செய்வது ஐயா?

ஒரு கனவான் வெகு ஆடம்பரமான உடை யுடுத்திக்கொண்டு தன் வேலைக்காரனை யழைத்து நான் எப்படியிருக்கின்றேனென்று பார் என்றார். ஒரு சிங்கத்தைப்போல இருக்கின்றீர்கள் என்றான். இதைக்கேட்ட கனவான் சிங்கத்தை நீ யெங்கே பார்த்தாய் என்றார்? ஏன்? தங்கள் வீட்டுக்கு சமீபமிருக்கும் வண்ணானுக்குக்கூட ஒன்று இருக்கின்றதே. கனவான் நீ கழுதையைப்பற்றியா பேசுகின்றாய் என்றார். அதுதான் அதுதான் என்று சொன்னதினால், வேலையிலிருந்து தள்ளப்பட்டான்.

விகட காயா கற்பம்.

அரியபிள்ளை சிறியபிள்ளை ஆனரேபில் ரங்கபிள்ளை—தாணிவீர தடியபிள்ளை தாசில் வெங்கடராமபிள்ளை—இவர்களுடைய தலைகளையெல்லாம் ஒன்றாய்ச்சேர்த்து உரலில் போட்டிடித்து உழக்குத்தண்ணீர்விட்டுக் காய்ச்சி அரைப்படியாய் சுண்டவைத்து, 40 நாளைக்கு இருவேளையும் சாப்பிட்டுவரின் சதாகாலம் காயத்தை அழியாமல் காப்பாற்றிக்கொள்ளலாம்.

சூரியபகவான் ஏமாந்தான்.

கெண்டக்கி மாகாணத்தில் சேவல்போல் கூவும் ஓர் கிழவன் இருந்தான். ஒருநாள் இரவில் விடிய ஜாமத்திற்கு அவன் கோழி கூவினான். இக்கிழவன் கூவின சமாச்சாரம் சூரியபகவானுக்குத் தெரியாதாகையால் சேவலுடைய சத்தந்தானென்றெண்ணி சடுதியில் உதயமாய் விட்டான்.

சொல்வோன் மூடனாயினும் அச்சொல் மூத்தோர்சொல்லாயின், அச்சொல்லைக் கவனிப்பதைவிட்டு அவன் மூடத்தனத்தைக் கவனியாதே.

மதராஸ் பூரானி மெடிக்கல் ஆல், 439 தெ., சௌகார்பேட்டை, சென்னை.

படைகொல்லி.

படையைத் தடையின்றிக்கோல்லும் பக்காமருந்து.

மேகப்படை நமைச்சல் சொரி சிரங்கு முதலியவைகளையும் தொடைகளின் சந்துகளிலும் இடுப்பு அடிவயிறு முதலியவைகளிலும் சகிக்கொணாத நமைச்சலுடன் படர்ந்துவரும் மேகப்படை கருநிறமுள்ளதடிப்பு சிட்டை முதலியவைகளையும் இன்னும் தேகத்தின் எந்த பாகத்திலும் உண்டாகும் படைதடிப்பு எச்சற்றழும்பு சொரி வரட்டுச்சொரி, நமட்டுச்சொரி முதலிய சர்ம வியாதிகளையும் 3-நாளையில் குணப்படுத்திவிடும். அரிப்பு நமைச்சல் தினவுகளை ஒரேநாளையில் சௌக்கியப்படுத்திவிடும். முற்கூறியுள்ள வியாதியினால் துன்பப்படுகிறவர்களுக்கு இம்மருந்து சஞ்சீவிக்கொப்பாகவிருக்கிறது. இதை உபயோகப்படுத்திய முதல் நாளிலேயே ஆனந்தமடைவார்கள். கிராம் புட்டி 1-க்கு அணா 8.

உடனே சம்மதித்தாள்.

அவன் :—நீ என்னை மணஞ்செய்துகொள்ள சம்மதிக்காவிடில் உனக்கு முன்பாகவே நான் கழுத்தில் சுருக்கிட்டுக்கொண்டு உயிரை மாய்த்துக்கொள்வேன்.

அவள் :—ஆனால் கயிறு கொண்டுவரட்டுமா?

அவன் :—உடனே கொண்டுவா. உனக்கு முன்னேயே கலியாணம் செய்து கொள்ள ஏற்பாடு செய்கிறேன்.

அவள் :—அப்படியானால் உன் பிரேதத்தைத் தூக்கிக்கொண்டுபோவதற்கு, முன்னே ஒரு ஆளைகொண்டுவந்துவைத்துவிட்டுப் பிறகு உயிரை மாய்த்துக்கொள்.

குற்றவாளி கூச்சல் போட்டான்.

ஜட்ஜ் :—சேவகா! யாராயிருந்தாலும் கூச்சல்போடுகிறவனை வெளியே தள்ளிவிடு.

கைதி :—ஹுர்ரா—ஹோ—ஹா—(என்று உரத்த சத்தமிட்டான்.)

சேவகன் :—அடே! நீ ஏன் கூச்சல் போடுகிறாய்?

கைதி :—நம்முடைய ஜட்ஜ் ஒருதடவைசெய்த உத்தரவை மீண்டும் மாற்றுகிறதில்லையே. என்னையும் வெளியே தள்ளிவிடுவாரல்லவா?

அவளுடைய தோள்மேல் கையைவைத்தான்.

தாய் :—ரங்கசாமியினுடைய கை உன்தோள்மேலிருந்ததை நான் பார்த்தேன். இது தகாத காரியமன்றோ?

மகள் :—அம்மா! அவனுடையகை வேறொரு பெண்ணின் தோள்மேல் வைக்கப்பட்டால் அது இதைப்பார்க்கிலும் அதிக தகாத காரியமல்லவா?

வாலினால் ஆகாரந்தின்ற மிருகம்.

கோபாலன் :—இது என்ன அதிசயமையா! நான் ஒரு மிருகத்தைப் பார்த்தேன். அது தன்னுடைய வாலினால் ஆகாரம் உட்கொள்ளுகிறது.

கிருஷ்ணசாமி :—அதன் பெயரை நீ கேட்டுத்தெரிந்துக் கொள்ளவில்லையா?

கோபாலன் :—அதன் பெயரை நான் கேளாமலிருப்பேனா? நான் என்ன சாமான்ய ஆசாமியா? அனேகரிடத்தில் கேட்டேன். அப்பப்ப! எவருக்குமே தெரியவில்லை. ஆனால் கடைசியாக ஒரு மனிதன் மாத்திரம் அதை யானை என்று சொல்லிவிட்டான்.

கோபத்தையாள்வதே மேலான ராஜாங்கம்.

விநோதக்கோர்த்து—(தொடர்ச்சி.)

ஒரு பிச்சைக்காரனுக்கு ஒரு பழைய சொக்காய் தானம் செய்ய, அவன் அதைப்பரிசோதித்துப்பார்த்து கடிகாரஜேப்பில்லையென்று முணுமுணுத்தானாம்.

ஒரு செவிடன் ஜவுளிக்கடைக்குப்போய் ஒரு கைக்குட்டையை விலைக்குக் கேட்க, கடைக்காரன் காலணாவென்று சொன்னான். பதினணாவா? பத்தணாவிற்குக்கொடுக்கக்கூடாதா? என்று உரக்கக் கூவினான். காலணா, காலணா என, வியாபாரி உரக்கச்சொன்னான். அப்பொழுது அந்த செவிடன், அப்படியானால் மூன்றணாவிற்குக் கொடுக்கிறாயா என்று கேட்டான்.

காந்தாரி காமாக்ஷியம்மாள், போஸ்டாபீசுக்குப்போய் ஜன்னலண்டை நின்று போஸ்டு மாஸ்டரைப்பார்த்து, ஐயா எங்களவருக்கு ஏதாவது கடிதம் வந்திருந்தால் கொடுங்கள் என்றாள்.

போ-மா.—உங்களவர் யார்?

கா.—எங்களவர் யாரா? எங்களவர் எங்களவரே.

போ-மா.—அவர் பெயரென்ன?

கா.—அவர் பெயர் உமக்கு என்னத்திற்கு? அவர் பெயர் கடிதத்தின் மீதேயிருக்கும்.

போ-மா.—பெயர் சொன்னால் கடிதம் இருக்கிறதோ யில்லையோவென்று பார்க்கிறேன்.

கா.—இது என்ன வம்படி! பெயர் சொல்லச்சொல்லுகிறான்! சரி! அவர் பெயர் சாஸ்திரி.

போ-மா.—யாதொரு கடிதமும் வரவில்லை.

கா.—என்னை வீணாகப் பெயர் சொல்லும்படி தொந்திரவு செய்யாமல் அந்த வார்த்தை முதலிலே சொல்லப்படாதா? என்று சொல்லிவிட்டு, நான் மகா பெயர் சொல்லிவிட்டேன். அவர் தெரிந்துகொண்டுவிட்டார் என்று தன் சாமர்த்தியத்திற்கு தன்னுள்ளே சந்தோஷித்துக்கொண்டு வீட்டிற்குப் போனாளாம்.

கொஞ்சம் பணம் தனக்குக் கைக்கடன் கொடுக்கும்படி ஒருவன் தன் சிநேகிதனுக்குக் கடிதமெழுதி முடித்தபிறகு பக்கத்தில் இன்னும் இரண்டு வரி எழுதினானாம். இக்கடன் கேட்க எனக்கு மிகவும் லஜ்ஜையாயிருக்கிறபடியால் இக்கடிதத்தைப் போஸ்டாபீசுக்குக் கொண்டுபோன வேலைக்காரனுக்குப்பின்னாலே மற்றொருவனை அனுப்பி அதை வாங்கிக்கொண்டு வரச்சொன்னேன். ஆனால் அதற்குள் அவன் அந்தக்கடிதத்தை தபாற்பெட்டியிற் போட்டுவிட்டான்" என்று அதில் எழுதியிருந்தது.

நீ நன்னடக்கையுடையவனானென்று முதலில் நீ உன்னையறிந்துகொண்டால் பிறகு எல்லாரும் உன்னையறிந்து மதிப்பார்கள்.

மதராஸ் யூநானி மெடிக்கல் ஹால், 439 மி., சௌகார்பேட்டை, சென்னை.

(அழுதவர் சிறிப்பார்.)

தேள்கொட்டு மருந்து.

இது புதிதாய்க் கண்டுபிடிக்கப்பட்ட நேர்த்தியான ஔஷதம். இதை உபயோகப்படுத்திய அந்த நிமிஷத்திலேயே கொரேபாதையைத் தணித்து குளிர்ச்சியுண்டாக்கிவிடும். தூக்கிக்கொண்டு வந்தவன் களிப்புடன் செல்லுவான். ஒவ்வொரு வீட்டிலும் இது அவசியமிருக்க வேண்டும். கிரயம் புட்டி 1-க்கு அணு 4.

தாலியறுத்தால் தலைமொட்டை யடிப்பார்களோ?

கலியாணப்பெண்ணும் பிள்ளையும் ஊஞ்சலாடும்போது பெண் கண்ணைக்கசக்கிறது. "ஏன் குழந்தை கண்ணைக்கசக்கிறாள்" என்று பிள்ளைக்குத் தகப்பன்கேட்க, "தென்கலையார் வீட்டுப்பெண் வடகலையார் வீட்டில் வாழ்கைப்படுகிறது. தாலியறுத்தால் தலைமொட்டை யடிப்பார்களே என்று குழந்தை கலங்குகிறது" என்று பெண்ணுக்குத் தாயார் சொன்னாள்.

கட்டி முத்தமிட்டதற்கு வேதவாக்கியம்.

"எதிர்வீட்டு சாலோமோனை நீ ஏன் கட்டிமுத்தமிட்டாய்?" என்று தாய், மகளைக்கேட்க "பிறர் உனக்கெப்படிச் செய்ய வேண்டுமென்று நீ விரும்புகிறாயோ அப்படியே நீயும் பிறருக்குச் செய், என்று வேதவாக்கியம் சொல்லியிருக்கிறதல்லவா? அதனால்தான் அப்படிச்செய்தேன்," என்று மகள் சொன்னாள்.

அப்பா குதிருக்குள் இல்லை.

கடன்காரன்வந்து வாசலில் உட்கார்ந்திருப்பதைக்கண்டு, தான் குதிருக்குள் மறைந்துகொண்டு, அப்பா யில்லையென்று சொல்லிப்போடு என்று பிள்ளையிடத்தில் சொன்னான். பையன் வாசலில் போய், "என் அப்பா குதிருக்குள் இல்லை" என்று கடன்காரனிடத்திற் சொன்னான்.

படுக்கையில் தேள்.

"படுக்கையில் தேள்" என்று மனைவி சொல்ல, "வாசலில் புருஷர் யாராகிலுமிருந்தால் அழைத்துவா என்றான். "தாங்கள் புருஷராச்சே," என்றவள் சொல்ல, "ஆஹா! நல்ல சமயத்தில் ஞாபகப்படுத்தினுபடி சீக்கிரத்தில் கொம்பெடுத்துவா அடித்துப் பார்ப்போம்," என்றான்.

ஐயங்கார் பரிபாஷை.

பெருமாள் கோவில் பரிசாரகன் அம்மனிடத்திற் சென்று, "சுவாமி! திருக்கோவிலிலே திருமடப்பள்ளியிலே திருநாய் புகுந்தது. திருத்தடி எடுத்துத் திருச்சாத்தும்போது, அது திரு லொள் லொள்ளென்றது," என்றான். ஐயங்கார் பரிபாஷை அம்மனுக்குத் தெரியாதாகையால், சங்கதி என்ன வென்று வினவ, "சமையல் அறையில் நாய் புகுந்ததாய், தடியாலடிக்கக் குறைத்தது" என்று தெரிந்துகொண்டான்.—

தொழிலற்ற கல்விமான் மழையற்ற கருமேகம்.

நினைத்த எண்ணைச் சொல்லுதல்.

1	3	5	7	9	11	13
15	17	19	21	23	25	
27	29	31	33	35	37	
39	41	43	45	47	49	
51	53	55	57	59	61	
63						

2	3	6	7	10	11	14
15	18	19	22	23	26	
27	30	31	34	35	38	
39	42	43	46	47	50	
51	54	55	58	59	62	
63						

4	5	6	7	12	13	14
15	20	21	22	23	28	
29	30	31	36	37	38	
39	44	45	46	47	52	
53	54	55	60	61	62	
63						

8	9	10	11	12	13
14	15	24	25	26	27
28	29	30	31	40	41
42	43	44	45	46	47
56	57	58	59	60	61
62	63				

16	17	18	19	20	21
22	23	24	25	26	27
28	29	30	31	48	49
50	51	52	53	54	55
56	57	58	59	60	61
62	63				

32	33	34	35	36	37
38	39	40	41	42	43
44	45	46	47	48	49
50	51	52	53	54	55
56	57	58	59	60	61
62	63				

மேலே காட்டியபடி 6 கார்டுகளை எடுத்துக்கொண்டு ஒவ்வொன்றிலும் இக்கார்டுகளில் பதிந்திருக்கும் எண்களைக் குறித்துக்கொள்ளவேண்டும். பிறகு இவ்விதமாக எண்களைக் குறிக்கப்பட்ட 6 கார்டுகளையும் ஒருவரிடத்திற் கொடுத்து அவற்றுள் ஒரு எண்ணை நினைத்துக்கொள்ளும்படி சொல்ல வேண்டும். பிறகு அவர் நினைத்த எண் எந்தெந்தக் கார்டுகளில் இருக்கின்றனவோ அவற்றைமட்டும் வேருக்கி யெடுத்துக்கொண்டு அவற்றுள் ஒவ்வொரு கார்டிலும் துவக்கத்திலுள்ள எண்களைமட்டும் கூட்டிப்பார்க்கின், நினைத்த எண்ணினைக்கொடுக்கும். உதாரணமாக 60 (அறுபதை) நினைத்துக் கொள்வோம். இந்த 6 கார்டுகளுள் 4 கார்டுகளில் மட்டும் 60 என்னும் எண் குறிக்கப்பட்டிருக்கின்றது. இந்த 4 கார்டுகளின் ஆரம்ப எண்களாகிய 4+8+16+32 என்னும் நான்கு தொகையையும் கூட்டிப்பார்த்தால் 60 வருகிறதைக்காண்க.

கல்வியைக்கற்பது முக்கியமாயினும் அதைப்போல் நடப்பது அதனினு முக்கியம்.

மெய்மையைக் காப்பாற்றிலும் கைக்கட்டுத் திறமட்ட் பணத்தைக் காண்டாய்.

மதராஸ் யூனானி மெடிக்கல் ஆல், 439 செ., சௌகார்பேட்டை, சென்னை.

நேத்திர ரட்சணி.

இந்த மருந்தை டைரக்ஷனிற் சொல்லியபடி கண்ணில் பிரயோகம் செய்துவந்தால் கண் நோய், கண் குற்றல், நீர் வடிதல், கண்மங்கல் முதலிய ரோகங்களை நிவர்த்திசெய்வ தன்றியில் இதை சதாகாலம் உபயோகித்து வருவதினால் எவ்வித கண்ரோகமும் வராது. கிரயம் புட்டி 1-க்கு ரூ. 1.

நாங்களெல்லோரும் அயோக்கியர்களா?

ஒரு பிரசங்கசபையில் அநேக ஜனங்கள் கூடி அங்கு நடக்கும் உபந்நியாசத்தைக் கேட்டுக்கொண்டிருந்தார்கள். அப்போது பிரசங்கியானவர் இன்னின்ன குணங்களையுடையவன் யோக்கியனென்று கூறிவருஞ்சந்தர்ப்பத்தில், அச்சபையிலிருந்த ஒருவன் எழுந்து நின்று "ஐயா பிரசங்கியாரே! நில்லும் நில்லும். உம்முடைய அதிகப்பிரசங்கத்தைச் சற்றே நிறுத்தும். நீர் இப்போது சொல்லிக்கொண்டுவந்த குணங்களையுடையவரே யோக்கியரென்கிறீரே? அப்படியானால் நாங்களெல்லோரும் அயோக்கியர்களா?" என்று கேட்டானாம்.

அவளை முத்தங்கொடுத்ததில் பேதா பேதம்.

அடிக்கடி வெளியே பிரயாணஞ்செய்துகொண்டிருக்கும் ஒரு வர்த்தகன் அதிபால்யையான தன் மனைவியை நோக்கி, "என் அன்பிற்சிறந்த கண்ணாட்டியே! நாளுக்கு நாள் உன் மீதெனக்குள்ள பக்ஷம் குறைந்து வருகிறதென்று நீ யென் மேற்குறை கூறுகிறாயே. நான் பிரயாணத்திலிருந்து வீட்டுக்குத் திரும்பிவந்தவுடனே, முதலில் உனக்கு முத்தங்கொடுத்தபிறகே என்னுடைய மற்ற முக்கியமான காரியங்களைப்பார்க்கிறேன்." என்றான்.

மனைவி:—"ஆம் என் பிராணநாயகா! அதற்குச் சந்தேகமில்லை. தாங்கள் என்னை விவாகஞ்செய்யுமுன் அடிக்கடி எனக்குக் கொடுத்துவந்த முத்தத்தின் மாதிரியை இப்போது முற்றிலும் மறந்துவிட்டீர்களே! இதைக் கவனித்தீர்களா?"

முத்தங்கொடுப்பதற்குப் பிறருடைய ஒத்தாசையும் வேண்டுமோ?

கிருஷ்ணன்:—லட்சுமீ! உன்னை நான் கட்டியணைத்து முத்தமிட்டால் நீ பிறருடைய ஒத்தாசையை நாடுவையோ?

லட்சுமி:—"ஆ! சௌந்தரியத்திலும், சௌரியத்திலும், திடகாத்திரத்திலும், ஆண்தன்மையிலும் சிறந்தவரான தாங்களே மலைபோல் என்முன்னே நிற்கும்போது வேறொருவருடைய உதவி எனக்கேதுக்கு? என்றுசொன்னீர்களே?"

ஒரு நியாயாதிபதியினிடத்தில் ஒரு ஸ்திரீசென்று, இராமன் என்பவன் என்னை உற்றுப்பார்த்தான் என்று முறையிட்டுக்கொண்டாள். அப்போது நியாயாதிபதி இராமனை வரவழைத்து நீ ஏன் இவளை உற்றுப்பார்த்தாயென்று கேட்க, அவ்விராமன், ஐயா! இவள் என்னைப்பார்த்தமையால் நானும் பார்த்தேன் என்றான். மீண்டும் நியாயாதிபதி அந்த ஸ்திரீயை நோக்கி நீ ஏன் இவனைப்பார்த்தாயென்று கேட்டபோது, அந்தஸ்திரீ, நான் இவனைப்பார்த்ததேயில்லை என்று சாதித்தாள். அப்போது நியாயாதிபதி சற்று யோசித்து, நல்லது நீ அவனைப் பாராதிருந்தால் அவன் உன்னைப் பார்த்தது உனக்கெப்படித்தெரிந்தது என்று வழக்கைத்தள்ளிவிட்டார்.

பூரணமாய் நிறைந்த வயிறு பொன்னுபதேசத்திற்குச் செவிடு.

விநோதக்கொத்து—(தொடர்ச்சி.)

ஒரு மகாபுருஷர் மதத்தைக்குறித்து ஏதோ பெரிய உபன்னியாசம் செய்யப்போகிறார் என்று கேட்டு ஆயிரக்கணக்கான ஜனங்கள் கூட்டம் கூடினார்கள். கொஞ்சநேரத்தில் அவர் வந்து தனக்கு ஏற்படுத்தியிருந்த உயர்ந்த இடத்தில் ஏறிநின்று "ஓ ஜனங்களே! நான் சொல்லப்போகும் பெரிய விஷயம் உங்களுக்குத்தெரியுமா?" என்று கேட்டார். அப்பொழுது அந்த ஜனங்கள் தமக்குத்தெரியாதென்று பதில் சொன்னார்கள். அவ்வாறானால் நான் இப்பொழுது சொல்லியும் உபயோகமில்லை என்று பகர்ந்து அவர் கீழே இறங்கிப்போனார். ஜனங்கள் அனைவரும் முகம் வெறுத்தார்கள். கொஞ்சநேரத்திற்குப்பிறகு அவர் மறுபடி பீடத்தின்மீதேறி "ஓ ஜனங்களே! நான் சொல்லப்போகும் பெருத்த விஷயம் உங்களுக்குத்தெரியுமா?" என்று இரண்டாவது தடவை கேட்டார். ஜனங்கள் எல்லாரும் எங்களுக்குத் தெரியுமென்று சொன்னார்கள். அப்படியானால் நான் இப்பொழுது சொல்ல வேண்டியதவசியமில்லை என்று உரத்துசொல்லிவிட்டு அவர் கீழே இறங்கிப் போனார். இன்னும் கொஞ்சநேரம் கழித்து அவர் பீடமேறி "ஓ ஜனங்களே! நான் சொல்லப்போகும் பெருத்த விஷயம் உங்களுக்குத்தெரியுமா?" என்று கேட்டார். அவரைச் சிக்கவைக்க நினைத்து எங்களுக்குள் சிலருக்குத் தெரியும் சிலருக்குத்தெரியாது என்று பதிலுரைத்தார்கள். "அவ்வாறானால் உங்களுக்குள் தெரிந்தவர்கள் தெரியாதவர்களுக்கு சொல்லுங்கள்." என்று மொழிந்து அந்த மகாபுருஷர் கீழேயிறங்கி சபையைவிட்டுப்போனார்.

விநோதார்த்தப் பதங்கள்.

"ஏன் அம்மா ஒரு நாழிகையாய் என்னை உற்றுப்பார்த்துக்கொண்டிருக்கின்றாய்." என்று ஓராடவன் ஓர் ஸ்திரீயைக்கேட்டான். அதற்கு அவள் "தங்களைப்பார்த்தால் என் கணவன்போலிருந்தது, ஆகையாற்றான் அப்படிப் பார்த்தேன், கோபிக்கவேண்டாம் பிரபு." என்று சொல்லிப்போய் விட்டாள்.

"உன் மனைவி உன்னை எவ்விதமாய்க் கோபித்தபோதிலும் நீ ஏன் பதில் சொல்லுகிறதில்லை." என்று ஒருவன் மற்றொருவனைக் கேட்ட போது, அவன், "போ போ. பைத்தியக்காரா! என் மனைவிக்கு நான் பயப்பட்ட ஆசாமியா? அவள் கொட்டத்தை ஒரு நொடியில் அடக்கி விடுவேன். ஆனால் இடிபோன்ற அவளுடைய தொனிக்கல்லவோ நான் அச்சமுற்றிருக்கின்றேன்." என்றான்.

"இந்த வருஷத்தில் விவாகம் அதிகமாய் நடந்திருக்கிறது." என்று ஒருவன் மற்றொருவனுடன் கூறியபோது, அருகிலிருந்த வேறொருவன், "ஆம் புருஷர்களைவிட ஸ்திரீகளுக்குத்தான் அதிக விவாகம் நடந்திருக்கிறது." என்றான்.

எந்த விஷயத்தை எவ்வளவு அதிகமாய் மறைத்துவைக்க முயல்கின்றனையோ அவ்வளவு சீக்கிரத்தில் அது வெளியாய் விடும்.

மதராஸ் யூநானி மெடிக்கல் ஆல், 439 கெ., சௌகார்பேட்டை, சென்னை.

உரோமசங்காரி.

இதில் கொஞ்சமெடுத்துத் தண்ணீரிற்கலந்து உரோமமுள்ள இடத்தில் மொத்தையாய் பூசி 5 நிமிஷத்திற்கு பிறகு ஒரு கடுதாசிக்கார்டினாலாவது பனையோலைத் துண்டினாலாவது வழித்தால் ஷை மருந்து தடவிய இடத்திலுள்ள உரோமங்கள் முழுதும் இலகுவாய் நீங்கிவிடும். வேக்காடு, எரிச்சல் முதலாகிய பாதைகளொன்றும் உண்டாகாது. ரொம்ப நாசுக்கான மருந்து. இதின் கிரயம் டப்பி 1-க்கு அணா 8.

அவளழகைக்கண்டு போதைகொண்டான்.

விசாலாட்சி:—ராமா! நீ நேற்றிரவு என்னிடம் வந்தபோது அதிக போதையோடு வந்தனையே! வெகு நன்றாயிருக்கிறது!

ராமன்:—ஆ! என் கண்ணாட்டி! உன்னழகைக்கண்டன்றோ நான் வந்தவுடனே மயங்கிவிட்டேன். வேறெவ்வகையிலும் என்மேற் சந்தேகப்படவேண்டாம் கண்ணே!

அவன் கற்கண்டைப் பார்க்கிலும் இன்பம் அவள் தேனைப் பார்க்கிலும் ருசி.

அவன்:—நான் கற்கண்டைப் பார்க்கிலும் இன்பம்.

அவள்:—நான் தேனைப் பார்க்கிலும் அதிக ருசி.

வேறுமனிதன்:—வீண்வார்த்தைகளால் யென்னபயன்? கற்கண்டும் தேனுங் கலந்தாலன்றோ காணக்கூடாத பரமானந்தமுண்டாகும்.

யுக்தி.

பிள்ளை தகப்பனை நோக்கி, அப்பா! உனக்குக்கீழ்ப்பட்ட வயதுடையவர்களை அடியாதே யென்று நீர் நேற்றெனக்குபதேசித்தீர்களே. அதுபோலவே என் வாத்தியாருக்கும் சொல்லும்படிக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

குற்றவாளியை நியாயாதிபதி திருப்திசெய்தல்.

நியாயாதிபதி யொருவர் குற்றவாளியை நோக்கி, "ஏனப்பா நீ யழுகிறாய்?" என்று கேட்டார்.

குற்றவாளி:—"பிரபுக்களே! நானொருநாளும் ஜெயிலுக்குப் போனதில்லையே" என்றான்.

நியாயாதிபதி:—அழாதே அப்பா அழாதே. இந்த க்ஷணமே உன்னை அவ்விடம் அனுப்பிவைக்கிறேன்.

கோழியின் வயதையறிந்த கெட்டிக்காரன்.

வாத்தியார்:—அடே சுப்பு! கோழியின் வயதை நீ யெப்படியறிவாய்? சொல் பார்ப்போம்.

சுப்பு:—பற்களினாலே ஸார்.

வாத்தியார்:—ஹஷ்! நீ பெரிய மூட்டாளாயிருக்கிறாய். கோழிக்குப் பற்களுண்டோ?

சுப்பு:—இல்லை ஸார், இல்லை, எனக்குப் பற்களுண்டு.

மலைவியின் கடுஞ்சொல் மணவாளனை உதைக்காமல் உதைத்த உதை.

விநோதார்த்தப் பதங்கள்—(தொடர்ச்சி.)

"எல்லோரும் தருமம்செய்வது புண்ணியம்" என்று ஒருவர் பிரசங்கஞ்செய்தனர். அதைக்கேட்ட சோம்பேறிப்பையனொருவன் "ஆ! ஆ! இவர் மிகவும் நல்ல பிரசங்கி, கடவுள் இவருக்குப் பூரணாயுளைக்கொடுத்து, உலகமெங்குமலைந்து திரிந்துகொண்டிருக்கச் செய்வாராக" என்று ஆசீர்வதித்து, "இதோ நான் யாசிப்பதற்கு இப்போதே புறப்படுகிறேன்" என்று சொல்லிப்போய்விட்டான்.

புருஷனும் பெண்சாதியும் எந்நேரமும் சச்சரவு செய்துகொண்டிருந்த ஓர் வீட்டிற்கு ஒருவன்வந்து, அந்தப் புருஷனைப்பார்த்து "நீங்களிருவரும் எந்நேரமும் ஏன் சச்சரவு செய்கின்றீர்கள், ஒரு மனதாயிருக்கலாகாதா?" என்றனன். அதுகேட்ட அப்புருஷன், "ஐயோ! எங்களிருவர்க்கும் ஒரே மனதிருப்பதனாற்றானே தினந்தோறும் சச்சரவாயிருக்கின்றது. அஃதெப்படியென்றால், அவள்பேரில் அதிகாரம் செலுத்த எனக்கிஷ்டம், என்பேரில் அதிகாரம் செலுத்த அவளுக்கிஷ்டம்." என்றான்.

ஓர் பிச்சைக்காரன், தன்னிடத்தில் 'மகாராஜா வார்த்தையாடினு ரென்று மற்றொருவனுடன் பெருமையாய்க்கூறினான். அதுகேட்ட அவன் ஆச்சரியப்பட்டு, மகாராஜா என்ன சொன்னாரென்றுகேட்க, "சீ நாயே! வழியில்நில்லாதே ஓடு." என்றார் எனக்கூறினான்.

ஒரு பிரபு தன்னை எல்லாரும் நன்கு மதிக்கும் பொருட்டு அழைத்தவர்வீட்டுக்கலியாணத்துக்கெல்லாம் போவது வழக்கம். ஒரு குடியவன் வீட்டுக்கலியாணத்திற்குப்போகநேர்ந்தபோது அக்குடியவன் "ஐயா, என் சந்தோஷத்தை என்னவென்று சொல்வேன், தாங்கள் வந்தது ஆயிரம் குடியவர் வந்ததுக்குச்சமம்" என்று ஸ்தோத்திரமாய் பிரபுவினிடம் சொன்னான்.

"ஐயா, உமக்குப் பிள்ளைகள் உண்டோ?" என்று ஒரு பையன் ஒரு மனிதனைக்கேட்டான். "உண்டு" என்றான். "உனக்குப் பிறந்தது எத்தனை ஊருக்குப் பிறந்தது எத்தனை" என்று கேட்டான். அந்த மனிதன் இடுக்கிட்டு நின்றான். "உனக்குப்பிறந்தது பிள்ளை ஊருக்குப் பிறந்தது பெண் அல்லவா?" என்றான்.

ஒரு தாசில்தாருக்கு கண் வைத்தியம் பார்ப்பதற்காக ஒரு கண் வைத்தியன் போனான். தாசில்தார் தன் தலைப்பாகையை யெடுத்துத் தன் முழங்காலின் மேல் வைத்திருந்தார். வைத்தியன் கிட்ட நெருங்கி, "சுவாமிகளே, இப்பொழுது கண் வைத்தியம் பார்க்கவேண்டியது தங்களுக்கா, அல்லது தலைப்பாகை வைத்துக்கொண்டிருக்கிற சின்ன எஜமானுக்கா?" என்று கேட்டான்.

உன் பாட்டனிமித்தம் உனக்குக்கிடைத்த புகழைப் பெரிதாக மதியாதே. உன் பிராயத்தினத்தினால் உனக்குக் கிடைக்கும் புகழே புகழ்.

மதராஸ் பூரானி மெடிக்கல் ஹால், 439 நெ., சௌகார்பேட்டை, சென்னை.

ஷாஜஹான் தாம்பூல் பிஹார்.

இதில் கொஞ்சமெடுத்துத் தாம்பூலத்துடன் சாப்பிட்டால் அதிக மனோரம்மியமான வாஸனையையும் மனக்கிளர்ச்சியையும் சந்தோஷத்தையும் உண்டு பண்ணும்.

சதாகாலம் மனோற்சாகத்தையும் ஆனந்தத்தையும் விளைவிப்பதன்றியில் வார்த்தையாடும்போது எதிரிலுள்ளவர்களுக்கு இன்பமான சுகந்தவாஸனையையும் புலப்படுத்தும். கிரயம் டப்பி 1-க்கு அணு 2.

ஒரு தாசியின் யுக்தி.

ஒரு தாசி தன்னிடம் வந்த மூன்று புருஷர்களில் ஒருவன் பேசாமல் அமைதியாயிருக்க மற்ற இருவரும் கலகலவென்று வீண்பேச்சுகளைக் கொட்டியளக்கத் தொடங்கினார்கள். அவள் புத்திசாலியாகையால் அவர்களை நோக்கி நீங்கள் மூன்றுபேர் வந்தது எனக்கு நூறுபேர் (100) வந்தது போலிருக்கிறதென்றாள். அதற்கவர்கள் 3 பேர் எப்படி 100 பேராவார்கள் என்று கேட்டார்கள். வீண்வார்த்தையாடாமல் காரியத்தின்மேல் கண்ணோட்டம் வைத்து மௌனமாயிருப்பவர் நூற்றில் (100) முந்தல் நிற்கும் ஒன்றுபோல்வார். நீங்கள் இருவரும் அதையடுத்திருக்கும் இரண்டு ஸைபர்கள் (cyphor) ஆவீர்கள் என்று பதில் கூறினாள். அவர்களிருவரும் வெட்கிப்போனார்கள்.

நல்லமனிதனுக்கு நல்லமனிதனுடைய கூட்டுறவே சிறந்தது.

கண்ணானது இயற்கையிலே பிரகாசமுடையதாயினும் வேறொரு பிரகாசப்பொருளின் துணையில்லாமல் அக்கண் தன்சொந்தப் பிரகாசத்தினுல் பிரயோஜனப்படாது. எப்படியெனின் :—இருள் மூடியிருக்கையில் கண்ணுடையவனாயினும் ஒன்றையும் பார்க்க வல்லவனாகான். விளக்கொளி அல்லது சூரிய சந்திரரொளியிருந்தால் மாத்திரமன்றோ கண்ணொளிக்குக் கௌரவமுண்டாகிறது. அதுபோல் நல்ல மனிதனுக்கு மற்றொரு நல்ல மனிதனுடைய கூட்டுறவாலேயே சிறப்புண்டாகிறது.

காமத்திற்குக்கண்.

காமத்திற்குக் கண்ணில்லையென்கிறார்களே. கண்ணுக்கு ஏனையா காமமிருக்கிறது.

இன்பமும் துன்பமும் உலகில் நமக்குள்ள காணியாட்சியாகையால் நாம் பூலோகவாசிகளாயிருக்குங்காலும் அக்காணியாட்சிகளை யாள்வதற்கு உரியவர்களாயிருக்கவேண்டியது நமது கடமையாம். இன்பம் நேரிட்டால் பெருமைபாராட்டுவதும், துன்பம் பிராப்தமானுல் சிறுமைபாராட்டுவதும் அவிவேகிகளின் கொள்கை. பொறுமையே எல்லாவழியிலும் புகழைக் கொடுக்கும்.

தாயின் கைக்குத்திணலல்லாது எலும்பு முறியப்போவதில்லை.

விநோதார்த்தப் பதங்கள்—(தொடர்ச்சி.)

பூனையானது தான் யானையாய்விடவில்லையே யென்று கவலைப்படுகிறது. யானையானது தான் பூனையாய்விடவில்லையே யென்று துக்கப்படுகிறது. பூனை பூனையாகவே யிருக்கவேண்டும் யானை யானையாகவே யிருக்கவேண்டும்.

ஒரு கழுதையும் வாலில்லாக் குரங்கும் தங்கள் மனக்குறைகளை யொத்துப் பார்த்தன. கழுதை தனக்குக் கொம்புகள் வேண்டுமென்று முறையிட்டது. வாலில்லாக்குரங்கு தனக்கு வாலில்லாததனாற் சங்கடப்பட்டது. இப்பேச்சைக் கேட்டிருந்த ஓர் அகழெலி "நில்லுங்கள், நமது குறைகளை விட்டொழித்து, நீங்கள் வசித்திருப்பதற்காக நன்றியுள்ளவராயிருங்கள். எளிய மூற்றுங் குருடாகிய அகழெலியோ உங்களனைவரிலும் மிக்க கேடான நிலைமையில் இருக்கின்றது" என்று சொல்லிற்று.

நம்மைக்காட்டிலும் வேறு சிலர் மிகக்கேடான நிலைமையிலிருக்கும் போது நாம் ஏன் முறையிடவேண்டும்?

திருப்தி யென்னும் நற்குணத்தையடைய வெகு நல்லவழி நம்மைக் காட்டிலும் மிகக்கேடான நிலையிற் பலரிருக்கின்றனரென்பதை நினைத்துக் கொள்வதேயாம். ஏனென்றால், சாதாரணமாய் நாம் நம் அயலாரிடத்துள்ள தோர் சிறந்த நற்பொருள் நம்மிடத்திலில்லை யெனினும், அவனிடத்தில்லாத வேறு சில நம்மிடத்துள்ளவாம் என்னும் இம்மனவமைதி காணுதவர் சிலரே. "தாம் ஒரு நிலமிழந்ததி னிமித்தம் தம்மோடு அனுதாபப்பட்ட ஒருவனுக்கு அரிஸ்டிப்பஸ் என்பவர் அளித்த விடையெனக்கு மனமகிழ்ச்சியைத் தருகின்றது. ஏன்? எனக்கு இன்னும் மூன்று நிலங்களிருக்கின்றன. உனக்கோ ஒன்றைத்தவிர வேறொன்றுமில்லை. ஆதலால் நீ எனக்காக வருத்தப்படுவதைக்காட்டிலும் நான் உனக்காக வருத்தப்பட வேண்டும் என்றார்" என்று அடிசன் என்பவர் கூறினர். நம்மைக்காட்டிலும மிக அதிர்ஷ்டமுள்ளவர்களைப் பார்ப்பதே தொழிலாகக்கொண்டால், தீக்குணம் யாவற்றிலும் மிகவும் இழிந்ததும் இன்பத்துக்குப் பெருங்கேடு விளைப்பதுமாகிய பொறாமைக்கு ஆளாய் விடுவோம். "திருப்தியே யியல்புடைச் செல்வம்" என்றார் சாகரடீஸ்-ம். ஈசுவரவிதி நமக்குக்கொடுத்திருப்பதற்காக நாம் நன்றியுள்ளவராயிருந்து, அது கொடாமல் வைத்திருக்கிற செல்வங்களுக்காக ஆசைப்படுவதை விட்டொழிவோம். திருப்தி யென்னும் நற்குணத்தை வளர்ப்பது இன்பவிதை விதைத்தலாம்.

"தம்மின் மெலியாரை நோக்கித் தமதுடைமையம்மா பெரிதென் றகமகிழ்க"

வாதி பக்கத்திற் பரிதானம் பெற்றுக்கொண்ட ஓர் நியாயாதிபதி, பிரதிவாதிபக்கத்துச் சாட்சியாகிய ஒருவன் சாட்சி சொல்லுகையில், அவன் மேற்கோபித்து, "நீ நாய்போற் குறைக்காதே" என்றார். அதுகேட்ட சாட்சிக்காரன், "சுவாமி! கள்ளரைக்காணிற்குறைக்குந் தன்மை நாய்க்கியல்புதானே" என்றான். நியாயாதிபதி, தனதுள்ளத்தன்மையைச்சாட்சிக்காரன் சபையில் வெளிப்படுத்திவிட்டானே யென நாணமுற்றான்.

அது செய்வதற்குமுன் கொண்டாட்டம், செய்தபின் திண்டாட்டம். இது என்ன தெரியுமா? கலியாணமையா, கலியாணம்.

நாக்குப்பூச்சி மருந்து.

டைரக்ஷனிற் சொல்லியிருக்கிறபிரகாரம் இந்த ஔஷதத்தைக் குழந்தைகளுக்குக் கொடுத்தால் வயிற்றிலுள்ள சகல விதக் கிருமிகளெல்லாம் வெளிக்குவந்து அதனுல் நேரிடும் சகல பாதைகளும் நிவாரணமாய் தேகத்திற்கு ஆரோக்கிய முண்டாகும். கிரயம் டப்பி 1-க்கு அணு 8.

புருஷன் வாக்குப் பலித்ததற்காக ஐயோ! வென்று அகமகிழ்ந்தாள்.

ஒரு பிராமணன் தன்மனையாள் அற்பமான குற்றஞ்செயினும் "வல்லாரை—ழி" என்று வைவது வழக்கம். ஒருநாள் அவனுடைய மனைவி வேறொருவனேடு பரிகாசவார்த்தை யாடிக்கொண்டும் விளையாடிக்கொண்டும் இருந்ததை அவ்வேதியன் கண்டு "அடி வல்லாரை—ழி" என்ன செய்துகொண்டிருக்கிருயென்று அதட்டிக்கேட்டான்.

மனைவி:—"ஓய் பிராமணு! உன் வாக்கென்ன நச்சு வாக்கோ? நீ சொன்னபடியே பலித்துப்போய் விட்டதே. நீ எந்த வேளையில் முதன்முதல் அவ்வார்த்தையை உச்சரித்தாயோ? அது கெட்டவேளையாய் முடிந்தது. ஐயோ!"

பிராமணன்:—"அடி! நீ நாசமாய்ப்போக. என் வயிறு பற்றி எரியுதடி."

மனைவி:—"ஏன்காணும் அதிகமாய்ப் பேசுகிறீர்? குற்றத்தை உம்மேல் வைத்துக்கொண்டு என் என்னை வீணை தூஷிக்கிறீர்? என் வயிறு ஜில்லென்றேயிருக்கிறது."

அங்கிருந்த மூன்றுவது மனிதன்:—உஷ்ணமும் சீதளமும் ஒன்றுசேர்ந்தாலன்ருே சுகத்தைக் கொடுக்கும்.

விவேகிகள் தமது விவேகத்தால் பலவழியிலும் தம்மைக் காப்பாற்றிக்கொள்வதன்றியும், தமக்குக் கௌரவத்தையும் தேடிக்கொள்ளுகிருர்கள். அவிவேகிகளோ தம்முடைய அறிவீனத்தால் பலவித இடையூறுகளைத் தேடிக்கொள்வதன்றியும் அகௌரவத்தையும் சம்பாதித்துக்கொள்ளுகிருர்கள். விவேகத்திற்கும் அவிவேகத்திற்கும் வித்தியாசத்தைப் பாருங்கள்.

புகை நுழையாவிடத்திலும் போதனை நுழைந்துவிடும்.

புகை நுழையாவிடத்திலும் போதனை நுழைந்துவிடுமாகையால் தலையணை மந்திரத்திற்குத் தலைசாய்த்து விடாதீர்கள். ஜாக்கிரதை, ஜாக்கிரதை, சர்வஜாக்கிரதை.

துய யுக்தி.

ஷ-பேதார்:—இந்தக்கிழக் குதிரையை நான் அதிகமா யபேக்ஷிக்கிறேன். அது என்னுயிரைக்காப்பாற்றியது.

ஹவல்தார்:—அது எப்படி உம்முயிரைக் காப்பாற்றிற்று?

ஷ-பேதார்:—ஒரு யுத்தத்தில் இக்குதிரை என் வயிற்றிலுதைத்தது. நான் கூடாரத்திற் படுக்கையிற் கிடந்தேன். எனக்குப் பதிலாக நியமிக்கப்பட்ட ஷ-பேதார் சண்டைக்குச்சென்று குண்டுபட்டு இறந்துபோனுர். நான் படுக்கையிற் கிடவாமல் யுத்தத்திற்குப் போயிருந்தால் மாளவேண்டியவனுனல்லவா?

அதிகவேகம் ஆபத்துக்கிடமாகும்.

விகட ஜோஸ்யம்

தனவானுக்கும் தவறுமொழி ஜோஸியனுக்கும்

சம்பாஷணை.

தனவான்:—ஜோஸியரே! உமக்குத் தவறுமொழி ஜோஸியனென்னும் நாமம் எவ்வாறு வந்தது?

த. மொ. ஜோ:—தனவானே! ஜோஸியர்களெல்லாம் வயிறு வளர்க்கு நிமித்தம் பலபொய், புரட்டு, பித்தலாட்ட முதலியன மிகுதியாய்ப் பேசுவார்கள். என் சக்கதியோ அப்படியன்று. உள்ளது உள்ளபடி, கைப் புண்ணுக்குக் கண்ணாடி வேண்டுமா என்று யாவரும் நம்பி அநுபவத்திற் பிரத்தியக்ஷமாய்க் காணுமாறு சொல்லவல்லேன். பொய்சொல்லும்படியான சந்தர்ப்பம் நேரிட்டாலோ, நான் ஜோஸியமே சொல்லமாட்டேன். அதனாலேதான் எனக்கப்பெயருண்டாயிற்று.

தனவான்:—நல்லது, எவ்வகையான ஜோஸியம் சொல்வீர்?

த. மொ. ஜோ:—மஹாப்பிரபுவே! இறந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலமாகிய முக்காலங்களையும் நன்றாய்த் தெரிந்துசொல்வேன். எப்படியென்று கேட்பீர்களோ? இதோ சொல்லுகிறேன் கேளுங்கள்.

இறந்தகாலத்தில் நானறிந்தபடி, என்னுடைய ஞாபகத்தில் என்னென்ன இருக்கின்றனவோ அவைகளை யெல்லாம் ஒன்றும் விடாமல் யதார்த்தமாய்ச் சொல்லிவிடுவேன். அதற்குத் திருஷ்டாந்தம்:—

நேற்று கோவிந்தன் லட்சுமணனை அடித்ததற்காக ரூபா 5 அபராதம் விதிக்கப்பெற்றான்.

நேற்றுக்கு முன்னாள் இரவு 12 மணிக்கு மீனாட்சி ஆண் குழந்தையைப் பெற்றாள். இவைபோன்றவைகளே.

நிகழ்காலத்தில் என் கண்ணுக்குப் புலப்படுகிறவைகளை யெல்லாம் ஒன்றுகூடவிடாமற் சொல்லிவிடுவேன். திருஷ்டாந்தம்:—

இதோ நம்மெதிரில் நிற்கிற குதிரை புல் தின்னுகிறது. கோவிந்தன் அதோ பால் கறக்கிறான். இவை போன்றவைகளே.

வருங்காலத்தையும் தெளிவாய்த் தெரிவிப்பேன். திருஷ்டாந்தம்:—

இன்று புதன்கிழமையல்லவா? நாளைக்கு வருவது வியாழக்கிழமைதான். சிறிதும் பிசகாது. இந்த மாதம் ஜூனல்லவா? இதன் பிறகு ஜுலைமாதமே கட்டாயம் வந்து தீரவேண்டும். இவ்வருடம் 1906-ம் வருடம் அல்லவா? அடுத்த வருடம் 1907 என்பதற்கு யாதுஞ் சந்தேகமேயில்லை.

தூக்குத்தண்டனையடைந்தவன் சாகவேண்டியதேயன்றி வேறு உபாயமில்லை. தனவானே! பார்த்தீரா? என்னுடைய ஜோஸியம் பொய் சொன்னால் நாக்குப்பிளந்துபோகக் கடவது. ஆகையினால்தான் என்பெயர் பொய்யாமொழி ஜோஸியனென்று யாவராலும் வழங்கப்பட்டு வருகிறது.

பாவம் துன்பம் செய்பவர்க்கேயாதல்ல. ஒவ்வொனில் ஆக்கஞ்செய்யவேண்டாமென்று தலைகட்டு இருக்கிறது. எனவ்
வாது தலைகட்டு செய்யப்பட்டத்திலிருந்தனின், தொந்தரவுசெய்யாதக்கப் பாக்கப்போ தேன்றே.

மதராஸ் யூனானி மெடிக்கல் ஆல், 439 கெ., சௌகார்பேட்டை, சென்னை.

சர்வமூல குடோரி.

சகலவகை மூலங்கள் பவுத்திரங்கள் இவைகளை நிர்மூலமாக்கக் கூடிய இந்த ஔஷதம் மிகவும் மெச்சத்தக்கது. இவ்வியாதிகள் அனேகம் மருந்துகளுக்கு வசப்படாதவைகளான போதிலும் இம்மருந்தை ஏமாற்றுதற்கு அவைகளுக்குச் சக்தி குறைவாதலால் அவசியம் இதில் தீர்ந்துபோகின்றன. இதற்கு தாரணமாக அனேகருக்கு இம்மருந்தைக்கொடுத்து சௌக்கியம் கண்டிருக்கிறது. இதின் கிரயம் டப்பி 1-க்கு ரூபா 5.

(Gentlemen) ஜென்டில்மென்களெல்லாம் லேடியென்று லாட் செய்கிறார்கள்.

(Bundlemen) பண்டில்மென்களெல்லாம் வாடியென்று வாதுசெய்கிறார்கள்.

வாடியைத்தள்ளி, லேடியைத்தாங்கி காடியில் (Gadi) ஏறி மாடியை நோக்குங்கள்.

தையற்காரன்:—பிரபுவே! இந்தப் பில்லுக்கு (Bill) எந்தக்காலத்தில் பணங்கொடுக்கப்போகிறீர்?

பிரபு:—தம்பீ! எனக்குப்பேரன்பிறக்கும்போது கவனப்படுத்து.

தையற்காரன்:—எதற்காக?

பிரபு:—நீ கேட்டகேள்விக்கு என்னுயுள்வரையில் பதிலளிக்க முடியாது.

பொருளுக்கு பிள்ளையா? பிள்ளைக்கு பொருளா?

ஒருவன் பொருளை வைத்துக்கொண்டு இதனையநுபவிக்கப் பிள்ளையில்லையேயென்று துக்கிக்கிறான். பொருளுக்குப் பிள்ளையா? அல்லது பிள்ளைக்குப் பொருளா?

நாவின் நுகர்ச்சி.

நுனிநாக்கு கார்ப்பையும் புளிப்பையும், மத்திய பாகம் இனிப்பையும் கசப்பையும், அடிநாவும் பின்புறமும் கொழுமையானவஸ்துக்களின் சுவையையும், சுவைத்துண்ணுகின்றதென ஒரு பண்டிதர் கூறுகின்றார்.

இருண்டமேகத்தினின்றும் பிரகாசமுள்ள மழைத்துளிகள் ஜனிப்பதுபோல், ஒருவன் வறுமை யநுபவித்தபின் செல்வத்தையும் அடைவான் என்று சித்தத்தில் திடமாய்க்கொள்ள வேண்டும்.

நடுவு நிலைமை.

ஒன்றின்மேல் அதிக பிரீதிவைத்திருந்தால் அதிலுள்ள குற்றம் அற்பமும் தோன்றுகிறதில்லை. ஒன்றில் அதிக வெறுப்புவைத்திருந்தால் அதனிடத்திலுள்ள குணம் சிறிதும் புலப்படுகிறதில்லை. ஆகையால் விருப்பு வெறுப்பு இரண்டையும் நீக்கி நடுநிலைமையோடு விஷயங்களை ஆராய்ச்சிசெய்தாலொழிய நியாயம் வெளிப்படையாகாது.

கூதுள்ளவன் சுகமடையான்.

அவள் அத்தனை எளிதாயகப்பட்டுக்கொள்வாளா ?

ஜான் :—ஓ ஜாக் ! நீ மேரியை விவாகஞ்செய்துக்கொள்ள அவளுடைய சம்மதத்தைக் கேட்டதற்கு அவள் என்ன ப்திலளித்தாள் ?

ஜாக் :—சகோதரனே ! அந்தக்கன்னிகையை நீர் ஏன் கேட்கிறீர் ? நான்கு கடினமான கேள்விகளைக்கேட்டு நாலிலொன்றையேனும் முடிக்கச் சொல்லுகிறாள். ஆனால் ஒன்றிலாவது அவள் மறுக்கவில்லை. அது சற்றே திருப்திகரமாகவேயிருக்கிறது.

ஜான் :—தம்பீ ! முதலாவது கேள்வி யென்ன ?

ஜாக் :—என்னைத்தவிர உலகத்தில் வேறொரு மனிதனும் இல்லாதிருந்தால் என்னை யன்றி வேறொருவரையும் விவாகஞ்செய்து கொள்ளமாட்டாளாம்.

ஜான் :—அப்பப்ப ! இது எப்படிச் சாத்தியமாகும் ? இரண்டாவது கேள்வி யென்ன ?

ஜாக் :—வித்தையிற்றேர்ந்தவன் என்னைத்தவிர வேறொருவரும் உலகிலில்லாதிருந்தால் என்னையே மணம்புரிவாளாம்.

ஜான் :—பரிதாபம் ! பரிதாபம் !! நீ கல்வியுள்ளவனன்றே. மூன்றாவது கேள்வி யென்ன ?

ஜாக் :—எனக்கு மேற்பட்ட பணக்காரன் உலகில் ஒருவனுமில்லாதிருந்தால் நானே அவளுக்கு நாயகனென்பதில் யாதும் ஆக்ஷேபமில்லையாம்.

ஜான் :—போகட்டும். இது விஷயத்தில் உன்மேல் பக்ஷமேபாராட்டுகிறாள். நல்லது, நான்காவது என்ன கேட்டாள் ?

ஜாக் :—நான் அவள்மேல் மெய்யே அன்பாயிருத்தலைக்காட்டும்பொருட்டு என்னுயிரை உடலினின்றும் பிரித்து அவளுக்குத் தத்தஞ்செய்துவிட்டால் நானே அவளுக்குச் சொந்த மணவாளனென்று உறுதிமொழி கூறினாள்.

ஜான் :—பேஷ் ! பேஷ் !! பலேபேஷ் !!! மனப்பூர்த்தியாக உன்னை மணம்புரிய அவளுக்குப் பிரீதிதான் தம்பீ ! நீ யென்ன யோசிக்கிறாய் ? காலதாமஸஞ் செய்யாதே.

ஜாக் :—முதல் மூன்று கேள்விகளும் என்னால் செய்து முடிக்கச் சாத்தியமல்லவென்று தோன்றுகின்றது. ஆனால் நான்காவது கேள்வி மாத்திரம் சற்றே சுலபமானதாய்த் தோன்றுகிறபடியால் அதை எவ்விதத்தில் நிறைவேற்றலாமென்று யோசிக்கும் பொருட்டு இதோ ஒரு டாக்டரிடத்திற்குப் போகிறேன்.

ஜான் :—சந்தோஷம் ! சந்தோஷம் தம்பீ ! எப்படியேனும் பிரயாசையெடுத்துக்கொண்டு காரியத்தைச் சாதித்துக்கொள். பெண்ணுக்காக மண் மனை மக்கள் பொருள் முதலியவற்றையுமிழந்து படாத பாடுகளெல்லாம் பட்டுத்தொலைத்திருக்கிறார்களே அநேக மகான்கள். நீ என்ன தவஞ் செய்தனையோ ? இவ்வழகிற்சிறந்த கன்னிகை உனக்கதி சமீபத்தில் கிட்டியிருக்கிறாள். கைக்கெட்டியது வாய்க்கெட்டாமற் போகாதபடி எவ்விதத்திலேனும் பிரயாசைப்பட்டு கன்னிகையைக் கைக்கொள்ளப்பார்.

ஜாக் :—ஆம், ஆம் அண்ணே ! அதற்காகவே என்னாற்கூடிய மட்டில் சிரமைப்பட்டு முயர்ச்சிசெய்துகொண்டிருக்கிறேன்.

எல்லாமனிதர்களும் தப்பிதஞ் செய்வார்கள். ஆனால் மூடனைத்தவிர மற்றொருவரும் அதைத் தொடர்ச்சியாய் அநுசரிக்கமாட்டார்கள்.

மதராஸ் பூசானி மெடிக்கல் ஹால், 439 நெ., சௌகார்பேட்டை, சென்னை.

பாதம் எண்ணெ.

இதைத்தலையில் பூசிவந்தால் கபாலத்தில் ஊஷ்ணத்தைத் தணித்து மூளைக்குப்பலத்தைக்கொடுத்து கண்களுக்குக் குளிர்ச்சியை யுண்டாக்கும். கிரயம் அவுன்ஸ் 1-க்கு அணா 6.

மட்டி புத்தி.

சென்னப்பட்டணத்திலிருந்து மோரிஸ் தீவுக்குப் பிழைப் பினிமித்தம்போயிருந்த காமி சாமியென்னும் இரண்டு கூலியாட்கள் ஒருவர்க்கொருவர் மிகவும் அன்னியோன்யமாகவும் சிநேகப் பற்றுடையவர்களாகவும் இருந்துவந்தார்கள். ஒரு நாள் இவ்விருவரும் ஒரு தனித்த இடத்திலுட்கார்ந்துகொண்டிருக்கையில், காமி என்பவன் தனக்கு வந்த கடிதத்தைப் படித்துக் காட்டும்படி சாமியைக்கேட்க, காமியென்பவன் சாமியினுடைய இரண்டு காதுகளையும் தன் கைகளால் கெட்டியாய் மூடிக்கொண்டு இருக்கும்போது சாமி வாசிக்கத் தொடங்கினன். அப்போது அவ்விருவர்க்கும் எஜமானனுயுள்ளவன் திடீரென்று அவ்விடத்திற்குப் போகும்படி நேர்ந்தது. அம்மூவருக்கும் நடந்த சம்பாஷணை.

எஜமானன் :—சாமி! நீ என்ன செய்கிருய்?

சாமி :—காமிக்கு அவன் வைப்பாட்டியிடமிருந்து ஒரு கடிதம் வந்தது. அவனுக்குப்படிப்புத் தெரியாதாகையால் அவன் கேட்டுக்கொண்டபடி அதை நான் அவனுக்கு வாசித்துக் காட்டுகிறேன்.

எஜமானன் :—காமி! நீ என்ன செய்கின்ருய்?

காமி :—எஜமானே! என் ஆசை நாயகியிடமிருந்து வந்த கடிதத்தில் அநேக அந்தரங்கமான விஷயங்களிருக்குமாகையால் அவைகளை சாமி காதினுல் கேளாவண்ணம் நான் அவன் காதுகளை நன்ருய் மூடிக்கொண்டிருக்கிறேன். காது கேளாவிட்டால் படிப்பதினுல் மாத்திரம் விஷயங்களைத் தெரிந்து கொள்ளமாட்டானென்று எனக்கு வெகு நன்ருய்த்தெரியும் துரையே!

முத்தங்கொடுத்தால் சங்கோசமுண்டாயிற்றம்.

அவன் :—கண்மணி! நேற்றையத்தினம் உன்னைக்கட்டி முத்தமிடும்போது உனக்கேன் அத்தனை சங்கோசம் உண்டாயிற்று?

அவள் :—முதல் தடவை முத்தம் கொடுக்கும்போது எனக்கு அப்படித்தான் சங்கோசமுண்டாவது வழக்கம். ஆ! இராதோ! நன்ருய்ச்சொன்னீர்களே?

புத்தி கற்றுக்கொள்ளவேண்டிய இடம்.

பிற்காலத்திற்குப் பொருள் சேகாஞ்செய்துகொள்ளும் புத்தியை எறும்பினிடங் கற்றுக்கொள்.
நன்றி பாராட்டும் புத்தியை நாயினிடங் கற்றுக்கொள்.
விருந்திட்டுண்ணும் புத்தியைக் காக்கையிடங் கற்றுக்கொள்.
காதலனுங் காதலியும் நட்பாயிருத்தலைப் புறாவினிடங் கற்றுக்கொள்.

தகப்பனுடைய ஆசீர்வாதம் தண்ணீரிலும் முங்காது தழலிலும் வேகாது.

CONFERENCE.

மதுபானி கான்பரன்ஸ்.

கட்குடி கந்தசாமிநாயக்கன், சாராயக்குடி சாமிநாத ஐயர், அபின் தின்னி ஆனந்தமூர்த்தி முதலி, கஞ்சாக்குடி காமாட்சிபண்டாரம், ஆகிய இந்நால்வரும் குடிவகைகளுள் எது மேலானதென்று தீர்மானஞ்செய்வதற்காக ஒரு ஆலோசனைசபை கூட்டினார்கள். அதில் ஒவ்வொருவரும் பேசும் விதம்.

கட்குடி கந்தசாமி நாயக்கன் :—ஐயா! கனவான்களே! கள்ளானது பசும்பாலையும் தோற்கடிக்கக்கூடிய உயர்ந்த ஆகாசப்பாலாயிருக்கிறது. இதைச்சாப்பிட்டோன் வேகமாயோடும் வெள்ளைக்குதிரைமேலேறியவனுக்குச் சமானமாவான். காததூரமாயினும் பாதசாரியாகவே செல்வான். தள்ளாடித் தத்தளித்துப் போனாலும் கள்ளின் மயக்கமே தள்ளிக்கொண்டு போகும். கஷ்டப்பட்டுக் காலைத்தூக்கிவைக்கவேண்டிய அவசியமில்லை. போதையே பிடரியைப்பிடித்துத் தள்ளிக்கொண்டுபோகும். காலிலே மோதுண்டாலும், தடியினால் தாக்குண்டாலும், ஜோட்டினால் அடிப்பட்டாலும், மண்டை யுடைப்பட்டாலும் கொஞ்சமேனும் தேகத்தில் பாதையுண்டாகுமென்று நினைக்கிறீர்களோ? ஒருபோதுமில்லை. அகக்களிப்பும் ஆனந்த பரவசமுங்கூடி இன்பமயமான பாடல்களைப் பாடச்செய்யும். அந்நேரத்திலுண்டாகும் மனோச்சாகத்திற்கும், ஆனந்தத்திற்கும் அளவே கிடையாது. இந்த ஆனந்த பாக்கியம் எல்லோருக்குமே எளிதில் கிடைக்கத்தக்கதா? அதிர்ஷ்டசாலிகளுக்கு மாத்திரமே கிடைக்கும். கள் என்னும் நாமத்தை கேட்டவுடனே உள்ளமெல்லாம் குளிர்ந்து பூரித்துப்போகிறதே! கள் என்றால் சள் என்று சபிப்பவன் கசடன். 'குடியாத வீடு விடியாதென்று கேள்விப்பட்டிருக்கிறீர்களன்றோ? அது கட்குடியென்றே செவ்வையாய்த் தெரிந்துகொள்ளுங்கள். எப்போதும் கட்குடியைக் கைப்பிடித்துக்கொள்ளுங்கள். இல்லாவிட்டால் சள்ளையிலகப்பட்டுக் கொள்ளையாய்ப் போவீர்கள். இத்தனைச் சற்குணங்களமைந்த பரமானந்தப் பாலாகிய கள்ளைத்தான் சாராயம், அபினி, கஞ்சாவுக்கு மேலான வஸ்துவென்று நான் ஸ்திரமாய்ச் சொல்லுகிறேன் தனவான்களே! கட்குடியைக் கனவிலும் மறவாதீர்கள்.

சாராயக்குடி சாமிநாத ஐயர் :—வெல், ஜென்டில்மென்! கள்ளின் பிரஸ்தாபம் ச்சல் ஆய்விட்டதல்லவா? நல்லது.

நாம் சாராயவகையாகிய பிராண்டி, பீர், ஒயின் முதலியவற்றின் அதிவிசேஷகுணங்களைப்பற்றிச் சிறிது பேசுவோம். நம்முடைய பிரதர் கட்குடி கந்தசாமி நாய்க்கர் சற்று தவறிவிட்டார். நோ—நோ—நோ நானொருபோதும் அவர் சொன்னதை ஒப்பமாட்டேன். பிராண்டிதான் கிராண்டி (Grandy.) அதன் காரமும் சாரமும் வீரமும் சுவையும் குணமான மணமும் வேறு எதற்குண்டு. ஆஹா! ஹா!! ஹா!!! இதைப்போன்ற டேஸ்ட் (Taste) உலகத்தில் எந்த வஸ்துவுக்கிருக்கிறது. சகோதரர்களே! நான்கு பிரபுக்கள் மேஜையொன்று போட்டு, சுற்றிலும் நாற்காலிகளின் மேலுட்கார்ந்துகொண்டு நடுவே பாட்டிலும், கிளாசும் வைத்து பலவித பகடிகளையும், ஒய்யார வார்த்தைகளையும், விநோத சம்பாஷணைகளையும் பேசிக்கொண்டு ஒருவர்மாற்றி யொருவர் சாப்பிடும்போது என்ன வேஷாக்! என்ன

௱௰௰-ம் பக்கம் பார்க்க.

மதருஸ் யூநானி மெடிக்கல் ஹால், 439 மி., சௌகார்பேட்டை, சென்னை.

அஜீர்ண சூர்ணம்.

இதை டைரக்ஷனிற் சொல்லியபடி உபயோகித்துவரின் வயிற்றிரைச்சல், உப்புசம், அஜீரணம், புளியேப்பம், பசியில்லாமை முதலியவை சௌக்கியமாகும். கிரயம் டப்பி 1-க்கு அணா 12.

உண்மையான கணக்கு பொய்யாய் தோற்றல்.

ஒருவாத்தியார் ஒரு பையனை நோக்கி நாலு ஐந்து எத்தனையென்று கேட்டதற்கு அந்தப் பையன் தன் இரண்டு கையிலுள்ள விரல்களையும் இரண்டு காலின் விரல்களையும் எண்ணி இருபத்தொன்று என்றான்.

வாத்தியார் :—அதெப்படி? என்று கேட்டார்.

பையன் :— இதோ பார்த்துக்கொள்ளுங்கள் ஸார்! என்று சொல்லி இரண்டு கைவிரல்களையும் விரித்துக்காட்டி, இரண்டு கால்களையும் ஒவ்வொன்றாய்த்தூக்கி வாத்தியார் மூஞ்சியில் காண்பித்தான். ஒரு காலில் ஆறு விரல்களிருந்தன.

அக்கரைக்கிக்கரை பச்சை.

தாடி மீசை யில்லாமல் மொழுக்கட்டை மூஞ்சியாயிருந்த ஒரு மனிதன் தாடி மீசை வளர்த்திருந்த மற்றொருவனைப் பார்த்து,

ஹாரி :—உன் மூஞ்சியில் மயிர் நிறைந்திருப்பதால் கரடி மூஞ்சியைப்போலிருக்கிறது. இது எனக்கு மிகவும் வெறுப்பாயிருந்தபடியால் எனக்கிருந்த தாடி மீசையைச் சிரைத்துவிட்டேன்.

ஜாரி:—உன் மூஞ்சியைப்போலவே மொழுக்கட்டையாக எனக்கும் சிலகாலத்திற்கு முன்னிருந்தது. அது எனக்கு விகாரமாயிருந்தபடியால் தாடி மீசைகளை வைத்துக்கொண்டேன்.

அவளுக்குச் சொல்லியபடி நடிந்தான்.

மனைவி :—நாயகனே! நமக்கு விவாகம் நடப்பதற்கு முன் நீர் உத்தியோகமாயிருந்த ஆபீஸிலுள்ள கிளார்க்குகள் எல்லாரிலும் நீரே மேலானவராகச் சொன்னீரல்லவா?

கணவன் :—பெண்ணே! அது முற்றிலும் வாஸ்தவமே. நீ பரீக்ஷித்தறியவேண்டுமானால் எல்லாக் கிளார்க்குகளுடன் என்னையும் நிற்கவைத்துப்பார். நான் எல்லாரைப்பார்க்கிலும் மேலாக அதாவது உயரமாக இருக்கிறேனென்பதில் சந்தேகம் ஏற்படாது.

ஸ்திரீயினிடத்தில் புருஷர் எளிதாய் ஏமாந்துவிடுகிறார்கள்.

அவன் :—என் மனைவி என்னை யல்லாமல் வேறு சாமர்த்தியவான் உலகில் இல்லையென்று நினைத்து இருக்கிறாள். நீ அக்குறிப்பை அறிவாயா?

அவள் :—இல்லை, இல்லை, அவள் ஒருபோதுமவ்வாறு நினைத்திருக்கவில்லை. ஆனால் அவள் அவ்வாறு நினைத்திருக்கிறதாக நீ நம்பும்படிப் பகட்டுகிறாள். ஸ்திரீகளிடத்தில் புருஷர் வெகு எளிதாய் ஏமாந்துவிடுகிறார்கள்.

பழைய சிநேகனொருவன் பல புதிய சிநேகரிலும் பண்பிற் சிறந்தவன்.

மதுபானி கான்பரன்ஸ்—(௭அ-ஆம் பக்கத்தொடர்ச்சி.)

ஆனந்தம்!! எவ்வளவு மனக்கிளர்ச்சி யுண்டாகும். சாராயம் சாப்பிட்டவுடனே சோம்பேரியுஞ் சூரனாய்விடுகிறான். உள்ளம் மஹா உல்லாசமாய் விடுகிறது. மனம் பூரித்துவிடுகிறது. எத்தனைக் கஷ்டமான வேலையிருப் பினுங் கறகறவென்று முடித்துவிடலாம். ஒன்றை நினைத்தால் வேறொன் றைப்பேசலாம். சாராயஞ் சாப்பிட்டால் நேரான சன்மார்க்கம் தாராள மாய் வாரா நிற்கும். சாராயத்தினால் பூராயம் வெளிப்படும். பெரிய பெரிய துரைமார்களும் துரைசானிகளும் பட்டே பட்டே உத்தியோகஸ்தர்களும் எவ்வளவு ஆசையாய்ச் சாப்பிடுகிறார்கள் பார்க்கவில்லையா? இதனுடைய மணத்தையும், குணத்தையும், மேன்மையையும் தெரிந்தவர்கள் வீடு, தோட்டம், நகை, கட்டு சாமான்கள் ரொக்கம் முதலியவற்றை யெல்லாம் ஒரு துரும்பாக மதித்து குடியிலேயே ஒழித்துவிடுவார்களானால் இதனு டைய மஹிமையைக் கொண்டாடுவதற்கு யார் தரம்? ட்ட-ட்ட-ட்ட-ட்ட ஸ-ஸ-ஸ-ஸ-ஹ-ஹ-ஹ-ஹ. என்ன மேன்மையான வஸ்து. அதிஷ்ட சாலிகளுக்கன்றோ இது அருமையாய்க் கிடைக்கும். சாராயத்தினால் கவர்ன் மெண்டார் வருஷந்தோறும் லக்ஷக்கணக்காய் லாபமடைகிறார்கள். இத் தகைய அரிய பெரிய வஸ்துவையன்றோ குடிவகைகளில் மேலானதென்று கூறவேண்டும். பிரதர்களே! பிராண்டிக்குச் சமானமானதும் மேலானது மான வேறொரு வஸ்து உலகத்தில் கண்டிப்பாயில்லையே இல்லை யென்று தீர் மானிக்கிறேன்.

அபின் தின்னி ஆநந்தமூர்த்தி :—கனவான்களே! அபினியின் நற் குணமும் ஆனந்தமும் வேறொன்றிலுமில்லை. புத்தி கூர்மையையும் ஞானத் தையுமுண்டாக்கும். சோம்பலைச் சூறையாடிவிடும். கவன சக்தியை யதி கப்படுத்தும். எலி கடித்தாலும், தேள் கொட்டினாலும், பாம்பு தீண்டி னாலும் விஷம் ஏறாது. எவ்வளவு வேலைசெய்யினும் இளைப்புண்டாகாது. அடிக்கடி வியாதிவராது. இதன் போதை மிகவும் ஆனந்தமாயிருக்கும் நல்ல பசியை யுண்டாக்கும். உணவு அதிகம் வேண்டாது ஆ ஹா, ஹா அபினியைப்போன்ற அற்புத குணமுடையது யாதிருக்கிறது. எவ்வித போதை வஸ்துவும் இதற்கிணையாகாது.

கஞ்சாக்குடி காமாட்சி பண்டாரம் :—ஐயா! இப்போது என்னுடைய முறைவந்தது. முன் பேசினவர்களெல்லாம் வாயில்வந்தபடி ஏதோ பிதற்றி விட்டுப் போய்விட்டார்கள். கள், சாராயம், அபினி முதலியவற்றை வெகு விசேஷமாகச் சிலாகித்துப் பேசினார்கள். நல்லது இருக்கட்டும். கள்ளைப் பள்ளுப் பறையுண்ணும். சாராயம் நேரான ஒழுக்கத்தைக்கெடுக்கும். அபினி ஈரலைப் பொசுக்கிவிடும். கஞ்சாவைக் கண்டால் இவையெல்லாம் அஞ்சி யோடிப்பஞ்சாய்ப்பறந்துபோம். இவ்வரிய வஸ்துவையன்றோ தாழ்த்திப் பேசிவிட்டார்கள். ஐயா! இது இலேசான மூலிகையல்ல. ஈஸ்வரமூலிகையல் லவா? ஒரு தம்மடித்து மூச்சையிழுத்து ஹா என்று புகையை வெளியேவிட் டால் ரெயில்வே எஞ்சின் புகையைப்போல் நம்மைவந்து சூழ்ந்துகொள்ளும். உடனே நமக்கு இந்திரலோகமார்க்கம் கண்ணுக்குத்தோன்றிவிடுமாகையால் அப்போதே அந்தரலோகத்திற்குப் பிரயாணஞ்செய்துவிடலாம். ஆ. ஆ. ஆ.

௭௧௦-ம் பக்கம் பார்க்க.

பெரியமனிதனின் மிரட்டலுக்கஞ்சாதே, ஆனால் ஏழைகளின் கண்ணீர்க்கஞ்சு.

மதராஸ் யூனானி மெடிக்கல் ஹால், 439 நெ., சௌகார்பேட்டை, சென்னை.

மேகராஜாங்க எண்ணெ.

மேகத்தினுலுண்டாகும் ரணம், குழிப் புண், படை, சொரி சிரங்கு, தினவு முதலியவைகளை குணப்படுத்துவதில் இது மஹா சஞ்சீவி. உபயோகித்துப்பார்த்தவர்கள் பெரும் ஆனந்தம் அடைந்திருக்கிறார்கள். ஒரயம் புட்டி 1-க்குரூபா 3-8.

நோ(ே)ன் என்னும் பிடிவாதத்திற் கெதிரிடையாய் வாங்கேனென்னும் வைராக்கியம்.

அவள் :—உன்னை விவாகஞ்செய்துகொள்ளும்படி என்னை நிர்ப்பந்திப்பதில் பிரயோஜனமில்லை. மாட்டேனென்று ஒருமுறை சொன்னுல் எப்போதுமதை மாற்றமாட்டேன். சொன்னது சொன்னதுதான். ஒருபோதும் உன்னை விவாகஞ்செய்துகொள்ளமாட்டேன்.

அவன் :—இனி நீ லக்ஷம் ரூபாய் நன்கொடையளித்தாலும் உன்னைத்திரும்பியே பார்க்கமாட்டேன். உன்னை ஒருபோதும் விவாகஞ் செய்துகொள்ளமாட்டே னென்பதை உறுதியாய் வைத்துக்கொள். நீ ஒருபங்கு பிடிவாதஞ்செய்தால் நான் ஒன்பது பங்கு வயிராக்கியங்கொள்வேனென்று நீ யுறுதியாய் நம்பு.

முதலை மரத்தின்மேலா வாஸம் செய்யும்?

விலைக்கு வாங்குவோன் :—இது முதலையின் தோல்தானென்று நீர் நம்பிக்கையாய்ச் சொல்வீரா?

விற்பவன் :—ஐயா! இதில் கிஞ்சித்தும் சந்தேகம் வேண்டாம். நானே இம்முதலையைத் துப்பாக்கியால் சுட்டேன். நானொருபோதும் பொய் சொல்லேன்.

வாங்குவோன் :—இது மண்ணுற் செய்யப்பட்டதாகத் தோன்றுகிறதே?

விற்பவன் :—இல்லை, ஐயா, இல்லை! செம்மையாய்ப் பாருங்கள். நான் சுட்டவுடனே இது மரத்திலிருந்து கீழே விழுந்தது. ஆகையால் தரையிலிருந்த மண் மேலே ஒட்டியிருக்கலாம்.

மதுபானி, கர்ன்பான்ஸ்—(௱௰-ஆம் பக்கத்தொடர்ச்சி)

என்ன ஆனந்தமாயிருக்கும். ஒரு உண்டை கஞ்சா லேகியத்தை வாயில் போட்டால் துக்கங்களெல்லாம் பஞ்சாய்ப் பறந்துபோம். ஞான மார்க்கத்தின் வாயில்களெல்லாம் படீரென்று திறந்துவிடும். நம்முடைய முகத்திலுள்ள ஊனக்கண் குருடாகி ஞானக்கண் திறக்கப்படும். சிற்றின்பத்தை யொழித்துப் பேரின்பத்தை யெழுப்பிவிடும். முத்திமார்க்கத்திற் கேதுவான பத்திமார்க்கத்தை யுண்டாக்கும். சிற்றின்பத்தை நிவிர்த்திசெய்து பேரின்பத்தை யபிவிருத்தியாக்கும். தூக்கம் பிடியாதவனுக்கு ஒரு உண்டை போதும். தட்டியெழுப்பினாலும் எட்டு நாள் வரையில் எழுந்திரான். உண்டையைப் போட்டுக்கொண்டு மண்டைக்கேற்றி மல்லாந்து படுத்துக்கொண்டு யோசனைசெய்தால், எத்தனையோ புதிது புதிதான யோசனைகளும் நூதன நூதனமான அபிப்பிராயங்களும் கொள்ளை கொள்ளையாயுண்டாகின்றன. ஆஹா! ஹா—ஹா—ஹா—ஹா—ஹா என்ன அபூர்வமான மூலிகை ஐயா! தேவாமிர்தமும் இதற்குச் சமானமாகுமா? வேண்டுமானால் நீங்களெல்லோரும் ஒவ்வொரு உண்டை போட்டுக்கொண்டு இப்போதே சற்றுப் பார்த்துப் பாருங்கள். உள்ளங்கை நெல்லிக்கனிபோல் உங்கள் நிஷ்டையிலே காணுநதை யெல்லாம் காண்பீர்கள். அகண்ட பரிபூரணமான பிரகாசத்தைக் கண்டு களிப்பீர்கள். இது தபோதனர்களிடத்தில் கிடைக்கத்தக்க தனி மூலிகையையா. முனிவர்களுக்கு நன்மகிழ்ச்சி யுண்டாக்கும் மஹா மூலிகை அப்பா, சாமிகளைக் காமிகளாக்கிவிடும் சன்மார்க்க மூலி தம்பி, ஈ ஹி—ஹி—ஹி என்ன வார்த்தை சொல்லிவிட்டீர்களையா? ஒரு பேச்சுப்போனாலும் போகட்டுமென்று ஒன்றுகூடித் தள்ளிவிட்டீர்கள் கஞ்சாவை. ஆஹா—ஹா—ஹா நன்றாய்ச் சொன்னீர்கள்? கஞ்சாவைப் பாலில்போட்டுக் குடித்துப்பாருங்கள். பஞ்சாமிர்தமும் வெட்கித் தலைகவிழ்ந்துகொள்ளும். எவ்வகைக் குடியும் கஞ்சாவை மிஞ்சாது. ஆகையால் கஞ்சாவே முதன்மையானதென்று நான் அஞ்சாமற் கூறுவேன்.

பாட்டன் :—இந்தப்பயல்களெல்லாம் எனக்கு அத்தனை யதிகமாய்க் கோபமூட்டிவிட்டார்கள். அவர்களை வைவதற்கு ஒரு வார்த்தையும் எனக்கு அகப்படவில்லையே.

பேரன் :—பாட்டா! நான் அது விஷயத்தில் உமக்குதவியாய் நிற்கிறேன். பின் வாங்காதிரும். இதோ அகராதி. அதில் உமக்குத் தேவையுள்ள பதங்கள் கொள்ளை கொள்ளையாயகப்படும்.

ஸ்ரீயின் குறிப்பு.

துரை :—எனக்கு சலிப்புண்டாகிற வரையில் நெடுநேரம் உன்னோடு வார்த்தையாடினேன், என்ன பிரயோஜனம்?

துரைசானி :—மெய்தான், புத்திசாலிகள் நீண்டநேரம் பேசமாட்டார்கள். ஒரே வார்த்தையில் குறிப்பறிந்துகொள்வார்கள்.

காலமானது எவ்வாக்கமையான வியாதிகளையும் சொக்கியப்படுத்தவல்ல ஒரு நல்ல மூலிகைக்குச் சமானமாயிருக்கிறது.

மதராஸ்-யூனானி மெடிக்கல் ஹால், 439 நெ., ஸௌகார்பேட்டை, சென்னை

நன்னாரிவேர் ஷர்பத்து.

இது யூனானி பாகமாய் இன்னும் சில மூலிகைகள் சேர்த்து செய்யப்பட்டிருக்கின்றது காலை மாலை 2 வேளையும் ஒவ்வொரு தேக்கரண்டி அளவு ஒரு ஒயின்கிளாஸ் சுத்தஜலத்தோடு கலக்கி சாப்பிட்டு வந்தால் மேக காங்கை, கை கால், கண்ணெரிவு, வெட்டைச்சூடு முதலியவைகளைப் போக்கி இரத்தத்தைச் சுத்திப்படுத்தி கண்ணிற்கு குளிர்ச்சியை யுண்டாக்கி தேகசக்தியை யுண்டாக்கிவிடும். கிரயம் புட்டி 1-க்கு ரூபா 1.

தளகர்த்தன் :—சத்துருக்களை ஓடும்படி செய்ததில் நான் மஹா சாமர்த்தியவான்.

ஷடபேதார் :—அவர்களை எப்படி ஓடச்செய்தீர்களய்யா ?

தளகர்த்தன் :—சத்துருக்கள் தலையைக் கண்டவுடனே நான் ஓட ஆரம்பித்தேன். அவர்கள் என்னைத் துரத்திக் கொண்டு ஓடி வந்தார்கள். நானென்ன ஸாமானிய ஆசாமியா ? அவர்கள் கையில் எளிதாயகப்பட்டுப் போவேனோ? என் ஓட்டத்தைப்பிடிக்க அவர்களாலும் அவர்கள் பாட்டர்களாலும் முடியாது. நான் அவர்களை ஓடும்படிச்செய்தது தான் அவர்களுக்கு வாடம்.

கன்னத்திலறைந்து கைச்சொம்பைப் பிடுங்கினான்.

"ஸ்ரீராமர் என்ன சொன்னார், ஸ்ரீராகவர் என்ன சொன்னார்" என்று இரண்டு மொட்டைத்தாய்க் கிழப்பாட்டிகள் மூட்டைகளைத் தலைமேல் வைத்துப் பேசிக்கொண்டுபோனார்கள். "கன்னத்தில் அறைந்து கைச்சொம்பைப் பிடுங்கச்சொன்னார்" என்று அவர்கள் பின் சென்ற திருடன் கன்னத்தில் கபீரென் றறைந்து கைச்சொம்பைப் பிடுங்கிக்கொண்டு ஓடிப்போய்விட்டான்.

விகட தலைநோய் மருந்து.

தலைதனை வலித்ததானால் தயவுடன் மருந்தைக்கேளும்—மலைதனிற் பாராங்கல்லை வண்டிமே லேற்றிவந்து—தலைதனைக் கீழேவைத்துத் தாங்கியே போட்டுப்போட்டால்—தலைவலி தெரித்துப்போகும் தவராது உண்மைதானே.

விகட நேத்திராஞ்சனம்.

கல்வலி வந்ததானால் கருத்துடன் மருந்து கேளாய்—கள்ளியுந் தில்லைப்பாலுங் கலந்துமே கண்ணிலிட்டால்—உள்ளதும் சொள்ளையாகி ஒருவிரல் ஆழம் பாய்ந்து—பல்லியு முட்டையிட்டு பாம்பும் வந்தடையலாமே.

பெண்ஜாதியிடத்தில் புருஷன் ஏமாந்தான்.

ஒரு புருஷன் வடை தின்ன ஆசைகொண்டு உளுந்து வாங்கிப் பெண்ஜாதியிடத்திலே கொடுத்து வடைசுடும்படி ஆக்ஞாபித்தான். அவள் நூறுவடை சுட்டு தொண்ணூற்றொன்பது வடைகளையும் அவளே தின்றுவிட்டு, ஒரு வடைமட்டும் புருஷனுக்கு வைத்தாள். அவன், "அத்தனை வடைகளையும் எப்படித் தின்னாயடி?" என்று கேட்க, "இப்படித்தான் தின்றேன்." என்று சொல்லிக்கொண்டே அந்த ஒருவடையையும் எடுத்துத் தின்றுவிட்டாள்.

கெட்டி புத்தி.

வாத்தியார் :—ஜானி! இந்தக் கணக்கை நீ சற்றே சொல் பார்ப்போம். ஒரு குதிரை 6 அடி நீளமுள்ள கயிற்றினால் கட்டப்பட்டிருந்தது. அதற்கு 8 அடி தூரத்தில் ஒரு கட்டு புல் வைக்கப்பட்டிருந்தது. அந்தப்புல்லைத் தின்பதற்குக் குதிரை எத்தனித்தால் எப்படித் தின்னவேண்டும்?

ஜானி :—குதிரை கட்டுண்டிருப்பதால் 6 அடி தூரத்திலிருந்து 8 அடி தூரத்திற்கு எப்படிப்போகும். ஆகையால் புல்லைத் தின்னக் குதிரைக்குச் சாத்தியப்படாது சார்.

பிரிட்டோ :—(வேறொருபையன்) சார் சார்! குதிரை கயிற்றினால் கட்டப்பட்டிருக்கிறதேயன்றி அந்தக் கயிறு வேறொன்றிலும் பிணைக்கப்பட்டதாக சொல்லப்படவில்லை யாதலால் குதிரை 8 அடி தூரஞ்சென்று புல்லைத் தின்னத் தடையென்ன சார்?

வாத்தியார் :—(Very well done, Brito is a smart sensible boy.) பிரிட்டோ மிகவும் புத்திசாலி பையன், வெகு நன்றாய்ச் சொன்னான்.

ஓர் வைத்தியன் ஒரு பிணியாளனுடைய கையைப்பிடித்துப் பார்த்துக் கொண்டிருக்கையில் என்னைப் போக்கிரியென்று நீங்கள் நினைத்துக்கொண்டிருக்கிறதாகத் தோன்றுகிறது என, அப்பிணியாளன், ஐயா! வைத்தியர்கள் கையைப்பார்த்துத் தேகத்தின் வியாதியை அறிவார்கள், தாங்கள் மனதின் நிலைமையையும் அறிகிறீர்களே தங்கள் சாமர்த்தியமே சாமர்த்தியம் என்றான்.

ஓர் தரும சத்திரத்தில் இராக்காலத்தில் மூன்றும் பந்தியில் சாப்பிட்ட ஓர் பிராமணன் அச்சத்திரத்திற்குச் சமீபத்திலுள்ள குளத்திற்குக் கை கழுவப்போனான். மூக்குப்பிடிக்கச் சாப்பிட்டிருந்ததால் தட்டுக்கெட்டுத் தடுமாறி, வழியில் படுத்திருந்த ஓர் எருமைக் கன்றின்மேல் விழுந்தான். அப்போது அவன் அக்கன்றின் வயிற்றைத் தடவிப்பார்த்து வயிறு புடைத்திருக்கக்கண்டு கன்றென்றறியாமல், என்ன ஓய் சாஸ்திரி, உம்பாடு பலமாயிருக்கிறதே! முதல் பந்தியோ? என்றான்.

எவன் தனக்குச் சம்பந்தமற்றதாயும் உனக்கு இரகசியமாயுள்ளதாயுமிருக்கிற விஷயத்தைக் கூர்மையாய் விசாரிக்கின்றானோ அவன் விஷயத்தில் நீ எச்சரிக்கையாயிருப்பாயாக.

உன்னுடைய மனதிலுள்ள ஓர் இரகசியத்தை உனக்குப் பிராண சிநேகிதனாயிருக்கப்பட்ட ஒருவனிடம் சொல்லி, இதை வேறொருவருடனும் சொல்லாதே என்று அவனை வற்புறுத்துகின்றாய். உனக்கு ஐக்கியமாயிருக்கும் உன்னுடைய மனமே அந்த இரகசியத்தைக் காப்பாற்றச் சக்தியில்லாமலிருக்கும்போது, உன் பிராண சிநேகிதன் அதைக்காப்பாற்றுவானென்று நீ எப்படி நம்புகிறாய்.

மனிதன் அநுசரிக்கவேண்டிய விஷயங்களில் மெய்யென்பது முக்கியமும் முதன்மையானது.

மதராஸ் யூனானி மெடிக்கல் ஹால், 439 நெ., சௌகார்பேட்டை, சென்னை.

வயிற்றுநோய் சஞ்சீவி.

அஜீரணத்தினாலும் உஷ்ணத்தினாலும் உண்டாகும் வயிற்று வலியைப்போக்கு இது மகா வல்லமையுள்ள மருந்து, சாப்பிட்ட 5-நிமிஷநேரத்தில் நோயை அதஞ் செய்துவிடும் ஒவ்வொரு குடும்பத்திலும் இது அவசியம் இருக்கவேண்டும். கிரயம் டப்பி 1-க்கு அணு 12.

விநோதார்த்தப் பதங்கள்.

ஒருவன் ஓர் தோட்டத்திலுள்ள மரத்தைப் பார்த்து, "இந்த மரம் நன்றாய் வளர்ந்திருக்கின்றது" என்றான். அது கேட்ட அத்தோட்டக்காரன், "தண்ணீர்கூட நானல்லவோ மொண்டுக்கொண்டு வந்து கொட்டுகிறேன், இந்த [illegible] துக்கு வளர்தலைவிட வேறென்ன [illegible]" என்றான்.

ஆற்றங்கரையிலிருந்த பிராமணனொருவன், அவ்வாற்றின் நடுவில் கம்பளமூட்டைபோலொன்று போவதைக்கண்டு, நீந்திப் போய் அதைக்கெட்டியாய்க் கட்டிக்கொண்டான். அது இவனை நன்றாய்க்கட்டிப் பிடித்துக்கொண்டது பிறகு அம்மூட்டை அவனை விடாததைக்கண்ட அப்பிராமணன், "இதேது நாம் விட்டாலும் இந்தக்கம்பளமூட்டை நம்மை விடமாட்டேன் என்கிறதே" என்று அதை உற்றுப்பார்த்தான். அப்போது அது கம்பளமூட்டையல்ல ஓர் கரடி என்று கண்டான். உடனே திகில்கொண்டு "எனது பேராசையால் ஆற்றோடே போகின்றேன்" என்று அலறிக்கொண்டே போனான்.

ஒருவனை மற்றொருவன் பார்த்து, "உன் மனைவி அதிக அழகுள்ளவளா?" என்று கேட்டான். அதுகேட்ட அவன், "ஆஹா! அவள் அழகுக்கென்ன குறைவு? அவள் சிரிக்கத் தொடங்கும்போதெல்லாம் கடிக்கத் தொடங்குவது போலிருக்கும்" என்றான்.

ஒருவன் ஓர் ஸ்திரீயை நோக்கி, "உன் இடையில் வஸ்திரமில்லாதிருப்பானேன்." என்று கேட்டான். அவள் உடனே இடுப்பைத்தடவிப்பார்த்து, "ஓகோ! எங்கேயோ நழுவிவிழுந்துவிட்டது" என்று சொல்லிக்கொண்டே நாணமுடையவளாய் ஓடி ஒளிந்துக்கொண்டாள்.

உதிர ஓட்டம்.

மானிடதேகத்திலுள்ள நரம்புகள் பதின்மூவாயிரமென்று கணிக்கப்பட்டிருக்கின்றன. உதிரமானது இருதயத்தினின்றும் நுரையீரலுக்குச்சென்று, மீண்டும் இருதயத்திற்கேகி, அவ்விடத்தினின்றும் சரீர முழுவதும் வலைபோற் பின்னப்பட்டுள்ள பதின்மூவாயிரம் நரம்புகளின் வழியாய்ப்போய், பின்னும் இருதயத்திற்குத் திரும்பிவருகின்றது. இவ்வளவு வேலைகளும் இரண்டு நிமிஷங்களுக்குள் நடக்கின்றன.

ஜெபமானது மார்க்கத்துக்குத் தூண்.

இத்தோடு தொலைந்தால் போதும் என்கத்தக் காசுவேண்டாம் ஏதும்.

ஒரு ஓட்டலில் வேளை யொன்றிற்கு ஒரு ரூபாய் கொடுத்தவர் தேவையுள்ள வரையில் திருப்தியாய் சாப்பிடலாமென்று ஒரு பலகையிலெழுதி முன்னால் கட்டப்பட்டிருந்தது. அவ்வழியே வந்த ஒரு சாப்பாட்டிராமன் அப்பலகையைப் பார்த்தவுடனே உள்ளே சென்றுட்கார்ந்து சாப்பிடத் தொடங்கினன். இவன் நெடுநேரம் வரையில் சாப்பிட்டுக்கொண்டே யிருந்தான். இவனுக்குப் பின்வந்தவர்களும் முன்வந்தவர்களுமனேகர் சாப்பிட்டு விட்டுப் போய்க்கொண்டேயிருந்தார்கள்.

ஓட்டல் மானேஜர் :—ஐயா! உங்களுக்குப்பின் போஜனத்திற்கு வந்த அனேகர் சாப்பிட்டு எழுந்துபோய்விட்டார்களே, நீங்கள் மாத்திரம் நெடுநேரமாகியு மின்னும் சாப்பிடுகிறீர்களே.

சாப்பாட்டிராமன் :—ஓய்! என்னபேச்சுப் பேசுகிறீர்? திருப்தியாய் சாப்பிட்டுவிட்டால் அப்புறம் ஒருபருக்கையேனும் உட்செல்லுமோ? திருப்தியாகும் வரையில் சாப்பிடலாமென்று உம்முடைய போர்டுப்பலகை வெளியே பேசுகின்றதன்றோ? நீர் இடையில் வந்து உபத்திரவப்படுத்துகிறதாயிருந்தால் உண்டதற்கு ஒரு காசும் கொடுக்கமாட்டேன். வாய்திறவாமல் நானுண்டு திருப்தியடையும் வரையில் வாரிக்கொண்டுவந்து கொட்டும். இல்லையாயின், இதோ யிப்போதே எழுந்துபோய்விடுவேன்.

ஓட்டல் மானேஜர் :—தனக்குள்ளே சொல்லிக்கொள்வது. அந்தோ! இந்தச்சனியன் எங்கிருந்து வந்தது? பிசாசுப்பிறப்பாயிருக்கிறதே. இதுவரையில் 5 படி அரிசிச்சாதம அமுக்கிவிட்டானே. இன்று முழுதும் சாப்பிடுவான் போலல்லவோ தெரிகிறது. இப்படிப்பட்டவர்கள் இன்னுமிரண்டொருவர் வந்தால் நாம் நல்ல லாபம் சம்பாதித்து க்ஷேமமடைந்துவிடலாம். எப்படியாவது இந்த வயிறுதாரியைத் தொலைத்துவிட்டு போர்டுப்பலகையை இனி எடுத்துவிடவேண்டும். பட்டாலன்றோ தெரியும் பறையனுக்கு? நம்முடைய பலகையில் இவ்வித வாசகமில்லாதிருந்தால் இந்த க்ஷணத்திலேயே இவனைக் கல்தாகொடுத்து வெளியே நெட்டித்தள்ளிவிடலாமே. நல்லது இருக்கட்டுமென்று தனக்குள்ளேயே யோசித்துக்கொண்டு சாப்பாட்டிராமனைப்பார்த்து ஐயா! “உடம்பு போனாலும் போகட்டும், கையைவிட்டால் போதும்” என்றபடி நீர் இம்மட்டில் சாப்பிட்டதற்கு ஒரு காசும் வேண்டாம், இந்தோடு தொலைந்தால் போதுமென்றான்.

சாப்பாட்டிராமன் :—ஏனையா பரிகாசவார்த்தை பகருகின்றீர்? நான் ஒரு அவசரமான காரியார்த்தமாய்ப் போகிறவனை உம்முடைய போர்டு பலகையன்றோ இங்கிழுத்துவிட்டது. இல்லாவிட்டால் இத்தனை நேரம் என்வேலையை முடித்துக்கொண்டிருப்பேனே, அது எனக்கு பெருநஷ்டமல்லவா? நஷ்டப்பட்டவன் நானாயிருக்க நீர் நன்றாய்ச்சொன்னீரே! அதெல்லாமெனக்குத்தெரியாது. கொண்டுவந்து கொட்டுமையா சோற்றை. இன்னும் அரை வயிறுமாகவில்லை. என் வயிற்றை நிரப்ப உம்மாலாகாவிட்டால் ரூபா ஐந்து என் நஷ்டத்திற்காகக் கொடுத்துவிடும். தொலைந்தாவதுபோய் விடுகிறேன் இல்லையேல் உம்முடைய பேரில் ஜனங்களை மோசஞ்செய்து சம்பாதிக்கிறீரென்று பிரியாது செய்வேன்.

தனவந்தனை லோபி வறிஞர்க்கீனு மனைவியல்லா னெகத்தக்குச் சமானம்.

மதராஸ் யூனானி மெடிக்கல் ஆல், 439 கெ., செளகார்பேட்டை, சென்னை.

சந்தன ஷர்பத்து.

இது மேகவெட்டை நீர் எரிச்சல், நீர்குத்து முதலியவை களை நீக்கி தேகத்தை குளிரப்பண்ணும். கிரயம் 24 அவுன்ஸ் புட்டி 1-க்கு ரூபா 1.

விநோதார்த்தப் பதங்கள்.

ஒரு வக்கீல் தன் கட்சிக்காரனைப்பார்த்து உன்கணக்கைப் பிரதிவாதியிடத்திற் காட்டினையா என்றான். அதற்குக் கட்சிக் காரன், ஆம் காட்டினேன் என்றான். மீண்டும் வக்கீல் அக் கட்சிக்காரனைப்பார்த்துப் பிரதிவாதி என்னசொன்னான் என் றான். குட்டிச்சுவரில் முட்டிக்கொள்ளச் சொன்னான் என்றான். அதற்கு நீ என்ன செய்தாய் என்று மீண்டும் வக்கீல் கேட்ட போது, நான்தான் தங்களிடத்தில் வந்திருக்கிறேனே என்றான்.

ஒருவன் மற்றொருவனைப்பார்த்து நம்முடைய மெத்தை மேல் நல்ல காற்று வீசுகிறதென்றான். அதுகேட்டிருந்த வே றொருவன், அப்பா! மெதுவாய்ச்சொல், மியுனிஸிபாலிட்டியார் காதில் விழுந்தால் உடனே வரி விதித்துவிடுவார்கள் என்றான்.

இரவில் நித்திரைசெய்துகொண்டிருந்த ஒருவனிடத்தில் வேறொருவன் வந்து உன் மனைவி இறந்துவிட்டாளென்றுரைத் தான், அதுகேட்ட தூங்குமூஞ்சி "ஐயோ! பொழுதுவிடிந்தால் துக்கப்படவேண்டுமே" என்று கூறிப் போர்வையை இழுத்துப் போர்த்துக்கொண்டுறங்கினான்.

ஒருவன் கடிதாசி ஆடிக்கொண்டிருக்கும்போது தன் தாய் இறந்துவிட்டாளென்று கேள்வியுற்று, "இந்த வழியாகத்தானே சவத்தைத் தூக்கிக்கொண்டு போகவேண்டும், அப்போது நான் போய்ச் சேர்ந்துகொள்வேன் போடு இன்னும் இரண்டாட்டம்" என்றான்.

ஒருவன் தன் தகப்பனுக்கு அமாவாசையினன்று தருப் பணம் கொடுக்கப்போகையில், அவன் பிள்ளை அவனை மடி பிடித்துக்கொண்டு "அப்பா! நீர்மட்டும் உமது பிதாவுக்குத் தருப்பணம் கொடுக்கப்போகின்றீரே, அவ்வாறு நான் உமக்கு எப்பொழுது தருப்பணம் கொடுக்கிறது? அதைச்சொன்னால் தான் விடுவேன்" என்றான்.

தேங்காய் திருடுவதற்காகத் தென்னமரத்தின் மீதேறிய ஒருவன் அத்தோட்டக்காரன் வருவதைக்கண்டு கீழே இறங்கி வருகையில், தோட்டக்காரன் மரத்தண்டைவந்து நின்று ஏன் தென்னமரத்தின் மீதேறினை? என்றான். அதற்கு அத்திருடன் கன்றுக்குட்டிக்குப் புல்லறுக்க ஏறினேனென்றான். அப்போது தோட்டக்காரன் தென்னமரத்திற் புல்லிருக்குமா என்றான். அதுகேட்ட திருடன் இல்லாமையாற்றான் இறங்கிவந்தேனே! ஈதறியாயா! அசடனே! என்று சொல்லிக் கொண்டே போய்விட்டான்.

அனியாயவழக்குக்கு அழகான தீர்மானம்.

ஒரு மனிதன் பலதேச யாத்திரைசெய்து புதிதாய் ஒரு பட்டணத்தின் வீதி வழியாய் நடந்துபோனபொழுது ஒரு சக்கிலியன் இரண்டு ஜோடுகளைக் கையில் வைத்துக்கொண்டு விலைகூறி நின்றான். அந்த மனிதன் சக்கிலியனைப்பார்த்து உனக்கு சந்தோஷப்படுத்துகிறேன். என்க்கு அந்த ஜோடுகளை விலைக்குக்கொடு என்று கேட்டான். சக்கிலியன் உடனே ஜோடுகளை அவனிடம் கொடுத்தான். அம்மனிதன் அதற்கீடாக சக்கிலியனுக்கு ஒரு ரூபாய் கொடுத்தான் சக்கிலியன் தனக்கு சந்தோஷம் வரவில்லை யென்றான். பிறகு இரண்டு ரூபாய் கொடுத்தான் அப்போதும் சந்தோஷம் வரவில்லை யென்றான். பிறகு மூன்று ரூபாய் கொடுத்தும் சந்தோஷம் வரவில்லை என்றான். அப்போது அந்த மனிதன் தனக்கு ஜோடு வேண்டாமென்று அவைகளை சக்கிலியனிடம் திருப்பிக்கொடுத்துவிட்டான். சக்கிலியன் உடனே அவனைப்பிடித்து இழுத்துக்கொண்டுபோய் மாஜிஸ்திரேட்டிடம் பிரியாது செய்தான். மாஜிஸ்திரேட்டு வாதியுடைய வாதங்களைக் கேட்டபின் பிரதிவாதியாகிய அந்த மனிதனைப்பார்த்து,

மாஜிஸ்திரேட்டு :—"நீ சக்கிலியனுக்கு சந்தோஷம் செய்கிறேனென்று உறுதிமொழி கூறியபடியால் எந்த விதத்திலும் அவனுக்குச் சந்தோஷம் செய்தே தீரவேண்டும்" என்று சொல்லிவிட்டு சக்கிலியனைப்பார்த்து, "நான் இந்த வழக்கில் தீர்மானம் செய்வது உனக்கு சந்தோஷமா இல்லையா" என்று கேட்டார்.

சக்கிலியன் :—"தர்ம துரைகளே! தங்களைப்போல நியாயஞ்செய்பவர் உலகத்திலே ஒருவருமே கிடையாதாகையால் தாங்களே இதற்குத் தீர்ப்புச் சொல்லவேண்டும் அதுவே எனக்குப் பூரண சந்தோஷம்" என்றான்.

மாஜிஸ்திரேட்டு :—அப்படியானால் நீ அந்த சந்தோஷத்தை எடுத்துக்கொள் எதிரிக்கு ஜோடுகளைக் கொடுத்துவிடு என்று தீர்மானித்தார்.

மாஜிஸ்திரேட் :—வெல் டபேதார்! வழக்குக்கூப்பிடு.

வழக்குக்கூப்பிட்ட உடன் வாதியாகிய நான்கு ஆசாமிகளும் பிரதிவாதியாகிய ரகுநாதராவும் ஆஜரானார்கள். வாதிகள் வழக்கைச் சொல்லிக்கொள்ளும் விதம்.

நான்கு வாதிகளும் மாஜிஸ்திரேட்டைப் பார்த்து :—மஹாப்பிரபு! நாங்கள் நான்கு பேர்களும் ஓரிடத்தில் உட்கார்ந்து சூது விளையாடிக்கொண்டிருக்கையில் பிரதிவாதியாகிய ரகுநாதராவ் அவ்விடத்திற்கு வந்து பந்தயம் என்னவென்று கேட்டார். சும்மாவென்று சொன்னோம். எங்களுடன் உட்கார்ந்து சில நேரம் விளையாடியபின் பந்தயம் ஏற்படுத்திய "சும்மா" வைக் கொடாமல் எழுந்துபோக ஆரம்பித்தார். உடனே அவரைப்பிடித்துத் தங்கள் நியாயஸபைக்குக் கொண்டுவந்துவிட்டோம், எங்களுக்கு அந்த "சும்மாவை வாங்கிக்கொடுக்கவேண்டும், பிரபு."

௱௨௰-ம் பக்கம் பார்க்க.

எப்பொழுதும் மெய் முன்வந்து நிற்கும் பொய் புறங்காட்டி யோடும்.

மதராஸ் யூநானி மெடிக்கல் ஹால், 439 கெ., சௌகார்பேட்டை, சென்னை.

எலுமிச்சம்பழஷர்பத்து.

இது பசியை யுண்டாக்கி பித்தமயக்கம் அரோசகம் முதலியவைகளைக் கண்டித்து தாகத்தையடக்கி மூலச்சூட்டைத் தணித்துத் தேகத்தைக் குளிரப்பண்ணும். கிரயம் 24 அவுன்ஸ் புட்டி 1-க்கு ரூபா 1.

வெகுகாலமாய் விறகுவெட்டி விற்றுக் கஷ்டஜீவனம் செய்துகொண்டிருந்த ஓர் கிழவன் ஓர்நாள் தன் வழக்கப்படி காட்டில் விறகொடித்துக்கொண்டிருக்கையில் தன்கஷ்டத்தை நினைத்துத் துக்கித்து, “யமதூதா! என்னைக்கொண்டுபோக மாட்டாயா?” என்றான். அப்பொழுது அவ்வழியாய்ச்சென்று கொண்டிருந்த யமதூதன் அக்கிழவனருகில் வந்து, “ஏன் என்னைக் கூப்பிட்டாய்” என்றான். அப்போது கிழவன் நடுக்கிட்டு, இதேது “விளையாட்டுக்குக்கூறியது வினையாய் முடிந்தது” என்னும் பழமொழியைப்போல், நாம் சும்மா துக்கத்தாற்சொன்னமாத்திரத்தில் நிஜமாகவே யமதூதன் வந்துவிட்டானே என்று அச்சமுற்று, “அப்பா! இந்த விறகுக்கட்டைக் கொஞ்சம் தூக்கிவிடு” என்றான்.

ஓர் அரசன் தனது சபாமண்டபத்திற் கொலுவிருக்கையில், தூரதேசத்திலிருந்த ஓர் சிறந்த வித்வான் தனது பாண்டித்தியத்தை அவ்வரசனுக்குக்காட்டிப் பரிசுபெறக் கருதி அவ்வரசன் முன்வந்து நின்றான். அவனைக்கண்ட அரசன் தன் முகத்தைப்போல அவ்வித்துவான் முகமிருந்ததால், அவ்வித்வானை நோக்கி, “ஓய் உன் தாயார் இந்த ஊர்வழியாக எப்போதாவது வந்திருப்பாளா?” என்றான். அதுகேட்ட வித்வான், “மகாப்பிரபு! என் தாயார் பெண்பாலாகையால் ஒருபோதும் வந்ததேயில்லை, ஆனால், எனது பிதா இவ்வூரில்வந்து சிலகாலம் வசித்திருந்ததாகக்கேள்வி” என்றான். உடனே அரசன் சபையார்க்குமுன் அவமானமடைந்தவனாய்த் தலைகுனிந்தான்.

ஓர் திருடன் ஓடும்போது அவனைத் தொடர்ந்த போலீஸ் சேவகன், “பயலே நில்” என்றான். இதைக்கேட்ட திருடன், “முகத்துக்கு பின்னாற் பேசுகிறவர்களைக் கண்டால் எனக்குப் பிடிக்கிறதில்லை” என்று சொல்லிக்கொண்டே ஓட்டம் பிடித்தான்.

ஒருவன் சம்பாதிப்பதனைத்தும் அவனுக்கு எவ்விதம் உரிமையாவது நியாயமோ அதுபோல், ஒருவன் சம்பாதியாதனைத்தும் அவனுக் குரிமையாகமாட்டாதென்பதைக் கவனித்துப் பிறர் பொருளை இச்சியாதே.

ஆயுள்நீட்சிக்கு அனுஷ்டிக்கவேண்டிய முறைகள்.

ஓர் கைதேர்ந்த பண்டிதர் கூறுகின்றார்:—சிறுகச் சிரமப்படு அதிகம் வேலை செய்; சிறுகச் சவாரிசெய், அதிகம் நட. சிறுகப் பானஞ்செய், அதிகம் சுவாசி. சிறுகச்சாப்பிடு, அதிகம் மென்று தின். சிறுகப் போதி, அதிகம் சாதி.

இருளானது நட்சத்திரங்களைக் காண்பிப்பதுபோல் வியசனமானது உண்மையைக் காண்பிக்கும்.

அநியாயவழக்குக்கு அழகான தீர்மானம்—(௱௰அ-ஆம் பக்கம் தொடர்ச்சி.)

மாஜிஸ்திரேட்டு :—(சற்றுநேரம் யோசிக்கிறவர்போல் மௌனமாயிருந்து ஒரு வெறும்பானையை வாதிகளுக்குக் காண்பித்து) அந்தப்பானைக்குள் என்ன இருக்கிறது பார்த்துச்சொல்லுங்கள்; என்றார்.

வாதிகள் :—ஒன்றுமில்லை, சும்மாயிருக்கிறது சுவாமி!

மாஜிஸ்திரேட்டு :—அந்த சும்மாவை நீங்கள் எடுத்துக்கொள்ளுங்கள் எதிரியை விடுதலை செய்துவிட்டேன்.

———

டபேதார் வேறு கேஸ் கூப்பிட்டவுடன் வாதி பிரதிவாதிகள் வந்து ஆஜராயினர்.

வாதியாகிய ஒற்றைக்கண் குருடன் மாஜிஸ்திரேட்டைப் பார்த்து :—நீதி மன்னனே! என்னுடைய பிரதிவாதியானவன் ஒரு வருஷத்திற்கு முன் அவனுக்கிருந்த சொள்ளைக்கண்ணை எனக்குக் கொடுத்துவிட்டு நாளைக்குக் கொண்டுவந்து தருகிறேனென்று சொல்லி என்னுடைய நல்ல கண் ஒன்றை இரவலாக வாங்கிப்போய் ஒரு வருடகாலமாய் ஒளித்துக்கொண்டிருந்தான். இப்போதுதான் அகப்பட்டான். அவனை இதோ பிடித்து தங்கள் சமுகம் கொண்டுவந்தேன். என்னுடைய நல்ல கண்ணை வாங்கிக்கொடுக்கவேணும் தர்மராஜாவே!

மாஜிஸ்திரேட்டு :—நீ பிரதிவாதியினுடைய சொள்ளைக்கண்ணை முதலில் வாங்கிக்கொண்டதாக ஒப்புக்கொள்ளுகிறபடியால் நீயே முந்தி அந்த சொள்ளைக்கண்ணைப்பிடுங்கி அவனுக்குக் கொடுத்துவிடு உன் நல்லகண்ணைப்பற்றிப் பிறகு தீர்ப்பு சொல்லுவோம்.

வாதி :—குருட்டுக்கண்ணை எப்படித்தோண்டுவேன்.

மாஜிஸ்திரேட்டு :—அது உன்னால் கூடாத பட்சத்தில் நாம் தோண்டும்படி செய்விக்கிறோம் (என்று ஒரு குறடு கொண்டுவரும்படி உத்திரவு செய்தார்.)

வாதி :—ஐயாவே! எனக்கு நல்ல கண் வேண்டாம் வேண்டாம், சொள்ளைக்கண்ணே இருக்கட்டும், என்றான்.

———

நியாயாதிபதி ஒருவர் ஒருநாள் தனது கையில் ஓர் பிரம்பை வைத்துக்கொண்டு, அப்பிரம்பினால் தமக்கெதிரிலுள்ள ஒருவனைச் சுட்டிக்காட்டி, இப்பிரம்பின் நுனியிலோர் அயோக்கியனிருக்கின்றானென்றார். அதுகேட்ட எதிரிலுள்ளவன் குசேஜாத்தியமாக, அந்நியாயாதிபதியை நோக்கி, "மகாப்பிரபு! இப்பிரம்பின் நுனிகளிரண்டினுள் எந்த நுனியிலிருப்பவன்" என்று வினவினன். அப்போது நியாயாதிபதி வெட்கி மௌனமானான்.

———

மதராஸ் யூனானி மெடிக்கல் ஹால், 439 மெ., சௌகார்பேட்டை, சென்னை.

பன்னீர் ஷர்பத்து.

இது தேகத்தை குளிர்ச்சி செய்து மூளையைப் பலப்படுத்தும். கிரயம் 24 அவுன்ஸ் புட்டி 1-க்கு ரூ. 1.

வர்த்தகத் தந்திரம்.

ஒரு ஜவளி ஷாப்புக்காரன் வீட்டிலிருந்து தன் கடைக்குப் போகுமார்க்கத்தில் கந்தசாமி என்னும் தன் சிநேகிதன் ஒரு ஷால்வை வாங்கிக்கொண்டு வரக்கண்டான்.

ஷாப்புக்காரன் :—"ஐயா! இந்த ஷால்வை யார் கடையில் என்ன விலைக்கு வாங்கினீர்?"

கந்தசாமி :—"கனவானே! தங்கள் அண்டைக்கடையில் 5 ரூபாய் கொடுத்து வாங்கினேன்"

ஷாப்புக்காரன் :—"ஆஹா! மோசம்போனீரே, என்னிடம் வாங்கினால் நான் நான்கு ரூபாய்க்கு கொடுத்திருப்பேனே"

கந்தசாமி :—"ஐயா! நான் முன்சொன்னது பரிகாச வார்த்தை. இது, தங்கள் ஷாப்பிலேதான் வாங்கினேன். தங்கள் குமஸ்தாமார்கள் என்னிடம் அதிகமாய் வாங்கிய ஒரு ரூபாயையும் தாங்கள் தயைசெய்து எனக்குக் கொடுத்துவிடவேண்டும்."

ஷாப்புக்காரன் :—அப்படியா? எதோ கொஞ்சம் சமீபத்தில் கொண்டுவாரும் பார்ப்போம். ஓ! இது உயர்ந்த ஷால்வையாச்சுதே, இதற்கு நீர் கொடுத்த கிரயம் சரிதான், கண்ணாடி இல்லாமையால் என் கண்கள் சற்று மங்கலாயிருந்தன."

ஒருவன் தன் புஸ்தகங்களை விற்று ஜீவித்து வரும்போது, தன் பிதாவுக்கெழுதியதாவது :—அப்பா! இப்போது நான் இராமாயண பாரத பாகவத காலக்ஷேபம் செய்துவருகிறேன் என்பதே.

காஞ்சீபுரத்திலுள்ள ஓர் சாவடியில் படுத்திருந்த ஒரு வழிப்போக்கன் இரவில் வரதராஜசுவாமியை நினைத்து, "கஞ்சி வரதப்பா" என்றான். அருகில் பட்டினியால் வருந்திப் படுத்திருந்த ஓர் பிச்சைக்காரன், எங்கேயிருந்தோ கஞ்சி வருகிறதாக்கும் என்றெண்ணி, "எங்கே வருதப்பா" என்றான்.

மனைவி :—நான் ஒரு செய்கை நினைத்தால் அது பொல்லாததாய் தோன்றுகிறது. நான் அதை செய்யமாட்டேன்.

கணவன் :—நீ செய்யாவிட்டால் நான் செய்யலாமா?

மனைவி :—ஆ, சுருட்டு குடிக்கிறது வீண் கஷ்டமும் பொல்லாத செய்கையென்று நினைக்கிறேன்.

கணவன் :—ஆனால் நீ குடிக்கவேண்டாம், எங்கே ஒரு நெருப்புக்குச்சிகொடு.

உன் நாவினை மென்மையி னஸ்திவாரமாக்கு.

தண்டுமாரிக் கதை.

ஓரூரில் ஒரு மாமியார் தன் மருமகளுக்கு எவ்வித சுதந்திரமுங்கொடாமல், எல்லாச் சுதந்திரங்களுக்குந்தானே யுடையவளாய் மருமகளை அடிமைத்தனத்தில் வைத்து அதிகாரம் செலுத்திவந்தாள். ஒரு நாள் அந்த மாமியார் கடைக்குப்போய் வீட்டுக்குத் திரும்பிவரச் சிறிது காலதாமதமாயிற்று. அச்சமயத்தில் ஒரு யாசகன் அவர்கள் வீட்டுக்கு வந்து, அம்மா பிச்சை, அம்மா பிச்சையென்று பலமுறைக்கூவிக்கேட்டான். உள்ளிருந்த மருமகள் வெகுநேரம் சும்மா இருந்தும் அவன் பெருங்கூச்சலுக்குச் சகியாமல், அப்பா! வீட்டில் பெரியோர்களில்லாமையால் இப்பொழுதும் உனக்குப் பிச்சையிடுவோரில்லை, நாளையால் போய்வா, என்று கூறினாள். அந்த இரவலன் அதைக்கேட்டுத் திரும்பி அடுத்த மூன்றும் வீட்டண்டை வருகையில், கடைக்குப்போயிருந்த மாமியார், பிச்சைக்காரன் தன் வீட்டிலிருந்து திரும்பி வருவதைப் பார்த்துக்கொண்டே வந்தவளாகையால், அவனை நோக்கி, அப்பா! நீ மூன்றும் வீட்டிலிருந்து வருகின்றாயே, அங்கே உனக்குப்பிச்சைகிடைத்ததா? என்று கேட்டாள். அவன் அம்மா! அந்த வீட்டில் பிச்சையில்லைபோ என்று சும்மா அனுப்பிவிட்டார்கள் என்றான்.

அதை கேட்டமாமியார் சினந்தவள்போலக் காட்டி யாசகனே! அப்படியா? பிச்சை இல்லையேயென்று சொன்னளா? அவள் கெட்டாள். நீயென்னுடன் வா என்றழைத்துக்கொண்டு போனாள். பிச்சைக்காரன், இவள் நல்ல புண்ணியவதி மிக்க தருமசிந்தை யுடையவளாயிருக்கிறாள். திரும்பி மூன்றுவது வீட்டண்டை வந்துவிட்ட நம்மை மீட்டும் பிச்சையிட அழைத்துக்கொண்டு போகிறாளேயென்று சந்தோஷித்தனாய் அவளுடன் வீட்டுக்குப்போனான். மாமியார் பிச்சைக்காரனைத் தெருநடையில் நிற்க வைத்துத்தான் உள்ளே பிரவேசித்து, குடும்பவிவகாரங்களைப் பார்த்துக் கொண்டிருந்தாள். வெளியே காத்திருந்தயாசகன் நெடுநேரம் பார்த்தும் உள்ளே சென்ற மாமியார் வெளியே மறுபடியும் வாராமையால், அம்மா! நாலு வீடு பிச்சைக்குப்போகிறவனை இப்படி காக்கப்போட்டால் என் செய்வேன், என்று கூச்சலிட, மாமியார் வெளியே வந்து, என் வீட்டு வேலைக்காரியாகிய மருமகள், பிச்சையில்லை போ என்று சொல்ல அவ்வளவு அதிகாரியா? இதற்குள் மூதேவிமுண்டையாகிய அவளுக்கு இத்தனைப் பெரியதனமா? இப்போதே இவ்வளவு அதிகப்பிரசங்கத்துக்கு இடங்கொடுத்துவிட்டால் நாளைக்குத் தலையின்மேலேறிக்கொள்ளாளா? அவள் சொன்னால் நீ போகலாமா? நானல்லவோ சொல்லவேண்டும். இப்போது பிச்சையில்லை போ என்று நான் உத்திரவு கொடுக்கிறேன் போவென்று கூறினாள். இதுகளையெல்லாம் கேட்ட யாசகன் திடுக்கிட்டு இப்படியோ பிச்சையிடுகிறவளைப்போல் போனவனை யழைத்துக்கொண்டுவந்து போவென்று சொன்னாளே, இவள் கெட்டித்தனமே கெட்டித்தனம். இவளென்ன கதியடைவாளோ? என்று கதறிக்கொண்டே போய்விட்டான்.

உன் கோபத்தை அடக்குவாயாக. அச்சபாவம் உன்னையடக்கும்படி விடாதே.

மேன்மையான விஷயங்களுக்கெல்லாம் மேன்மையானதே பெட்டி, அதைத் தெரிந்தவன் விவேகிகள்.

மதராஸ் யூநானி மெடிக்கல் ஹால், 439 நெ., சௌகார்பேட்டை, சென்னை.

பாதம் தர்பத்து.

இது மூளையை குளிரப்பண்ணி பலத்தைக்கொடுத்து ஞாபகசக்தியை அதிகப்படுத்துவதில் மிக அற்புதமான மருந்து. கிரயம் 2½ அவுன்ஸ் புட்டி 1-க்கு ரூபா 1-4-0.

நியாயாதிபதியைச் சுட்டு நஜூலவை விளக்கினன்.

ஒரு மனிதன் ஏதோ தவறுபாட்டால் ஒரு நாயை சுட்டுவிட்டான். நாய்க்குச்சொந்தக்காரன் அவனை நியாயாதிபதியிடத்திற்கொண்டுபோய் முறைப்பாடுசெய்தான், நியாயாதிபதி குற்றவாளியை நோக்கி "நீ அந்த நாயை எப்படிக்கொன்றாய்?" என்று வினவ, குற்றவாளி துப்பாக்கியை யெடுத்து "இதோ! இப்படித்தான் கொலைசெய்தேன்" என்று நியாயாதிபதியைச் சுட்டுக்கொன்று காட்டினன்.

சேய் யுக்தி.

"உன்னைச்சிருஷ்டித்தது யார்?" என்று உபாத்தியாயர் எட்டுவயதுப் பையனைக்கேட்க, அவனொன்றும் பதில் சொல்லாமல் ஆலோசித்துக்கொண்டிருந்தான். உடனே 5 வயதுள்ள சிறுபையனொருவனெழுந்திருந்து "சாமிசிருஷ்டித்தார்" என்று சொல்லி மேலே போனன். "ஆ! அவன் நேற்றுப்பிறந்தவன் அவனுக்கு நினைவிருக்கும், நான் பிறந்து ரொம்பநாள் ஆகவில்லையா என்ன?" என்று பெரிய பையன் சொன்னன்.

ஸ்திரீகளின் நேத்திரம்.

ஸ்திரீகளுக்கு விசாலநேத்திரங்களிருப்பது அவர்களுடைய ரூபலாவண்ய வர்ணனையில் ஒன்றாக எண்ணப்படுகின்றது. கவிசிகாமணிகளும் அவர்களுடைய விழிகள் கெண்டை மீனுக்குச் சமானமானவையென்று நூல்களில் வர்ணித்திருக்கிறார்கள். ஆகையால் அகன்ற விழிகள் முகத்திற்கலங்காரம். அத்தகைய பெருங் கண்களையுடைய மாதின் லக்ஷணம் என்னையெனின், கூர்ந்தபுத்தி, கவனசக்தி, சாதுர்யவாக்கு, வேலைச் சுறுசுறுப்பு, சாத்வீக குணமுடையவளாயிருப்பதே.

விநோதக் கோத்து.

பள்ளியில் படிக்கும் ஓர் யௌவனமாதினிடம் வாத்தியார்:—முத்தமென்பது பொதுப்பெயரா? குறிப்புப்பெயரா?

பெண்:—சமயத்திற்குத் தக்கபடி குறிப்பாகவும் பொதுவாகவும் உபயோகப்படும்.

ஓர் பிரபு தன் மனைவி பிரசவமான காலத்தில் ஒரு வேலைக்காரனை கூப்பிட்டு பிரசவமான குழந்தை என்ன குழந்தை யென்று கேட்குதல்.

அது ஆண் குழந்தையா? இல்லை ஐயா.

பெண் குழந்தையா? இல்லை ஐயா.

பிரபு விசனப்படுகிறது. அம்மா சுதந்தரக்காரன் ஒருவனை பெற்றுயிருக்கிறாள் யென்று சிரித்துக்கொண்டு சந்தோஷமாய்ச்சொன்னன்.

உன் மனச்சாட்சிக் கொருபோதும் பொய்யனாகாதே.

தன்னை யடக்குகின்றவனே, சத்துருவின் அரணையழித்துப் பிரவேசிக்கும் சக்கிரவர்த்தியிலும் உத்தம பலவானாவான்.

சீதேவிக்கும் மூதேவிக்கும் நடந்த தர்க்கம்.

சீதேவி என்று வழங்கப்படுகிற இளையாள் மூதேவி என்னும் மூத்தாளைப்பார்த்து, "அக்காள்! பூலோகத்திலுள்ள சகல மானிடர்களும் என்னைப் புகழ்ந்து போற்றவும் உன்னை இகழ்ந்து தூற்றவும் ஏற்பட்டிருக்கின்றதே! உன்னைவிட நான் பெருமையுள்ளவளல்லவா?" என்றாள். இதைக்கேட்ட மூதேவி ஆத்திரங்கொண்டு நீ மாத்திரம் தோத்திரத்திற்குப் பாத்திரமா? உனக்கிருக்கும் பெருமை எனக்கில்லையா? நீ, சீதேவி நான் மூதேவி, நீ யிருக்குமிடம் பணம், நானிருக்குமிடம் பிணம், நீ யிருப்பது வாழும் வீடு, நானிருப்பது பாழும் வீடு, நீ யிருப்பது நடுநாடு, நானிருப்பது சுடுகாடு, நீ யிருப்பது பசுக்கூட்டம், நானிருப்பது கொசுக்கூட்டம், உன்னால் வருவது பெருமை, என்னால் வருவது சிறுமை, தீபமுள்ளவிடத்தில் நீ யிருப்பாய், பாபமுள்ளவிடத்தில் நானிருப்பேன், உன்னால் சுருசுருப்பு, என்னால் அருவருப்பு, உன்னால் வருவது செல்வபாக்கியம், என்னால் வருவது பெரிய ஆபத்து, நீ யிருக்குமிடம் நன்கொடை, நானிருக்குமிடம் புன்கடை, நீ யிருப்பது அடைப்பம் (தாம்பூலம்) நானிருப்பது துடைப்பம், உன்னாலே மகிழ்ச்சி, என்னாலே இகழ்ச்சி, சுமங்கலியிடம் நீ யிருப்பாய், அமங்கலியிடம் நானிருப்பேன், உன்னால் கொண்டாட்டம், என்னால் திண்டாட்டம், உன்னாலே உழவு, என்னாலே இழவு, உன்னாலே கல்யாணம், என்னாலே கல்லெடுப்பு, உன்னால் வருவது ஒருமை, என்னால் வருவது இருமை (சண்டை), நீ யிருப்பது இராஜாவிடத்தில், நானிருப்பது கோஜாவிடத்தில், நீ யிருந்தால் படிப்பார்கள், நானிருந்தால் குடிப்பார்கள், சுழித்தமுகத்தில் நானிருப்பேன், செழித்தமுகத்தில் நீ யிருப்பாய், வெல்லற்கிடையினில் நீ யிருப்பாய், அல்லற்கிடையினில் நானிருப்பேன், கடுத்த நாவு என் குதிரை, இனித்த நாவு உன் சிவிகை, கள்ளக்கருத்துடன் நானிருப்பேன், வெள்ளை மனத்துடன் நீ யிருப்பாய், மோசநெஞ்சம் என் வீடு, பாசநெஞ்சம் உன்னுடு, விடிந்தபின் தூக்கம் எனக்குவட்பு, விடியுமுன் முயற்சி உனக்குகப்பு, இப்படி நீ யிருக்குமிடத்திற்கெல்லாம் நேர்விரோதமான இடங்களில் நானுமிருக்கின்றேன்" என்று சொல்லி, உனக்கிருக்கும் பெருமை மிக அருமையா? சீச்சி நீர்மூடி, என்று நிந்திக்க; அது கேட்ட சீதேவி, மூதேவி அக்காள்! வாய் விடாதே. நான் பெருமையுள்ளவளென்றும் நீ பெருமையுள்ளவளென்றும் மத்தியஸ்தரைக்கேட்டுத் தெரிந்துகொள்வோம், அதற்குள்ளாகத் துள்ளித் துடித்துக் கரிந்து பொரிந்து போகின்றாயே, அம்மம்மா இதேதடி காலம் இப்படியுமுண்டோ! இதனாலேயே நீ உன் மூதேவித்தனத்தைக் காட்டி விடுகிறாயே; பதறாதே! "பதறாத காரியம் சிதறாது" என்று பேசிக்கொண்டிருக்கையில், தென்னாட்டுப் பார்ப்பானொருவன் பட்டைநாமம் பரக்கச் சாத்தி மொட்டைத்தலையும், குட்டைக்காலும், நெட்டைக்கையுமாக வருவதைப்பார்த்த இவ்விருவரும் ஓய் பிராமணரே! நீர் யார்? உன் பெயரென்ன? என்று கேட்க, பிராமணன் நான் இருப்பது வடகாசி, பிறந்ததோ வந்தவாசி, என் குணம் விருச்சிகராசி (தேள்) பார்ப்பாரப் பரதேசி, யானே ஒன்றுக்கு முதவாத தோசி என்றான். அவனைப்பார்த்து "ஐயா நாங்க

௱உ௬-ஆம் பக்கம் பார்க்க.

மதராஸ் யூநானி மெடிக்கல் ஆல், 439 செ., சௌகார்பேட்டை, சென்னை.

ஆரஞ்சிப்பழ ஷர்பத்து.

இது கைகால் கண் முதலியவைகளி லுண்டாகும் எரிச்சலைத் தணித்து தேகத்தைக் குளிரப்பண்ணும். கிரயம் 24 அவுன்ஸ் புட்டி 1-க்கு ரூபா 1.

விநோதக் கோத்து.

கணவர் :—இந்நாடகம் எப்படியிருக்கின்றது?

மனைவி:—இப்பாஷை எனக்குத் தெரியவேயில்லையே! எப்படி நான் சொல்லட்டும்.

கணவர் :—பின் நாடகம் ஆடும்போது ரொம்ப ப்லமாய் சிரிக்கவும் எல்லாம் தெரிந்துபோலவும் காட்டினையே.

மனைவி :—எல்லாரும் சிரிக்கும்போது நான் மாத்திரம் மடையன் மனைவிபோலிருக்கவேண்டுமோ?

மட்டிச் சமர்த்து.

ரங்கன் :—"கெட்டுப்போன முட்டையைக்கண்டு சொல்வதில் நான் மஹாசமர்த்தன்"

ராமன் :—"தம்பி! அதை எப்படித்தெரிந்து சொல்வாய்"

ரங்கன் :—"அதற்கு மஹாசாமர்த்தியம் வேண்டும். சாமானிய மனிதரால் சொல்லமுடியாது, நான் சொல்லிவிடட்டுமோ? முட்டையை உடைத்துப்பார்த்து ஒரு விநாடி நேரத்திற்குள்ளாக நல்லது கெட்டது என்பதை உள்ளபடி தெரிவித்துவிடுவேன். இது அருமையான கெட்டித்தனமல்லவா, அண்ணா?"

துரைசானி:—சாமான்கள் எல்லாம் வண்டியில் ஏற்றியாய்விட்டதா அல்லது எனக்குப் பிரியமான வஸ்துக்களில் ஏதேனும் பின்னாலே விட்டுவிட்டேனோ?

பொட்லர் :—இல்லை என்னை மாத்திரம் விட்டுவிட்டீர்கள்.

வழியில் போகும் டாக்டரைப்பார்த்து, ஐயா! கடினமான ஜலதோஷத்திற்கு என்ன எடுத்துக்கொள்ளுவீர்கள்?

டாக்டர் :—கட்டணம், (Fee)

படியால் அளக்கிற விஷயத்தில் விற்கிறவன் மரக்காலின் பின் புறத்தால் அளப்பேன் என்றான். வாங்குகிறவன் வழக்கப்படி மரக்காலின் முன் புறத்தால் அளக்கவேண்டும், என்றான். மத்தியஸ்தன் மரக்காலைப் படுக்கவைத்துக் குறுக்காக அளக்கும்படி தீர்மானித்தான்.

"மாமா மருமகனே மைத்துனா என் தம்பி சித்தப்பா என் மகனே சீராளா கண்வளரு" என்று ஒருத்தி தாலாட்டினாள்.

இத்தனை உறவும் எப்படியிருந்தால் சேரும்?

மெய்மை நாடினல் மெய்யனகுவாய்.

சீதேவிக்கும் மூதேவிக்கும் நடந்த தர்க்கம்—(௱௨௪-ஆம் பக்கத் தொடர்ச்சி.)

விருவரும் சகோதரிகள், என் பெயர் சீதேவி இவள் பெயர் மூதேவி, எங்களிருவரில் யார் பெருமையுடையவள் சொல்லும் பார்க்கலாம்” என, பிராமணன் “ஓகோ! இத்தம்மாள் தானு பெத்தம்மா! எனக்கித்தனைநாள் தெரியாமற்போச்சுதே! மகாஜனபாவி என்னையடுத்த கொடும்பாவி என்ன ரூபம்? தலையோ மொட்டை, கலையோ சொட்டை, தடையோ பனிமட்டை, இடையோ லொடலொட்டை, இதுவா பெருமை அடடா தூத்து! பலே பேஷ்.” என்று தனக்குள்ளே எண்ணிக்கொண்டு யோசித்தான். இப்போது மூதேவியைப் பெருமையுள்ளவளென்று சொன்னலோ சீதேவிக்குக்கோபம் வந்து கொஞ்சகொஞ்சமிருப்பதும் நீங்கிப்போகும். சீதேவியைப் பெருமையுள்ளவளென்றால், இருக்கிற மூதேவித்தன்மையைவிட அதிகமாய் இவள் நமக்குத் தொந்தரைசெய்வாள். ஆகையால், இருவருக்கும் பொதுவாகச் சொல்லவேண்டும்; மூதேவியை இறக்கினற்போலுமிருக்கவேண்டுமென்று அவர்களைப்பார்த்துச் சொல்லுகின்றான். என்னம்மணிமார்களே! உங்கள் யோக்கியதையை இதென்று நானெப்படி அறியக்கூடும்? நீங்கள் கொஞ்சதூரம்போய் மறுபடி திரும்பி வந்தால் யார் பெருமையுடையவளென்பதைத் தீர்மானிப்பேன்” என்றான். அந்தப்படியே இருவரும் பத்தடிதூரம் நடந்து மறுபடியும் திரும்பிவந்து நின்றார்கள். அப்போது பிராமணன் தீர்மானிக்கின்றான். ஓ மூதேவியே! நீ போகின்றபோது எனக்குப் பெருமையாகத் தோன்றுகின்றது. ஓ சீதேவியே! நீ வருகின்ற ஜோர் எனக்குப்பெருமையாகத் தோன்றுகின்றது” என்றான். பிறகு மூவரும் தங்கள் தங்களிருப்பிடம் சென்றார்களாம். இதனால் மூதேவிபாகத்தைத் தொடர்ந்து நடப்பவர்களுக்கு மூதேவி பிடித்தவனென்றும், சீதேவி பாகத்தை எடுத்து நடப்பவனுக்குச் சீதேவி விலாசனென்றும் உலகோர் பகர்வர். ஆகையால் மூதேவியின் பாகத்தை நீக்கிச் சீதேவியின் பாகத்தையே ஒவ்வொருவரும் எடுத்து நடத்தல்வேண்டும்.

மரணதண்டனையை நிறைவேற்றுவதற்காக ஒருவனை அழைத்துக் கொண்டுபோகையில், அவ்வேடிக்கைப் பார்ப்பதற்கு முற்பட்டோடுகின்றவர்களை, அக்குற்றவாளிபார்த்து இரக்கத்துடன், “ஏன் வீணய் முன்னே ஓடுகின்றீர்கள்! நான் வாராமல் அங்கொன்றும் நடவாது” என்றான்.

ஒருவன் மற்றொருவனைப்பார்த்து, உனக்குப் பைத்தியம் பிடித்ததாக நான் சொர்ப்பனங்கண்டேனென்று பரிகாசம் செய்தான். அதுகேட்ட அவன் ஐயோ! அது உண்மைதானப்பா என்று அவனை அடியடியென்றடித்து மிதித்து உதைத்துத் துவைத்தான்.

முற்றும் சம்பத்திருந்தாலும் முடிவைக் கவனித்து முயற்சி புரிவது மூதறிஞர்க்கழகு.

மதுரைஸ் பூரணி மெடிக்கல் ஹால், 439 நெ., சௌகார்பேட்டை, சென்னை.

அன்னாசிப்பழ ஷர்பத்து.

இது ரத்தத்தைச் சுத்திப்படுத்தி பசிதீபனமுண்டாக்கி தேகத்திற்கு வலுவைக்கொடுக்கும். கிரயம் 24 அவுன்ஸ் புட்டி 1-க்கு ரூபா 1.

தடிராமன் கதை.

பஞ்சகாலத்தில் வயிற்றுக்குச் சாப்பாடு சம்பாதிக்கும் உபாயம் ஒன்றுங்காணாமல், ஒருவன் பழைய பிஸ்தோல் ஒன்றைச் சம்பாதித்துக்கொண்டு, ஒருவரும் போகாத ஒரு வழியிலே, பிஸ்தோலுங் கையுமாய் நின்றுகொண்டிருந்தான். அப்பொழுது நாய்ச்சங்கிலிபோலப் பருத்த தங்கக்கொலுசுகளையும் நாய் வெண்டையம்போல் வளைவான முருகுகளையும் அணிந்து, கையிற் பணப்பையுடன் வந்துகொண்டிருக்கும் ஒரு கோமுட்டியைக்கண்டு, அவன் தன் கையிலுள்ள பிஸ்தோலைச் சுடுகிறதுபோல் குறிவைத்து, "செட்டிமகனே! உன் கெட்டிக் கொலுசையும், வட்டமுருகையும், பொட்டிப் பணத்தையும் கொட்டிக் கொடுக்கிறாயா, சுட்டுப்போடட்டுமா?" என்று பயமுறுத்திக்கேட்டான். அதற்குக் கோமட்டி ஒரு யுக்திபண்ணி "உன் பிஸ்தோலை எனக்குக் கொடுத்துவிட்டால், என் சொத்து அனைத்தையும் உனக்குக்கொடுத்துவிடுகிறேன்" என்றான். அவன் சம்மதித்துக்கொண்டு சொத்தெல்லாம் பறித்துக்கொண்டு செட்டிக்குப் பிஸ்தோலைக்கொடுத்தான். உடனே அக்கோமட்டி பிஸ்தோலை "வார்" செய்து, "பட்டிமகனே, அந்த சொத்து முழுவதையும் அங்கே கொட்டிவைக்கிறாயா, உன்னைச் சுட்டுவிடட்டுமா?" என்று கேட்க, அவன், "செட்டியாரே! சுட்டுப் பாரும். அதில் மருந்திருந்தாலன்றோ!" என்று சொல்லிச் சிரித்துக்கொண்டு தான் வந்த வழியே ஓடினான்.

பட்டிக்காட்டான் இரண்டு பெயர் பட்டணத்துக்குப் போய் ஒரு யானையைக் கண்டார்கள். ஒருவன் "அதென்ன அண்ணே பெரிய எருமைமாடு" என்றான். மற்றொருவன், அதற்கென்ன முன்னேயும் வாலிருக்கிறது பின்னேயும் வாலிருக்கிறது என்றான்.

"திருடன் பெட்டியைத் தூக்கிக்கொண்டு போய்விட்டான்," என்று வேலைக்காரன் சொல்ல, "அவன் கெட்டான் [illegible]ள் பயல் கொண்டுபோய் என்ன செய்கிறது, சாவி நம்மிடத்திலல்லவா இருக்கிறது;" என்று எஜமானன் சொன்னான்.

கலியாணப்பிள்ளைக்கு பதில் நியமித்தது.

ஒரு கவர்ன்மெண்டு உத்தியோகஸ்தன் லீவின்பேரில் எட்டுநாள் நின்று கடைசி நாளில், தன் எஜமானனுக்கு ஒரு தந்தி பேசினான். அது அடியில் வருமாறு:—"நாளைதினம் விவாகமுகூர்த்தம் நியமிக்கப்பட்டிருக்கும் என் [illegible] அதிக வியாதியாய்க்கிடக்கிறபடியால், பெண்வீட்டாரும் பிள்ளைவீட்டாரும் ஒப்புக்கொண்டு என்னை மாப்பிள்ளைக்குப் பதிலாய் நியமனஞ்செய்திருக்கிறபடியால், எல்லாக்காரியங்களையும் நானேசெய்யும்படி நேர்ந்துவிட்டது. ஆகையால் தயவுசெய்து என்னுடைய லீவை இன்னும் ஒருவாரம் அதிகப்படுத்தும்படி கேட்டுக்கொள்ளுகிறேன்."

சமயோசித யுக்தி.

ஓரூரில் ஓர் பெரியவர் இருந்தார் அவர் தனக்குச்சமானமானவர் ஒருவருமில்லை என்று அதிக கர்வங்கொண்டிருந்ததன்றியும், யாராகிலும் அவரிடத்தில் பேசவந்தால் அவர்களை ஏளனம்செய்து அவர்கள் வெட்கமடையும்படியான பல வார்த்தைகளைப்பேசுவது அவருக்குச் சகஜமாயிருந்தது. ஒருநாள் அந்தப்பெரியவர் ஒரு நாட்டுப்புறத்தில் வசித்துக்கொண்டிருந்த தன் சிநேகிதனைக் காணப்போயினர். இவரைக்கண்டவுடன் அந்தச் சிநேகிதன் அதிக மரியாதைசெய்து, அன்பு ஆசார உபசாரத்துடன் ஆசனங் கொடுத்து உட்காரச்செய்தான். பெரியவர் தன் சிநேகிதனுடைய க்ஷேமசமாச்சார முதலிய விஷயங்களைப்பற்றிப் பேசிக்கொண்டிருக்கையில், அச்சிநேகிதனுடைய எட்டு வயதுப்பெண் அவ்விடம் வந்தாள். அப்போது பெரியவர் தோழனைப்பார்த்து இவள் யாருடைய பெண் என்றார். ஐயா! இவள்தான் என்னுடைய ஏகபுத்திரி, இவள் இத்தனை சிறு பிராயத்தில் அடக்கம், வணக்கம், ஒழுக்கம், பொறுமை, புத்திதீட்சண்யம் முதலியவை அமையப்பெற்றவளாயிருக்கின்றாளென்றான். அதைக்கேட்ட அப்பெரியவர், சிறுவயதிலே புத்திசாலியாயிருக்கிற பிள்ளைகள் பிற்பாடு மட்டியாய்ப்போகிறது சகஜம் என்றார். உடனே அந்தப்பெண் பெரியவரைப்பார்த்து "ஐயா அப்படியானால் தாங்கள் சிறுபிராயத்தில் அதிக புத்திசாலியா யிருந்திருப்பீர்களென்று நினைக்கிறேன்" என்றாள் அதனால், அந்தப்பெரியவர் மடையரென்ற கருத்துண்டாயிற்றல்லவா? உடனே அவர் நாணமடைந்து அன்றோடே அவருடைய கர்வத்தை விட்டுவிட்டார்.

நீதி.

கற்றதுகைம் மண்ணளவு கல்லா துலகளவென்
றுற்ற கலைமடந்தை யோதுகிறாள்—வெற்ற
வெறும்பந் தயங்கூற வேண்டாம் புலவீர்
எறும்புந்தன் கையாலெண் சாண்

என்றபடி ஒவ்வொருவரும் தத்தமக்குத் தெரிந்த மாத்திரம் கெட்டிக்காரர்களாயிருப்பாரென்றும், தன்னைவிட அதிக கெட்டிக்காரர்களனேகர் உலகத்திலிருக்கிறார்களென்றும், தான் எவ்வளவு சமர்த்தனாயிருந்தாலும் தானறிந்தவை மிகச் சொற்பமென்றும், எண்ணித் தன் அகங்காரத்தை அடக்கி யாவரும் புகழும்படி பணிந்து நடப்பவனே தகுதியுடைய மனிதனென்றும், அப்படியின்றித் தன்னைத்தானே புகழ்ந்துகொண்டு பிறரை மதியாமல் அகங்காரங்கொண்டவன் பதரென்றும் அப்படிப்பட்டவன் அவமானப்படுவானென்றும் பெரியோர் கூறுவர்.

"இந்த வருஷம் எனக்குக்கலியாணம் நடக்குமா?" என்று ஒருவன் புரோகிதனைக்கேட்க, அதற்கு அவன், "பறையை அடித்துவிட்டு இந்த வருஷம் கலியாணம் நடக்கவேண்டியதுதான்," என்றான்.

மதராஸ் யூனானி மெடிக்கல் ஆல், 439 செ., சௌகார்பேட்டை, சென்னை.

இனிப்புமாதுளம்பழ ஷர்பத்து.

இது இருதயம், ஈரல், குண்டிக்காய் முதலிய இராஜ கருவிகளுக்கு பலத்தைக்கொடுக்கும் தாகத்தையடக்கும் ரத்தத்தை சுத்தப்படுத்தும் ரத்தக்கொதிப்பையடக்கும். கிரயம் புட்டி 1-க்கு ரூபா 1-12.

துய்யுக்தியைப்புரட்ட மெய்யுக்தி.

ஒரு மனிதன் தன் சிநேகிதனோடு விநோதமாய்ச் சல்லாபித்துக்கொண்டிருக்கையில், அவன் பெண்சாதி இரண்டு மாம்பழம் கொண்டுவந்து அவர்களிருவரும் தின்னும்படி கொடுத்தாள். அப்போது அந்த மனிதன் தான் கணக்கில் கெட்டிக்காரனென்று தன் வல்லமையைக் காட்டுவதற்காகப் பெண்சாதியைப்பார்த்து, "இவைகள் எத்தனை பழங்கள்" என்று கேட்டான். அதற்கவள் "இரண்டுபழங்கள்" என்றாள். புருஷன் இல்லை, இல்லை "மூன்று பழம்" என்றான். அவள் எப்படியென்று கேட்க, அந்தப்பழங்களை வரிசையாய் வைத்து எண்ணும்படிசொன்னான். அவள் ஒன்று இரண்டு என்று எண்ணினாள். உடனே புருஷன் ஒன்றும் இரண்டும் மூன்றல்லவா? என்றான். பெண்சாதி "ஆம், ஆம் இப்பொழுது தெரிந்து கொண்டேன்" என்று சொல்லித் தன் புருஷனுடைய நேசனைப் பார்த்து "ஐயா, நீங்கள் ஒரு பழம் தின்னுங்கள் நான் ஒன்றெடுத்துக்கொள்ளுகின்றேன். மூன்றாவது பழத்தை என் கணவன் அருந்தட்டும்" என்று சொல்லி அவர்களிரண்டுபேரும் இரண்டு பழத்தைச்சாப்பிடும்போது அவள் புருஷன் வெட்கப்பட்டு வெறும் வாயைச் சப்பினான்.

தானொன்று நினைக்கத் தெய்வமொன்று நினைக்கும் என்றபடி, ஒருவர் பிறரை மோசஞ்செய்யக்கருதும்போது தாங்களே சிக்கலில் அகப்பட்டுக்கொள்கின்றார்கள்.

பிள்ளைகளுக்கு இலக்காரங் கொடுத்தல்.

உன் பன்றி பருக்கவேண்டுமானால், அது உறுமும்போதெல்லாம் இரைபோடு; உன் பிள்ளை கெடவேண்டுமானால், அது அழும்போதெல்லாம் தின்பண்டம் கொடு. உன் மக்களைக் கடிந்துகொள்வதினால் உனக்கு மண்டைநோவுண்டானால், அவர்கள் வளரும்பொழுது உனக்கு வயிற்று நோவுண்டாவது நிச்சயம்.

தான் புஷ்பவதியான காலத்தில் அந்தச்சடங்கைச் [illegible]ப்பிக்கத் தன் புருஷன் வாராததால் அவனுடைய ருதுசாந்தி கலியாணத்திற்குத் தான் போகிறதில்லை யென்று சபதம் பண்ணிக்கொண்டாளாம்.

கோபமென்னும் இருதயத்தீயை மௌனம் என்னும் குளிர்ந்த ஜலந்தான் ஆற்றும்.

ஒரு மாட்டுப்பையன் ஒருநாள் இரவில் ஒரு சாவடியில் தூங்கும்போது தன் தொடையில் தினவெடுக்க தூக்கக்கலக்கத்தினால் அருகில் படுத்திருந்த செட்டியினுடைய தொடையை இரத்தம்வரச் சொரிந்துவிட்டான். செட்டி, "ஏன் இப்படிச் செய்தாய்?" என, "ஐயா! இது நிமர் தொடையா? ஆஹா! நமது தொடையென்றல்லோ சொரிந்துவிட்டேன்" என்று மாட்டுப்பையன் சொன்னான்.

தந்திர யுக்தி.

ஜலால், அகமது என்னும் இரண்டு சிறு பிள்ளைகள் விளையாடிக்கொண்டிருக்கையில், ஜலால் அகமதைப்பார்த்து "நான் இரண்டு கண்களையும் மூடிக்கொண்டு ஒரு வித்தை செய்கின்றேன், அதை நீ, இரண்டு கண்களையும் திறந்துக்கொண்டு செய்வையா?" என்றான். அதற்கு அகமது "நீ இரண்டு கண்களையும் மூடிக்கொண்டு செய்கிற வித்தையை நான் இரண்டு கண்களையும் திறந்துக்கொண்டு செய்யக்கூடாதா? அப்படிக்கு நான் செய்யாவிட்டால் உனக்கு ஐந்து ரூபாய் பந்தயம் கொடுப்பேன், நான் அந்த வித்தையைச் செய்துவிட்டால் நீ எனக்கு ஐந்து ரூபாய் தருவாயா? என்றான். அதற்கு ஜலால் நல்லதென்று சம்மதித்து, நடுத்தெருவில் உட்கார்ந்துகொண்டு இரண்டு கண்களையும் மூடிக்கொண்டு மண்ணை அள்ளியள்ளித் தன் கண் மேலே போட்டுக்கொண்டான். பிற்பாடு ஜலால் அகமதைப்பார்த்து "நீ இரண்டு கண்களையும் திறந்துக்கொண்டு இந்த வித்தையைச் செய்" என்று மண்ணையள்ளி அகமது கையிற்கொடுத்தான். அகமது மண்ணையள்ளிப் போட்டுக்கொண்டு கண்களை இழப்பதைவிடக் காசையிழப்பதுமேல் என்று நினைத்துப் பந்தயக் காசை ஜலாலுக்குக் கொடுத்துவிட்டான்.

புத்திவான் பலவானுவான் என்றபடி மனிதர்கள் புத்தி [illegible]த்தால் அனேகரை வெருட்டிவிடுகிறார்கள்.

அநீதமா நகரத்து அந்தாதர்பார்.

ஓர் நியாய விசாரணைக் கதை.

அநீதமாநகரமென்னும் பெயருடைய ஒரு பட்டணத்தில் அதிமூடராஜனும் மதிமூடமந்திரியுஞ் சேர்ந்து இராச்சிய பரிபாலனம் செய்துக்கொண்டு வருகையில், ஒருநாளில் நடந்த கச்சேரி விபரம் அடியில் வருமாறு :—

[மஹாராஜா கிரீடாதிபதியாய்க் கொலுவீற்றிருந்து மந்திரி பிரதானிகளெல்லாம் சபாமண்டபத்திற் சூழ்ந்திருக்கும்போது கட்டியக்காரன் கட்டியங்கூறல்]

அண்டாண்ட, அகண்டாண்ட, பிரம்மாண்ட, டடாண்ட, டடடாண்ட, டண்டகுண்ட, சண்டப்ரசண்ட, வேதண்ட, கோதண்ட, மூதண்ட, ஞதண்ட, வாதண்ட, கபடற்ற, மூடசிகாமணியாகராகிய மஹாராஜ பராக்—பராக்.

௱௩௨-ம் பக்கம் பார்க்க.

உண்மையையொத்த வுறுதியானேசர் உலகத்திலெங்கு மொருவருமில்லை.

மதறுஸ் யூனானி மெடிக்கல் ஹால், 439 கெ., சௌகார்பேட்டை, சென்னை.

மஹாஜால ரகஸிய விளக்கம்.

(மிக அருமையான நூல்.)

இதன் விலை அணா 12. } { வி. பி. தபாற்கூலியுள்பட ரூபா 1.

மேலே மகுடம் சூட்டப்பட்ட மிகச்சிறந்த நூதன நூல் டிம்மி எட்டுப் பக்கம் சைஜில், கிளேஸ் காகிதத்தில் 110 பக்கங்கொண்டதாய் அழகான எளிய நடையில், பார்ப்பதற்கு மகாரம்மியகரமாய் இயற்றப்பட்டிருக்கின்றது. இதிலடங்கியுள்ள ஜாலவித்தைகள் ஒவ்வொன்றும் அபூர்வமானதாயும் ஆச்சரியப்படத்தக்கதாயும் இதற்குமுன் ஒருபோதும் தமிழில் இயற்றப்படாததாயும் ஒவ்வொரு வித்தையையும் பார்த்தவர்கள் "இது ஜாலவித்தையன்று, குட்டிச்சாத்தானுடைய செய்கையாயிருக்கிறதென்றும், மறைவு மையினால்தான் செய்யப்படுகின்றனவென்றும், கண்கட்டுவித்தையென்றும், மந்திரத்தின் சக்தியென்றும், பவர் பலவித அபிப்பிராயங்கொள்வார்களேயன்றி ஒருவராவது இது ஜாலவித்தைதானென்று ஸ்திரமாய் சொல்வதற்குத் துணியமாட்டார். இதனுடைய சூட்சமத்தை வாசித்தறிந்த பிறகுதான் அது ஜாலவித்தையென்று ஒவ்வொருவரும் தெரிந்துகொள்வார்கள். இப்புத்தகத்தின் அருமையை அந்தப்பார்வையிட்ட பிரபுக்களேயறிந்துகொள்வார்கள்; இதிலடங்கியுள்ள ஜாலவித்தைகளில் சிலவற்றின் சங்கிரகத்தை மிகவும் சுருக்கமாய் அடியில் விவரித்திருக்கின்றோம் :—

கூடுவிட்டுக்கூடுபாயும் விந்தை :—கிளிக்கூடுபோன்ற இரண்டு கூடுகளை ஒருமேடையின்மேல் ஒன்றுக்கொன்று 8 - அடி தூரத்தில் வலம் இடமாக வைத்து இரண்டையும் செம்மையாய்த்திறந்து ஜனங்களுக்குக் காட்டியபின் அவர்களுக்கு முன்பாகவே ஒரு ராஜஸ்திரீ ஒருகூட்டில் நுழைகிறாள்; அந்தக் கூடுமூடப்பட்டு பழையபடி திறக்கப்பட்டால் அதில் நுழைந்த ஸ்திரீக்குப்பதிலாக ஒருபுருஷன் வெளிப்பவருகிறான். கூட்டுக்குள்ளே நுழைந்த இராஜஸ்திரீயோ அந்த மேடையின் ஒரு சந்திலிருந்து ஓடிவருகிறாள். அவளை இரண்டாவது கூட்டில் போட்டுமூடி புருஷனை முன்கூட்டிலேயே மறுபடியும்போட்டு மூடப்படுகின்றது. பிறகு இரண்டு கூடுகளையும் திறந்து பார்க்கும்போது முதல்கூட்டில் நுழைந்த புருஷன் காணமல்போய் அவனுக்குப்பதிலாய் இரண்டாவதுகூட்டில் நுழைந்திருந்த ஸ்திரீ வெளியேவருகிறாள். இரண்டாவதுகூடு காலியாயிருக்கிறது.

தலைவெட்டும் ஜாலம் :—கொலையாளியானவன் ஜனங்களுக்கு முன்னாலே ஒரு மனுஷனை மேஜையில் படுக்கவைத்துகத்தியினால் அவன் கழுத்தையறுத்துத் தலையை கையில் தூக்கிக்கொள்ளுகிறான். ரத்தம்பிரவாகமாய் ஓடுகிறது. முண்டம் துடித்துக்கொள்ளுகிறது. பிறகு கொலையாளி அந்தத்தலையைக் மேஜைவைத்து மந்திரத்தினால் உயிர்கொடுக்கிறான். அது கண் சிமிட்டுகிறது முழியை பொட்டுகிறது. அதன் வாயில் சுருட்டைவைத்துப் பற்றவைக்கிறான்; அது சுருட்டுப் பிடிக்கிறது, வாயினாலும் மூக்கினாலும் புகையுண்டாகிறது. பிறகு அந்தத்தலையை கையினால்தூக்கி முண்டத்தோடு இணைத்து மந்திரிக்கிறான். தலையானது முண்டத்துடன் சேர்ந்துபோய் மனிதன் உயிர்பெற்றுயெழுந்துவிடுகிறான்.

௱௩௫-ம் பக்கம் பார்க்க.

ஒவ்வொருவரும் முயற்சிசெய்யவேண்டிய வகையை நன்குணர்ந்து, எவ்விஷயத்தையும் திருத்தமாய்ச்செய்து தகுந்த பயனடைந்து வாழும்படி, அவரவராலியன்றமட்டும் கல்விகற்று அறிவில் தேறவேண்டியது அவசியம்.

பிரயோசனமுள்ள ஒன்றைப் பிரயாசமின்றியடைத லரிது.

அநீதமாநகரத்து அந்தாதர்பார்—(௱௯௰-ம் பக்கத் தொடர்ச்சி.)

மந்திரி எழுந்து சொல்வது. "ஓய் கொத்தவால்! மநுநீதி தவறாத நமது மஹாராஜாவின் சந்நிதானத்தில், மந்திரி பிரதானி முதலாகிய சகல பிரபுக்களும் ஆஜராகி இருக்கிறார்களா பாரும்" என, கொத்தவால்—"நல்லது மந்திரி இதோ கணக்கெடுக்கிறேன் சுவாமி"

கொத்தவால் கணக்கெடுத்துச் சொல்லல்.

அப்புராவ், குப்புராவ், சுப்புராவ், ஆனந்தராவ், இந்திரராவ், சந்திரராவ், சுந்திரராவ், ஹரிதரராவ், நசிமுகராவ், கிரிதரராவ், நாகோஜீராவ், நாராயணராவ், ஆனந்தராவ், ராம்ராவ், பீம்ராவ், வியாசராவ், ரங்கராவ், தொங்கராவ், கோபால்ராவ், நேப்பாள்ராவ், நரசிங்கராவ், கோவிந்தராவ், கேசவராவ், மாதவராவ், ரகுநாதராவ், கிருஷ்ணராவ், ஹனுமந்தராவ், சக்கர்ராவ், டக்கர்ராவ், மக்கர்ராவ் முதலிய ராவ் சாகிபுகளெல்லாம் ஆஜராகி இருக்கிறார்கள், பகல்சாகிபு மட்டுந்தான் பாக்கி ஐயா மந்திரி.

மந்திரி:—"நல்லது கொத்தவால், நீதி விசாரணைக்கு இன்றைக்குள்ள வழக்குகளைக்கொண்டுவாரும்."

கொத்தவால்:—அப்படியே இதோ கொண்டுவந்தேன் சுவாமி.

நான்கு திருடர்கள் மஹாராஜாவின் முன்னின்று விண்ணப்பம் செய்து கொள்ளும் விதம்.

"மநுநீதி தவறாத மஹா பராக்கிரமசாலியாகிய மஹாராஜாவே! நாங்கள் ஐந்து திருடர்கள் சேர்ந்து இந்த நகரத்தில் திருட்டுத்தொழில்செய்து நெடுங்காலமாய் ஜீவனஞ்செய்துவந்தோம். நேற்று இரவு அண்டா உருட்டி அப்பாய்செட்டி வீட்டின் சுவற்றில் கன்னக்கோல்வைத்து எங்களைவரில் ஒருவனை உள்ளே நுழையச்சொன்னோம். அவன் தலையை உள்ளே நுழைத்தவுடனே அந்தச்சுவர் ஈரமாயிருந்தபடியால் அப்படியே அவன்மேல் உட்கார்ந்து நசுக்கி நாசமாக்கிவிட்டது. ஐந்தை நான்காக்கின பஞ்சமாபாதகனாகிய அந்த அண்டா உருட்டி, ஈரச்சுவர்வைத்து எங்களை இப்படியும் மோசஞ்செய்யலாமா? இந்த அநியாயம் எங்கேனும் கேட்டதுண்டா? கடவுளுக்குத்தான் அடுக்குமா? ஏழைகளைப் பிழைக்கவொட்டாமற் கெடுக்கிற அந்த மோழைப்பயலையழைத்துத் தர்மநீதி செய்யவேண்டும் தர்மராஜாவே" என்று சொல்லி வணங்கி நின்றார்கள்.

இந்தத் துக்கசமாச்சாரத்தைக்கேட்ட அரசன் மிக்கஆவேசமுற்று மந்திரியை நோக்கி "இராஜ்ஜிய தந்திரங்களைத் தந்திரமாயறிந்திடும் என் மந்திரியே! இதற்கென்ன நியாயம்" என்று வினவ;

மந்திரி:—"லட்சாதிபேர்களுக்குப் பிட்சாதிபனாகிய எனதிறைவனே! இவ்வித அநீதக்கொலைகள், நமது இராஜ்ஜியத்தில் அநேகம் நடந்து வருகிறதாக நெடுநாளாய்க் கேள்விப்படுகிறேன். இதற்குத்தக்க உபாயந்தேடிக் கண்டனைத்தண்டனை செய்யாவிட்டால் நமது பிரஜைகள் அநியாயமாய் மாண்டுபோவதிற் சந்தேகமில்லை" என்று சொல்லிக் கொத்தவாலைப்பார்த்து "ஏழைகளைப் பிழைக்கவொட்டாமல் ஈரச்சுவரை வைத்துக்கொன்ற அந்தச்

௱௯௪-ம் பக்கம் பார்க்க.

பிரயோசனப்படத்தக்க முயற்சிகள்யாவும் அறிவினாலேயே ஆகவேண்டும்.

மதராஸ் யூநானி மெடிக்கல் ஹால், 439 தெ., சௌகார்பேட்டை, சென்னை.

மஹாஜால ரஹஸிய விளக்கம்—(௱௩௧-ம் பக்கத் தொடர்ச்சி.)

அந்தரத்தில் நிற்கும் தலை :—ஒரு அறையில் திரைபோட்டிருக்கிறது; அங்கு ஜாலவித்தைக்காரன் வேடிக்கைபார்க்கும் ஜனங்களை இட்டுக்கொண்டு போய் திரையைத்திறந்து காட்டுகிறான். அங்கே ஒரு அழகியபெண் தலை மட்டும் அந்தரத்திலே தொங்கிக்கொண்டிருக்கிறது. அந்தத்தலை பேசுகிறது சிரிக்கிறது கீதம்பாடுகிறது; முண்டமில்லாத் தலைதான் இவ்வாறு செய்கிறதென்று யாவர் மனதிலும் தோற்றுகின்றது.

பேசுந்தலை :—மூன்றுகால்களுள்ள ஒரு மேஜையின் மத்தியில் ஒரு தலையை வைத்திருக்கிறது. மேஜைக்கடியில் 3 கால்கள் தவிர வேறொன்று மில்லையென்பது செம்மையாய் விளங்கும்; அந்தத்தலை பேசுகிறது கேட்ட கேள்விகளுக்கு ஜவாபு கொடுக்கின்றது.

மாய மோகினி :—ஒரு சித்திரக்கூட்டத்தில் ஒரு நாற்காலியும் மேஜையும் போடப்பட்டிருக்கிறது. அநேக ஜனங்கள் உட்கார்ந்து வேடிக்கை பார்க்கிறார்கள். அவர்களில் ஒருமனுஷனை அழைத்துக்கொண்டுபோய் அந்த நாற்காலியில் உட்காரவைக்கிறான். ஒரு நிமிஷத்திற்குப் பிறகு ஒரு அழகான ஸ்திரீ அவனுக்கு முன்பாகவந்து நடனம்செய்கிறாள். கட்டியணைத்து அவனை முத்தம் கொடுக்கிறாள், பலவிதமான கேளிக்கைகள் செய்கிறாள், சரசசல்லாபம் செய்கிறாள், அதைப்பார்க்கும் ஜனங்களெல்லாம் வயிறுவெடிக்க சிரிக்கிறார்கள். ஆனால் அந்த ஸ்திரீயாவது அவளுடைய செய்கைகளாவது நாற்காலியில் உட்கார்ந்திருக்கிற மனிதனுக்குத் தோற்றப்படாததால் சிரிக்கிற மனிதர்களைப்பார்த்து இவர்கள் எதுக்காக இவ்விதமாய் சிரிக்கிறார்கள் என்று யோசித்துக்கொண்டிருக்கிறான். இவ்வாறு சற்றுநேரம் விளையாடியபின் அந்த மனிதனைக் கொண்டுவந்து முன்னிருந்த இடத்தில் விட்டுவிட்டு வேடிக்கை பார்ப்பவருள் வேறொருமனிதனைக் கொண்டுபோய் அந்த நாற்காலியில் உட்காரவைக்கிறான். அப்போதும் அந்த ஸ்திரீ வந்து முன்னால் செய்தசெய்கைகளெல்லாம் செய்கிறாள். அந்த மனுஷனுக்கும் அச்செய்கைகள் தோற்றப்படவில்லை. ஜனங்களுக்குமட்டும் தோற்றுகின்றது. இவ்வாறு எத்தனை மனிதர்களைக்கொண்டுபோய் அந்த நாற்காலியில் உட்காரவைத்தாலும் அத்தனை தடவைகளிலும் அவ்வித வேடிக்கையுண்டாகிறது.

பை வித்தை :—வேடிக்கைபார்க்கும் திரளான ஜனங்களுக்கு முன்பாக ஜாலவித்தைக்காரன் ஒரு மனுஷனை ஒரு கோணிப்பைக்குள் போட்டுக்கட்டி செம்மையாய் முத்திரை வைத்துவிடுகிறான். பையின் வாயைக் கட்டுவதையும் முத்திரை வைப்பதையும் வேடிக்கை பார்க்கும் ஜனங்களே செய்யலாம். அவ்வாறுசெய்தபின் 2-நிமிஷநேரம் பொறுத்து ஒருதிரையினால் மூடித்திறக்கிறான். அப்போது பையின் கட்டவிழ்க்காமலும் முத்திரையுடைக்காமலும் உள்ளேபோட்டுக் கட்டப்பட்ட மனுஷன் வெளியேநிற்கிறான். பையோ கட்டுட்னும் முத்திரையுடனும் மேஜையின்மேல் வைக்கப்பட்டிருக்கிறது.

முட்டை வித்தை :—ஜாலவித்தைக்காரன் மேஜைமேல் ஒரு குல்லாவை வைத்து ஒரு கைக்குட்டையை அந்த குல்லாவுக்குமேல் பிடித்து குட்டையை விரித்து இருபக்கங்களையும் யாவருக்கும் செம்மையாய் காட்டிவிடுகிறான். அந்த குட்டையை சுருட்டித் திறக்கிறான். அந்த குட்டையிலிருந்து ஒரு

௱௩௰-ம் பக்கம் பார்க்க.

நாம் பயப்படவேண்ட[illegible]தில்லையென்று நினைக்குமிடத்திற்றானே மிகுந்த பொல்லாங்கு நமக்கு நேரிடவு[illegible] ஆகையால் எந்த விஷயங்களிலும் மிதமிஞ்சிய நம்பிக்கையைவையாமல் எப்போதும் ஜாக்கிரதையாயிருப்பது விவேகம்.

மீன் அகப்படாதபோது நண்டும் ஆகாரமாம்.

அநீதமாநகரத்து அந்தர்தர்பார்—(௱௩௨-ம் பக்கத் தொடர்ச்சி.)

சண்டாளப்பயலாகிய அண்டா உருட்டி முண்டத்தைக் கொண்டுவாரும்" என்று கட்டளை கொடுக்க, உடனே கொத்தவால் "இதோ அவன் கர்தனிற் கைபோட்டு ஒரு நொடியிற் பிடித்து வருகின்றேன்" என்று சொல்லிப் போய், அப்பாயி செட்டிக்கு அரசன் ஆக்கினையை அறிவிக்க, அவன் குண்டியுங் குடலும் நடுங்கக் கொத்தவாலுக்குத் தெண்டனிட்டு வணங்கி, ஓ சுவாமி! என்ன மோசம் வந்தது? என் உயிருக்கு ஈனம் வந்ததோ? என்று சொல்லி மனம்பதைத்துக் குதிகுதித்துக் கொத்தவால் பின் சென்ருன். கொத்தவால் மஹாராஜா சபையில் வந்து நின்று அரசனைப் பார்த்து "சர்வஜனபரிபாலபூபா! இதோ அண்டா உருட்டியைக்கொண்டு வந்தேன்" என்ருன்.

மஹாராஜா அண்டா உருட்டியைப் பார்த்து "நமது சமஸ்தானத்தில் தனவான் முதல் ஏழையீருகவுள்ள குடிகளெல்லாம் யாதொரு விக்கினமும் பயமுமின்றி தத்தமக்குரிய தொழிலை இயற்றித் தாராளமாய் ... செய்துவரும்படியாக நாம் கட்டளையிட்டிருக்க, நீ ஈரச்சுவரை வைத்து உன் வீட்டில் திருடவந்த ஒரு மனிதனை அநீதமாய்க் கொன்றுவிட்டாயாமே அதற்கென்ன சொல்லுகின்ருயென்ருன்.

இதைச் செவியுற்ற அண்டா உருட்டித் தொண்டையைச் சுறுக்கி, அடி வயிற்றிலிடிவிழுந்ததே என்று மனங்கலங்கிச் சொல்லுகின்ருன். "என்னையனே! எனையாளும் மெய்யனே! அந்தச்சுவர் எனக்குச் சொந்தமான போதிலும் அதை வைத்தவன் கூலியாளாகையால் அவன் ஈரமாய் வைத்து விட்டான். ஆகையால், இக்கொலைக்குப் பாத்தியப்பட்டவன் அவனே யொழிய அடியேன் மீது அற்பமேனுங் குற்றமில்லையே, அடியேனை ரட்சிக்க வேண்டும் மகாப்பிரபு" என்று வணங்கி நின்ருன். சுவர்வைத்த கூலியாளை அரசன் கூப்பிட்டுக்கேட்டதற்குக் கூலியாள், "மஹாராஜாவே! நான் என்ன செய்யட்டும், சுவர் என் கையால் வைக்கப்பட்டபோதிலும் மண் குழைத்தவன் இளகலாய்க் குழைத்துவிட்டான், அவனல்லோ அந்த பாரத்தைத் தாங்கவேண்டும்!" என்ருன். மண்குழைத்தவனைக் கூப்பிட்டுக்கேட்டதற்கு, "மண்ணுக்குத் தண்ணீர் ஊற்றினவன் கணக்குக்குமேல் ஊற்றிவிட்டபடியால் அவனே குற்றவாளி" என்ருன். மண்ணுக்குத் தண்ணீர் வார்த்தவனைக் கூப்பிட்டுக்கேட்டதற்கு, அவன், "நான் கணக்கோடே தான் தண்ணீர் ஊற்றினேன், குயவன் குடத்தைப் பெரிதாக்கி விட்டபடியால் அவனே இக்கொலைக்குப் பாத்தியப்பட்டவன்" என்ருன்.

அரசன் குயவனை யழைத்து அவனைப்பார்த்து "அடா! குயவா மநுநீதி தருமநீதி முதலிய சகல நீதிகளுக்கும் உறைவிடமாயிருக்கப்பட்ட நமது சமஸ்தானத்தில் ஒவ்வொரு காரியமும் ஒழுங்காகவும் அளவாகவும் நடத்தப் பட்டு வருங்காலையில், குயப்பயலாகிய நீ கொஞ்சமுமஞ்சாமல் குடத்தை அளவுக்கதிகமாய்ச் செய்த காரணம் யாது? இதற்குத்தக்க முகாந்தரம் சொல்லாவிட்டால் இப்பொழுதே உன் உயிரை ஆகாயத்திலேற்றி உடலைப் பருந்துக்கு விருந்தளிப்பேன்" என்று உறுக்கினன்.

௱௩௬-ம் பக்கம் பார்க்க.

கர்த்தனை உண்மையாய் விசுவாசி, கனத்தி பதியடைவாய்.

மஹாஜால ரஹஸிய விளக்கம்—(௱௩௪-ம் பக்கத் தொடர்ச்சி.)

முட்டை குல்லாவுக்குள் விழுகின்றது. மறுபடியும் குட்டையை செம்மையாய் விரித்துக்காட்டி குட்டையை மடக்கி திறக்கிறான். பிறகு ஒரு முட்டை குல்லாவில் விழுகின்றது. இவ்வாறு எத்தனை தடவை குட்டையை சுருட்டியெடுக்கிறானோ அத்தனைமுட்டைகள் குல்லாவில் விழுகின்றது. அப்போது குல்லாவானது முட்டைகளினால் நிரம்பியிருக்க வேண்டுமென்று ஜனங்கள் எண்ணுகிறார்கள். கடைசியில் ஜாலக்காரன் குல்லாவைதூக்கி ஜனங்களுக்கு முன்பாக வீசுகிறான். அப்போது அதில் ஒரு முட்டைகூட இல்லாமல் குல்லா வெறுமையாயிருக்கிறது. இதன் ரகஸியம் தெரிந்தால் எவருமே எளிதில் செய்யலாம், வெகு விந்தையாயிருக்கும்.

பூர்வ ஜனனம் :—எல்லா ஜனங்களுக்கு முன்பாக ம…னிதனைக் குரங்காக்கி குரங்கை நாயாக்கி, நாயை நரியாக்கி நரியைப் பூனையாக்கி பூனையை புட்பச்செடியாக்கிவிடலாம். இதை ஒவ்வொருவரும் செய்யக்கூ…ம்.

…ன ஜாலம் :—எல்லா ஜனங்களுக்கு முன்பாக நான்குகால் ஒரே பலகையுள்ள ஒரு மேஜையின்மேல் ஒரு ஸ்திரீயை நிற்கவைத்து அவளை எரித்து சாம்பலாக்கி விடுகிறான் அவளுடைய எலும்புகள்மட்டும் மீதியாய் நிற்கின்றன.

வசீகா ஜாலம் :—இரண்டு நாற்காலியின் உச்சியில் ஒருபலகையை இருத்தி அதற்குமேல் ஓர் ஸ்திரீயைப் படுக்கவைத்து பிறகு வித்தைக்காரன் மந்திரத்தினால் அவளை தூங்கவைத்துவிட்டு பலகையைத்தாங்கி நிற்கும் இரண்டு நாற்காலிகளையும் எடுத்துவிடுகிறான், பலகை அந்தரத்தில் நிற்கின்றது. பிறகு மேலே ஏறும்படி கட்டளையிடுகிறான். அந்தப்பலகை உடனே ஏறுகிறது. கீழே இறங்கச் சொல்கிறான். உடனே இறங்குகிறது. பிறகு ஒரேபக்கம் சாய்வாய் வைக்கிறான். அதுபோல் சாய்ந்து நிற்கிறது. பிறகு மறுபக்கம் சாய்வாய் நிற்கின்றது. அந்த ஸ்திரீயைத் தாங்கிக்கொண்டு அந்தப்பலகை அவன் ஆக்கினைகளுக்கு உட்பட்டு நடக்கின்றது. இந்தவித்தையை திரளான ஜனங்களுக்கு முன்பாக செய்யலாம்.

இவைகளைப்போலவே ஒவ்வொன்றும் மகா அருமையானவைகளாயிருக்கும். இதிலடங்கிய மற்றவித்தைகளை விவரிக்க நோட்டீசில் இடமின்மையால் அவைகளிற் சிலவற்றின் பெயர்களைமட்டும் அடியில் எடுத்துக்காட்டுகிறோம் :—

கோ… அடிக்கும் ஜாலம், சண்டையில் …ட்டுண்ட தலைபேசும் ஜாலம், மாயமறைவு, பாதிமனுஷி, பேய்ச்சண்டை, மூன்றுதலை மனுஷி, கண்கட்டு வித்தை, பக்ஷிவசியம், பிரளயக்கப்பல், சமுத்திரக்கன்னிகை, குறளிவித்தை, விநோதக்கண்ணாடி, ஜெகஜாலவித்தை, பிடில் தானேவாசிக்க வாத்திய மகிமை, எலிவித்தை முதலிய ஜாலங்கள் ஒவ்வொன்றையும் சித்திரப்படங்களுடன் விளக்கிக்காட்டப் பட்டிருக்கின்றன. அதிவிநோதமான கபிலையென்று சொல்லப்பட்ட ஓர் நீரேற்றும் இயந்திரமும், யந்திரத்தினால் சாமான்களுக்கு வெள்ளி பொன் மூலாம் பூசும் முறையும் சித்திரப்படங்களுடன் இந்த நூலில் விவரித்துரைத்திருக்கின்றன.

மனிதனின் வயிறு அவன் சத்துரு.
வேலை இழந்த வித்வான் மழைபொழியா மேகம்.
ஜடமானது …க்கத்துக்குத் தூண்.
முளமரம் …சன் தரும்.

நாணமற்ற பெண் உப்பில்லா உணவு.

அந்தமாநகரத்து அந்தாதர்பார்—(௱௩௪-ம் பக்கத் தொடர்ச்சி.)

இதைக்கேட்ட குயவன் நடுநடுங்கி அரசனைப்பார்த்து, "எனதையனே குடம் பெரிதான முகாந்தரத்தை நான் உள்ளது உள்ளபடி ஒளியாமற் சொல்லிவிடுகின்றேன் என்னை ரட்சித்தாலும் உங்கள் சித்தம் சிட்சித்தாலும் எங்கள் பாக்கியம் மஹாராஜாவே" என்று சொல்லத்தொடங்கி, "ஐயா! நான் என் வீட்டுத் திண்ணையின்மேல் உட்கார்ந்து மட்குடத்தைத் தட்டுக் கம்பால் தட்டிக்கொண்டிருக்கும்போது, நமது சமஸ்தானத்தாசிகளில் ஒருத்தியின் மகளாகிய அழகிற்சிறந்த மதன்ரஞ்சனியென்னும் மங்கை அவ் வழியாக அடிக்கடி சென்றுகொண்டிருந்தாள் அவளைப்பார்த்தவுடனே, என் மனமானது அவளைப்பின்தொடர்ந்து போய்விட்டபடியால் நான் இன்ன வேலைசெய்தேனென்று எனக்குத்திட்டப்படாமல் என் குடம் அளவுக்குமேல் சற்றதிகமாய்ப் போய்விட்டது. என் ஐயனே! என்னை ரட்சிக்குந்துய்யனே! ஆகையால் இக்கொலைக்கு அந்த இளங்குமரி பாத்தியஸ்தியே தவிர அடியே னுக்கு[illegible] பாத்தியமில்லை" என்றான்.

பிறகு அ[illegible]ன் தாசியின் மகளாகிய மதனரஞ்சனியை [illegible] "[illegible] குயவன் வீட்[illegible]தெருவழியே அடிக்கடி சென்றுகொண்டிருந்த காரணம் என்ன?" என்று வினவினான். அதற்கு அக்குமரிப்பெண் மஹாராஜனைப் பார்த்து "எங்களிறைவனே! அந்தக்குயவன் வசிக்கிற வீதியிலுள்ள ஒரு தட்டானிடத்தில் நான் நகைசெய்யக்கொடுத்து ஆறு மாதமாகியும் என் நகையைக் கொடாமல் ஒவ்வொருநாளும் என்னை அலைந்துபோகும்படி செய் கின்றான், இதுவன்றி அவனிடம் நான் அடிக்கடி போவதற்கு வேறு முகாந் தரமில்லை, மகாராஜாவே" என்று சொல்லி வணங்கி நின்றாள்.

உடனே அரசன் தட்டானை அழைத்துவரும்படி கட்டளையிட, அது போலவே தட்டான்வந்து ஆஜராயினான்.

அரசன் அவனை நோக்கி "அடா தட்டாரப்பயலே! இந்தத் தாசியின் நகையைக்கொடாமல் ஆறுமாத காலமாய் நீ அவளை அலையவைப்பதற்குக் காரணம் யாது? என்று உறுக்கிக்கேட்டான். தட்டானுக்கு விடைதருதற்கு வழியொன்றுந்தோன்றாமல் அங்குமிங்கும் பார்த்து ஆடு திருடின கள்ளன் போல் விழித்துக்கொண்டு நின்றான். இதைக்கண்ட மன்னன் மந்திரியை நோக்க, மந்திரி அரசனைப்பார்த்துச் சொல்லுகின்றான்.

"அட்டதிக்கும் ஓற்றைக் குடையிலாளா நின்ற துட்டசங்காரரான எங்கோனே!

இந்தத் தட்டானாலேயே இவ்வளவு பிரமாதமான சங்கடங்களும் [illegible] திருக்கின்றது, தட்டானைத் தொட்டவனுங் கெட்டானென்றும் "[illegible] வாயானாலும் தட்டார் புறட்டைப்பேச முடியாது" என்றும் பழமொ[illegible]கள் உண்டு,

ஒட்டாக வொட்டியுங் கட்பொன்னின் மாட்பொன்னுபாயமதாய்த்
தொட்டாதிரான் பணிசெய்யாதிரான் செம்பொன் மேருவினைக்
கட்டாகக்கட்டிக் கடுகளகவாகநிறை காட்டவல்ல
தட்டானுக்கஞ்சியல்லோ, வணிந்தான் சிவன் சர்ப்பத்தையே.

என்றபடி, சிவன் தட்டானுக்குப் பயந்து நகையணிந்துகொள்வதற்குப் பதிலாய்ச் சர்பத்தையணிந்துகொண்டானென்றும் ஒரு கதையிருக்கின்றது.

௱௩௯-ம் பக்கம் பார்க்க.

கோபமென்னும் இருதயத்தீயை மௌனம் என்னும் குளிர்ந்த ஜலந்தான் தீர்க்கும்.

மதராஸ் யூநானி மெடிக்கல் ஆல், 439 செ., சௌகார்பேட்டை, சென்னை.

புளிப்பு மாதுளம்பழ ஷர்பத்து.

இது வாந்தி அரோசகம், மயக்கம் முதலியவைகளை கெடுக்கும். பேதி, வயிற்று அளைச்சல், வயிற்றுக்கடுப்பு முதலியவைகளையும் சௌக்கியமாக்கும் கிரயம் புட்டி 1-க்கு ரூபா 2.

குயவர் வழக்கு.

ஒரு நாட்டுப்புறத்தில் வசித்த ஒரு குயவன் தன் பெண்சாதியோடு வார்த்தையாடிக்கொண்டிருக்கையில், அடி! ஒரு கறவைப்பசு வாங்கப்போகிறேனென்றான். உடனே அவள் தன் தாய்வீட்டுக்கு மோர்கொடுப்பேனென்றாள். இப்படித்தானே என் குடும்பத்தை நஷ்டமாக்கிவிட்டாய் என்று சொல்லி அவளை செம்மையாய் அடித்தான். இப்படி அடித்ததற்காக அவன் மைத்துனன் அவனைத்தடுத்துத்திட்டினான். இவ்விதம் இருவரும் சண்டைபோட்டுக்கொண்டு நியாயாதிபதி முன்னிலையில் முறைப்பாடு செய்துகொண்டார்கள். நியாயாதிபதி குயவனைப்பார்த்து உன் மைத்துனனை நீ அடித்ததாக சொல்லுகிறானே அதற்கென்ன சொல்லுகிறாயென்று கேட்டார். அதற்குக் குயவன், "ஐயா மஹாப்பிரபுவே! உம்முடைய தங்கையை என் பெண்சாதியாகப்பாவித்துக்கொள்வோம். என் பெண்சாதியை அடித்தால் நீர் கேட்கவேண்டிய நியாயமென்ன இருக்கிறது" என்று மறுமொழி கூறினான். நியாயாதிபதிக்கு இவ்வார்த்தையைக் கேட்டவுடனே கோபமுண்டானபோதிலும், அவன் மூடத்தனத்தாற் பேசுகின்றானென்று நினைத்துத் தனக்குண்டாகிய கோபத்தையடக்கிக்கொண்டு குயவனைப் பார்த்து, "அடா குயவா! உன் உறவின்முறையார்களையெல்லாம் கூட்டி அவர்களிடம் இவ்வழக்கைச்சொல்லி, அவர்கள் சொல்லுகிற தீர்ப்புப்பிரகாரம் நீ நடந்துகொள்" என்று கட்டளையிட்டார். அதற்குக்குயவன் "ஐயா! நீதிமன்னனே! என் இனத்தவர்களதிகமில்லாதபடியினாலும் அவர்களைப்பார்க்கிலும் தங்களையே நான் மேலாகப்பாவிப்பதனாலும் தாங்கள் தீர்ப்புச்சொன்னால் ஆயிரம் *மண்ணுடையார் சொன்னதாகப்பாவிப்பேன்" என்றான். நியாயாதிபதி வெட்கமடைந்து சேவகர்களைக்கொண்டு குயவர்களைக் கோர்ட்டுக்கு வெளியில் தள்ளிவிட்டார்.

நீதி.

மூடர்களாயிருக்கின்றவர்கள் இதாகிதம் தெரியாமலே பேசுவார்கள். அவர்களால் துன்பமும் நேரிடும். ஆகையால் அவர்கள் சகவாசத்தை நீக்கவேண்டும். அற்பசிநேகம் பிராண சங்கடம் என ஒரு முதுமொழியுமுண்டு.

* மண்ணுடையார் என்பது குயவர்.

மவுனக புத்தி.

"உமக்கு எத்தனை பிள்ளைகள்?" என்று ஒரு நியாயாதிபதி கட்சிக்காரனைக் கேட்க "நமக்கு என்னமாகத் தெரியும், நம்முடைய கணக்கப்பிள்ளையைக் கேட்டால் கணக்கைப் புரட்டிப் பார்த்து ஒரு நொடிக்குள் சொல்லிவிடுவார்" என்றான்.

"விறகு கட்டு என்ன விலை?" என, அரைப்பணம் ஐயா என்றாள். "ஓ! நான் ஸென்ஸ்! நமக்கு இரைப்பணம் கால்ப்பணம் ஒன்பது அரை ரூபாய் மட்டும் கொடுப்போம் இஷ்டமிருந்தால்போடு" என்றார். "ஐயா பசிகாதடைத்துக்கொண்டுபோகிறது வயிற்றுக்கும்சோறு போடவேண்டும்" என, "ஆ; அதுகேள், போடுவோம்," என்றார்.

பொறுமையற்ற வறிஞன் எண்ணெயற்ற விளக்கு.

அநீதமாநகரத்து அந்தாதர்பார்—(௱௩௯-ம் பக்கத் தொடர்ச்சி.)

தட்டாரப்பயல்க ளெல்லாரும் எப்போதும் மோசக்காரப்பயல்க ளாகையால், இந்தத் தட்டானைத் தூக்கிற் போட்டுவிட்டால் நமது இராஜ்ஜியத்தில் நடக்கப்பட்ட அநீதக்கொலைகள் அடங்கிப்போகும், அப்போது குடிகளும் பயமின்றி வாழ்வார்கள்; இதரதேசத்து இராஜர்களும் நம்முடைய இராஜரீகத்தைக் கேள்விப்பட்டால் நம்மைப்புகழ்ந்து தங்கள் தேசங்களிலும் நம்முடைய சட்டங்களைப் பாவச்செய்வார்கள்" என்று சவிஸ்தாரமாய் எடுத்துரைத்தான்.

அரசன் மந்திரி புத்திக்கு மனமகிழ்ந்து அவனைப் புகழ்ந்து தட்டானைக் கட்டித்தூக்கிற்போடும்படி உத்தரவளித்தான்.

அவ்வூர் வழக்கப்படி இராஜா மந்திரி பிரதானி முதலாகிய சகலருக்கு முன்பாகத் தூக்குமரம்நாட்டி ஊர்முழுதும் பறைசாற்றி எல்லாருக்கு மறிவித்துத் தட்டானைத் தூக்கு மரத்திலேற்றிவிடப்பட்டது. கழுத்திற் கயிறுமாட்டுகிற சமயத்தில் அங்கு நின்ற ஏவலாளர்களைத்தட்டான் பார்த்து, நான் அரசனிடம் ஓர்சங்கதி பேசவேண்டுமென்றும், அதன்பின் தன்னைத் தூக்கிவிடலாமென்றும் கெஞ்சிக் கேட்டுக்கொண்டான். அது சங்கதியை இராஜாவுக்கறிவிக்க, இராஜாவும் அவன் மீது கிருபையாகி அவன் கருத்தைத் தெரிவிக்கச் சொன்னான்.

தட்டான் அரசனை நோக்கி "ஏழைக்கிரங்கும் எங்கோமானே! தங்களாக்கினைப்படி அடியேன் தூக்கிட்டுக்கொள்ள நோக்குற்றிருந்தாலும், என் மனதிலுன்னிய நாட்டத்தைத் தாங்கள் சற்று நோட்டமிட்டுப் பாருங்கள், ஏழையாகிய நான் அங்கதுர்ப்பலனும் மெலிந்தவனுமிருப்பதால், கழுத்தில் சுருக்கிட்ட இரண்டு நிமிஷத்திற்கெல்லாம் புசுக்கென்று என் உயிர் போய் விடுமே! இங்ஙனம் இவ்வேடிக்கை பார்ப்பதற்காக வந்து நிற்கும் கோடானு கோடி பிரபுக்களின் ஆவல்தீரவழியில்லையே, அப்போது அவர்கள் என்னடா! இந்தத்தட்டானைத் தொட்டவுடன் உயிர் துறந்தானே! அவன் கெட்டான் மூட்டாள்பயல் என்று என்னை வசைபேசுவார்கள். செத்தாலும் வீரபட்டம் பெற்றுச் சாகவேண்டுமேயல்லாது மூட்டாள்பட்டம் பெற்றுச் சாகக்கூடாது. அதனால்தான் தேசிங்குமகாராஜன் சண்டையில் வெட்டப்பட்டுச் சவத்தைக் கோட்டைக்குத் தூக்கிக்கொண்டுபோகும்போது, அவன் மனைவி சன்னதியில் எதிர்த்து நின்று சண்டைபோட்டு முன் வெட்டுபட்டிருந்தால் சவத்தைக் கோட்டைக்குள் கொண்டுவரும்படியாகவும், எதிரிகளால் விரட்டப்பட்டுப் பின் வெட்டுப்படிருந்தால் கோட்டைக்கு வெளியே கொண்டுபோகும்படியாகவும் கட்டளையிட்டான்! அதுபோல் செத்தாலும் வீரவானென்ற பெயருடன் சாகவேண்டுமேயல்லாது சோமாறிப்பயலென்ற பெயர் வாங்கிக் கொண்டு சாவது பிரதாபத்துக்கு மகா அபகீர்த்தியாயிருக்கின்றது, என்னையனே? தங்களுடைய பிரஜைகளில் ஒருவனாகிய அடியேனுக்கு ஒரு குறைவு நேரிட்டால் தங்களுக்கும் குறைவல்லவா? ஆகையால் அடியேனை இரட்சித்து அதோ ஒரு கோமட்டிப் பயல் இன்னத்தெரியாமல் நின்று

[illegible]-ம் பக்கம் பார்க்க.

ஞானைகயிலெல்லாம் பெரிய ஞானசை கோபத்தை அடக்கி ஆளுகிறதான்.

மதறாஸ் யூனானி மெடிக்கல் ஆல், 439 செ., சௌகார்பேட்டை; சென்னை.

உன் சுபாவத்தை நீ எப்போதும் ஜயித்து மேற்கொள்ளப்பழகுவாயாக. அவ்வாறு பழகாவிடில், அச்சுபாவம் கடிவாளமிழந்த காட்டுக்குதிரைபோல் உன்னை வாரிக் கொண்டுபோய் ஒருக்காலும் ஏறிவரக்கூடாத அகாதமான படுகுழியிற்தள்ளிவிடும்.

உன் மனச்சாட்சிக்கு விரோதப்படாதவனாகப் பழகிக் கொள். எப்போதும் முணுமுணுத்துக்கொண்டு திருப்தியற்றிருக்கும் சுபாவத்திற் கிடங்கொடுப்பாயாகில், அதனால் உனதுள்ளத்துள்ள சமாதானத்தைக் கெடுத்துக் கொள்வதுமன்றி, யாவராலும் வெறுக்கத்தக்கவனுமாவாயென்பதற்கு யாதொரு சந்தேகமுமில்லை.

பண்டை நீதிகால்த்துப்

பழமொழிக் கதைகள்.

1. பழமொழிக்கதைகள் என்றால் என்ன?

உலகத்தில் வழங்கிவரும் பழமொழிகளில் சிறந்ததாக உள்ள அநேக பழமொழிகளை நெடுநாளாக ஆராய்ந்து திரட்டி. அந்த ஒவ்வொரு பழமொழிகளிலும் மறைந்துகிடக்கிற அருமையான கதைகளை எழுதியிருக்கின்றது.

2. இதை வாசிப்பதனால் என்ன பிரயோஜனம்?

முதலாவது, பழமொழிகளெல்லாம் மனப்பாடமாய்விடும். இரண்டாவது, நாம் ஒருவரிடத்தில் பேசும்போது சமயத்துக்கேற்ற பழமொழிகளைச் சொல்லலாம். அதைக் கேட்போர் ஆச்சரியப்படுவார்கள். அந்தப்பழமொழிக்கு ஏற்ற கதையைச் சொல்வோமானால், கேட்போர் சந்தோஷிப்பார்கள். நமக்கும் கௌரவம் உண்டாகும்.

3. இந்தப் பழமொழிக்கதையைப் படிப்பதனால் என்னென்ன விஷயம் தெரியவரும்?

தெய்வபக்தி, தெய்வரகசியம், பெண்களுடைய தந்திரங்கள், அவர்களுடைய மனோபாவங்கள், உலக அறிவு, ஞானம், கல்வி, பேராசையின் பிரயோஜனம், நன்மை, தீமை இன்னின்னவென்பது ஆகிய அநேக ஆயிரவிஷயங்கள் புலப்படும். மிகக்கஷ்டப்பட்டு இந்நூலை எழுதி முடித்தோம்.

இதன் விலை அணு 10. போஸ்டேஜ் அணு 2.

விநோதார்த்தப்பதங்கள்.

ஓர் ஊரில் பரமலுத்தனொருவனிருந்தான். அவனுடைய லோபத்தனத்தை யறியாமல் அவனிடத்தில் ஓர் சங்கீதவித்வான் பரிசுபெறக்கருதி ஒருநாட்காலையிற் சென்றான். அவனைக் கண்டமாத்திரத்தில் உலுத்தன் முகமன் கூறி, அவனை ஒருபுற மிருத்தி, ஐயா! பாடலாமென்றான். அப்புலவன் வஞ்சனையின்றி, சங்கராபரணம், தோடி, தன்னியாசி, பியாக்கு முதலிய அருமையான இராகபேதங்களைக்கொண்டு, கல்லுங்கரைந்துருகுமாறு அன்று சூரியஸ்தமனம் வரையிற்பாடி நெஞ்சுவரண்டிளைத்தான். உலோபியோ இடையிடையே எழுந்து அகத்துக்குட்சென்று ஆகாராதிகளை அருந்திவந்து பாட்டைச்செவிமார, விடாது கேட்டுக்கொண்டிருந்தான். அவ்வித்வான் இளைத்துச் சோர்வதைக்கண்ட அவ்வன்னெஞ்சவுலுத்தன் தன்

௱௪௧-ம் பக்கம் பார்க்க.

பாம்புக்குஞ்சை வளர்க்கிறவன் அதன் கடிக்குத் தப்பான்.

அநீதபுர்நகரத்து அந்தாதர்பார்—(௱௩௮-ம் பக்கத் தொடர்ச்சி.)
கொழுத்துப்பருத்து யானையைப்போல் உப்பி எருமையைப்போல் திணிக்கொண்டு வெகு சவ்டாலாய் நிற்கின்றானே அவனைத் தூக்கினீர்களேயானால் மூன்று மணி... க்கு ...பக்கு என்றுதைத்துக்கொண்டு உயிரிழப்பான். அப்போது இங்குநிற்கின்ற கனவான்களெல்லாம் ஷபாஷ்! ஷபாஷ்! என்று கரகோஷ்டம் செய்து ஆநந்திப்பார்கள். அவர்கள் ஆவலுந்தீரும் என் காவலும் நீங்கும்" என்று சொல்லி வணங்கி நின்றான்.

தட்டான் மொழிந்த விஷயங்களெல்லாம் மகாராஜன் கேட்டு, மந்திரியின் ஆலோசனையில் வைக்க, மந்திரி மகாராஜனைப்பார்த்து, ஹாங்! மஹாராஜ், வேடிக்கை பார்க்க வந்திருக்கின்ற இத்தனை ஜனங்களுக்கும் மெத்தத் திருத்தியுண்டாகும்படியான கருத்தாகவே தட்டான் பேசுகிறான், அதுபோல் செய்வதுதான் என் புத்திக்கும் யுக்தமாகத் தோற்றுகின்றது என்றான்.

உடனே ஏவலாளர் இராஜனுடைய ஆக்கினைப்படி அங்ஙனம் வேடிக்கை பார்த்துக்கொண்டு நின்ற ஏதுமறியாத தீதிலாத ஓர் கொழுத்த கோமுட்டியை இழுத்துவந்து தூக்கிற்போட்டுவிட்டார்கள்.

அந்தப் பிரேதத்தை மயானத்திற்குக் கொண்டுபோகும்போது அவன் இனத்தவர்கள் தங்கள் வழக்கப்படி நெற்பொரியும் எள்ளும் பாதையில் அள்ளித் தெளித்துக்கொண்டு போனார்கள். அந்த வருஷம் மழை செம்மையாய் வருஷித்து வேளாண்மைகளெல்லாம் செம்மையாய் விளைந்ததன்றியும், முக்கியமாய் எள்பயிர் அதிகமாய் விளைந்திருந்தது. வேளாண்மைக் கணக்கைப்பார்வையிட்ட அரசன் எள் முந்தின வருஷங்களைவிட இந்த வருஷத்தில் இவ்வளவு அதிகமாய் விளைந்ததற்குக் காரணமென்னவென்று மந்திரியைக்கேட்க, மந்திரி சொல்லுகின்றான். எனது தர்மராஜாவே! கடந்த வருஷத்தில் கோமுட்டியொருவனைத் தூக்கிவிட்டோமே அவன் சவத்துக்கு அள்ளித்தெளித்த எள் முழுதும் வெள்ளம்போற் பெருகி நல்ல நயத்தைத் தந்திருக்கின்றது என்றான். அரசன் தன் பொக்கிஷச் சாலையைச் சுருக்கில் நிரப்பிக்கொள்ளப் பேராசைகொண்டு அவ்வூரிலுள்ள கோமுட்டிகளில் ஒவ்வொரு குடும்பத்திலும் ஒவ்வொருவனைத் தூக்கிற்போடும்படி கட்டளையிட்டான். இச்செய்தியைக் கேள்விப்பட்ட கோமுட்டிகளெல்லாம் திரண்டு (கோமுட்டி புத்திக்கு மோசம் லேது மோசம் ஒச்சிதே செப்பேதிலேது) என்றபடி தங்கள் தங்கள் குடும்பங்களோடு ஊரைவிட்டு ஒருவருக்கும் சொல்லாமல் ஓட்டம் பிடித்தார்கள்.

அவ்வூரரசன் ஒருநாள் எலிவேட்டைக்குப் போயிருக்குங்காலையில், அவன் மனைவியைப் பாம்பு கடித்துவிட்டது. இது சங்கதியை அரண்மனை உத்தியோகஸ்தர்கள் மந்திரிக்குத் தெரியப்படுத்தவே, மந்திரி அரசனில்லாத காலத்தில் ஆபத்து நேர்ந்ததே என்று அதிக கவலையுற்று அந்த விஷம் தலைக்கேறுவதற்கு முந்தித் தலையை வெட்டிப் பத்திரமாய் வைக்கும்படி சட்டளையிட்டான். அந்தப்பிரகாரம் இராஜபத்தினியின் தலை வெட்டப்பட்டது. பாம்பை யடியாமல் விட்டுவிட்டால் மற்றவர்களையும் கடித்துவிடுமென்றெண்ணிப் பாம்பிருக்கிற இடத்தைத்தேட அரண்மனை முழுவதும்

௱௪௨-ம் பக்கம் பார்க்க.

காகம் உன் வழிகாட்டியாயிருந்தால் செத்த நாய்களண்டை உன்னை கூட்டிப்போம்.

மதராஸ் யூநானி மெடிக்கல் ஆல், 439 நெ., சௌகார்பேட்டை, சென்னை.

மகா ராஜா துறவு.

(மூலமும் உரையும்).

உயர்ந்த பதிப்பு. பாக்கெட் சைஸ்.

மகாராஜா விவாகம் செய்துக்கொண்டு ராஜ்யபாரம் செய்வதும், பின்னர் அரசாங்கத்தில் விரக்தியுண்டாகி, ராஜ்யத்தையும், தாய்தந்தை மனைவி முதலியோரைவிட்டுத் துறவடைதலும், அவர்கள் மகாராஜாவைத் தடுப்பதும், அப்போது மகாராஜா வேதாந்த ரகசியங்களை அவர்களுக்கெடுத்துக் கூறி, காட்டை நோக்கிப்போவதும், அங்கு சென்று தவஞ்செய்வதுமாகிய அநேக அருமையான விஷயங்கள் இதில் அடங்கியிருக்கின்றன. இந்த சரித்திரத்தைப் படிப்போர் மோக்ஷசாம்பிராஜ்யத்திற்கு அருகாவார்கள்.

இதன் விலை அணா 8. போஸ்டேஜ் அணா 2.

விநோதார்த்தப்பதங்கள் — (௱௩௯-ம் பக்கத் தொடர்ச்சி.)

னுடைய காரியஸ்தனையழைத்து, "அடா! ஓர் பெரிய தட்டில் ஆயிரம் பூவராகனையும் ஜோடு சால்வையையும் எடுத்துவை" என்றான். இதைக் கேட்ட புலவன் மனவெழுச்சியுண்டாய்ப் பைரவி, கல்யாணி, பூபாளம் முதலிய இன்னும் மகா அருமையான இராகங்களைக்கொண்டு இரவு பன்னிரண்டு மணிவரையிலும் பாடி மெய்சோர்ந்தான். அதுவரையிலாவது போதுமென்று சொல்லாமல் உலுத்தசிகாமணி தன் வேலைக்காரனை மீண்டும் அழைத்து, "அடா! அந்தத்தட்டில் நான்கு காசி பீதாம்பரம், இரண்டு ஜதை கடகங்கள், இருபது கல்லிழைத்த பதக்கங்கள், பத்து மோதிரங்கள் ஆகிய இவற்றையும் எடுத்துவை" என்றுரைத்தான், இதைக்கேட்ட புலவன் அயர்வுநீங்கிச் சூரியோதயம் வரையில் மூச்சுப்பிடித்துக்கொண்டு மனக்களிப்புடனே கேதார கௌள முதலிய இன்னும் சிறந்த ராகங்களைப் பேராசையாற்பாடி மூர்ச்சித்தான். கடைசியாய்ப் புலவனெழுந்து, "கனவானே! இனி என்னால் முடியாது. விடைதரவேண்டும்!" என்றான். அதற்கு "உலுத்தன், ஐயா! தாங்கள் அதிக பிரயாசை எடுத்துக்கொண்டீர்கள். நல்லது போய்வாருங்கள்.!" என்றான். இதைக்கேட்டவுடனே சிற்கவும் சக்தியற்ற புலவன் பிரமித்து ஒன்றுந்தோன்றாமல், தெருவாயிற்படி வரையில் உலுத்தன் முன்னும் தான் பின்னுமாகச் சென்றபோது, உலுத்தன், "நல்லது போய்வாருங்கள்" என்று மீண்டும் சொல்லித்திரும்பினான். இதைக்கேட்ட சங்கீத வித்வான் வெட்கத்தையும் விட்டு, "மகாப்பிரபு! ஒன்றுமில்லாமலனுப்பிவிடுகிறீரே? பெரியதட்டும் சால்வைகளும் பூவராகன்களும் ஆபரணங்களும் என்னாய் முடிந்தன" என்று வாடிய முகத்தோடு கேட்டான். அதற்கு அந்தப்பரம உலுத்தன், "ஓய் நீர் என்ன எனக்குச் செய்தது! என் காதுக்கு இனிப்பாய் ஏதோ சிலவற்றை நீர் சொன்னீர் உம் காதுக்கு இனிப்பாய் ஏதோ சிலவற்றை நான் சொன்னேன், இரண்டும் சரியாய்ப்போகவில்லையா? உமக்கு வாரிக்கொடுக்க நீர் எனக்கென்ன வாரிக்

௱௪௫-ம் பக்கம் பார்க்க.

உலக இன்பங்களை வெறுத்திருப்பதே உத்தம உபவாசம்.

அநீதமாநகரத்து அந்தாதர்பார்—(௱௪௰-ம் பக்கத் தொடர்ச்சி.)

தேடிப்பார்த்தார்கள். எங்கும் காணாததால் கவலையுற்றிருக்கையில், அரண்மனையிற் கொள்ளிவைத்துக் கொளுத்திவிட்டால் காங்கை பொறுக்காமல் ஒரு நிமிஷத்தில் வெளியில்வந்துவிடும், அப்போது லகுவாய் அடித்துவிடலாமென்று ஒரு புத்திமான் கூறக்கேட்ட மந்திரி, அதிக சந்தோஷமாகி அரண்மனையைக் கொளுத்திவிடவே அந்நெருப்பு ஊர்முழுதும் பரவி எல்லா வீடுகளையும் பொருள்களையும் நாசஞ்செய்துவிட்டது. அந்தத்தீயை அவிப்பதற்காக ஏரியின் கரையை உடைத்துத் தண்ணீர் திறந்துவிடும்படி மந்திரி உத்தரவுசெய்ய, அந்தப்பிரகாரம் ஏரியின் கரை உடைக்கப்பட்டது ஜலம் நிரம்பி ஊர் முழுகிப்போய்விட்டது. இவ்விதமாக அரசனும் மந்திரியும் சேர்ந்து ஊரைப்பாழாக்கிவிட்டார்கள்.

மூடர்களால் செய்யப்பட்ட கருமங்கள் யாவும் கேடாகவே முடியும்.

சாமர்த்தியமான திருட்டு.

ஒரு காட்டேரில் வசிக்கப்பட்ட ஒரு திருடன் தன் இரண்டு குமாரர்களுக்கும் திருட்டைக் கற்றுக்கொடுக்கும்படி ஒரு உபாத்தியாயரிடத்தில் விட்டான். இருவருக்கும் பூர்ணமாய்த் திருட்டுவித்தை கற்றுக்கொடுத்த பிறகு, இருவரில் எவன் அதிக்கெட்டிக்காரனாயிருக்கின்றானோ அவனைத் தகப்பன் எடுத்துக்கொள்ளுகின்றதென்றும், மற்றவனை உபாத்தியாயர் எடுத்துக்கொள்ளுகின்றதென்றும் அவர்களிருவரும் தீர்மானித்துக்கொண்டார்கள். அவ்விரண்டு பிள்ளைகளில் மூத்தவன் மிகவும் மந்தனும் சோம்பேரியாயுமிருந்தபடியால், உபாத்தியாயர் எவ்வளவு வருத்தப்பட்டு வித்தை கற்றுக்கொடுத்தும் கிஞ்சித்தாகிலும் பயன்படவில்லை. இளையவனோ! மகாசுறுசுறுப்புள்ளவனும் அதிக புத்திகூர்மையுடையவனுமாயிருந்தபடியால் உபாத்தியாயர் சொல்லிக்கொடுக்கிறவிஷயங்களைக் கருத்தாய்க்கேட்டுச் சகல தந்திரோபாயங்களையும் வெகு சூட்சமாகக் கற்றுக்கொண்டான். உபாத்தியாயர் இளையபையனைத் தன் கைவசப்படுத்திக்கொள்ளவேண்டுமென்றுகருதி அவனை அதிக அன்பு ஆதரவாய் நடப்பித்து வந்தார். ஒருநாள் உபாத்தியாயர் இளையபையனைத் தனியேயழைத்துக் கபடநெஞ்சோடு, அப்பா குழந்தாய்! நான் உனக்கொரு இரகசியமானசெய்திசொல்லுகின்றேன், அதை நீ மனதிலே வைத்துக்கொண்டு அதுபோல் நடக்கவேண்டும், அதாவது நான் சிறுபிராயமுதல் திருட்டுவித்தையில் மகாசாமர்த்தியம் அடைந்து அநேக இடத்தில் கொள்ளையடித்துத் திரளான ஆஸ்தியைச் சம்பாதித்தேன்.

இப்பொழுது எனக்கு வயது முதிர்ந்துபோய்விட்டபடியாலும், என் ஆஸ்திகளை அனுபவிக்க ஒரு புத்திரனில்லாதபடியாலும் நான் விசனமுற்றிருக்கையில், நீ என்னிடம் வந்து சேர்ந்தாய் உன்னை அதிக பிரீதியோடு என் புத்திரனைப்போற்பாவித்துச் சகல வித்தைகளையும் கற்பித்தேன். இப்பொ

௱௪௩-ம் பக்கம் பார்க்க.

நீ அடைக்கல்லாயிருக்கும்போது பொறுமையாயிருந்து கூடமானபோது தொங்கான் போடு.

மதராஸ் பூநாணி மெடிக்கல் ஆல், 439 நெ., சௌகார்பேட்டை, சென்னை.

அதிர்ஷ்ட பொக்கிஷம்.

கனவான்களே!

உங்களுடைய செல்வக்குமாரர்களும், குமாரத்திகளும் தெய்வத்தினுடைய அற்புத சக்திகளையும், உலக தந்திரங்களையும், குடும்பத்தில் ஒழுகவேண்டிய நன்னடக்கைகளையும், அதிர்ஷ்டம் கைவசம் ஆகும் ரகசியத்தையும், பெற்றோர், உடன்பிறந்தோர், பெரியோர், சுற்றத்தார் முதலியோரிடத்தில் நடந்துகொள்ளவேண்டிய விதங்களையும் தெரிந்துகொள்ளவேண்டுமானால், பந்தனு போனற் போகிறது. நமது மக்களுக்கு அதிர்ஷ்டமும், நன்னடக்கையும் உண்டானாற் போதுமென்னும் எண்ணம் உங்களுக்கு இருக்குமானால், உடனே இந்த அதிர்ஷ்ட பொக்கிஷத்தில் ஒரு புத்தகம் வரவழைத்து, நீங்கள் வாசிப்பதல்லாமல், உங்கள் வயிற்றிற்பிறந்த மக்களுக்கும் வாசித்துக்காட்டுங்கள். அவர்களையும் வாசிக்கச்செய்யுங்கள். அவர்களுடைய தீயநடத்தைகளெல்லாம் ஆச்சரியப்படும்படி தொலைந்துபோய் நற்குணங்களைப்பெற்று இவ்வுலகத்தில் எல்லோரும் மெச்சும்படி ஜொலித்து வாழ்வார்கள்.

விலை அணு 8. போஸ்டேஜ் அணு 2.

விநோதார்த்தப்பதங்கள்—(௱சக-ம் பக்கத் தொடர்ச்சி.)

கொடுத்தது, போம் போம் பைத்தியக்காரப்புலவரே" என்று சொல்லித் துரத்திக் கதவைத்தாளிட்டுக்கொண்டான். ஆகையால் உலுத்தனிடத்தில் அன்பு அருள் என்னும் இவை மருந்துக்கும் கிடைக்காது. ஈகையுள்ளானிடத்தில் அவை பூரணமாய்க் குடிகொண்டிருக்கும். இதனாலன்றோ, "அன்பிலாரெல்லாந் தமக்குரியரன்பு புடையா—ரென்புமுரியர் பிறர்க்கு." என ஆன்றோர் கூறியிருக்கின்றனர்.

"வழக்கமாய் வயலில் அறுப்பு அருக்க நமக்கு ஆள் கிடைக்கிறதில்லையே, இன்று பத்தாள் சொல்பகூலிக்கு கிடைத்தார்கள், இன்னும் ஒருமாதம் போனால் ஆள் கிடைக்காதே யென்று இன்றை அறுப்புவிட்டேன். இன்றைக்கு அறுப்புவிட்டால் மாருல் பூச்சியந்தான் என்று குப்பன் பொறுமைகொண்டு சொன்னான். பூச்சியமாய்ப்போனாலும் கூலிச்செட்டு இந்த ஏறபாட்டில் இருக்கிறது." என்று ஒருநாள் இராத்திரி புருஷன் தன் பெண்ஜாதியிடத்தில் சொன்னான். "நான் பண்ணின செட்டு உங்களுக்குத்தெரியுமா?" என, "அது என்ன" வென்று கேட்டான். "குழந்தை கோபாலன் க்ஷவரம் பண்ணிக்கொண்டான். பெட்டியில் அரையணு இருந்தது. ஒரு துக்காணி போக இரண்டு துக்காணி கேட்டேன், சில்லரையில்லையென்று அம்பட்டன் சொன்னான் நீங்கள் செத்துப்போனால் தாலியறுத்துத் தலைமொட்டையடிக்க நாலு அணு கேட்பானே என்று ஒரு ஆட்டுக்கு நானும் மொட்டையடித்துக்கொண்டுவிட்டேன், எவ்வளவு வழவுவென்றிருக்கிறது பாருங்கள் என்று ஒரு பிராமணஸ்திரீ தன் புருஷனிடத்தில் சொன்னாள்.

ஒருவன் இரண்டு முசல்களை ஒருமிக்கத் தொடர்ந்து வேட்டையாடல் கூடாத காரியம்.

இச்சையடக்கம் என்ற மரத்துக்கு மனரம்மியம் என்பது வேரும் சமாதானம் என்பது கனியுமாம்.

மந்தார நாட்கள் மேகம்போல் பறந்தோடிப்போம்.

சாமர்த்தியமான திருட்டு—(௱௪௨-ம் பக்கத் தொடர்ச்சி.)

முது வித்தையில் நீ பூர்ணபாண்டித்தியம் அடைந்துவிட்டபடியாலும் உன் தமயனைவிட நீ உன் தகப்பனிடத்தில் செய்துகொண்ட தீர்மானப்பிரகாரம் கெட்டிக்காரனுயிருப்பதாலும், உன்னை அவருக்கு கொடுத்துவிடும்படி நேரி டும். ஆகையால், அவருக்கு முன்பாக உன்னைப் பரீட்சிக்கின்ற காலத்தில் உன் தமயனைவிட வித்தையிற் பிந்தினவனுகை நீ பாவனை காட்டவேண்டும், அப்படிசெய்தால் அவர் உன் தமயனை யழைத்துக்கொண்டுபோய்விடுவார், நீ என்னிடத்திலிருந்தால் என் ஆஸ்திமுழுமைக்கும் பாத்தியஸ்தனுகிவிட லாம், உன்னை என் புத்திரியைப்போல் அன்பாக நடத்திவருகிறேன் என்று பல நன்மொழிகளைக்கூறி என்ன சொல்கின்றுயென்று கேட்டான். அதற்கு இளையவன் தன் தகப்பனுக்குத் துரோகம் செய்யக்கூடாதென்ற கருத்தை மனதிலிருத்தி, குருகேட்ட கேள்விக்கு வெளிப்பேச்சாகபட்டும் நல்லது அப் படியேசெய்கின்றேனென்று மறுமொழிசொன்னுன். உடனே இளையவன், தன் தமயன் மட்டியாகவும் தான் கெட்டியாவுமிருக்கிற காரியங்களையும், தன்னை உபாத்தியாயர் அபகரித்துக்கொள்ளக் கொண்டிருக்கின்ற வஞ்சனை யான கருத்தையும் உபாத்தியாயர் எவ்வளவு தந்திரங்கள்செய்தபோதிலும் தன்னையே அழைத்துக்கொள்ளும்படியாகவும் இரகசியமாக ஒரு கடிதமெ ழுதித் தன் தகப்பனுக்கனுப்பினுன். தகப்பன் அதைப்பார்த்துக்கொண்டு சில தினங்களுக்குப் பிறகு உபாத்தியாயரிடம் வந்து "ஐயா! உபாத்தியா யரே, என்பெண்ஜாதி அதிக சுகவீனமாயிருப்பதால் இளையபுத்திரனைப்பார்க்க அதிக ஆவலாயிருக்கிறதாக அழைத்துவரும்படி சொல்லுகின்றுள். தய வுடன் அவனை அனுப்பிவையுங்கள்" என்று கேட்டான், உடனே, உபாத்தியார் ஓகோ! இவன் நம்மை வஞ்சிக்கவல்லவா கெஞ்சுகிறுன்? என்று மனதி லுன்னி, ஐயா! சஞ்சலப்படவேண்டாம். இளையவன் பெருஞ்சோம்பேரி நான் அவனுக்காக எடுத்துக்கொண்ட பிரயாசையெல்லாம் தூர் ஆசையாய் விட்டது, அவன் கெட்டியாவானென்றெண்ணினேன் ஆனுல் பெரும் மட்டி யாய்விட்டான். மூத்தவனே மகா சாதுர்யவான், கொடுத்த வேலையை முடிக்கக்கூடியவன். கடுத்தவர்களை அடுத்துக்கெடுப்பவன், அவனுடைய வீரபராக்கிரமத்தை வர்ணிக்க எவர்களால் முடியும். அவனை யழைத்துப் போனுல் சுகக்குறைவாயிருக்கிற தாய்க்கு அகக்களிப்பாய்விடும். ஆகையால் அவனையே அழைத்துப்போம் என்று ஆக்கியாபித்தான். அதற்குத் தகப்பன் சம்மதிக்காதபடியால் இருவருக்கும் இது விஷயத்தில் நெடுநேரம் வாக்குவாதமுண்டாய்க் கடைசியில் மத்தியஸ்தர்கள் மூலமாய் இருவரும் செய்துகொண்ட தீர்மானப்படி எந்தப்பிள்ளை கெட்டிக்காரனே அவனையே தகப்பன் அழைத்துக்கொண்டுபோவதென்று தீர்ப்பளிக்கப்பட்டது. முந்தி மூத்தவனைப் பரீட்சித்ததில் அவனுக்குச் சுலபமான திருட்டும் செய்யக் கூடவில்லை. அப்போது அடுத்த ஒரு சிற்றூரில் நடக்கும் கல்யாணத்திற் காக ஆட்டுக்கடா ஒன்று வாங்கிக்கொண்டு காட்டு மார்க்கமாய் ஒற்றையடிப் பாதையாய்த் தூரத்தில் வரப்பட்ட ஒரு கிராமீன உபாத்தியாயர் சுட்டிக் காட்டி, அதோவருகிற கடாவை அவனறியாமல் அபகரித்துக்கொண்டு வரவேண்டு மென்று இளையவனை ஏவினுர். அவன் இதோ ஒரு நொடியில்கொண்டு வருகின்றேன் என்று சொல்லிப் புறப்பட்டுப்போய் புதிய நிர்மாண செருப்பு

௱௪௬-ம் பக்கம் பார்க்க.

எட்டாத காரியத்துக்குக் குட்டிக்கரணம்போடாதே:—உன் சக்திக்கு அதீதப்பட்ட சாத்தியமல்லாத விஷயத்திற் பிரவேசிக்க முயற்சிசெய்யாதே.

மதராஸ் யூனானி மெடிக்கல் ஹால், 439 கெ., சௌகார்பேட்டை, சென்னை.

உ

அந்தப்புர ரகசியம்.

ஓர் புதிய தமிழ் நாவல்.

மனோகரமானது! மனமகிழ்விப்பது!

இவ்வினிமையான தமிழ்க்கதை நவரஸ அலங்காரங்களுடையதாய் 50-அத்தியாயங்களாக வகுக்கப்பட்டுள்ளது. கதாநாயக-நாயகிகளுக்கு நிகழும் சம்வாதங்கள் படிக்குந்தோறும் பரவசமாக்கவல்லது. கதையின் மூலமாக நீதிகள் பல போதிப்பது. அரிய பல பாடல்களுடையது. உலக இயல்போடு ஒத்துவிளங்குவது. காதலின் சுவை இனைத்தே தனகாட்டுவது. ஸ்திரீகளும், புருஷர்களும் பேரானந்தத்துடன் படித்து மகிழத்தக்கது. கதைகளுக்கெல்லாம் நாயகமாக விளங்குவது. பயனற்ற கதைகளைப்பார்த்துச் சிரிப்பது. பதிவிரதையின் இலக்கணங்களைப் பரக்கக் கூறுவது. உயர்ந்த பளபளப்புள்ள கடிதத்தில், சுத்தமான எழுத்தில் பதிப்பித்து, உன்னதமான பவுண்டு செய்திருக்கிறது. இதன் விலை ரூ. 1.

ஸ்ரீனிவாஸ ராகவன் என்னொரு பையன் உபாத்தியாயரிடம் சென்று, "அடே ஐயாப் பயலே, ஆத்திலே அம்மாள் கோபித்துக்கொள்ளுகிறாள். பள்ளிக்கூடத்துக்குப்போய் ஒருமாதம் ஆகிறதே வாத்திப்பயலிடத்திலிருந்து இன்னும் ஏன் சம்பளம் வாங்கி வரவில்லையென்கிறாள். உன் சட்டம் எனக்கு வேண்டாம் உன் எழுத்தை எடுத்துக்கொண்டு என் ஏட்டைக்கொடடா. நல்ல பொடியிருந்தால் கொஞ்சம் கொடடா போட்டுப்பார்ப்போம். ஆனகுலத்தில் பிறந்து ஆடுமாடு மேய்க்காமல் ஓலைவாரிக் கழுதையாய்ப் போகிறாயே என்று திட்டுகிறாள். நான் என்னடா செய்யட்டும்.

மூடபுத்தி.

தகப்பன் :—மகனே! ஏன் விசனமாயிருக்கிறாய்?

மகன் :—ஐயா! ஒன்றுமில்லை ஒருமாதத்திற்கு முன் நானும் கோபாலனும் சண்டைபோட்டுக்கொண்டோம். அப்போது உன் மூஞ்சியில் விழிக்கிறதில்லையென்று அவனோடு சொல்லி வந்து விட்டேன். பிறகு இனிமேல் எந்தச் சங்கதியைக் குறித்தும் எனக்குக் கடிதங்களும் எழுதவேண்டாமென்று ஒரு கடிதம் எழுதி அனுப்பிவிட்டேன். மூட்டாள் பையன், அதற்கு முன் அடிக்கடி எனக்குக் கடிதம் எழுதிக்கொண்டு வந்தவன் இது வரையில் ஒரு கடிதமேனும் எழுதவில்லையே பாருங்கள் ஐயா!

தருட்டு விகடம்.

புருஷன் :—என் கண்மணீ! நமக்கு விவாகம் நடக்கு முன் உன் கண்ணுக்குப் புலப்பட்ட வஸ்துவை யெல்லாம் வாங்கித்தரும்படி என்னைக் கேட்பாயே? இப்போதேன் அப்படிக்கேட்பதில்லை.

பெண்சாதி :—என் அருமைக்கண்ணாளா! இப்போதும் அதுபோலவே தங்களைக்கேட்பேன். ஆனால் தங்கள் பேரில் எனக்குண்டாயிருக்கும் அன்பினால் என்கண் சற்றே குருடாய்ப் போய்விட்டதாகையால் அதிக சாமான்கள் என் கண்ணுக்கு இப்போது புலப்படுகிறதில்லை.

இரண்டு மானைப் பின்பற்றினால் ஒன்றும் உன் கைக்கெட்டாது.

சாமர்த்தியமான திருட்டு—(௱௪௭-ம் பக்கத் தொடர்ச்சி.)

ஒரு ஜோடியை எடுத்துக்கொண்டு கடாக் கொண்டுவருகின்ற ஒற்றையடிப்பாதையில் ஒரு பக்கத்தில் அச்செருப்பு ஜோடியில் ஒற்றையைப் போட்டுவிட்டுச் சற்று தூரத்தில் அதே பாதையில் மற்ற ஒற்றைச் செருப்பையும் போட்டுவிட்டுப் பக்கத்துக்காட்டில் ஒளிந்துகொண்டிருந்தான். கடாக் கொண்டுவருகின்ற ஆள் முதற்செருப்பு கிடக்கின்ற இடத்தில் வரும்போது அந்தச்செருப்பை எடுத்துப்பார்த்தான். இது நல்ல உறுதியாகவும் அழகாகவும் புதிதாகவுமிருக்கிறதே ஜோடியாக இருந்தாலல்லவா பிரயோசனப்படும் என்று மனதில் நினைத்து, அங்ஙனமே அச்செருப்பைப் போட்டுவிட்டு அந்த மார்க்கமாய் நடந்து போகும்போது மற்ற ஒற்றையையும் கண்டெடுத்து ஆ! ஆ! என்ன மடத்தனம் செய்தேன். முன் கண்டெடுத்த செருப்பின் ஜோடி இங்ஙனமல்லவா கிடக்கிறது. அதையும் நொடியில் எடுத்துவருவேன் என்றெண்ணிக் கடாவை ஒரு மரத்திற் கட்டிவிட்டு முன் கண்ட செருப்பை எடுப்பதற்காக ஓடினான். உடனே ஒளித்திருந்த திருடன் கடாவை அவிழ்த்துக்கொண்டு போய்விட்டான். செருப்பெடுக்கப்போனவன் திரும்பிவந்து பார்க்கக் கடாவைக்காணாமல், அங்குமிங்கும் தேடியும் எங்குங்காணவில்லையாகையால் அதிக துயரமுற்று, கடாவைக்கொண்டு போகாமல் தான் வீட்டுக்குப்போனால் கலியாணவேலை தடைபடுவதோடு யாவரும் தன்னை வசைசொல்வார்களேயென்றஞ்சி, தன் கையில் எஞ்சியிருந்த காசைக்கொடுத்து வேறொரு கடா வாங்கி வரலாமென்று திரும்பிப் போனான். இக்காரியங்களனைத்தையும் தூரத்திலிருந்து பார்த்துக்கொண்டிருந்த உபாத்தியாயர், அந்தமனிதன் இப்பொழுது இரண்டாவது கடா வாங்கப்போகிறபடியால் அதையும் கொண்டு வரவேண்டுமென்று இளையபையனுக்குச் சொன்னான். அவன் அதற்கும் சம்மதித்துப்போய் முன்கடா கட்டியிருந்த இடத்திற்கருகாமையில் காட்டில் ஒளித்துக்கொண்டிருந்தான். அம்மனிதன் இரண்டாவது கடாவை வாங்கிக்கொண்டு அந்த மார்க்கமாய் வரும்போது திருடன் காட்டு நடுவில் நின்றுகொண்டு பே—பே என்று ஆட்டுக்கடா சத்தமிடுவதுபோல் அந்த மனிதனுக்குக் கேட்கும்படி 4 - 5 சத்தம் போட்டான். இதைக்கேட்ட அம்மனிதன், ஓகோ! முன் கடா காட்டில் அவிழ்த்துக்கொண்டல்லவா ஓடிப்போய்விட்டது என்று நினைத்துத் தன்கையிலிருந்த ஆட்டை ஒருமரத்தில் கட்டிவிட்டு முன் ஆட்டைத்தேடக் காட்டுக்குட்புகுந்தான். பையன் மறைக்கமாய் வந்து ஆட்டை அவிழ்த்துக்கொண்டு நாட்டுக்குப் போய்விட்டான். கடாவைத் தேடப்போனவன் காடு முழுவதும் அலைந்தலைந்து எங்கும் கடாவைக்காணாமல் களைத்து வியர்த்து அலுத்துப்போய் அதிக வருத்தத்தோடு தான் கடா கட்டியிருந்த இடத்திற்கு வந்து பார்க்கவே, இரண்டாவது கடாவையும் காணாமல் தலையிலடித்துக்கொண்டு, ஐயோ! அப்பா! அட ஆண்டவனே! எனக்கென்ன மோசம் வந்து விட்டது, இரண்டு கடாவையுமிழந்தேனே, கலியாணக்காரனுக்கு என்னமறுமொழி சொல்லுவேனென்று வருத்தமுற்று, நான் கடாவை இழந்துவிட்டேனென்று சொல்லி வீட்டுக்குத் திரும்பிப்போனால் பலரும் ஏசுவார்களே! கலியாண காரியங்களும் முடிந்தபாடில்லையே என்று பலவாறு சிந்தித்து, என் காதிலிருக்கிற கடுக்கன்களையாகிலும் விற்று வேறொரு கடா

௱௪௯-ம் பக்கம் பார்க்க.

இருதயம் சொல்லுகின்றது, நீ என்னைச் சந்தோஷமாய் வைத்தால், நான் உன்னைச் சுகப்படுத்துவேன்.

மதராஸ் யூநானி மெடிக்கல் ஹால், 439 செ., சௌகார்பேட்டை, சென்னை.

மதன லீலாவதி.

இந்தத் தமிழ்க்கதை புருஷர்களுடைய மனமுழுதும் கொள்ளை கொள்ளக்கூடியது. ஸ்திரீகளுடைய அந்தரங்க விஷயங்களையும், அவர்களுடைய சமயோசிதமான தந்திரங்களையும், அவர்கள் புருஷர்களை ஏமாற்றும் நுட்ப அறிவையும் இதில் விளக்கியிருக்கிறது. இதை ஒருதரம் படிக்கும் புருஷர்கள் பலதரம் படிக்க ஆசைப்படுவார்கள். இதன் விலை தபாற் செலவு உட்பட அணா 12.

ஓர் நியாய விசாரணை.

ஒரு ஊரில் ஓர் மனிதன் தன் மனைவியை அடித்ததினிமித்தம் அப்பெண்ணின் பிரியாதினால் அவன் மாஜிஸ்ட்ரேட்டிடத்தில் விசாரணைக்குக் கொண்டுவரப்பட்டான். இந்த வியாஜ்யத்தில் சம்பந்தப்பட்ட மூன்றுவது சாக்ஷியொருவனை மாஜிஸ்ட்ரேட் விசாரணை செய்யத் தொடங்கினார்:—

மாஜிஸ்ட்ரேட்:—மூன்றுவதுசாட்சியாகிய உன்பெயரென்ன?

சாட்சிக்காரன்:—என் பெயர் ரங்கன்.

மாஜிஸ்:—பிரதிவாதி, தன்மனைவியை அடித்ததை நீ பார்த்தாயா?

ரங்கன்:—அப்பப்பா! அவள் பொல்லாத பஜாரியாயிற்றே! அவள் வாயை மூடிக்கொண்டு சும்மாயிருந்தால் அவன் ஏன் அடிக்கிறான்? ஒரு கணநேரமும் வாயை வைத்துக்கொண்டு இருக்கமாட்டாளே. நானும் 7-பிள்ளைகளுக்குத் தகப்பனானேன். என் மனைவி நாக்குமேல் பல்போட்டு ஒரு பேச்சும் என்னைப் பேசியறியாள். இவன் இவளை மனைவியாகக்கொண்டது பிடாரியைப் பெண்டு பிடித்ததுபோலாயிற்று, துரையே!

மாஜிஸ்:—அடா மடையா! என் கேள்விக்குத் தக்கபதில் சொல்லாமல், ஏன் வீண்கதைகளைக் கொட்டியளக்கிறாய், கேட்பதற்குத்தாரஞ்சொல்.

ரங்கன்:—தர்மதுரையே! இவ்வழக்கின் விவகாரம் தங்களுக்குப் பிடிபடும்படியாகச் செம்மையாய் விளக்கிக் காட்டுகின்றேனேயொழிய, வீண்வார்த்தையொன்றும், நான் பேசவில்லை.

மாஜிஸ்:—உனக்கு வயதென்ன?

ரங்கன்:—(தன் தலைக்குட்டையைக் கழற்றி) "துரையே இதோ பார்த்துக்கொள்ளுங்கள்" என்று கூறி மொட்டைத் தலையைக் காட்டினான்.

௱௪௯-ம் பக்கம் பார்க்க.

புத்தி விசேஷம்:

ஒருதாய் தன் மகளுக்குப் பெண் குழந்தை பிறந்தவுடன் 8-வயதுள்ள தன் குமாரனை நோக்கிக் கூறுகிறாள்.

தாய்:—அப்பா, இலட்சுமணா! உன் சகோதரி ஒரு சிறிய புதிய மனுஷியை வெளிப்படுத்தியிருக்கிறாள். அந்தப் புதிய மனுஷிக்கு உன் தகப்பன் பாட்டனாகவேண்டும். உன் தாய் பாட்டியாகவேண்டும். நீ சின்னமாமனாயிருக்கிறாய்.

குமாரன்:—அம்மா! இத்தனை சீக்கிரத்தில் இவ்வளவு ஏற்பாடுகளையும் யார் செய்து வைத்தது?

பேசுவதற்கு முன் யோசி, பேசியபின் யோசியாதே.

சாமர்த்தியமான திருட்டு—(௱௪௭-ம் பக்கத் தொடர்ச்சி.)

வாங்கிக்கொண்டு வருவேனென்று மறுபடியும் திரும்பிப்போனன். இது விஷயங்களைத் தூரத்திலிருந்து பார்த்துக்கொண்டிருந்த உபாத்தியாயர் அந்த மனிதன் இப்போது மூன்றுவது கடா வாங்கப்போகிறபடியால் அதையுங் கொண்டுவருவாயா என்றிளைய பையனைக்கேட்க, அவன் அதற்கும் சம்மதித்துப்போய் ஒரு கட்டுச்சோற்றுமூட்டை கட்டிக்கொண்டு அந்த மனிதன் வருகிற பாதையை நோக்கி எதிர்கொண்டுபோனன். ஆடு இழந்த மனிதன் நாடியயர்ந்து நாட்டுக்குப்போய்த் தன் காதில் போட்டிருந்த இரண்டு கடுக்கன்களையும் அடகுவைத்து இன்னம் ஒரு கடாவை வாங்கிக்கொண்டு பெரிய ஆயாசம் களைப்போடு வருந்தப்பட்டுக்கொண்டு வரும்போது, கட்டுச்சோறு கொண்டுபோகிற திருட்டுப்பையன் அவனைக்கண்டு, அட அண்ணு! ஏனப்பா உனக்கு இத்தனை நேரம்? உன் வரவை எதிர்பார்த்து வேலை முடிக்காமல் யாவரும் காத்துக்கொண்டிருக்கின்றார்களே, உன்னைக் காணவில்லையென்று என்னைப்பார்த்து வரும்படியும் சுருக்கில் கடாவைக்கொண்டு வரும்படியும் சொல்லி யனுப்பிவைத்தார்கள். நீ அதிக களையாயிருப்பதால் இந்தக்கட்டுச்சோற்றை ஆற்றோரத்திற்போய்க் கரைத்துக் குடித்துவிட்டு ஆயாசம் தீர்ந்துவா, நான் கடாவை முந்திக்கொண்டு போகின்றேன் என்றான். கடாவைக்கொண்டு வந்தவன் தான் கடாக்களை இழந்ததும் அதற்காக வருத்தப்பட்டதும் முதலாகிய சகல விஷயங்களையும் அந்தப் பையனிடத்திற் சொல்லித் துக்கித்துக் கடாவைக் கொடுத்துவிட்டு, கட்டுச்சோற்று மூட்டையைக் கையில் வாங்கிக்கொண்டான். பையன் அவன் சங்கதிகளைக்கேட்டு மகா துயரப்பட்டவனுய் அவனுக்கு ஆறுதல் சொல்லிவிட்டு, கடாவைக்கையிற் பிடித்துக் கம்பி நீட்டிவிட்டான். இது விஷயங்களையெல்லாம் உணர்ந்த உபாத்தியாயர் தன்னுடைய ஜபம் கடவாதென்று இளையவனைத் தகப்பனிடம் சேர்த்துவிட்டான். கலியாணக்காரன் சமீபத்தில் உள்ள ஊரிலிருந்ததாலும் பரீட்சைக்காகவே ஆடுகளைக் களவுசெய்தபடியாலும் உபாத்தியாயர் உடையவனை அழைப்பித்துச் சங்கதியைத் தெரிவித்து மூன்று கடாக்களையும் அவனுக்குக் கொடுத்துவிட்டார். திருட்டுப்பையனுடைய சமர்த்தை முரட்டு மனிதரெலாம் வியந்தார்கள்.

நீதி.

பூலோகத்தில் சிலர் பிறரைத் தந்திரமாகவும் யுக்தியாகவும் மருட்டி ஏமாற்றி விடுகின்றார்கள்.. ஆகையால், சகல விஷயங்களிலும் ஜாக்கிரதையாயிருந்து காலத்தைக்கழித்து வரவேண்டும்.

முரட்டு புத்தி.

மாஜிஸ்ட்ரேட்:—போலீஸ்ஜவான்! நல்லது நீ பார்த்த மனிதன் என்ன வடிவமுள்ளவனுயிருந்தான். அவனுடைய அடையாளத்தைச் சற்றே சொல் பார்ப்போம்.

போலீஸ் ஜவான்:—எஜமான்களே! அவன் அதிக கேவலமான மனிதன். அவனுக்குத் தங்களுடைய வடிவமேயிருந்தது.

வியாதிவருவது பாரக்கனத்தில், அது தொலைவது விராகனிடைக் கணக்கில்.

மதராஸ் பூகாணி மெடிக்கல் ஹால், 439 கெ., சௌகார்பேட்டை, சென்னை.

மனமோஹினி.

இஃதோர் சிறந்தநாவல். அறிவுடையோரால் மதிக்கப்படுவது. மூக்கனியும், கற்கண்டும், கனிரசமும் கலந்துண்டது போல் இனிப்பது.

முதற்பாகம் ரூபா 1.

இரண்டாபாகம் ரூபா 1.

விசாலாக்ஷி.

பலனுதன விஷயங்கள் அமையப்பெற்ற அரிய நாவல். விலை ரூபா. 1.

ஓர் நியாய விசாரணை—(௱௪௭-ம் பக்கத் தொடர்ச்சி.)

மாஜிஸ்:—அதிக கோபமூண்டு, "அட கழுதையே! வயது கேட்டால் தலையைத்திறந்து காட்டுகின்றாயே, உனக்கென்ன புத்தியில்லையா?

ரங்கன்:—பிரபுவே! கோபங்கொள்ளலாகாது, சற்று நிதானித்துப் பொறுதியுடனே பேசுங்கள். நீதித்துரையே! என்னைப் போன்ற படிப்பில்லாதவர்கள் மூடத்தனமாய்ப் பேசினுல், அவ்வாறு பேசுவது அவர்களுக்கியற்கையே யென்று படித்தவர்கள் அறிந்துகொள்வார்கள். படித்தவர்களே மூடவார்த்தை பேசினுல் அதை என்னென்றுசொல்லலாம். புறாவின் முட்டைகளைப்போலும் இரண்டு பெரியவிழிகள் கடவுள்கிருபையால் தங்களுக்கிருந்தும், மலைபோல் தங்களுக்கு முன்னிற்கும் மனிதனைப்பார்த்துக் கழுதையென்று புகன்றீர்களல்லவா? தங்கள் தோற்றம் அவ்வாறுமாறியிருக்கிறதா? அல்லது சித்தம்பேதித்திருக்கிறதா? அல்லது தாங்கள் பாஸ்பண்ணப் படித்த சாஸ்திரத்தில் மனிதனைக் கழுதையாகப் பாவிக்கும்படிச் சொல்லியிருக்கிறதா? என்ன காரணத்தால் அவ்வாறு புகன்றீர்களென்று தயைசெய்து கூறும்படி கேட்டுக்கொள்ளுகிறேன். மன்னிக்கவும்.

மாஜிஸ்:—நீ கெட்ட அதிக பிரசங்கியாயிருக்கிறாய். வயதைக்கேட்டால் தலையைத்திறந்து காட்டுகிறாயே, இது மூடத்தனமல்லவா?

ரங்கன்:—மஹாபிரபுவே! நீங்கள் சொல்வது சரிதான் நான் கல்லாத மூடனானபடியால் என்னுடைய நரைத்தலையி னால் படித்ததாங்கள் என்வயதைக் கணித்துக் கொள்வீரென்று காட்டினேன், அதையுணராமல் என்னை வீணே தூஷிக்கிறீர்.

மாஜிஸ்:—அதிருக்கட்டும், நீ யெத்தனைபிள்ளைகள் பெ[illegible] றாய்? இன்னுமொருதரஞ்சொல், பார்ப்போம்.

௱௫௪-ம் பக்கம் பார்க்க.

சுயகாரியப் புலியின் சத்தியம் மெய்தான்.

விலைக்குவாங்குவோன் :—இந்தக்கடியார முனக்குக்கொள் முதல் பத்து ரூபா யென்று சத்தியம் செய்கிறாயின்றோ? அது மெய்யானால் நீ வியாபாரஞ் செய்வதற்கு லாபமெங்கே?

விற்பவன் :—எனக்கு இதில் லாபம் கிடைக்காவிட்டால் பாதகமில்லை. வெகு சீக்கிரத்தில் அது ரிப்பேருக்கு என்னிடத்தில்தான் வரவேண்டும்.

ஒவ்வொன்றையும் அதனதன் இடத்தில் வை.

பேதைக்குத்தக்க பிரதியுத்தரம்.

ஒரு மனிதன் ஒரு பக்கிரிடத்திற்போய், ஐயா பெரியவரே! பின்வரும் என் வினாக்களுக்குத் தக்க விடை கூறியெனக்குத் திருப்தி யுண்டாக்க வேண்டியது உங்கள் கடமையென்று சொல்லத்தொடங்கினன். (1) கடவுளொருவர் இருக்கிறாரென்று கூறுகிறீர்களே இருப்பது யதார்த்தமானால் கண்ணுக்குப் புலப்படமாட்டாரா? அவர் எங்குளார் என்பதை எனக்குக் காட்டவேண்டும். (2) மனிதனால் எத்தக்காரியமும் செய்ய ஏலாதென்றும், எல்லாம் கடவுள் செயலேயென்றும் அவனன்றி யோரணுவும் அசையாதென்றும் சொல்லுகிறீர்களே? நான் பாவஞ்செய்தால் அவர் ஏன் என்னைத் தண்டிக்கவேண்டும்? அவருக்கு அது நியாயமா? நான் செய்வதெல்லாம் என் சொந்த சக்தியைக் கொண்டன்றே? (3) ஷைத்தான் என்னும் இப்லீஸ் (பிசாசு) நெருப்பினால் சிருஷ்டிக்கப்பட்டவனாதலால், அவன் செய்த பாவத்தின்பொருட்டு அவனை நரகதண்டனை புரியும்போது, அவனை நரகாக்கினி தகிக்கவல்லதா? அக்கினி வேறோரக்கினியைச் சுடுவது எங்கேனுமுண்டா? என்று வினவினன்.

இவைகளை மிக்க கவனத்துடன் கேட்டுக்கொண்டிருந்த பக்கிருக்கு அடங்காக்கோபமுண்டு, அங்கு சமீபத்திலிருந்த ஒரு பெரியகல்லையெடுத்து அவன் மண்டைமேலடித்தார்.

அது அவனுக்கு மிகுந்த உபத்திரவத்தை யுண்டாக்கினமையால் அம்மனிதன் பெருங்குரலிட்டழுதுகொண்டே அரசனிடத்திற்சென்று முறையிட்டுக்கொண்டனன். அரசன் அந்தப்பக்கிரையழைத்து ஓய் பெரியவரே! இவ்வேழை மனிதன் தன் சந்தேக நிவர்த்தியின்பொருட்டு உம்மையடைந்து மூன்று கேள்விகள் கேட்டால், அவற்றிற்குத் தக்கவிடை பகர்ந்து திருப்தி செய்தனுப்பாமல் அவன் மண்டையை உடைத்தீராமே, ஏன் அங்ஙனஞ் செய்தீர்? அதன் காரணமென்னை? என்று கோபாவேசத்துடன் கேட்டான். பக்கீர், மஹாராஜாவே! நான் அவனையடித்த அடியே அவனுடைய மூன்று மூடக்கேள்விகளுக்கும் தக்கவிடையாகும். எவ்வாறெனின். (1) கடவுள் ஒருவரிருந்தால் அவரைத்தன் கட்புலனுக்குக் காட்டவேண்டும் என்றான். நானடித்த அடியினால் தனக்குத் தலையில் மிகுந்த நோயுண்டாயிருப்பதாகச் சொல்கிறானே அந்நோவை எனக்கவன் காட்டுவானேல், நான் கடவுளை இவனுக்குக் காட்டுவேன். (2) எல்லாம் கடவுளுடைய செயலாகையினால் நானிவனையடிக்க எனக்கு சக்தியேது? அவனுடைய அதிகப்பிரசங்கத்தின் பொருட்டு கடவுள் சிக்ஷித்தார். இப்படியிருக்க இவன் ஏன் என் பேரில் குறைகூறவேண்டும். நான் குற்றவாளியேயன்று. (3) மனிதன் மண்ணினால் சிருஷ்டிக்கப்பட்டிருக்கிறான் என்னும் சம்பிரதாயப்பிரகாரம் கல்லாலடித்தால் இவனுக்கேன் உபத்திரவமுண்டாகவேண்டும்? மண்ணாலாகிய ஒரு கட்டி வேறொரு மண்கட்டியை அதாவது மனிதனை எவ்வாறு வருத்தியதோ அதுபோல் அக்கினியும் அக்கினியாலாகிய ஷைத்தானை வேதனைசெய்யும் என்பதிற் சிறிதும் சமுசயமில்லை என்று கூறினார். அரசன்

௧௩௨-ம் பக்கம் பார்க்க.

வாணன் சொல்லுகின்றது, "நீ என்னை ஒருபோதும் நம்பாதே, திடமென்று உன்னை மோசம் செய்துவிடுவேன்.

மதராஸ் யூனானி மெடிக்கல் ஹால், 439 நெ., சௌகார்பேட்டை, சென்னை.

படுக்கையறையில் பாசாங்கு செய்த
பங்கஜவல்லிக் கதை.

இக்கதை மிக அருமையானது. இனிமையும், வியப்பும், கல்விநலனும் தரவல்லது
விலை அணா. 10.

மோகனசுந்தரி.

இக்கதை சோகரசமுடைய கதை; சிறியதாயின் கொடுமை இப்படிப்பட்டதென்று இதிற் கூறப்பட்டுள்ளது. எப்படிப்பட்டவர் மனமும் நெருப்பிற்பட்ட மெழுகென உருகச் செய்ய வல்லது. விலை அணா. 8.

ஓர் நியாயவிசாரணை—(௧௫௨-ம்பக்கத் தொடர்ச்சி.)

ரங்கன்:—எசமானே, நான் பிள்ளைப் பெறவேயில்லை. பெற்றது என்பெண்சாதியானதால், அவளைக் கேட்டுத்தான் தெரிந்துக்கொள்ளவேண்டும்.

மாஜிஸ்:—அடே! நீ ஏழுபிள்ளைகளுக்குத் தகப்பனுனே னென்று சற்றுமுன் சொல்லவில்லையா?

ரங்கன்:—ஓம் துரையே! நான் சொன்னது உள்ளதே. நான் ஏதாவது தவறுசெய்ய நேர்ந்தால் நீ ஏழு பிள்ளைக்குத் தகப்பனுகியும் இன்னும் ஒன்றுந் தெரியவில்லையே யென்று என்மனைவி என்னைப்பேசுவது வழக்கம். அதையே தங்களுக் கெடுத்துக்கூறினேன்.

மாஜிஸ்:—நகைத்துக் கொண்டே அடே, ரங்கா! இப்போது நான்கேட்கும்கேள்விகளுக்கு மாத்திரம்ஜவாபுசொல்வா யேயன்றி வேறொருபேச்சும் பேசாதே, பிரதிவாதி தன் பெண்சாதியை அடித்ததை நீ பார்த்தாயா?

ரங்கன்:—அவள் அவனைவாயாலேவெசினுள், அவன் அவளைக் கையால் அடித்தான், இதற்கென்ன?

மாஜிஸ்:—ஹஷ்! மறுபடியும் என் உத்திரவை மீறிநடக்கிறாய், நீமஹா துஷ்டன்.

ரங்கன்:—தருமதுரையே! மன்னிக்கவேண்டும். தாங்கள் நியாயாதிபதியாயிருந்த போதிலும் மூடனுகிய என்னுடைய நியாயத்தையும் சிறிது செவிசாய்த்துக் கேளுங்கள். தாங்கள் நீதிக்கதிபதியல்லவா? நான் தங்களிடத்தில் எவ்வளவு மரியாதையோடும் தாழ்மையோடும் பேசிக்கொண்டு வருகிறேன். தாங்கள் சிறிதும் யோசியாமல், ஸ்தானபலத்தால், என்னை அடே யென்றும் மடையன் கழுதையென்றும் பலவித தூஷணை மொழிகளைப் பிரயோகித்துவருகிறீர்களே, இதுதருமமா? நாங்

துரும்பு விகடம்.

மனைவி:—எனக்கு வெள்ளைமயிர் வாராமலிருக்க விரும்புகிறேன், என் கண்ணாளா!
கணவன்:—அது ஒரு பெரிய காரியமல்ல, வெகு எளிதாய்ச் செய்துகொள்ளலாம், என் கண்மணி!
மனைவி:—எப்படிச் செய்யவேண்டும் நாயகா?
கணவன்:—சீக்கிரத்தில் சாகவேண்டும், என் கண்ணாட்டி!

௱௫௪-ம் பக்கம் பார்க்க.

ஒவ்வொன்றையும் அதனதன் நேரத்திற் செய்.

உண்மையன்றென்றுணர்ந்த மொழிகளை உண்மைபோல ஒருபோதும் உரையாதே.

பேதைக்குந்தக்க பிரதியுத்தரம்—(௩௫௰-ம் பக்கத்தொடர்ச்சி.)

பக்கிருடைய புத்தி நுட்பத்திற்கு அகமகிழ்ந்து முறைப்பாட்டுக்காரனை நோக்கி, இனிமேல் உன் புத்தி அளவுக்கு மேற்பட்ட விஷயங்களை நீவலிந்து தலைமேற் போட்டுக்கொண்டு வீண்விவாதஞ்செய்து பெரியோர்களிடத்தில் அபசாரப்படவேண்டாம். பயனற்ற சொற்களைப்பேசுவோர் அறிவீனர்களேயன்றி அறிவுடையோர் ஒருபோதும் பேசார்கள்.

"அரும் பயனாயு மறிவினார்சொல்லார்
பெரும்பய னில்லாத சொல்"

என்று திருவள்ளுவர் கூறியுள்ளபடி பயனில்லாத சொற்களைப்பேசுவதால் என்னவாம், அதனால் விளைவது துன்பமேயன்றி வேறில்லை. இந்தப் பக்கிர் உனக்குச் செய்தது பெரிய உபகார மென்று புத்தியில் உறுதியாகக் கொண்டு நல்வழியில் நடந்துகொள் என்று கூறி அனுப்பிவிட்டான்.

இச்சிறு கதையினால் நாம் கற்றுக்கொள்ள வேண்டிய தென்னை யெனின்.

நம்முடைய புத்திக்கும் இயல்புக்கும் ஆற்றலுக்கும் ஏற்ற விஷயங்கள் எவையோ அவ்வளவிற்கு மேற்செல்லாமல் விஷயங்களிற் பிரவேசிப்பதும் பேசுவதும் விவாதஞ்செய்வதும் தகுதியாம். அவற்றில் நாம் வெற்றி பெறவுங்கூடும். நமக்குத் தகுதியில்லாததும் நம்புத்திக் கெட்டாததும் நம்மியல்பிற்கு மேற்பட்டதும் நம்மாற்றலுக் கதீதப்பட்டதுமான விஷயங்களில் தலையிட்டுக்கொண்டு குதர்க்கம்பேசி வீண்காலக்ஷேபஞ் செய்வதனால், ஆப்பையசைத்துப் பிடுங்கிய குரங்கைப்போல் அவமான மெய்தி அவதிப்படவேண்டியதே யொழிய வேறு பிரயோஜனத்தை யடையமாட்டோம். கூலி வேலை செய்பவனைக் குமாஸ்தா வேலை பார்க்கச்சொன்னால் பார்க்க வல்லவனாவானா? போலீஸ் ஜவானைசூபரின்டெண்டெண்டு வேலையைப் பார்க்கச் சொன்னால் நிர்வகிப்பானா? கோர்டு கிளார்க்கு ஜட்ஜி வேலைக்குத் தக்கவனாவனா? பெரிய பிரபுவாகிய வர்த்தகன் கவர்னர் வேலைக்கு யோக்கியதை யடைவானா? இவையெல்லாம் கூடாத காரியங்கள். ஒவ்வொருவரும் தத்தம் திராணிக்கேற்ற காரியங்களைச்செய்ய முயலவேண்டும். தம்மளவுக்கு மேற்பட்ட விஷயங்களில் ஒருபோதும் தலையிட்டுக் கொள்ளக்கூடாது. ஆகையால் தம்முடைய சக்தி இவ்வளவினதென்றும் அதற்கு மேற்போவது அடாதென்றும் விவேகிகள் தெரிந்து கொள்வார்கள்.

கடவுளைப்பற்றிய விஷயங்கள் மனோ வாக்குகளுக் கெட்டாத அதீதமானவை. அவரையுணரும் வித்தை எல்லாவற்றைப்பார்க்கிலும் மிக்க அருமையான வித்தை. பலகலைகளை ஆராய்ந்துணர்ந்த பெரியோர்களும் யோகியர்களும் ஞானிகளும் கடவுள் விஷயத்தை வாய்விட்டுப்பேச மனமடங்கி மௌனஞ்சாதிக்கிறார்கள்.

"இப்படிய னிந்நிறத்த னிவ்வண்ணத்தன்
இவனிறைவ னென்றெழுதிக் காட்டொணாதே"

இத்தகையன், இன்ன நிறத்தையுடையவன், இவ்வுருவத்தையுடையவன், இவன்தானிறைவனென்று ஒருவராலும் சொல்லவும் எழுதிக்காட்ட

௩௫௪-ம் பக்கம் பார்க்க.

மதராஸ் யூனானி மெடிக்கல் ஹால், 439 நெ., சௌகார்பேட்டை, சென்னை.

ஓர் நியாயவிசாரணை—(௱ருக-ம் பக்கத் தொடர்ச்சி.)

கள் கேட்ட கேள்விக்கு மட்டும் பதில் கூறும்படி என்னை வற்புறுத்துகிறீர்களே, தாங்கள் பேசவேண்டிய அளவுக்கு அதிக்கிரமியாமல் பேசுகிறீர்களா? தங்களை நியாயவிசாரணை தீர்ப்புக்கு மாத்திரம் அதிபராக நியமித்திருக்கிறதே யல்லாமல் இப்போது தாங்கள் உரையாடிய அதிகப்பிரசங்க வார்த்தைகளைப் பிரயோகிக்கும்படி எந்தச் சட்டத்திற்கூறியிருக்கிறது? மடையனாயுள்ள ஒருவனைப்பார்த்து அட மடையா என்று கூறுவது எங்ஙனமிருக்கிறதென்றால், ஒரு பலாப்பழத்தைப்பார்த்து, ஏ பலாப்பழமேயென்றுசொல்லும் வெறுஞ்சொல்லைப்போலிருக்கிறது. இதிலென்ன விசேஷம், ஒன்றுமேயில்லை. ஆனால் விவேகியாயுள்ளவொருவன் மூடத்தனமாய் நடந்து அதன் பொருட்டு மடையன் என்றழைக்கப்பட்டால் அது விசேஷமே. தாங்கள் மடையனென் றென்னை யழைத்ததனால் எனக்கொன்றுங் குறைவில்லை. ஏனெனில் நான் மூடனென்று எனக்கே நன்றாய்த்தெரியும். ஆனால், சில மாஜிஸ்ட்ரேட்டுகளும் முன்ஸீபுகளும் வேறு சில உத்தியோகஸ்தர்களும் தமக்குக் கிடைத்திருக்கும், சொற்ப அதிகாரத்தால் தலை கால் தெரியாமல் வாயில் வந்தபடியெல்லாம் கட்சிக்காரர்களைத் துர்ப்பாஷையாய்ப்பேசி மானபங்கப் படுத்துகிறார்கள். இதுதான் பெரிய மடத்தனமும் அதிகப்பிரசங்கத்தனமுமாம். அன்னோரை அளவு மீறிநடக்கும் அதமரென்றும் படித்துக்கெட்ட பாமரரென்றும், அற்ப புத்தியுடைய அவலரென்றும் கூறுகிறார்கள். பெருந்தகையுள்ள உத்தியோகஸ்தர்கள் பலர், தங்களுக்கு எத்தகைய உயர்ந்த அதிகாரம் கிடைத்தபோதிலும், ஒழுக்கம் பொறுமை அடக்கம் முதலிய நற்குணங்களுடன் பிறரிடத்தில் எவ்வளவு மரியாதையா யொழுகுகின்றனர் என்பதைத் தாங்கள் பார்க்கவில்லையா? அல்லது கேள்விப்படவில்லையா? இவர்கள் தான் கௌரவமுடைய பெருங்குடும்பத்திற் பிறந்தவர்களென்று கருதப்படுகிறார்கள்" என்றான். மாஜிஸ்ட்ரேட் அவனுடைய புத்தி சாதுர்யத்திற்கு மிகவும் சந்தோஷித்து அவனிடத்தில் மரியாதையாய் வாக்குமூலம் வாங்கிக்கொண்டு அனுப்பிவிட்டு, அதுமுதல் யாவரிடத்திலும் மரியாதையாய்ப் பேசத்தொடங்கினார். அறிவாளிகளுக்கும் மூடரிடத்தில் கற்றுக்கொள்ளவேண்டிய புத்திகள் சில வுளவென்பது இதனால் விளக்கமாகிறது.

அடே குப்பா, நம்முடைய வீட்டில் பெட்டிக்கிட்ட எழுத்தாணியிருக்கிறது போய் எடுத்துவா." என்று உபாத்தியாயர் சொல்ல, இப்பொழுது போகக்கூடாதென்று குப்பன் சொன்னான். ஏன் என, சட்டாம்பிள்ளை ஆச்சியோடு பேசிக்கொண்டிருக்கும்போது ஐயா, வீட்டுக்கு ஒரு பையனும் வரக்கூடாதென்று ஆச்சி உத்திரவு கொடுத்திருக்கிறாளென்றான்.

கெட்டிச் சமத்து.

ஒரு எட்டு வயது பெண் தன் தமையனைப்பார்த்துப் பேசியது.

தங்கை :—அண்ணா! அடுத்தவீட்டு அன்னம்மாள் நீர் மெத்த அழகாயிருக்கிறதாகச் சொல்லுகிறாள்.

தமையன் :—அம்மா! நீ எந்த விஷயம் கேள்வியுற்றாலும் அதைப் பிறரிடத்திற் சொல்லாதே.

தங்கை :—இல்லை, அண்ணா! இல்லை! எனக்கு அவள் அரைரூபாய் கொடுத்து தங்களிடத்தில் அப்படிச்சொல்லும்படி கற்பித்தாள்.

உத்தம பச்சாதாபம் பாவஞ் செய்யாது.

பேதைக்குத்தக்க பிரதியுத்தரம்—(௱௫௨-ம் பக்கத் தொடர்ச்சி.)

வும் முடியாது என்று பெரியோர்கள் கூறியிருக்கின்றனர். ஒன்றுமறியா மூடர்களோ மஹாஞானிகளைப்போல் பல வேஷங்களைத் தாங்கிக்கொண்டு மூடக் கேள்விகளையும் முரட்டு வாதங்களையும் பேசிக்கொண்டு உலகை வஞ்சித்துத் திரிகிறார்கள், இத்தகையோரிடத்தில் வார்த்தையாட நேர்ந்தால் விவேகிகளாயுள்ளோர் வீண்விவாதத்துக் கிடஞ்செய்யாமல் தம் வாயைப் பொத்திக்கொண்டு அவ்விடத்தைவிட்டு நீங்கிப்போவதே அவர்களுக்கு மரியாதையாம்.

சாதாரணமாக சில நாட்டுப்புறங்களில் வேலையற்ற வீணர்களாகிய சில சசடர்கள் தெருத்திண்ணைகளி லுட்கார்ந்துகொண்டு காலப்போக்குக்காக வீண் குதர்க்கங்கள் செய்துகொண்டிருக்கிற வழக்கமுண்டு. அறிவாளிகளாயுள்ளோர் அவர்களுக்கு நற்புத்தி கூறி அத்தகைய வீண் விஷயங்களிற் பிரவேசிப்பது நலமன்றென்று இரண்டொரு முறை போதித்து அவர்களை விலக்க முயலவேண்டும். அவர்கள் அதற்குச் செவிகொடாவிட்டால் பிறகு அவர்கள் சகவாசத்தை நீக்கி யெப்போதும் தூரவேயிருக்கவேண்டும்.

"ஊதிய மென்ப தொருவற்குப் பேதையார்
கேண்மையொரீஇ விடல்."

அவிவேகிகளுடைய சிநேகத்தை விட்டொழிப்பதே ஒருவனுக்குப் பெரும் பிரயோஜனமாகும், என்று சான்றோர்களும் கூறியிருக்கின்றனர்.

குட்டி விகடம்.

ஒரு அரசனிடத்தில் நெடுங்காலமாய் உத்தியோகத்திலிருந்த ஒருவிகடகவியின்மேல், அவ்வரசனுக்கு ஒருகாலத்தில் அதிக கோபமுண்டாகி அவனை யானையின் காலில் இடறவிடும்படி கட்டளையிட்டான். அந்த ஆஞ்ஞையைச் செவியுற்ற விகடன் வேந்தனை நோக்கி, மஹாராஜாவே! நானோ மிகவும் மெலிந்த சரீரமுடையவன். என்னை யானையின் காலிற்கொடுத்தால் என் தேகத்திலுள்ள எலும்புகள் யானையின் காலில் தைத்து யானைக்கு நோவுண்டாகும். அதனால் தங்களுக்கு நஷ்டமல்லவா? தங்களுக்கிஷ்டமிருந்தால் என்னைச் சிட்டுக்குருவியின் காலின்கீழ் இடறவிட்டு, அதோ தங்களருகில் கொழுத்துப் பஞ்சுப்பொதிபோல் பருத்துப் பெருத்துச்செழித்து [illegible]ண்டிருக்கும் மந்திரியை யானையின்காலில் விடுத்தீர்களானால் பஞ்சு மெத்தையை மிதிப்பதுபோல் யானையின் காலுக்கு அதிமிருதுவாயிருக்கும். தங்கள் கட்டளையும் குறைவின்றி நிறைவேறும். யானைக்கும் பங்கம் வராது [illegible] அடியேனும் உம்முடைய கிருபையால் பிழைத்துப்போவேன் [illegible] அந்த மதிகெட்ட மன்னனைக் கேட்டுக்கொண்டான். சமீபத்திலிருந்து இவற்றையெல்லாம் கேட்டுக்கொண்டிருந்த மந்திரி திடுக்கிட்டு, இதென்ன!

௱௫௬-ம் பக்கம் பார்க்க.

நாளைக்கு நீ செய்ய நின்றதைக் காலைக்கருதிக்கின்றன் எதுவானாலும் இப்போதே செய்.

மதராஸ் பூரணி மெடிக்கல் ஹால், 439 செ., சௌகார்பேட்டை, சென்னை.

முட்டாள் புத்தி.

ஹாரிஸ்:—ஐயா! உம்முடைய மெய்த்தியாரிடம் நான் வெகுநேரம் பேசினேன். அவள் மிகவும் நல்ல குணசாலி, என்பேரில் அதிக பக்ஷமாகவே பேசினள்.

பெரியமனிதன்:—ஓ! அவள்தான் என் மனைவி.

ஹாரிஸ்:—(கையை உதறிக்கொண்டு) ஆ! ஆ! ஆ! நானென்ன மடையனயிருக்கிறேன் பாருங்கள். உங்களுடைய முகச்சாயல் அவளுக்குஞ் சரியாயிருக்கிறது. பார்த்தவுடனே உங்களுடைய மனைவி யென்றல்லவா உத்தேசஞ்செய்து கொள்ளவேண்டும். மன்னியுமையா.

யுக்தி.

ஒரு சிறுவன் மாரிகாலத்தில் ஒருநாள் தன் விளையாட்டுச் செய்கையால் நேரஞ்சென்று பாடசாலைக்குப் போனன். உபாத்தியாயர் அவனை நோக்கி "அட பயலே! மற்றப்பிள்ளைகள் யாவரும் பள்ளிக்கூடத்திற்குக் காலக்கிரமந் தவறாமல் வந்திருக்க, நீ மாத்திரம் ஏன் தாமதித்து வந்தனை"? என்று உறுத்திக்கேட்க, சிறுவன் நடுநடுங்கி, "ஐயா! நான் வந்தவழி மிகவுஞ் சறுக்கலாயிருந்தபடியால், முன்னுக்கோரடி யெடுத்துவைத்தால், இரண்டடி பின்னுக்குவழுக்கியது. ஆகையால் தாமதமாயிற்று" என்றான். உபாத்தியாயர், அடே கள்ளப்பயலே! ஓரடிக்கு இரண்டடி பின்னுக்கிழுத்தால் நீ பாடசாலை வந்து சேரவேமாட்டாயே. ஏன் என்னிடத்தில் பொய் பேசுகின்றனை என்று அதட்டிக்கேட்டான், பையன் "ஐயா! அப்படியல்ல; ஓரடிக்கு இரண்டடி பின்னுக்கிழுக்கவே நான் வீட்டை நோக்கிப் பின்னுக்குத் திரும்பினேன். அதனால்தான் நான் பாடசாலைக்கு வரச் சக்தனாயினேன்" என்றான். உபாத்தியாயர் சிறுவன் கூறியது அபத்தமென்று தனக்குத் தெரிந்தபோதிலும், அவனுடைய யுக்திக்கு மெச்சி அவனை மன்னித்துவிட்டான். ஆகையால் சிறியனாயினும் யுக்திசாலியாயிருந்தால் யாவராலும் புகழப்படுவான்.

நற்போதம்.

ஒருநாள் ஒரு வாலிபன் ஒரு சாஸ்திரபாடசாலையின் வயோதிகரும் ஞானதிடருமான பண்டிதரிடத்திற்கு முகமலர்ச்சியுடன் சென்று "பிரியமான ஸ்ரீ உத்தியோகத்திற்குவேண்டிய தருமசாஸ்திரத்தைப்படிக்க என் தந்தை எனக்குத்தரவு செய்தார். இந்தக்காரியத்தை வெகுநாளாய் நான் அபேட்சித்திருந்தேன். அது இன்றைக்குத்தான் நிறைவேறிற்று. இது புகழ்பெற்ற பெரிய கல்விச்சங்கமாகையால், இதில் தருமசாஸ்திரம் சொல்லப்படும் வகுப்பில், நான் சேர்ந்து, தேகப்பிரயாசைக்கும் திரவியச்செலவுக்கும் பின் வாங்காமல் முயன்று படித்துத்தேறும்படி நிச்சயித்திருக்கின்றேன்," என்று இவ்வாறாகச் சிலநேரம் தன்னுடைய பரபரப்பான கோரிக்கைகளைச்சொல்லிச் சற்று நின்றபொழுது, அவன் பேச்சைப் பொறுமையோடும் பட்சத்தோடும் கேட்டுக்கொண்டிருந்த அந்த வயோதிகரான பண்டிதர், வாலிபனைப் பார்த்து; "அப்பா! நல்ல காரியம்! நீ இவ்வாறெல்லாம் படித்தானபிறகு என்னசெய்ய யோசித்திருக்கின்றாய்," என்று சாந்தமாய்க்கேட்டார். அதற்கு வாலிபன் "பின்பு பண்டிதர் பட்டந்தரப்பெறுவேன்" என்றான். "அதன் பின்பு என்னசெய்வாய்" என்றார். பின்பு சிக்கலுள்ள பல வியாஜ்ஜியங்களைப்பற்றி நியாயஸ்தலங்களில் வாதிட்டேன், அப்பொழுது என்னுடைய வாய் ஜாலத்தையும் சாதுரியத்தையும் நுட்பங்களை அறியும் சக்தியையும், பலர் கண்டு புகழும்படியான பேரும் பிரதிஷ்டையும் பெறு

௱௯௭-ம் பக்கம் பார்க்க.

மனிதனின் வயிறு அவன் சத்துரு.

தட்டி விகடம்—(௱௫௪-ம் பக்கத் தொடர்ச்சி.)

கிணறு வெட்டப் பூதம் புறப்பட்டது போலாயிற்றேயென்று நெஞ்சங் கலங்கி, விகடனுடைய குற்றத்தை மன்னிக்கும்படி அரசனை வேண்டிக்கொண்டான். வேந்தனும் விகடனுடைய சமயோசிதமான தைரியவார்த்தைக்கு சந்தோஷித்து அவனை மன்னித்துவிட்டான்.

விகடமாய்ப் பேசவல்லோர் எவ்விடத்தும் எக்காலத்திலும் சமயோசிதமாகிய வார்த்தையாடி யாவரையும் நேசஞ்செய்துகொள்வார்கள்.

புகழ்ச்சியும் இகழ்ச்சியும் தத்தம் செய்கையினலேயே உண்டாகும்.

இப்பிரபஞ்சத்தின்கண் மனிதர் யாவரும் புகழ்ச்சியை விரும்புவார்களே யொழிய இகழ்ச்சியை யொருவரும் விரும்பார்களென்பது சர்வ ஜன சம்மதமான விஷயம். "பெருமையுஞ் சிறுமையுந் தான்றர வருமே" என்றதனல் பெருமையும் சிறுமையும் அவரவர்கள் செய்கையினல் உண்டாவதாயிருக்கின்றமையால் பெருமையடைய விரும்புவோர் அதற்குத் தக்கவாறு நடந்து கொண்டாலொழிய, சும்மா கிடைப்பது துர்லபம். எவ்வாறெனின், பிறர் தன்னை யிகழ்ந்து பேசாமல் புகழ்ந்து பேசவேண்டுமென்று ஒருவன் விரும்பினல் அதனையடையும்பொருட்டாகப் பல நன்மைகளை இதரானுக்கு அவன் முன்னமே செய்திருக்கவேண்டும். "வெறும்பானை பொங்குமோ மேல்" என்பதுபோல் உலகில் பொதுஜன நன்மை யேதேனுஞ் செய்தாலன்றி ஒன்றுஞ்செய்யாதவன் தனக்குப் பெருமைமாத்திரம் வேண்டுமென்று வீணசைகொண்டால் எங்ஙனம் பெறுவான், ஒருபோதும் பெறமாட்டான். உலகினர் நன்மைபுரிவோர்களையே, இன்ன பிரபு ஏழைகளுக்கில்லையென்னமல் தருமஞ்செய்கிறான். இன்ன பிரபு அன்னதானஞ் செய்துவருகிறான். இன்ன புண்ணியவான் இல்லாதவர்கள் அபேக்ஷிக்கும் எல்லாக் காரியங்களையும் முடித்துக்கொடுக்கிறான். இன்ன புத்திமான் மனேவாக்குக் காயங்களா லொருபோதும் பிறர்க்குத் தீங்குசெய்யாமல் சதா நன்னடக்கையே கடைப்பிடித்தொழுகுபவன். பிறர் அவனை யேசிப் பேசினலும் அடித்தாலும் அவர்களுக்கு எவ்வாற்றாலும் பிரதிதீமை செய்யாமல்,

"ஒறுத்தார்க் கொருநாளை யின்பம் பொறுத்தார்க்குப்
பொன்றுந் துணையும் புகழ்"

என்பதுபோல், அடித்தவர்களுக்கு ஒருநாளைக்கின்பம். பொறுத்தவர்களுக்கோ சாகுமளவும் புகழ் என்று பொறுமையோடு தலைகுனிந்து வண்ணமே போய்விடுவான் என்று புகழ்ந்து பேசுவார்கள். இதுபோலவே இன்ன சீமான் அதிக பொருளுடையவனயிருந்தும் சத்விஷயத்தில் கிஞ்சித்தேனும் செலவுசெய்யாத பரமலோபியாயிருக்கிறான். "எட்டி பழுத்தென்ன

௱௫௮-ம் பக்கம் பார்க்க.

ஐயானத்துக்குமுன்னே சாப்பிடவேண்டும் உத்தமம்—அன்னம் ஆறுதற்கு முன்னே தேனும் கொஞ்சம் உண்டுகொள்
வகு கலம்.

மதறாஸ் யூநானி மெடிக்கல் ஆல், 439 கெ., சௌகார்பேட்டை, சென்னை.

நற்போதம்—(௱௫௫-ம் பக்கத் தொடர்ச்சி.)

வேன் என்றான், அவ்வயோதிகர் "அதன்பின்பு என்ன" என்றார். வாலிபன், "அதன் பின்பு கேட்கவேண்டுமா ? இராஜாங்கத்தில் உயர்ந்த அந்தஸ்துள்ள உத்தியோகத்தைப் பெறுவேன்" அதனால் தனவானாவேன்" என்று சொல்ல, அதற்குப் பின் என்ன? என்று மீண்டும் கேட்டார். அவனும் விடைக்கஞ்சாமல், "பின்பா ? சுகமாகவும் கௌரவமாகவுமிருந்துகொண்டு போக பாக்கியங்களை அனுபவித்து வார்த்திபதிசையில் சங்கடமில்லாமல் அமைதியாயிருக்கத்தக்க பிரயத்தினத்தோடு வாழ்வேன்" என்றான். மறுபடியும் அந்தப்பெரியவர். "பின்பு என்ன என்று" மெல்லவினவ, "பின்பா ? பின்பென்னவா ? பின்பென்னவா ?" என்று மூன்றுதரமுரைத்து யோசித்து, "பின்பு இறந்துபோவதுதான்." என்றான். உடனே அப்பண்டிதர், "அதற்குப்பின் என்ன அப்பா" என்று அழுத்தமான தொனியுடன் கேட்டார். இவ்வமயில் ஆவலோடும் மனவெழுச்சியோடும் பேசிவந்த சிறுவன், அதற்குமேல் உத்தரவு சொல்லத் தோன்றாமல் தலையிறக்கமாய் யோசனையில் முழுகினவனாகச் சந்தடிசெய்யாமல் அவ்விடம் விட்டு நழுவிப்போய்விட்டான். கடைசியில் அந்தப் பெரியவர் சற்றழுத்தமாய் ஊன்றிக்கேட்ட பின்பு, என்ன அப்பா ?" என்கிற கேள்வி அவன் நெஞ்சில் ஈட்டியைப்போற் பாய்ந்து, மனக்கண்ணுக்கு ஜோதிமின்போல ஜொலித்து மாறின கருத்து மனதில் மாறாமலே நிலைநின்றது. இதனால் முன் அவனுக்குண்டாயிருந்த வீணாசைகளெல்லாம் விலகி, நியாயவாதி வேலையிற் பிரவேசிக்க வேண்டுமென்னும் கருத்து, முழுவதும் மாறிப்போயிற்று. ஆகையால் நாம் எத்தனை சம்பத்துடையவர்களாய்ப் பூலோகத்தில் வாழ்ந்தாலும், இவ்வுலகத்தைவிட்டு நீங்க வேண்டிய காலம் ஒன்றுவருமென்று உண்மையாகக்கொண்டு அப்படி நீங்கியபின், நாம் சதானந்த வாழ்வை யடையவேண்டுமாயின், இவ்வுலகத்திலேயே, அதற்குத்தக்க முயற்சியெடுத்துத் துர்க்கிருத்தியங்களை அறவே நீக்கி, நல்லொழுக்கத்தை எப்போதும் கையாண்டு நடந்துவருவது ஒவ்வொருவருக்கும் இன்றியமையாக் கடமையாம்.

முத்தங்கொடுப்பதின் ருசி.

அவன் :—மீசையில்லாமற் முத்தங்கொடுப்பது உப்பில்லாமல் சாப்பிட்ட பதார்த்தத்தை யொக்கும்.

அவள் :—அது என்னவோ எனக்குத்தெரியாது.

அவன் :—ஆனால், நீ உப்பில்லாத பதார்த்தம் உண்டதில்லையா?

அவள் :—எனக்கு அது சங்கதி தெரியவே தெரியாது.

அவன் :—அப்படியானால் உப்புடன் சமைத்த பதார்த்தத்தின் சுவையை உனக்கிப்போதே காண்பிக்கிறேன் பார், கண்மணி !

செய் யுக்தி.

கடன்பட்டவன் :—நான் உனக்குக் கொடுக்கவேண்டிய இந்தச்சொற்பத் தொகைக்காகச் சதா என்னை உபத்திரவப்படுத்திக்கொண்டிருக்கிறாய். சவக்குழிக்கே சவாரி செய்விப்பாய்போற் றோன்றுகிறது அப்பா !

கடன்கொடுத்தவன் :—பத்திரம்! பத்திரம்!! அவ்வாறு மோசஞ்செய்துவிடவேண்டாம். அப்படிச் செய்கிறதானால் இன்னும் ரூபாய் 50 அதிகமாகக் கொடுக்கவேண்டும். ஏனெனில் இந்தப் பஞ்சகாலத்தில் சாமான்களெல்லாம் அதிகப்பிரியமாயிருக்கின்றன.

புகழ்ச்சியும் இகழ்ச்சியும் தத்தம் செய்கையினாலேயே உண்டாதல்—

(௫௩௪-ம் பக்கத் தொடர்ச்சி.)

ஈயாதார் வாழ்ந்தென்ன" என்னும் பழமொழிபோல், இவன் தனிகனாயிருந்தென்னபலன்? இம்மனிதன் மஹா துஷ்டன். யாவரிடத்தும் வலிந்து சண்டைக்குப்போகிறான். பொல்லாங்கென்பவை யெல்லாந் தவறாமல் செய்கிறான் என்று அவரவர் செய்கைக்குத் தக்கவாறு இகழ்ச்சியாகவும் பேசுவது உலக இயற்கை. நன்மை விதைத்தால் நன்மையும் தீமைவிதைத்தால் தீமையும் விளைவது நிச்சயம். அவரை விதைத்தால் துவரைமுளைக்குமா? ஆகையால் இசையும் வசையும் அவரவர் செய்கையினாலேயே யுண்டாகும்.

"பெருமைக்கு மேனைச் சிறுமைக்குந் தத்தம்
கருமமே கட்டளைக் கல்".

என்னும் சான்றோர் வாக்கின்படி, உரைகல்லில் மாற்றுயர்ந்த பொன்னை உரைத்தால் அதற்குத்தக்க உயர்ந்த வரையும், மட்டப்பொன்னை யுரைத்தால் அதற்குத் தக்கபடியும் உரைகல் காட்டுவதுபோல் மேன்மையும் தாழ்மையும் அவரவர்களுடைய செய்கையினாலேயே உண்டாகுமென்பது திண்ணம். இதற்குத் திருஷ்டாந்தமாக அடியில் ஒருசிறுகதை கூறுகிறோம்.

ஒருகாலத்தில் ஒரு சிறுவன் ஒரு மைதானத்தில் நின்றுகொண்டு 'ஹோ' என்று ஒருபெருங் கூச்சலிட்டனன். உடனே, 'ஹோ' என்று வேறொருவன் சத்தித்ததுபோல் பிரதித்வனி யொன்றைக் கேட்டனன். அப்போது அச் சிறுவன் இங்கு யாரோ வேறொரு பையன் ஒளிந்துகொண்டு நம்மைப் பரிஹசிக்கின்றான் என்று நினைத்து, அட பயலே! என்று உரத்துக்கூவினான். அதற்குப் பிரதியுத்தரம் 'அடபயலே' என்று திரும்பி வந்தது. அதுகேட்ட அச்சிறுவனுக்குக் கோபமூண்டு 'அடா கழுதைப்பயலே, நீ இங்குவா' என்று கத்தியழைத்தான். அதே வாக்கியம் எதிரொலியாக அவனுக்கு மீளவும் கேட்டது. அப்போதச்சிறுவன் வெட்டவெளிகளிலும் பெருங்கட்டடங்களிலும் மலைப்பிரதேசங்களிலும் சாதாரணமாய் எதிரொலியுண்டாவது இயற்கையென்பதை இதற்குமுன் ஒருபோதும் கண்டும் கேட்டும் அறியாதவனாகையால், எவனோ ஒரு சிறுவன் தனக்கெதிரியாய் அங்கு நின்று தான் கூறியதுபோலவே தன்னைத் தூர்ப்பாஷையாய்ப் பேசி யேசுகிறானென்று அடங்காப் பெருங்கோப முற்றவனாய், அவனை எப்படியேனுந் தேடிப்பிடித்து அத் துடுக்கைப்பிடுங்கிவிடுவதே யுக்தமென்று தீர்மானித்து, காடுமுழுதும் பொங்கச்சுற்றித் திரிந்தலைந்தும் ஒருவரும் அகப்படாமல் அதிக ஆயாசமடைந்து தன் வீடுபோய்ச் சேர்ந்து காட்டில் நடந்த விருத்தாந்தங்களை யெல்லாம் தன் தகப்பனுக்குக்கூறி, எவ்விதத்திலும் தனக்கெதிரியாகிய அப்பயலைப் பிடித்துத்தரவேண்டுமென்று கெஞ்சிக்கேட்டுக் கொண்டான். நடந்த விடயமான முழுவதையும் செவியேற்ற தகப்பன் தன் புதல்வனுடைய மூடபுத்திக்காக மிகுந்த வியாகுலமுற்று, 'அடா குழந்தாய்! நீ பிறக்குமிடம் அகண்ட ஸ்தலங்களில் பிரதித்வனி யுண்டாவது இயற்கையிலுள்ள தென்பதை தெரிந்துகொள்ளவில்லையா? உன் வாக்கினிடத்தில் எத்தகைய மொழிகள் உண்டாகின்றனவோ அவையே யுனக்கு மீட்டும் எதிரொலியாகக்கேட்கும். நீ

௫௯௨-ம் பக்கம் பார்க்க.

குருட்டுத் தீர்மானம்.

தாசில்தார் :—வெல் டபேதார் கேஸ் கூப்பிடு.

(வண்ணானும் வைசியனும் வந்து ஆஜராயினார்கள்.)

வண்ணான் :—சுவாமி! என்னுடைய தொழில் துணி தப்புவது, எனக்கு ஒரே கழுதையுண்டு அதுதான் துணிமூட்டைகளை சுமந்துகொண்டுபோகிறது. அந்தக் கழுதையானது எதிரியாகிய இந்த வைசியனுடைய தோட்டத்திற்போய் மேய்ந்ததென்று சொல்லி அடித்து அதன் காலை யொடித்துவிட்டான். இதற்காக அவனுடன் நான் சண்டைபோட்டுக்கொண்டிருக்கையில், இந்த படவாமுண்டையாகிய அவன் மனைவி மத்தியஸ்தீர்க்கவந்தாள் எனக்குக் கோபமுண்டு எட்டி இடது காலால் உதைத்தேன் அவளுடைய எட்டுமாதக்கர்ப்பம் அழிந்துபோய் விட்டது அதற்கு என்பேரில் குற்றமில்லை. என் கழுதை துணி சுமக்காமல் கிடக்கிறபடியால் அதன் நஷ்டத்தை எனக்குக் கிடைக்கச்செய்யவேணும் மகாப்பிரபு” என்று சொல்லி வணங்கி நின்றான்.

தாசில்தார் :—“வெரி வெல் அடே வைசியா நீ இதற்கென்ன சொல்லுகிறாய்”.

வைசியன் :—“தருமப்பிரபுவே! இந்த வண்ணானுடைய கழுதை என் தோட்டத்தில் மேய்ந்ததினிமித்தம் ஒரு அடி அடித்தேன் அதன் கால் ஒடிந்துபோயிற்று அதற்காக இவன் என்னோடு சண்டைபோட்டான். என்னை விலக்கிவிடுவதற்காக வந்த என் மனைவியை அகாரணமாய் இவன் உதைத்து 8-மாத கர்ப்பத்தை அழித்துவிட்டான். ஐயா! நன்றாய்க் கொழுத்துப் பருத்துக் கொழுக்கட்டைக்குச் சமானமாய் என்னைப்போல் ஒரு கொட்டாப்புளி பிள்ளைபிறக்குமே அதை இந்தப் பிரபாவி அன்யாயமாய்க் கெடுத்தான் அந்த நஷ்டத்தை ஈடு செய்து தரச்சொல்லவேண்டும் தர்மராஜாவே!’

தாசில்தார் :—(இருதிறத்தாருடைய வாக்குமூலங்களை செம்மையாய்க் கவனித்துத் தீர்ப்பு சொல்லும் விதம்.)

வெரி வெல், இந்த கேஸை செம்மையாய் ஆராய்ச்சிசெய்து பார்த்தோம் உங்கள் இருவர்பேரிலும் தப்பிதம் ஏற்படுகிறபடியால் இரண்டுபேரும் தண்டனைக்குள்ளாகின்றீர்கள். அடே வைசியா! வண்ணானுக்கு இப்போது துணி சுமக்கும் வேலை தவக்கமாய்ப்போய்விட்டபடியால அந்தக் கழுதையின் கால் சொஸ்தமாகிறவரையில் அது சுமக்கும் மூட்டைகளையெல்லாம் நீ

௱௫௭-ம் பக்கம் பார்க்க.

[illegible] விகடம்.

கணவன் :—நீ என் [illegible]சொன்னபோதிலும் என் காதில் ஏறாது. என் வாழ்நாள் முடிவுவரையில் குடித்துக் கொண்டேதானிருப்பேன்.

மனைவி :—அதற்குப் பிறகு[illegible]குடித்துக்கொண்டிரும்; இனி அதைப்பற்றி நான் பேசுகிறதில்லை.

குளிர்ந்த இரும்பை கூடத்தால் அடித்தாவதென்ன?

புகழ்ச்சியும் இகழ்ச்சியும் தத்தம் செய்கையினலேயே உண்டாகும்—

(௩௫௮-ம் பக்கத் தொடர்ச்சி.)

முற்கூறியதுபோல் துர்வார்த்தைகளை யுபயோகிக்காமல் நன் மொழிகளை பேசியிருப்பாயேல், அதற்குத்தக்க நலமான மறுமொழியே உனக்குக்கிடைத்திருக்கும். அப்போதுனக்கு இத்தனைக் கோபம் வந்திராது. உனக்கு கோபம் உண்டாவதற்கும் கழுதைப்பட்டம் கனமாகக் கிடைத்ததற்கும் நீயேகாரண கர்த்தாவாயிருக்கிறாய். எய்தவனைவிட்டு அம்பை நோவதுபோல் உன் குற்றத்திற்காக நீ துக்கப்படாமல் பிறனை நோவதால் பயனென்னை நீ யொருவனை மரியாதையாய்ப்பேசினல் அவருன்னை மரியாதையாய்ப் பேசுவார். நீ அவமரியாதை செய்தால் உனக்கும் அவமரியாதையே கிடைக்கும் நீ பிறரால் நலமடைய விரும்பினல் அதற்குத் தக்கவாறு நீ முன்னே நல்விதமாக நடந்துகொள் என்று நற்புத்தி புகட்டினன். ஆகையால் நமக்கு வரும்புகழ்ச்சிக்கும் இகழ்ச்சிக்கும் நாமே காரண கர்த்தாயிருக்கிறோம் என்பதை இதனல் நன்குணரலாம்!

தாழ்மை மேன்மைப்படுத்தும்.

ஒருவன் கல்வியில் மஹாசமர்த்தனயினும், செல்வத்தில் சிறந்தோங்கினவனயினும் அல்லது வேறெவ்வகையில் உயர்ந்த பதவியடைந்தவனயிருப்பினும், தான் என்னும் அகங்காரத்தினல் தலைநிமிர்ந்து நில்லாமல் அடக்கம் என்னும் ஆபரணம் பூண்டு தலைவணங்கி நிற்பானேல், மதிப்பு கௌரவம் லாபம் கீர்த்தியாதிய நல்ல சன்மானங்களைப் பெறுவான். உதாரணமாக:—

ஒரு சிறுவன் தன் தந்தையுடன் வயல்வழியே நடந்துபோய்க்கொண்டிருக்கையில், அங்கு அறுவடைக்குப் பக்குவமாக நெற்பயிர் முற்றியிருந்த ஒரு கழனியில் சில தாள்கள் அடியோடு சாய்ந்தும் சில கொஞ்சம் சாய்ந்தும் சில சிறிதுஞ் சாயாமல் நின்ற தலைநிமிர்ந்துகொண்டும் இருந்தமை நோக்கி “ஐயா! இதோ இருக்கின்ற நெற்பயிரைப்பார்த்தீரா? ஒரே காலத்தில் விதைக்கப்பட்ட பயிராயிருந்தும், மூவித வித்தியாச நிலைமையிலிருக்கின்றனவே. நெற்கதிர் நிறைந்த தாள்களிற் சில அடியோடு சாய்ந்து தரையிற் படிந்து கிடக்கின்றன. சில தரையில் விழாமல் சற்றே தலைகுனிந்து நிற்கின்றன. சில தாள்கள் கதிரோடிருந்தும் சிறிதும் தலைகுனியாமல் நிமிர்ந்து நிற்கின்றனவே, இவ்வேறுபாடுகள் ஏதுகாரணத்தால் உண்டாயின வென்பதைத் தயைகூர்ந்து தெரிவிக்கக் கோருகிறேனென்றனன்”.

பிள்ளைகேட்ட கேள்விக்குப் பிதா சந்தோஷங்கொண்டு செழுமையுள்ள தாள்களிலிருந்து மூன்று நெற்கதிர்களைக் கொய்துவந்து காட்டி, தன் புதல்வனுக்குத் திருஷ்டாந்த பூர்வகமாக விடையளித்தான். எவ்வாறெனின் “என் கண்மணியே! நீகேட்ட அருமையான கேள்விகளுக்கு அதிசயித்தேன், நான் சொல்வதைப் பாராமுகஞ்செய்யாமல் நன்கு கவனித்துக்கேள். 1-வது. இதோபார் அடியோடே சாய்ந்து பூமிமட்டத்திற் படிந்து கிடந்த நெற்கதிர் இது தான். இது செம்மையாய் முற்றிப்பழுத்துவிட்டது. அரிசி எவ்வளவு தீட்சணியமாயிருக்கிறது பார். இது பக்குவமாய்விட்டபடியால் இதன் சிரம் கனத்து பாரத்தைத் தாங்கி நிற்கமுடியாமல் தாள்கள் தரையோடு சாய்ந்து வணக்கமுற்றன. இந்த அரிசியைத்தான் ஜனங்கள் யாவரும் விரு

௩௯௨-ம் பக்கம் பார்க்க.

சுத்தப்படுத்திய இருதய கமலக்கண்ணாடியிற் கடவுளின் பிரகாசம் தோற்றப்பட்டால் முத்திமார்க்கம் முற்றுப்பெற்றதென்பதிற் சற்றும் சந்தேகமில்லை.

மதராஸ் பூகாளி மெடிக்கல் ஹால், 439 நெ., சௌகார்பேட்டை, சென்னை.

தநுட்டுத்தீர்மானம்—(௱௫௪-ம் பக்கத் தொடர்ச்சி.)

அக்குடடவா! அடே வண்ணான்! நீ கெர்ப்பத்தை யழித்துவிட்டபடியால் அவளுக்கு எட்டுமாதம் கர்ப்பமாகிறவரையில் அவளை கர்ப்பிணியாகச் செய்வாயே! இந்தக் கேஸுக்கு அப்பீலில்லை. டபேதார் இந்த முண்டங்களை வெளியே தள்ளு.

புளுகர் மஹா சபை.

இந்த மஹாசபைக்குச் சபாநாயகர் அட்டகாசப் புளுகர்.

மெம்பர்கள்.

அண்டப்புளுகர், அகண்டப்புளுகர், பிண்டப்புளுகர், பிரமாண்டப்புளுகர் ஆகாசப்புளுகர், அசாத்தியப்புளுகர், நீண்டப்புளுகர், நித்தியப்புளுகர், ஜெகஜாலப்புளுகர், வீண்புளுகர், விடாப்புளுகர், வாதப்புளுகர், வைராக்கியப்புளுகர், விகடப்புளுகர், வீம்புப்புளுகர் முதலிய சகல மெம்பர்களும் ஆஜராக வந்திருந்தார்கள். அவர்களில்:—

அண்டப்புளுகர் எடுத்து பேசும் விதம்:—கனவான்களே! இவ்விடத்தில் இன்று கூட்டப்பட்டிருக்கும் நமது மஹா சபையில் பொய்பேசுவதில் மிக்க வல்லவர் யாரென்று தெரிந்து கொள்ளும்பொருட்டு யாவரும் ஒன்றுகூடி யோசிக்கவேண்டியது இச்சபையாரின் கடமையானபடியால் பிரதமத்தில் நானே எழுந்து பேசத்தொடங்குகிறேன். இது விஷயத்தைச் சபையிலுள்ளோர் யாவரும் நன்கு கவனித்துக் கேளுங்கள்.—சுமார் 150 வருடத்திற்குமுன் என்னுடைய நான்காம் பாட்டனுக்கு விவாகம் நடந்தபோது அம்மி மிதித்து அரசாணிக்கால் சுற்றி வரும் சடங்கை நிறைவேற்றி வைக்கும்படி என்னை வேண்டிக் கொண்டார்கள். அக்காலையில் நான் ஒரு தாம்பாளத்தில் பழம், புஷ்பம், தேங்காய், தாம்பூல முதலியவை யெடுத்துக்கொண்டு அம்மிக்குச் சமீபமாய் வருகையில் கால்தவறிக் கீழே விழுந்து விட்டேன். அப்போது தட்டில் வைத்திருந்த தேங்காய், கல்லின்மேல் விழுந்து உடைபட்டு இரண்டு துண்டாகி ஒன்று ஆகாயலோகத்திற்குப் பறந்துபோய் விழுந்தது. மற்றொரு மூடி பாதாளலோகத்தில் அமிழ்ந்துபோய்விட்டது. இவ்வதிசயத்தை நீங்கள் எங்கேனும் பார்த்தீர்களா அல்லது கேட்டீர்களா?

பிரமாண்டப்புளுகர்:—பிரபுக்களே! இதென்ன புளுகு, என்னுடைய புளுகைச் சிறிது கேளுங்கள். சபாஷ்! என்று தலையசைத்து மெச்சுவீர்கள். புளுகினாலும் சரியாய்ப் புளுகவேண்டும். கால்புளுகு, அரைப்புளுகு பேசுவதில் கண்டது என்ன பலன் சிலகாலத்திற்குமுன் சுவாமிமலையென்னும் கிராமத்திலுள்ள காவேரியாற்றில் ஒரு கரையிலிருந்து மற்றோர் கரைக்குப்

௱௬௯-ம் பக்கம் பார்க்க.

மனிதர்களை ஒருவருக்கொருவர் உபகாரமாயிருக்கும்படி கடவுள் சிருஷ்டித்தார்.

தாழ்மை மேன்மைப்படுத்தும்—(௱௬௰-ம் பக்கத் தொடர்ச்சி.)

ம்பி அதிகவிலைகொடுத்து வாங்குவார்கள். எல்லாச்சிறப்பும் இதற்கே யுண்டு. இதுபோலவே மனிதருக்குள் விவேக முதிர்ந்தவர்கள் எப்போதும் வணக்க முடையவர்களாகவேயிருப்பார்கள். “நிறைகுடம் தளும்பாது” என்னும் பழமொழிபோல், இவர்கள் எப்போதும் கர்வமடையாராகையால் உலகில் நல்லமேன்மை பெறுவார்கள். 2-வது. சற்று தலைகுனிந்து நின்ற நெற் கதிரின் அரிசியைப்பார், இது பசுமை நிறமாயிருக்கிறது. இன்னும் முற்றிச் சரியான பதத்திற்கு வரவில்லை. ஆகையால், தாழ்மையடைவதற்குப்போது மான பாரம் இன்னும் தலைக்கு வரவில்லை. இந்த அரிசியைத் தகுதியுடை யோர் அபேக்ஷியார். மதிப்பிலும் அதிக குறைவே. ஏழைச்சனங்களே சகாய மானவிலைக்கு வாங்குவார்கள். இதுபோலவே சொற்ப விவேகமுடையோர் சிறிது வணக்கமுடையவர்களாயிருப்பார்கள். என்றாலும் அவர்களுடைய அகங்காரம் முற்றிலும் அவர்களைவிட்டு அறவே தொலைவதற்கு விவேகமென் னும் பிரோபாரம் பூரணமாக அவர்கள் தலைக்கு வரவில்லையாகையால் அவர் கள் பிஞ்சு விவேகிகளென்று பேசப்படுவார்கள். இவர்களுக்குக் கௌரவ மில்லை, கண்ணியவான்களுடைய கூட்டத்திற் குரியவராகார். 3-வது. சிறி தேனும் தலைவணங்காமல் நின்ற நிலையில் நிமிர்ந்திருக்கும் கதிரைப்பார். இதில் அரிசியே கிடையாது. இதைச் சாவி அல்லது பதர் என்று சொல் வார்கள். இது நெருப்பிற்போட்டு எரிப்பதற்கேயன்றி வேறெந்தப் பிரயோ ஜனத்திற்கும் உதவாது. இதுபோலவே தான் என்னும் அகங்காரப் பேய் பிடித்துத் தலைவிரித்தாடும் மனிதர்களுடைய தலையில் மூளையிருக்கிறதாக எண்ணாதே. அவர்களுடைய ஆடம்பரப்பேச்சால் மலைக்காதே. பண்டமற்ற வெறும்பானைக்கு ஓசையதிகமென்பது தெரிந்த விஷயமே.

“வற்றிய வோலை கலகலக்கு மெஞ்ஞான்றும்
பச்சோலைக் கில்லை யொலி”.

என்னும் முதியோர் வாக்கின்படி, பசையுள்ள பச்சோலைக்கு ஒலிகிடை யாது. பசையற்ற உலர்ந்த ஓலையே கலகலவென்று சப்திக்கும். அதுபோல் நிரக்ஷர குக்ஷிகளாம் சுத்தசூனியமான மூளையையுடைய மூழ்மக்களுக்கே பெரியவாயும் வணங்காத்தலையுமிருக்குமென்பதை நீ உறுதியாக மனத்திற் கொள்” என்று உபதேசஞ்செய்தான். ஆகையால் தாழ்மைக்கே மேன்மை யுண்டாகுமென்பது இதனால் விளங்குகின்றது.

பிறரைப்பற்றி ஆலோசனையில்லாமலும், அவசரமாயும் நாம் நினைப் பது சகஜம். மற்றவனுடைய செய்கையைப்பற்றி நாம் சரியாய் அறிந்து தீர்ப் புச்சொல்ல எவ்வளவோ தெரியவேண்டும். இங்கிலாண்டு தேசத்து மகாமந் திரியான கிளாட்ஸ்டன் என்பவர் பிறர் உத்தேசத்தையும் மனதையும் அவர் செயலையும் கேட்டவைகள் என்று சொல்வது அசாத்தியம் என்று கொண் டார்.

ஒரு நியாயாதிபதி ஒரு கட்சிக்காரனைப்பார்த்து, “நீ திருடனென்று கண்ணாடிபோல் உன் முகம் காட்டுகிறது” என, “ஐயா, என் முகம் கண்ணாடியாதலால் அதில் உங்கள் முகம் உங்களுக்குத் தெரிகிறது,” என்றான்.

மதராஸ் பூரணி மெடிக்கல் ஹால், 439 மி., சௌகார்பேட்டை, சென்னை.

புளுகர் மஹாசபை—(௩௬௪-ம் பக்கத் தொடர்ச்சி.)

படகேறிச்செல்லும்போது, நட்டாற்றில் ஓடங் கவிழ்ந்து போகவே நான் ஆற்றுவெள்ளத்தில் மேலும் கீழுமாய் மூழ்கிக் கிளம்பிக்கொண்டேவந்து புளியஞ்சேரி யென்னும் கிராமத்தில் வரும்போது, தென்கரையிலொரு மனிதனும், வடகரையிலொரு மனிதனும் நின்று வேலைசெய்து கொண்டிருந்தார்கள். அவர்களில் வடகரையில் நிற்போனைப்பார்த்து நான் ஓ அண்ணா! அண்ணா!! என்று உரத்துக்கூப்பிட்டேன். அவன் ஏன் அப்பா வென்றான். பிறகு தென்கரையிலுள்ளானைப் பார்த்து தம்பீ! தம்பீ!! என்றழைக்க அவனும் ஏனென்றுகேட்டான். அவ்விரண்டுபேரிடத்திலிருந்தும் வந்த தொனியை ஒன்றாக முடிபோட்டு அதன் வழியே கரைக்கு வந்து சுகமாய்ச்சேர்ந்தேன். என் சாமர்த்தியத்தைப் பார்த்தீர்களா? இவ்வாறுசெய்ய வல்லவர்கள் யார்?

அசாத்தியப்புளுகர்:—சபையோர்களே! என்னுடைய சாமர்த்தியத்தைச் சொல்ல எனக்கே வெட்கமாயிருக்கிறது, வெட்கத்தைப்பார்த்தால் வேலைசாயாது. ஆகையால் ஒருவாறாக வெடுத்துச் சொல்லிவிடுகிறேன். பராக்குசெய்யாமல் கேளுங்கள்.—ஒருநாள் நான் ஒரு ஆழ்ந்த கிணற்றில் தண்ணீர்மொண்டு ஊற்றிக்கொண்டு நிற்கையில் அகஸ்மாத்தாய் தவறிக் கிணற்றில் விழுந்துவிட்டேன். மேலே ஏறிவருவதற்குக் கிணற்றில் படிகள் இல்லாமையாலும் நீர்மட்டத்திற்குமேல் கிணற்றின் உயரம் நூறுகெஜம் இருந்தபடியினாலும் நான் மேலேறி எவ்வாறு உயிரைக்காப்பாற்றிக் கொள்வதென்று எனக்கு அதிக திகிலுண்டாயிற்று. அந்தருணத்தில் திடீரென்று என் புத்திக்குதயமான ஒரு நல்ல யுக்தியினால் நான் உயிர்பிழைத்து வெளியே தப்பித்துக்கொண்டு வந்துவிட்டேன். அஃதெவ்வாறெனில், அபானவாயுவை அடிக்கடி வெளிவிடுவதில் நானதிக சமர்த்தன் ஆகையால் தம் (மூச்சு) அடக்கி ஜலத்திலொரு முழுக்குப்போட்டு பூமிமட்டத்தி லுட்கார்ந்துகொண்டு ஒரு பெரிய அபானவாயுவை விட்டேன். அது என்னசெய்தது தெரியுமா? பிரமாண்டமான மலைகளில் சாங்கங்கள் துளைக்கும்போது வெடிமருந்து வைத்து கல்லைப் பிளக்கிறார்கள். அது பெரும்பாறைகளாயிருந்தாலும் சுக்கல் சுக்கலாய் நொறுக்கி நாலாபக்கங்களிலும் சிதறடிக்கிறதுபோல் என்னுடைய அபானவாயுவின் தொனி இடிபோலொலித்து ஜலத்தில் பெருத்த அமளி குமளிசெய்து கிணற்றின் உள்சுவர்களையெல்லாம் தவிடுபொடியாக்கி 100 கெஜ உயரம் மேலே ஜலத்தைப் பொங்கச்செய்துவிட்டது. மறுபடியும் நான் கெட்டியாய் தம்மை அடக்கிப்பிடித்துக்கொண்டு ஒரே எகிறில் எகிறி மேலே வந்துவிட்டேன். என் சமர்த்தமல்லவோ சமர்த்தம் இது யாருக்கு வரும்?

௩௬௬-ம் பக்கம் பார்க்க.

உனக்கு ஊர், கிராமமுண்டோ? என், எனக்குக் கிராமம்—சாளிக்கிராமம், ஊர்—கரூர், இடம்—இருப்பிடம், வேலி—திருநெல்வேலி, காணி—மாகாணி, நிலம் நன்னிலம், கடை—சாக்கடை, பாய்—பீப்பாய், காடு—சுடுகாடு, திரம்—தரித்திரம், சேரி—தலைச்சேரி, விருத்தி—மலவிருத்தி என்றான்.

ஒரு வழக்காளி நியாய சபையில் பேசிக்கொண்டிருக்கும்போது எதிரியின் வக்கீல் அவனைப்பார்த்து, "நீ என்ன நாய்போற் குரைக்கிறாய்!" என "ஐயா திருட்டுப்பயலைக் கண்டால் நாய் குலைக்காதா?" என்றான்.

எத்தால் வாழலாம் ஒத்தால் வாழலாம்.

அஞ்சனபுரமென்னும் பட்டணத்தை அரசாண்டுவந்த ஒரு கொடுங்கோன் மன்னன் விஜயாங்கமென்னும் செல்வஞ்சிறந்த ஒரு ராஜ்ஜியத்தின் மீது படையெடுத்து வெற்றிகொண்டு அவ்வூரைக் கொள்ளையடித்துக் கொடுமை புரிந்துவருகையில், அவ்வூர்க்குடிப்படைகள் தங்கள் பணம்பண்டங்களோடு பிறதேசங்களுக்கொளிந்தோடினார்கள். அவர்களுக்குள் தன் தாயுதிரத்தினின்றும் பிறந்தநாள்தொட்டு கண்விழியாத ஓரந்தகனிருந்தான். இவன் பிறவிக் குருடனாயினும் அதிசொற் சாதுரியனும் மதிநுகியும் சிங்கவேறு போன்ற இன்வலியனுமாயிருந்தான். இவனது வாக்கு வல்லபத்தையும் பலத்தையும் நோக்கி அவ்வூரத்தார் சிதகண்டிரவனென்று இவனுக்குக்காரணநாமம் வழங்கிவந்தார்கள் இவ்வூரத்திலேயே பிறவி தொடங்கி கால்கட்டியறியாத ஒரு மூடவனும் வாழ்ந்திருந்தனன். இவ்விருவரும் ஒருவரையொருவர் முன் பின்னறியாதவர்களாய்ச் சிவனேயாயக் குறைவினற் பேரிடர்ப்பட்டலைந்து, "எல்லாருக்குஞ் சனியன் தருப்புபோலானன், எனக்குச்சனியன் எருமைபோலானன்" என்று தனித்தனியே தத்தமில் முறுமுறுத்துக்கொண்டு தட்டித்தடவித் தவழ்ந்து நகர்ந்து இராஜபாதையில் ஒரு நாற்சந்தியின்கண்வந்து ஒருவரையொருவர் சந்திக்கலாயினர். குருடன் தெருவில் வந்தவுடன் ஆட்சர்தடியையும் அசுமாற்றத்தையும் (ஜாடை) செவிப்புலனுணர்ந்து சிங்கம்போற் கர்ஜ்ஜித்து, "அதாரங்கே" யென்று அதட்டிக்கேட்டனன். அதுகேட்ட மூடவன் பிரதியுத்தரமாக "அப்பா, குருட்டண்ணா! நான் தான் ஓர் மூடவன்" என்றான். அப்புறம் ஒருவரையொருவர் நெருங்கிக் கூவிக்குலாவி ஆசீர்வதித்து தத்தம் பஞ்சலிப்புகள் குறைகள் முறைகளையெடுத்துப் பேசிக்கொண்டிருக்கையில், மூடவன் நெட்டுயிர்ப்பெறிந்து, "ஐயோ தெய்வமே! எனக்குக் காலிரண்டு முடமாயுள்ள தாழ்வேயன்றி வேறு தாழ்வியாது? கண்கையாதியங்கங்களிலேதும் பக்கமில்லையே. "குதிரைகுருடாயினுங் கொள்ளுதின்பதிற் குறைவில்லை" என்னும் பழமொழிபோல் பசியகோரமாயென்னைப் பாதிக்கிறதே, ஐயையோ! நானென்செய்வேன்.

> "ஞானங் குலங்கல்வி வண்மை யறிவுடைமை
> தானந் தவமுயற்சி தாளாண்மை—தேனின்
> கசிவந்த சொல்லியர்மேற் காமுறுதல் பத்தும்
> பசிவந்திடப் பறந்து போம்.

என்னும் முதியோர் வாக்கின்படி பசியினால் எனக்கொன்றுந் தோன்றவில்லையே. உயிர்பறந்துபோம்போலிருக்கிறதே. இப்படிக்கும் என்னை உலைந்தலையவைப்பது நீதியோ? ஆ! தெய்வமே" என்று மீண்டும் பெருமூச்சுவிட்டுப் பசிக்களையால் தெருவிற்சோர்ந்து சாய்ந்தனன். அச்சமயத்தில் சிதகண்டிரவன் மனங்கரைந்து பரிதபித்து மூடவனைத் தடவித்தட்டி யெழுப்பித்தூக்கி "அடமூடத்தம்பீ! எழுதாவிதிக்கு அழுதாலாவதில்லை" என்று உங்களப்பன், ஆய்ச்சி, பாட்டன், பாட்டி சொன்னதை ஒருக்காலும் நீ கேட்டதில்லையா?

௧௬௯-ம் பக்கம் பார்க்க.

பிறர் நமக்கு அநியாயம் செய்தால் நமக்கு அதினால் வரும் அவமானம் ஒன்றுமில்லை. நமக்கு வரும் ஆபத்து நாம் எண்ணும் எண்ணங்களாலல்லாது பிறர் செய்யும் செய்கைகளாலல்ல.

மதராஸ் யூனானி மெடிக்கல் ஹால், 439 செ., சௌகார்பேட்டை, சென்னை.

புளுகர் மஹாசபை—(௩௬௪-ம் பக்கத் தொடர்ச்சி.)

ஆகாசப்புளுகர்:—நண்பர்களே! என் பெரும்புளுகைச் சற்றே தயைசெய்து கேளுங்கள்.—ஒரு காலத்தில் இமாசலத்திற்கு அருகேயுள்ள ஒரூருக்கு நான் போயிருந்தபோது அங்கு ஆகாயங்கிழிந்துபோய் ஆறுமாதகாலமாக இராப்பகல் இடைவிடாமற் பெருமழை பெய்துக்கொண்டிருந்தது. இதனால் ஜனங்களுக்கு பலவிதத்தில் நாசமும் நஷ்டமும் விளைந்து கொண்டிருந்ததுமல்லாமல், இன்னும் அவ்வாறு ஒருவாரம் மழை பெய்துவந்தால் அவ்வூர் வெள்ளத்தா லழிந்துபோகத் தக்கதாயிருந்தது. இதற்குள்ளாக மஹா வில்வீரனாகிய நான் அவ்வூரில் வந்திருப்பதைக் கேள்விப்பட்டு அவ்வூரார் யாவரும் ஒன்று திரண்டு என்னிடமோடிவந்து அப்பெருமழையைத் தவிர்த்துக் காப்பாற்றும்படி என்னைக் கெஞ்சிக் கேட்டுக் கொண்டார்கள். நான் அவர்களுடைய வேண்டுகோளுக்கிரங்கி, கிழிந்துபோயிருக்கும் ஆகாசத்தை ஒட்டுப்போட்டு தைத்து விட்டால் உடனே மழை நின்றுபோம். அதற்காக நீங்கள் அஞ்சாதேயுங்கள். வல்லவனுக்குப் புல்லாயுதமென்பதுபோல் இது எனக்கு ஒரு பெரிய காரியமல்ல. ஒரு நொடிப்போதி லவ்வாறு செய்துவிடுகிறேன் பாருங்களென்று அவர்களுக்குத் தைரியங்கூறிவிட்டு ஒரு சிற்றெறும்பைப்பிடித்து அறுத்துத் தோலை உரித்தெடுத்துக்கொண்டு, கட்டப்பாறையும் தாம்புக் கயிறும் கையிலெடுத்து வைத்துக்கொண்டு ஒரே பாய்ச்சலாய் ஆகாயத்திற்பாய்ந்து என்னசெய்தேன் தெரியுமா? கிழிந்திருந்த ஆகாயத்தினிரண்டு முனைகளையு மொன்றாகச்சேர்த்து, எறும்புத்தோலை ஒட்டுப்போட்டு கெட்டப்பாறையில் தாம்புக் கயிற்றைக் கோர்த்துத் தைத்துவிட்டுக் கீழே இறங்கி வந்து விட்டேன். தக்ஷணமே மழை சந்தடியின்றி நின்றுபோய் விட்டது. தையல் வழியாக ஒரு துளி ஜலமும் கசியவில்லை. தையலென்றால் அதுவல்லவோ தையல், ஜனங்களெல்லாம் என்னுடைய சாமர்த்தியத்திற்கு மெச்சினார்கள். என் பராக்கிரமத்தைப் பார்த்தீர்களா?

ஜெகஜாலப்புளுகர்:—அன்பர்களே! நான் இப்போது சொல்லப்போகிற சங்கதிகள் பொய்யென்று நம்பாதீர்கள். யதார்த்தமாக நிகழ்ந்த விஷயமே. ஆனால் புளுகர் மஹா சபையில் பிரஸ்தாபப்படுத்துகிற விஷயமானபடியால் நீங்கள் பொய்யென்றே ஒருவாறு நினைப்பீர்கள். ஆயினும் பாதகமில்லை. கேளுங்கள்.—குடகு இராஜ்யத்திலிரண்டு குடியானவர்களிருந்தார்கள். இவர்கள் பெரிய சமுசாரிகளென்று மதிக்கப்பட்டவர்கள். ஒருவனுக்கு அன்று கழுவிய கழுநீர் ஆயிரம் வேலி நிலத்திற்குப்பாயும். மறுநாள் அரிசி கழுவிய கழுநீரையும் அதே நிலத்திற்குப் பாய்ச்சவேண்டுமானால் பெருவெள்ளங்

௩௬௭-ம் பக்கம் பார்க்க.

தனியே இருத்தல் தகாத காரியம், சோம்பலாயிருப்பது வீணரின் செய்கை:—யாதொரு வேலையுமின்றி ஒரு மனிதன் ஓரிடத்தில் தனித்திருப்பது தகுதியன்று. சோம்பலாயிருந்து வியர்த்தமாய்க் காலங்கழிப்பவனை வீணனென்றே சொல்வார்கள்.

பஞ்சத்தினால் மரிப்பதிலும் பேருணவால் மரிப்பது அதிகம்:—சுகாதார விதிகளைக் கவனியாமல் அளவுமீறி யுண்டு அஜீரணமாதைக்குட்பட்டு பல வியாதிகளுக்காளாகி மாண்டழியும் ஜனத்தொகையைப் பார்க்கிலும், பஞ்சத்தினால் பட்டினிகிடந்திறக்கும் ஜனத்தொகை அதி சொற்பமாம்.

மழைக்குக் குடையே தவிர இடிக்குக் குடையல்ல.

எதிர்த்தால் வாழலாம் ஒத்தால் வாழலாம்—(௱௬௭-ம் பக்கத் தொடர்ச்சி.)

"முதிர் தரு தவமுடை முனிவ ராயினும்
பொதுவற திருவொடு பொலிவ ராயினும்
மதியின ராயினும் வலிய ராயினும்
விதியினை யாவரே வெல்லுநீர் மையார்."

என்று ஆன்றோர்களும் கூறியிருக்கின்றனரே. தெய்வத்தை நொந்தும் தரையில் விழுந்து புரண்டும் அழுதும் ஆவதொன்றுண்டோ? உன்பாடு உரலின் பாடானால் என்பாடு மத்தளத்தின்பாடு போலிருக்கிறது. பொதுவில் இருவர் பாடும் இலம்பாடே. "குபேரன் பட்டணங் கொள்ளைபோனாலும் அதிருஷ்டங் கெட்டவனுக்குத் துடைப்பக்கட்டையு மகப்படாது" என்பதுபோல் நம்மூரில் எத்தனையோ கோடிக்கணக்கான திரவியத்தைப் பிறர் அபகரித்துப்போனாலும், நாமோ ஆற்றுவெள்ளத்தில் நின்றும் குடிக்கத் தண்ணீர்க் கழுவார்போல், பழைய காத்தனுகவே யின்னுமிருக்கிறோம். ஆனால் இவ்வாறு பலபடி பிதற்றியாவதென்னை? அடா மூடத்தம்பீ! எனக்கிப்போது ஒருநவமான கருத்து முளைத்திருக்கிறது. எனக்கோ நயனங்களில்லை, உனக்குப் பாதங்களில்லை, அரையும் அரையும் கூடினால் ஒரு முழுக்கூறாகும். உன் கண்ணை என் காலோடுசேர்க்க, நாமிருவருங்கூடி ஒருமுழு ஆளாகலாம். நீ யெனக்குக் கண்ணானால் நானுனக்குக் காலாவேன். "மூடனுக்குப் புத்தி மூன்றுமுழம், குருடனுக்கு யுக்தி யதிகம்" என்று என் பாட்டனார் பகரக்கேட்டிருக்கிறேன். நாமிருவரும் ஒன்றுசேர்ந்தால் எக்காரியத்தையும் அனாயாசமாய்ச் சாதித்துவிடலாம்" என்றான்.

குருடன் வார்த்தை சர்க்கரைப்பந்தலில் தேன்மாரி சொரிந்ததுபோலும் பழம் நழுவிப்பாலில் விழுந்ததுபோலும் செவிக்கின்பமாயிருந்தபடியால், மூடவன் கைகொட்டி யார்ப்பரித்துக் குதூகலங்கொண்டு "முக்காலும் அது எனக்குச்சம்மதமே" என்று கூறினான். அந்தகன் "அல்லவோபின்னை! உன் சம்மதத்திற்காக நான் சாலவும் சந்தோஷித்தேன். ஒருவிரல் தனியே கொடிக்குமா? ஒருகை தட்டினால் ஓசைகிளம்புமா? அதுபோல் நாமிருவரும் தனித்தனியிருந்தால் ஏதேனும் பலனுண்டா? ஒன்றுசேர்ந்தால் ஆகாததுண்டா? நாமிருவரும் அங்கபங்கபேதம் பாராமல் ஒற்றுமையுடன் சிநேகங்கூடி உடலுமுயிரும்போல் மயிரிடையேனும் பிரியாதிசைந்திருந்தால் குருடனுயிருந்தால்தானென்னை முடவனுயிருந்தால்தானென்னை? இருவரும் ஒன்றுகூடிற் கஷ்டமான வேலையாயினும் அதிசுலபமாய்ச் சாதிக்கத்தடையில்லாதது" என்றான்.

அப்போது முடவன் முன்னிலும் மிக்க பேரானந்தத்துடன், "அண்ணா அண்ணா! நீ சொல்வதெல்லாம் வாஸ்தவமே, அவ்வளவும் எனக்குச் சம்மதமே. இன்றுதொட்டு நாமிருவரும் ஈருடல் ஓருயிரே" என்றான்.

அதுகேட்ட சிதகண்டீரவன் ஆனந்த பரவசத்தால் கொய்யோக்கூறி அம்முடவனைத்தூக்கித் தன்னிரு தோளின்மேலும் சாங்கோபாங்கத்துடன் உட்காரவைத்துக்கொண்டு சாரதியின் சகாயத்தாற் செல்லும் இரதம்போல்

௱௬௯-ம் பக்கம் பார்க்க.

மிதமாயிருத்தல் மேன்மைக்கு மார்க்கம் :—எவ்விஷயத்திலும் அளவுக்கு மேற்படாமலும், குறையாமலும், நடந்துகொண்டால் மேன்மையடைவதற்கு மார்க்கமுண்டாகும்.

மதராஸ் யூனானி மெடிக்கல் ஹால், 439 செ., சௌகார்பேட்டை, சென்னை.

புளுகர் மஹாசபை—(ராகூ௬-ம் பக்கத் தொடர்ச்சி.)

கொண்டு வெகு கெடுதி நேரிட்டுப்போய்விடும். மற்றொருவன் வீட்டில் நாள்தோறுஞ்செய்யும் மிளகு ரசத்திற்குக் கரைப்பதற்காக 500 வண்டி பெருங்காயம்வேண்டும். இவர்களில் ஒருவனுக்குப் பெண்ணும் மற்றவனுக்குப் பிள்ளையுமிருந்தபடியால் அவ்விருவருக்கும் விவாக நிச்சயஞ்செய்து அதற்கு வேண்டிய சாமக்கிரியைகளெல்லாம் சேகரித்துவருகையில் விறகுக்காகக் காட்டுக்குத் தங்களுடைய இரட்டைமாட்டுவண்டிகளை அனுப்பினார்கள். எத்தனை வண்டிகள் தெரியுமா? ஒவ்வொருவருக்கு மிரண்டு லட்சம் இரட்டைமாடு கட்டிய வண்டிகளிருந்தன. இருதிறத்தாருடைய நான்கு லட்சம் வண்டிகளும் காட்டுக்குப் போகையில் வழியில் மாடுமேய்த்துக்கொண்டிருந்த ஓரிடையன் இவர்களை நோக்கி, நீங்கள் எங்குபோகின்றீர்களென்று கேட்டான்? விவாகத்திற்காக விறகுவெட்ட நிமித்தம் காட்டுக்குச் செல்கின்றோமென்றார்கள். இடையன் புதிய விறகு ஈரத்தால் புகைந்துகொண்டே கண்ணைக்கெடுக்கும், என்னிடத்தில் ஒடிந்துபோன தாற்றுக்கோல்கள் கிடக்கின்றன. அவைகளை ஏற்றிக்கொண்டுபோனால் செம்மையாய் எரியுமென்றான். வண்டிக்காரர்கள் நாலுலட்சம் வண்டிகளுக்கேற்றத்தக்க அவ்வளவு சுமை அகப்படுமாவென்று கேட்க இடையன் குலுங்கக் குலுங்கச் சிரித்து நான் என்னுடைய மாடுகளை யோட்டி மேய்ப்பதில் தினந்தோறும் நாலு லட்சம் தாற்றுக்கோல்கள் முனைமழுங்கி உபயோகமற்றுப் போய்விடுகின்றமையால் அவற்றைக்கழித்து ஸ்டோரில் (Store) எடுத்துப்போட்டுவிடுகிறேன். இவ்வாறு 25 வருஷகாலமாகச் சேர்ந்திருக்கிற கோல்கள் எத்தனை லட்சம் வண்டிகளுக் கேற்றலாமென்று கணக்கிட்டுப் பாருங்களென்று கூறி அவர்களைத் தன் வீட்டுக் கழைத்துக்கொண்டுபோய் நாலு லட்சம் வண்டிகளிலும் தன்னிடத்திருந்த தாற்றுக்கோல்களை யேற்றி நிறைத்துவிட்டான். அவர்கள் அவ்வண்டிகளை ஓட்டிக்கொண்டு தம்மூரை நோக்கிச்செல்லுகையில் மார்க்கத்தில் வண்டிமாடுகளுக்குத் தண்ணீர் குடிப்பிக்கு நிமித்தம் தடாகமாவது கிணறுவது கிடையாமையால் எங்குந் தேடிப்பார்த்து வண்டிக்காரர்களெல்லாம் சோர்ந்து நிற்கையில், அவ்விடத்தில் மாடுமேய்த்துக்கொண்டிருந்த ஓரிடையன் வண்டிக்காரர்களும் மாடுகளும் தாகவிடாயினால் கஷ்டப்படுவதைப்பார்த்துப் பரிதபித்து, தன் பசுக்களிலொன்றின் பாலைப் பீய்ச்சி மாடுகளுக்கு குடிப்பாட்டி வண்டிக்காரர்களும் சாப்பிடும்படிச் சொன்னான். அதைக்கேட்ட வண்டிக்காரர்கள் ஐயா! நாங்கள் நாலு லட்சம் வண்டிக்காரர்களிருக்கின்றோம். எட்டு லட்சம் மாடுகளிருக்கின்றன. எங்களெல்லோருக்கும் உம்முடைய ஒரு பசுவின் பால் போதுமா? என்று கேட்டார்கள். இடையன் நன்றாய்ச்

ராகூ௮-ம் பக்கம் பார்க்க.

பகல் சாப்பாட்டுக்குப்பிறகு பத்துநிமிஷம் இருந்தாப்பாறுக இராச்சாப்பாட்டுக்குப் பிறகு இரண்டு மைல் உலாவுக. பகலில் போஜனஞ்செய்தபிறகு சற்று நேரம் உட்கார்ந்து இளைப்பாறவேண்டும். இராவில் உண்டபின்பு சிறிதுநேரம் உலாவிப்படுக்கவேண்டும்.

பூரிப்பாளு—மனது வைத்தியனுடைய பணத்தைப் பறிக்கிறது :—அதாவது, ஒருவன் சதா மனக்கவலையின்றிச் சந்தோஷமாயிருந்தால், அவனைப் பிணியணுகாது. பிணியாளர் குறைவானால் வைத்தியனுக்கு வருமானம் லோபந்தானே?

எத்தால் வாழலாம் ஒத்தால் வாழலாம்—(௱௬௬-ம் பக்கத் தொடர்ச்சி.)

அசைந்தசைந்து காடுகள் கடந்து சாடுமலையணுகித் தம்மூர்க்குடிகள் சென்ற அடிச்சுவடு பற்றித் திருவிவரும்போது வெங்கானகசஞ்சாரியும் மிருகேந்திரனுமாகிய ஓர் சிங்கத்தால் அடியுண்டிறந்த ஒரு கலைமான் மலையடிவாரச்சுனையொன்றிற்கருகே கிடப்பதை முடவன்கண்டு "அண்ணா! மான் ஒன்று இருக்கிறது" என்று கூறுவதற்குமுன்னமே நாசிப்புலனால் நன்கு மோந்துணர்ந்த அந்தகன் "தம்பீ! கண்டனையோ"? என்றான். இருவரும் பசியினால் மிக்க களைப்புண்டவராகையால் மானிறைச்சியைப் பச்சைப்படியாகவே யுட்கொள்ள நினைத்து, இது பரியந்தம் ஒற்றுமை மனத்துடன் சமாதானமாய்ப் பேசிவந்தும், உணவுப்பொருள் கண்டவுடனே "தாயும் பிள்ளையுமானாலும் வாயும் வயிறும் வேறே" என்பதுபோல் அவ்விருவரும் தனித்தனித் தம் பசியையே பெரிதாகக் கருதிப் பேதபுத்தியுடன், குருடன் "தலைமாடெனக்கு" கான்மாடுனக்கு" முடவன் "கான்மாடுனக்குத் தலைமாடெனக்கு" என்றான்.

இவ்வாறு காற்பக்கம் தலைப்பக்கம் என்ற அம்மட்டிலே இருவருக்கும் ஏச்சும் பேச்சும் அடியும் பிடியுந்தொடங்கின. இருவரும் பெருவழக்கிட்டனர். முடவன் குருடனைநோக்கி அதி உக்கிரத்துடன் "அடா குருட்டுப் பிணமே! நானுனக்குக் கண்ணாயிருந்தமையாலன்றோ நீ இக்கலையண்டை வரும் அதிருஷ்டம் பெற்றனை, அன்றேல் நீ யிப்பேறடைவாயோ? "சர்வேந்திரியாணாம் நயனம் பிரதானம்" என்பதுபோல் இந்திரியங்களெல்லாவற்றிலும் கண்ணே முக்கியமானதாகையால், கண்ணுக்குரிய நானே தலைமாட்டுக்குப் பாத்தியதையுடையவன்" என்றான். குருடன் முடவனைக்கூவி, "கண்ணிருந்தென்ன, நடந்துவருமா? போடா போடா சப்பாணிப்பயலே! சொருகிக்கிடந்த அகப்பையும் சோறள்ள வந்ததுபோல் நீயும் ஒரு ஆண்பிள்ளையாய்ச் சபையேற வந்தனையே. ஒன்றுக்கு முதவாத முடவா! உனக்கித்தனைக் கர்வமா? நானுனக்குக் காலாயிருந்து நடத்திவந்தபடியாலன்றோ, அடா முழுமகனே! நீ யிவ்விறைச்சியைக் கிட்டி வல்வழக்குப் பேசுகின்றனை. அல்லாவிடில் நீ அடாவழக்குப் பேசுவதற்கும் இடமுண்டாமா? "ஓடங் கடந்தால் ஓடக்காரனுக்கொரு சொட்டு" என்பதுபோலன்றோ நீ யெனக்குச் சொட்டுப் போடப்பார்க்கிறாய். நன்று நன்று! என் புஜபலபராக்கிரமத்தை நீ யின்னுங் கேட்டறிந்திலைபோலும்" என்று பலவாறு வசைகூறிப் புஜங்களைத்தட்டிச் சிரித்து பிரசண்டமாருதம்போல் ஆரவாரித்தெழுந்தனன். அப்போது முடவன் குருடனினும் மும்மடிக்கோபங்கொண்டு, "வெள்ளியிட்ட காலுக்கு வெறுங்காலடிமை" என்றாற்போல் உன் நல்ல காலுக்கு என் முடக்கால் அடிமையென்று வீம்புபேசுகின்றாயா? நீயெனக்கு வாசியாயிருந்தது மெய்யே, நானுனக்குத் தரிசியாக வாராதிருப்பேனாயின், நீ யிதைக் கடைக் கண்ணாலுங் கண்டறிவாயா? அடேபோடா, முதலுரிமையெனக்கே" யென்றனன். அப்போது சிதகண்டகாவன் என்னும் அந்தகன் கோபாவேசனாய்க் குதித்தெழும்பி, "முடவன் கொம்புத்தேனுக்காசைப்பட்டதுபோல் நீயென் வினையைக்கொள்ளுகின்றனை உனக்கது ஒருபோதும் கிட்டாது. இதோ உன்னை மிதித்துக்கொல்லுகிறேன் பார்" என்று தன் வலக்காலை யோச்சினான்.

௱௭௨-ம் பக்கம் பார்க்க.

தேகசௌக்கியம் தீர்க்கத்திருக்கும்:—ஒருவனுக்கு வியாதியின்றித் தேகம் எப்போதும் சௌக்கியமாயிருந்தால் அவன் நாடோறும் ஆனந்தத்திலேயே மூழ்கியிருப்பான்.

மதராஸ் பூரணி மெடிக்கல் ஆல், 439 செ., சௌகார்பேட்டை, சென்னை.

புஜங்கர் மஹாசபை—(௫௬௭-ம் பக்கத் தொடர்ச்சி.)

சொன்னீர்கள்! இது ஒரு கஷ்டமா? இதோ பாருங்களென்று ஒரு பசுவின் பாலைக்கறந்து நீங்களெல்லோரும் திருப்தியா யுண்டு எல்லா மாடுகளுக்கும் கொடுங்களென்றான். வண்டிக் காரர்கள் அதிசயமுற்று ஒப்புக்கொண்டார்கள். உடனே அக் கிழவன் தன் ஒரு பசுவின் பாலைக்கறந்து விட்டான். அது ஒரு பெரு நதியாய்ப் பெருக்கெடுத்தோடிற்று. வண்டிக்காரர்களும் மாடுகளும் தாகவிடாயடங்க அப்பாலைக்குடித்து சோர்வு நீங்கி னார்கள். அவர்களுண்டு மிகுந்த பால் பிரவாகமாயோடிக் கொண்டிருந்தது. அதற்குப் பாலாறென்று அப்போதே பெயர் வழங்கிவிட்டது. நான் சொல்லும் சங்கதி நிஜமென்பதை யாவரும் அறிவீர்கள். அந்தப்பாலாற்றை இன்றைக்கும் செங் கற்பட்டுக்கருகிற்காணலாம். பாலாறு என்றால் இலேசான ஆறென்று எண்ணிவிடுவீர்களோ? அப்பப்ப! நாலாறு போ னாலும் பாலாறே பிரதானம் என்று பாட்டிமார் பல்லை இளித் துக்கொண்டு சொல்வதை நீங்கள் கேள்வியுற்றதில்லையா? பாலா ற்றை நம்பினவன் பாக்கியவான்: ஏனெனில், அதில் மணற் பெருக்கு ஒருநாளும் குறைகிறதேயில்லை. விவசாயிகள் பாடுவேட் டைதான். மாரிக்காலத்திலுமொருக்கால் மணற்பெருக்கு இல் லாமற்போய்விடுமோவென்று அஞ்சவேண்டிய அவசியமேயில்லை. இந்தப் பாலாற்றின் பாய்ச்சல் எப்போதும் செங்கற்பட்டு ஜில் லாவுக்கிருப்பதால் நாமும் அச்சில்லாவில் வீணே வருஷிக்கும் மழைத்தில் வெள்ளப்பெருக்கத்தால் பட்டணம் பாழாய்ப்போய் விடுமென்று கருதியே வருணபகவான் கருணைகொண்டு அந்தச் செங்கற்பட்டு ஜில்லாவைத் திரும்பிப்பார்க்கிறதேயில்லை. அந்த வகைய பெரும்பாக்கியமுள்ள பாலாறு செங்கற்பட்டு ஜில்லா வாசிகளுக்கிருப்பதால் அவர்கள் இதரஜில்லாவாசிகளைவிட மிக்க அதிர்ஷ்டசாலிகள். இது இருக்கட்டும். நாமெடுத்துக்கொண்ட விஷயத்தைக் கவனிப்போம் பாலாற்றிற் பாலைப்பருகிய வண் டிக்காரர்கள் தங்கள் வண்டிகளை யோட்டிக்கொண்டு செல்லு மார்க்கத்தில் ஓர் ஊரில் இராத்தங்கும்படி நேரிட்டது. அவ்வூ ரில் (50,000) ஐம்பதினாயிரம் மைல் சுற்றளவுள்ள கோட்டை யொன்றைக் கட்டிக்கொண்டு ஒரு இராஜஸ்திரீ அக்கோட்டைக் குள் தன் காலைநீட்டிப்படுப்பதற்கு இடம்போதாமற் காலை முடக்கிப்படுத்துக்கொண்டிருந்தாள். அவளிடத்தில் மேற்கூறிய வண்டிக்காரர்கள்சென்று இராத்தங்க இடங்கேட்டார்கள். அவள் தன்னிடத்திலிருந்த ஒரு சுரைக்குடுக்கையின் மேல்மூடி யைத்திறந்து அதற்குள்ளே சென்றிருக்கும்படி கட்டளையிட்டாள். அவ்வாறே நாலுலட்சம் வண்டிக்காரர்கள் நாலுலட்சம் வண்டிகள் எட்டு லட்சம் மாடுகள் இவையாவும் அந்த குடுக்கைக்குள் புகுந்தவுடன் அந்த இராஜஸ்திரீ அக்குடுக்கையின் வாயை அதன்

௫௭௧-ம் பக்கம் பார்க்க.

இரண்டு பிரபுக்களும் ஒரு விகடகவியும் ஒருநாள் வேட் டைக்குப்போனார்கள். வெயில் பொறுக்காமல் இருவரும் தங்கள் மேலங்கியைக் கழற்றி விகடகவியின் தோளின் மேல் போட்டார்கள். சற்றுதூரம் சென்றபின் "உன்பே ரில் ஒரு கழுதைச்சுமை இருக்கிறதல்லவா?" என்று ஒரு வர் விகடகவியைக்கேட்டார். "ஒரு கழுதைப் பாரந் தானா? இரண்டு கழுதை பாரம் சுமக்கிறேன்" என்றான்.

"இன்றைக்கு செய்யக்கூடிய காரியத்தை நாளைக்கு ஆகட்டுமென்று ஒதுக்கிவைக்காதே," என்று தாய் சொல்ல, "அம்மா, நாளைக்குச் சாப்பிடலாமென்று பெட் டியில் நீ வைத்திருக்கும் பலகாரத்தை எடுத்துக்கொடு இன்றைக்கே சாப்பிட்டுவிடுகிறேன்", என்று பிள்ளை உரைத்தான்.

பாம்பின் குட்டிக்கு நஞ்சூட்டி வளர்க்கவேணுமோ?

எத்தால் வாழலாம் ஒத்தால் வாழலாம்—(௧௬௮-ம் பக்கத் தொடர்ச்சி.)

(௧௬௮-ம் பக்கத் தொடர்ச்சி.)

இவ்வாறு இருவருக்கும் வாக்குவாதம் மூண்டு பெருங்கோபம் எழும்ப, இருவரும் ஒருவரையொருவர் ஏசிப்பேசிக் குத்தி யுதைத்துப் பிய்த்துப்பிடுங்கி அடித்துக் கடித்து சிலநாழிகைவரையில் பெருஞ்சண்டை விளைத்தனர். பிறகு சிங்கம்போலும் அதிபலசாலியாகிய அக்குருடனுக்கு ஒருநாளுமில்லாப் பெருங்கோபமூள, அவன் முடவனைப் பந்துபோலுருட்டித் தூக்கி யாகாசத்திலெறிய எத்தனித்துக் கச்சைகட்டுகின்றான். அத்தருணத்தில் சாமசித்தன் என்னும் ஒரு வழிப்போக்கன் தற்செயலாயங்குவந்து அவ்விரு அங்கபங்கத்தாருடைய ஆரவாரத்தைக்கண்டு அவர்பாலிரக்கமுற்று மனங்கரைந்து இருவரையும் விலக்கி அப்புறப்படுத்தி அவர்களைநோக்கி "ஹா, மடமக்களே! குதிரையின் குணமறிந்தல்லவோ தம்பிரான் கொம்புகொடாதது" என்றும் "ஆட்டுக்குவால் அளவறிந்து வைத்தார்" என்றும் வழங்கும் பழமொழிகள் என்ன பொய்யா? உங்கள் அளவையறிந்துதானே கடவுள் உங்களை இவ்வாறு முடமும் குருடுமாக அமைத்தார். உங்களிருவருக்கும் காலும் கண்ணுமேயிருந்தால் ஊரைக்கொளுத்திவிடுவீர்கள். "எத்தால்வாழலாம் ஒத்தால்வாழலாம்" என்னும் முதுமொழியைக் கவனித்தீர்களில்லையே. தலைப்புற இறைச்சியைத் தின்றாலும் காற்புற இறைச்சியைத் தின்றாலும் பசியொரேபடித்தாய்த் தணியத்தக்கதா யிருக்க, "இரண்டுவீட்டிலும் கலியாணம் இடையிலே செத்தது நாய்க்குட்டி" என்றாற்போல் நீங்கள் வீணே யிடையிற் சண்டையிட்டுச் சாவானேன். நான் என்னும் அகம்பாவத்தினால் நாசமாய்ப் போசம்போகவேண்டாம். ஏ பேய்ப்பயல்களே! உயிரின்றியுடலும் உடலின்றியுயிரும் தனித்து நிற்குமா? நீவிரிருவரும் ஒருவரையொருவர் நீங்கி வாழ்தல் கூடுமா? தனித்தனியுங்கள் கண்ணாலும் காலாலும் நீங்கள் ஜீவிக்கவல்லீரா? நீவிரிருவரும் ஒருவரையொருவர் கைவிட்டிருப்பீரேல், பிறகு முறிந்த பிறைவையைப்போலாவீர்கள், நீங்களிருவரும் ஒன்றுகூடியன்றோ இம்மானண்டை வந்தீர்கள். பின்னும் நீங்களிருவோரும் மனமொத்தன்றோ பிதனைப் புசிக்கவேண்டும்" என்று அவ்விரு மூடசிகாமணிகளையும் ஒற்றுமைப்படுத்தினான். அப்பால் அவர்கள் ஒருவரையொருவர் எஞ்ஞான்றும் பிரியாமல் மனவிணக்கங்கொண்டு சந்தோஷமாய்க் காலங்கழித்து வந்தார்கள்.

மனவொற்றுமையினால் பல நன்மைகளடையலாமென்பதை இக்கதையினால் தெரிந்துகொள்ளுகிறோம்.

வித்வானென்ற பெயர் வைத்துக்கொண்ட ஒருவன் ஒரு பிரபுவினிடத்தில் சென்று கம்பராமாயணத்திலிருந்து ஒரு பாட்டைப்பாடினான். பிரபு மகிழ, கூடவிருந்த புலவன் ஒருவன், "இந்தப்பாட்டு கம்பராமாயணத்திலிருந்து திருடப்பட்டிருக்கிறதேயே, வித்வான் அதை மெய்ப்பிக்கவேண்டும் என்று சொல்லி கம்பராமாயணத்தை வரவழைத்துக் காண்பித்ததில், பாட்டு அப்படியே யிருந்தது. இருந்திருந்தால், அதில் அந்தப்பாட்டு இராதல்லவா? இந்தப் புலவனுக்கு என்ன சிவைஷ என்றான்.

கடவுள் நோய் தீர்க்கிறார் வைத்தியன் கீர்த்தியடைகிறான் :—கடவுளுடைய அநுக்கிரகத்தால் வியாதி சொஸ்தமாயினும் வைத்தியன் குணப்படுத்தியதாகக் கீர்த்தியடைகிறான்.

மதராஸ் யூனானி மெடிக்கல் ஹால், 439 செ., சௌகார்பேட்டை, சென்னை.

புளுகர் மஹாசபை—(௨௬௯-ம் பக்கத் தொடர்ச்சி.)

மூடியாலடைத்துவிட்டு தன் பேரப்பிள்ளையினுடைய இடுப்பிலுள்ள அரைஞாண்கயிற்றில் அதை முடிந்துவிட்டாள். அந்தச் சிறுவன் சற்றுநேரம் அக்குடுக்கையை வைத்துக்கொண்டு தெருப்பிள்ளைகளோடு விளையாடிய பிறகு அதைத்தெருவில் எறிந்துவிட்டுப்போய்விட்டான். அன்றிரவில் மேற்படி இராஜஸ்திரீ மலவிசர்ஜனம் செய்யப்போனபோது அவளுடைய சிறுநீர் ஒருபெரிய ஜலப்பிரவாகமாய் ஓடியபடியால் அங்கு கிடந்த சுரக்குடுக்கை அப்பெருவெள்ளத்தில் மிதந்துச்சென்று சமுத்திரத்தில் சேர்ந்துவிட்டது. உடனே அங்கிருந்த ஒருமீன் அதை யெடுத்து விழுங்கிவிட்டது. இந்தமீன் ஒரு செம்படவனுடைய வலையிலகப்பட்டமையால் அவனதைத் தன் மனையாளிடத்தில் சமையல் செய்யக்கொடுத்தான். அவள் அது தன் பெரிய குடும்பத்திற்குச் சிறிதும் போதாதென்று கணவன் மீது கடுங்கோபங்கொண்டு அதை வாசலில் வீசியெறிந்துவிட்டாள். தக்ஷணமே யதை ஒரு காகம் கௌவிக்கொண்டுபோய் ஒரு பிரமாண்டமான ஆலமரத்தின் மேலுட்கார்ந்தது. இதன் பளுவைத் தாங்கமாட்டாமல் அம்மரம் மளமளவென்று சாய்ந்தது. அம்மரத்தின்கீழ் வேலைசெய்துகொண்டிருந்த ஒரு கூலியாள் மரம் விழுவதைக்கண்டு தன் மூக்கின் ரோமத்திலொன்றைப் பிடுங்கி அதற்கு முட்டுக்கொடுத்தான். அதனால் மரம் கீழேவிழாமலதன்மேற் சாய்வாக நின்றுவிட்டது. ஆனால் மீனானது காகத்திற்குத்தப்பிக் கீழே விழுந்துவிட்டமையால் அதை யங்கு நின்ற கூலியாள் எடுத்துச்சென்று தன் இல்லாளிடத்திற்கொடுத்துப் பாகஞ்செய்யச்சொன்னான். அவள் அம்மீனையறிந்தபோது அதற்குள்ளிருந்த சுரைக்குடுக்கை வெளிப்பட்டது. அதன் மூடியை அவள் திறந்துபார்க்கையில் உள்ளிருந்த வண்டிக்காரர்கள் பொழுது புலர்ந்துபோயிற்றென்று விறகு வண்டிகளையோட்டிக்கொண்டு வெளியே வந்தார்கள். கூலிக்காரன் மனைவி இஃதென்ன கொசுக்கூட்டம் புறப்படுகிறதென்று அதிசயமாய்ப் பார்த்துக்கொண்டுநின்றாள். வண்டிக்காரர்கள் யாவரும் மிகுந்த பிரயாசையுடன் நெடுநாள் பிரயாணஞ்செய்து விறகோடு தங்கள் தேசம்போய்ச் சேர்ந்து விவாகத்தைச் சிறப்பாக நிறைவேற்றினார்கள். பார்த்தீர்களா! என்னைப்போல் ஜகஜாலப்புளுகர்கள் வேறு யாரேனுமுண்டா? என்று பேசிமுடித்தார்.

பிறகு சபாநாயகராகிய அட்டகாசப்புளுகர் பிரசங்கிகளுடைய புளுகுகளை யெல்லாம் சீர்தூக்கிப்பார்த்து அட்டுகென் கொடுத்து ஜகஜாலப்புளுகருடைய பிரசங்கம் புளுகாயிருக்கும் பட்சத்தில் இதுவே முதல் நம்பர் புளுகென்றும், யதார்த்தமாய் நடந்த சம்பவமாயிருக்கும்பட்சத்தில் முதல் நம்பர் உண்மையென்றும் தீர்மானஞ்செய்தார்.

ஒருத்தி ஒரு சந்நியாசியிடம் சென்று வணங்கி நிற்க, உனக்கு யென்னவேண்டுமென்று கேட்டார். புத்திர பாக்கியம் வேண்டுமென்றாள். உன் பெயரென்னவென, கற்பகம் யென்றாள். "ஆனால் நம்மால் முடியாது போ" என்றார்.

ஒரு மனுஷனும் கைம்பெண்ணாகிய அவன் சகோதரியும் வழியே போய்க்கொண்டிருந்ததை ஒருவன் கண்டு ஐயா, இந்த கைம்பெண்ஜாதி உங்கள் பெண்ஜாதியா என்று கேட்டான். ஏனப்படி வினவினாயென முகஜாடை ஒரேமாதிரியாயிருந்தது அதனால்தான் கேட்டேன் என்றான்.

நீ இருப்புத்திட்டங்களை வைத்திருக்கும் கூடையை வேலாட்கள் வசம் ஒப்புவியாதே ; உன் மனைவியை இன்னோர் ஊரில் விட்டிராதே.

நமக்குக் கடவுள் செய்வதெல்லாம் நன்மைகளே.

இப்பிரபஞ்சத்தின்கண் மனிதர்கள் நன்மை தீமைகள[illegible] பலவாகிய சுகதுக்கங்களை ஒன்றன் பின்னொன்றாகக்கலந்து அநுபவித்து வருகின்றார்களேயொழிய, சதா இன்பத்தையேனும் அல்லது துன்பத்தையேனும் பிறந்தது முதல் கடைநாள் வரையில் மாறுமல் அனுபவிப்பவர் ஒருவருமில்லையென்பது ஒவ்வொருவரும் தத்தம் அனுபவத்தில் நிதரிசனமாகக்கண்டு தெள்ளத்தெளிந்த விஷயமே. சுகதுக்கங்கள் ஆபால விருத்த பரியந்தம் தனவந்தர்களுக்கும் தரித்திரர்களுக்கும் சமமாயிருக்கின்றனவேயன்றி வித்தியா சப்படக்காணேம். பாலுக்குச் சர்க்கரையில்லையென்பவர்களுக்கும் சோறில்லாத கூழுக்கு உப்பில்லையென்பவர்களுக்கும், காலுக்குச்செருப்பில்லையென்பவர்களுக்கும், சிவிகைக்குப் பஞ்சணையில்லை யென்பவர்களுக்கும் விசனம் ஒரு படித்தாகவே யிருக்கிறது:—

"பாலுக்குச் சர்க்கரையில்லை யென்பார்க்கும் பருக்கையற்ற
கூழுக்குப்போட உப்பில்லை யென்பார்க்குங் குத்தித்தைத்த
காலுக்குத்தோற் செருப்பில்லை யென்பார்க்குங் கனத்ததண்டி
மேலுக்குப் பஞ்சணையில்லை யென்பார்க்கும் விசனமொன்றே,"

என்று பெரியோர்கள் கூறியிருக்கின்றனர். ஆகையால் எத்தகையோர்க்கும் சுகாநுபவத்தைப்போலவே துக்காநுபவமும் சேர்வது பிரத்தியக்ஷமாயிருக்க, கடவுள் நமக்குச் செய்வதெல்லாம் நன்மைகளே யென்று மகுடத்தில் வரைந்திருப்பது நேர்விரோதமாகவன்றோ முடியுமெனின், அதனைச்சிறிது சிந்தித்துப் பார்ப்போம்.

முன்னமே கஷ்டத்தை யநுபவித்தவன் பின்னே சுகத்தை யநுபவிப்பான் என்னும் பழமொழியை யோசிக்கையில் "யானைவரும் பின்னே மணியோசை வருமுன்னே" என்பதுபோல் பிந்திவரும் சுகத்தை எச்சரிக்கை செய்யும் ஒரு அறிகுறியைப்போல் முன்னே கஷ்டமானது ஓர் அறிகுறியாகத் தோற்றுகிறது. உலகத்தில் ஒவ்வொரு விஷயத்தையும் கூர்ந்து யோசித்துப் பார்க்குங்கால், கஷ்டமில்லாமல் எந்தக்காரியத்திலும் பயன் கிடைப்பது துர்லபம். "நிழலருமை வெய்யிலிலே நின்றறிமின்" என்பதுபோல், வெய்யிலிலே உழன்றலைந்த ஒருவனுக்கே நிழலின் அருமைப்பாடு தெரியும். இருளில் அவதிப்பட்ட பிறகே நிலவின் பிரயோஜனம் சுகமாகத்தோன்றும், அதுபோல் கஷ்டப்பட்டறியாவிட்டால் சுகத்தின் பெருமை நன்கு விளங்காது. ஒவ்வொரு காரியமும் தொடக்கத்தில் துன்பத்தையே விளைத்துப் பின்னர் சுகத்தைப் பயவாநிற்கும். பிரதமத்தில் வரும் கஷ்டத்துக்கு மனமிளைத்துப் பயந்து தொடங்காது விட்டுவிட்டால், பின்னே சுகமடைவதற் கேதுவில்லாமற்போகும். உதாரணமாக:—

"தொடங்குங் கற்றுஞ்ப மாயின்பம் பயக்கும்
மடங்கொண் நல்வகற்றுங் கல்வி,"

என்னும் வாக்கியப்படி, கல்வியானது ஆரம்பத்தில் மஹாகஷ்டத்தைக் கொடுத்து, பிறகு அதிக சுகத்தைத்தருகின்றது. பள்ளிக்கூடத்திற்குப் போகும்படியாய் தாய் தந்தையர் கடிந்து கூறும்போது சிலபிள்ளைகள் அதிக

௩௭௪-ம் பக்கம் பார்க்க.

(Benjamin Franklin) பெஞ்ஜமீன் பிராங்க்லின் என்னும் மஹாவல்லபருடைய நீதிமொழிகள்.

ஓர் அரசன் தனது குடிகளை யழைத்து உங்களுடைய காலத்தில் பத்தி லொருபாகத்தை இராஜாங்க விஷயத்தில் செலவு செய்ய வேண்டுமென்று கட்டளையிடுவானாகில் குடிகளெல்லாம் அவனைக் கொடுங்கோலரசனென்று கூப்பிடுவதிற் றடையுண்டோ? அதுபோலச் சோம்பலானது நம்மில் அநேகருடைய வாழ்நாளின் விசேட பாகத்தைக் கொள்ளைகொண்டு போகின்றதே! இதற்கு யாரைக் குறைகூறுவது? சோம்பலாற் பற்பல வியாதிகளுற்பத்தியாகி வாணாள் குறைகின்றது. இரும்பாலாகிய சாவிகளேயாயினும் சதா உபயோகப்படுத்தி வருவதால் சற்று தேய்ந்தபோதினும் கருநிறம் நீங்கிப் பளபளப்புள்ள நிறம் பெற்றுச் சீக்கிரம் உடைந்துபோகாமல் அநேகவருஷம் உறுதியாக நல்ல ஸ்திதியிலிருக்கும். உபயோகிக்காமற் சும்மா வைத்திருக்கும் இரும்புசாவிகள் துருப்பிடித்து விகாரரூபங்கொண்டு சீக்கிரம் உடைந்து கெட்டுப்போகும். இதுபோல் சதாமுயற்சியுடன் உழைத்துவருபவர்களுடைய சரீரத்தில் இரத்தவோட்டம் மிகுதித்துச் சரீரத்திற்கு வலுவையுண்டாக்கி யாதொரு வியாதியுமின்றி நெடுநாள் வாழச்செய்கின்றது. சரீரமுயற்சியின்றிச் சோம்பலாற் காலத்தைக் கழிப்பவர்களுடைய சரீரத்தில் இரத்தவோட்டம்கெட்டுப்போய்ப் பற்பலவியாதிகளை விளைவித்துச் சீக்கிரம் மரணத்திற்கேதுவாக்கி விடுகின்றது. இரும்பைத் துரு தின்று விடுவதுபோலச் சோம்பல் வாழுநாளைத்தின்றுவிடுகின்றது. நெடுநாள் ஜீவிக்கவேண்டுமென்று நீ எண்ணினால் உன் காலத்தைச் சோம்பலால் போக்காதே. ஏனென்றால், உன்னது வாழுநாள் காலத்தால்தான் செய்யப்பட்டிருக்கின்றது. தூங்கின நரி இரை இழந்தது என்னும் பழமொழியை மறந்துவிட்டு எவ்வளவு நேரம் தூக்கத்திற்போக்கிவிடுகின்றோம். சமாதிக்குழியில் தூக்கத்திற்கு வேண்டிய சாவகாசமிருக்கின்றது. இப்போதேன் காலத்தை வீணாய்ச்செய்யவேண்டும். காலமானது மற்றெல்லாவஸ்துவைப் பார்க்கினும் மதிப்பேறியதாயிருப்பதால் விருதாவில் செலவுசெய்த காலத்தைப்பற்றி நாம் எவ்வளவு துக்கிக்க வேண்டும். சென்றுபோன காலம் திரும்ப வரப்போகிறதில்லை, போதும் என்று சொல்லப்பட்ட காலம் எப்போதும் மிகச் சொற்பமாகவே யிருக்கும். ஆகையால் சோம்பலைத்தவிர்த்துச் சுறுசுறுப்பாய் வேலைசெய்யவேண்டும். சிறுகச்சிறுக மலையையும் பிளக்கலாம் என்பதுபோல, சிறுகச்சிறுகத் தொடர்ச்சியாய் வேலைசெய்து வந்தால் பெருத்தலாபத்தை யடையலாம். சோம்பேறிக்குச் சொற்பகாரியமும் கஷ்டமாய்த் தோற்றும். முயற்சியுடையவனுக்குக் கடுமையான வேலையும் சுலுவாய்த்தோற்றும். படுக்கையிலிருந்து நேரஞ்சென்றெழுந்திருப்பவன் நாள் முழுவதும் வேலைசெய்தும் தன் வேலையைப்பூர்த்தியாய் முடிக்கமாட்டான், ஏனென்றால் சோம்பற்றனம் மிக மெதுவாகவே நடக்கும். ஆகையால் தரித்திரமும் அவனைச்சூழ்ந்துகொள்வதற்கேதுவாகும். உன்னுடைய சோம்பலை நீ வெருட்டு. அது உன்னை வெருட்டுவதற்கிடங்கொடாதே. வெள்ளெனப்படுத்து விடியுமுன் எழுந்திருந்தால் தேகாரோக்கியமும் புத்திதீட்சணியமும் அஷ்ட ஐஸ்வரியமும் உண்டாகும். நாம் முயற்சியுடையவர்களாயிருந்தால் நம் காலத்தை நல்ல காலமாக்கிக்கொள்ளலாம்.

௩௭௭-ம் பக்கம் பார்க்க.

தூக்கமில்லாதவனுக்கு இரவு நெடிதாகத் தோற்றும், இளைத்தவனுக்கோ பிரயாணம் முடிவற்றதாய்த் தோன்றும்.

அனேக பிரிகள் சேர்ந்தது பலமான கயிறாகும்.

இராத்திரியில் உன் வீட்டைக் காட்டாதே; உன் மனைவியை இன்னொருவன் வீட்டிலே தாமசிக்க விட்டிடாதே.

நமக்குக் கடவுள் செய்வதெல்லாம் நன்மைகளே — (௱௭௨-ம் பக்கத் தொடர்ச்சி.)

வருத்தத்துடன் வயிற்றில் நெருப்பிட்டதுபோற் கலங்கிப்பெற்றோர்கள் நம்முடைய நன்மையின் பொருட்டுத்தானே இவ்வளவு சிரமமெடுத்துக்கொண்டு பள்ளிக்குச் செல்லும்படி நம்மைக் கடிகின்றனரென்பதை அற்பமேனும் சிந்தியாமல், இந்தச் சண்டாளத் தாய்தந்தையர்க்குச் சாவுமா வில்லையே, வந்து வாரிக்கொண்டுபோய்விட்டால் நமக்கித்தொந்தரவு அடியோடே தொலைந்துபோமே, பிறகு நாம் நமதிஷ்டப்படி சந்தோஷமாய் ஆடிப்பாடி விளையாடித்திரியலாமே, இவர்கள் நமக்குப் பெருஞ்சனியனாயிருக்கிறார்களே யென்று தமக்கு நன்மை நினைக்கும் தாய்தந்தையருக்குத் தீமைகோரி ஓடி யொளித்துத்திரிவார்கள். இத்தகையோர்கள் பிற்காலத்தில் கல்வி வாசனை சிறிதேனுமில்லாமல் நிரக்ஷரகுக்ஷிகளாய் விடுகின்றனமையால், வெய்யலிலும் மழையிலும் திரிந்து வருந்தி தம்வாணாள் முழுதும் கஷ்ட ஜீவனஞ்செய்து காலங்கழிக்கிறார்கள். பாலிய பருவத்தில் கஷ்டப்பட்டு கல்வி பயின்றோர்கள் விவேகிகளென்னும் பட்டம்வகித்துப் பலராலும் மதிக்கப்பெற்று உயர்ந்த உத்தியோகம், கைத்தொழில் வர்த்தகம் முதலியவற்றில் சிறப்பும் கீர்த்தியு மடைந்து தனிகர்களாய் கௌரவத்துடன் வாழ்ந்து சுகமாய்க் காலங்கழிக் கிறார்கள். காலை முதல் மாலைவரையில் பிரயாசைப்பட்டுழைக்கிற ஒவ்வொரு கூலியாளரும் தினந்தத்தில் அதன் பலனாகிய பொருளைப்பெறுகிறார்கள். ஆகையால் முந்திய கஷ்டம் பிந்திய பிரயோஜனத்தைப் பயக்குமென்பதை ஒவ்வொரு தொழிலிலும் காணலாம்.

ஒருதகப்பன் தன் பாலனுக்கு இனியதின்பண்டம் வாங்கிக் கொடுக்கும் போது அதைஅக்குழந்தை அதிக சந்தோஷத்துடன் வாங்கிப் புசிக்கிறது. ஆனால் குழந்தைக்கு மருந்தைக் கொடுத்தாலோ, அதையுண்ண மறுத்து, தகப்பன் தனக்குக் கஷ்டந் தரத்தக்க மருந்தைக்கொடுத்து உபத்திரவப் படுத்துகிறானென்று கருதி யழுகின்றது. வியாதியினால் தன் குழந்தை பெரிதும் வருந்தி துக்கத்திற் கிலக்காகுமே, அவ்வாறு நேரவண்ணம் முன்னமே ஔஷதப் பிரயோகஞ்செய்து அதை விலக்கவேண்டுமென்று கைப்பான மருந்தைக் கொடுக்க முயலும் தயாளகுணத்தையும் ஞானத்தையுமுடைய தந்தையின்பேரில், வியாதியினால் மேலடையப்போகிற பெருந்துன்பத்தை முன்னமேயறிந்து கொள்ளத்தக்க திராணியில்லாத பாலகன் குறை கூறுவதுபோல், ஞானமில்லாத மூட மனிதன் அகண்டஞான சம்பன்னராகிய கடவுளின்மேல் குறைகூறுகிறான். ஓ கடவுளே! எத்தனையோ ஜனங்கள் கஷ்டமின்றிச் சுகசரீரிகளாய் நல்ல செல்வத்துடன் சகல சுகங்களையும் அநுபவிக்கிறார்களே, என்னொருவனை இத்தகைய கொடும்பிணியினால் வருத்துகின்றனையே, இது தர்மமா? என்மீதிரக்கமில்லையா? உனக்குக் கண்ணில்லையா? என்று சிலரும், பாழுந்தெய்வமே! உன் கோயில் குட்டிச்சுவராய்ப் போக, என்னை யிவ்வாறு பட்டினிபோட்டுக் கொல்லுகிறாயே, உன் மனம் என்ன கல்லா? இரும்பா? வயிரமா? நான் படும்பாடு உனக்குத் தெரிய வில்லையா? பஞ்சை படும்பாடுபடுகிறேனே. உன்னைச் சர்வ ஜீவதயாபரனென் னவர், கருணைக்கடலென்றும் கூறுகிறார்களே. அப்பெயர்கள் உனக்குத்

௱௭௬-ம் பக்கம் பார்க்க.

மதராஸ் யூனாணி மெடிக்கல் ஆல், 439 கெ., சௌகார்பேட்டை, சென்னை

கர்வம் அடங்கிற்று.

ஒரு வக்கீல் ஒரு நியாயசபையில் நியாயவாதம் செய்துக் கொண்டிருக்கையில் நியாயாதிபதி கழுதை கத்துகின்றது கழுதை கத்துகின்றது என்று வாய்க்குள்ளே முணமுணத்துக் கொண்டிருந்தார். அதை வக்கீல் கேட்டும் கேளாதவர்போல தன் கக்ஷியைப் பேசினார். பிறகு நியாயாதிபதி தீர்மானஞ் சொல்லிக்கொண்டிருக்கும்போது ஒரு யதார்த்தமான கழுதை தெருவிலே கத்தத்துவக்கிற்று. உடனே நியாயாதிபதி தீர்மானஞ்சொல்வதை நிறுத்தி அது என்ன சப்தம் என்றார். அந்த வக்கீல் எழுந்து அது கோர்ட்டாருடைய எதிரொலிதான் வேறொன்றுமல்ல என்றார். நியாயாதிபதி வெட்கத்தினால் தலை சாய்த்துக்கொண்டார்.

மரணவஸ்தையிலும் விகடம்.

ஒரு விகடகவி மரணவஸ்தைப் பட்டுக்கொண்டிருக்கையில், அவனைப் பார்க்கவந்த ஆப்தன் ஒருவன், சிறிது பாலாகிலும் அவன் வாயில் வார்க்கலாமென்றெண்ணி, அங்கிருந்த ஒரு கந்தைத்துணியில் பாலைத்தோய்த்து அவன் வாயிற் பிழிந்தான். அப்போது அந்தப்பால் உள்ளேயிறங்காமல் வெளியே வழிந்து வருவதைக்கண்டு அந்த ஆப்தன், "அப்பா! உனக்குப் பாலும் கசக்கலாயிற்று?" என்று பரிதாபத்துடன் கூறினான். அது கேட்ட பிணியாளனாகிய விகடகவி, அக்கந்தைத்துணி அதிக அழுக்காயிருப்பதைக்கண்டு, தன்னுடைய ஆப்தனை ஏளனஞ் செய்ய எண்ணி, அவனைக் கண்விழித்துப்பார்த்து, "அப்பா! நீ வார்த்த பால் கசக்கிறது வாஸ்தவமே, ஆனால் அந்தப்பால் பிழிந்த கந்தைத்துணிதான் கசக்கவில்லை" என்றான்.

மேல் யுக்தி.

வாத்தியார்:—சேஷாசலம்! நீ இந்தக்கணக்கைச் சொல் பார்ப்போம். ஒரு மரத்தில் 5 பக்ஷிகள் உட்கார்ந்திருந்தன. மூன்று பக்ஷிகளைத் துப்பாக்கியால் ஒரே அடியில் சுட்டுவிட்டேன். எத்தனைப் பக்ஷிகள் மிகுதியாய் அங்கிருக்கவேண்டும்?

சேஷாசலம்:—என்ன சார், இது ஒரு பிரமாதமான கணக்கா? ஐந்தில் மூன்று போய்விட்டால் 2 பக்ஷிகள் தான் அங்கிருக்கவேண்டும். இது தெரியாதா?

பர்மன்:—(வேறொரு பையன்) இல்லை சார் இல்லை, 3 பக்ஷிகள் அங்கு இருக்கவேண்டும். எப்படியெனில் சுடப்பட்ட பக்ஷிகள் மூன்று மாத்திரமே அவ்விடத்தில் விழுந்திருக்க வேண்டுமேயொழிய மற்றப்பக்ஷிகள் கண்காணாத தூரத்திற்குத் தம்பி ஓட்டிவிட்டு இருக்கவேண்டும்.

பாபம் என்பது தெரியாமையே. பாபத்துக்கு ஒப்பென்பது இஷ்டமில்லாமல் செய்யும் ஊழியமே.

கத்தியைமட்டு மிஞ்சித்தீட்டாதே; அது மழுங்கிப் போம்; பிள்ளையைமட்டு மிஞ்சிக் கடிந்துகொள்ளாதே! அவன் வெட்கமடையான்.

மனிதர்களுக்கு அவர்கள் ஸ்திதியைக் கொண்டும் சந்தர்ப்பங்களைக்கொண்டும் அப்பியாசங்கள் மாறும்.

பிறர் தீயசெயல்களால் நமக்கு வரும் தீங்கைவிட அதற்காக நாம் படும் கோபத்தால் விளையும்தீங்கு வெகு அதிகம்.

கூட்ட மதிகமானுல் தைரியமும் அதிகந்தான்.

நமக்குக் கடவுள் செய்வதெல்லாம் நன்மைகளே—(௩௭௪-ம் பக்கத் தொடர்ச்சி.

தருமா? என்னவிறந்த ஜனங்களுக்குச் சம்பத்தையும் சுகத்தையுங் கொடுத்துச் சந்தோஷமாக வைத்திருக்கின்றனையே. என்னை யேனிவ்வாறு அவதிப் படுத்தவேண்டும். இது வஞ்சகமும் பாரபக்ஷமுமல்லவா? என்று சிலர் கடவுளின்மேல் குறை கூறுகின்றனர். இவ்வாறு சர்வஞானமுள்ள கடவுளைப் பலபடி தூஷித்துத் திரிவது மூடமூடர்களுக்கியல்பு. மேற்கூறிய திருஷ்டாந்தப்படி, தகப்பன் கசப்பான மருந்தை ஏன் குழந்தைக்குக் கொடுக்கிறான்? இந்தக் கசப்பின் கஷ்டத்தைப்பார்க்கிலும் கடுமையான வியாதியின் கஷ்டத்தைத் தடுப்பதற்காகவல்லவா? "அழச்சொல்வார் சிரிக்கச்சொல்வார், சிரிக்கச்சொல்வார் அழச்சொல்வார்" என்னும் பழமொழிபோல், முன்னே அகிதம் செய்வோர் பின்னே யிதஞ்செய்வார், முன்னே இதஞ்செய்வோர் பின்னே அகிதஞ்செய்வாராகையால், கடுமையான மருந்தை குழந்தை வருத்தப்படும்படி முன்னே கொடுக்கும் தந்தையின் கருத்து பின்னே அதிக கஷ்டப்பட்டு வருந்தப்போகிற குழந்தையை அவ்விபத்தினின்றும் விலக்கி நன்மை செய்வதே. அதுபோலவே நமக்கொரு துன்பம் நேருங்கால், அதைப்பார்க்கிலும் பெரிய துன்பம் நேரவிருப்பதை விலக்கி நன்மை தரும் பொருட்டே கடவுள் நமக்கு இக்கஷ்டத்தை முன்னே தந்தருளினரென்று யூகிக்கவேண்டும். அஞ்ஞானாந்தகாரத்தில் மூழ்கி யந்தகர்களாயிருக்கும் நமக்குப்பின் வரப்போகிற பீடை தெரிகிறதில்லை. பரிபூரண ஞானமுடைய பரம பிதாவாகிய கடவுள் அதைத் தெரிந்துகொண்டே, அப்பெரும் பீடையினின்றும் நம்மைக் காத்தருளும் நிமித்தம் இத்துன்பத்தைத் தருகின்றார். உணர்ச்சியில்லாத நம்முடைய பேதை மனத்துக்கு இச்சிறிய துன்பமே பெரும் பீடையாகத்தோற்றுகிறது. ஆகையினாற்றான் விவேகிகளாயுள்ளபேர்கள் தங்களுக்கெத்திறத்துன்பங்கள் நேர்ந்தாலும் அவை தம் அநுகூலத்தின்பொருட்டேயென்று திடசித்தங்கொண்டு மனங்கலங்காதிருப்பார்கள்.

"உடற்கு வருமிடர் நெஞ்சோங்கு பாத்துற்றோர்
அடுக்குமொரு கோடியாக நடுக்கமுற்றார்,"

என்று பெரியோர்கள் கூறியிருக்கின்றனர். இதனால் கடவுள் நமக்கெப்போதும் நன்மையையே செய்கிறாரென்பது உள்ளங்கை நெல்லிக்கனிபோல் விளக்கமாய்த் தெரிகிறது. பொறுமையும் ஞானமுமில்லாத புல்லறிவாளரைப்போல் புலம்பிக் கடவுள்மேல் குறைகூறுவது பெரும்பாவத்துக்கிடமாம். இதற்குத் திருஷ்டாந்தமாக வழியில் ஒரு சிறுகதை கூறுகின்றோம்.

ஒருகாலத்தில் ஒரு வியாபாரி சந்தைக்குச்சென்று தன் பொருள்களையெல்லாம் விற்பனை செய்தபின் பணத்தை ஒரு பையில் மூட்டைகட்டிக்கொண்டு தன்குதிரையின் மேலேறிப் பட்டணத்திலுள்ள தன்வீட்டை நோக்கிச் செல்லுகையில், இடையில் ஒரு பெரிய வனாந்தரமார்க்கத்தில் கனமழை பெய்தமையால் சரீரமுழுதும் நனைந்து குளிரினால் பீடிக்கப்பட்டான். அப்போது அவ்வர்த்தகன், ஆ கடவுளே! இது என்ன அநியாயம், நீ யுன்னுடைய அடியவர்கள்மீது, பகைவர்கள்மீது வைத்துள்ள வாஞ்சையைப்போல்

—௩௭௮-ம் பக்கம் பார்க்க.

...ல்லாக் குளங்களிலும் கிர்லீலிப்புஷ்பம் வளராததுபோல், எல்லா மலைகளிலும் சுகந்தவர்க்கத் தருக்கள் வளரா, காணி
வத்... மக்கள் யாவரும் ஞானிகளல்ல.

மதராஸ் யூநானி மெடிக்கல் ஆல், 439 செ., சௌகார்பேட்டை, சென்னை.

(Benjamin Franklin) பெஞ்ஜமின் பிராங்க்லின் என்னும் மஹா வல்லபருடைய நீதிமொழிகள்—(௱௭௬-ம் பக்கத் தொடர்ச்சி.)

முயற்சியுடையோ னிகழ்ச்சி யடையான், சோம்பலாளன் தேம்பித்திரிவான், கஷ்டமில்லாமல் இலாபமில்லை. என்னுடைய கைகளே! எனக்கு ஒத்தாசை செய்யுங்கள், எனக்கு நிலமில்லை, நிலமிருந்தாலும் அவைகளுக்கு வரி விதிக்கப்பட்டுப்போய்விட்டது. வியாபாரம் செய்பவன் சொத்துடையவனாயிருக்கிறான். ஒரு தொழிலைச் செய்கிறவன் கவுரவமும் இலாபமுமுள்ள உத்தியோகத்தை வகிக்கிறான். ஆகையினால் சொத்திருக்கிறது சாப்பிட்டுக் கொண்டு தூங்கியிருக்கலாமென் றெண்ணமல் வியாபாரமாவது அல்லது வேறெந்தத்தொழிலாவதுசெய், நீ சவுக்கியமாய் வாழ்ந்துகொண்டிருப்பாய், நாம் முயற்சியுடையோராயிருந்தால் பட்டினியால் வருந்தவேண்டிய நிமித்தமில்லை. வேலைசெய்பவன்வீட்டில் பசிவந்து எட்டிப்பார்த்தாலும் உள்ளே நுழைவதற்குத் தைரியங்கொள்ளாது. முயற்சியுள்ளவன் கடனைத்தீர்க்கிறான். சோம்பேறி கடனை அதிகப்படுத்திக்கொள்ளுகிறான். உன் தாய்தந்தையர் உனக்கு யாதொரு சொத்தும் சேகரித்து வைக்காமற்போனால்தானென்ன? புதையல் அகப்படாவிட்டால்தானென்ன? சுறுசுறுப்பு அதிர்ஷ்டத்தின் தாயாயிருக்கிறது. சுறுசுறுப்புள்ளவர்கட்கே கடவுள் சகல சம்பத்தையும் கொடுக்கின்றார். சோம்பேறிகள் தூங்கட்டும், நீ மெள்ளெனவெழுந்து ஆழமாயுழுது பயிர்செய், அப்போது நீ வைத்துக்கொள்வதற்கும் விற்பதற்கும் தானியம் கிடைக்கும், நாளைக்கு எத்தனை தடைகள் நேருமோ உனக்குத்தெரியாதாகையால், இன்றைக்கே எல்லா வேலைகளையும் முடித்துக்கொள், இன்றைக்கு உன்னால் செய்யக்கூடிய வேலையை நாளைக்கென்று வைக்காதே. நீ ஒரு எஜமானனுக்குள் வேலைக்காரனாயிருந்து, எஜமானனுடைய வேலையைப் பார்க்காமல் காலங்கழிப்பதை எஜமானன் பார்த்துவிட்டால் நீ வெட்கமடைவாயல்லவா? நீயே எஜமானனும்வேலைக்காரனுமாயிருந்துகொள். இப்போது சோம்பலாய்க் காலங்கழிப்பதற்கு நீ வெட்கமடைய வேண்டாமா? உனக்காகவும் உன் குடும்பத்திற்காகவும் உன் தேசத்திற்காகவும் உன் அரசனுக்காகவும் எவ்வளவோ வேலைசெய்யவேண்டும். ஆகையால், இடையை வரிந்து கட்டு, தொழிற்குரிய ஆயுதங்களை எடுத்துக்கொண்டு வேலைக்குப்போ. கையுறைபோட்ட பூனை எலி பிடிக்காது. வேலைசெய்யச் சக்தியற்றவனாயிருந்தால் விடாமுயற்சியாய்ச் சிறுகச்சிறுகச்செய், அப்போது நல்ல அனுகூலமுண்டாகும். தொடர்ச்சியாயோடும் சிறுதாரைஜலம் கருங்கல்லையும் கரைத்துவிடும். பொறுமையினாலும் விடாமுயற்சியினாலும் சுண்டெலியானது கப்பல் வடத்தையும் கடித்துத்தகர்த்துவிட்டது. சிறுவெட்டு பருத்த மரங்களையும் விழப்பண்ணும், சிறு உளியால் பெருத்த கற்களையும் தகர்க்கலாம், என்று பெஞ்ஜமின் பிராங்க்லின் என்னும் மஹாசாஸ்திரி பேசிவருகிறார். இவர் ஆதியில் ஏழையாயிருந்து தன் சுயமுயற்சியினாலேயே கல்விகற்று அநேக சாஸ்திரங்களில் விற்பன்னராகி, அநேக நூதன விஷயங்களைக் கண்டுபிடித்து அதிக செல்வவானாகவும் கீர்த்திமானாகவும், கவுரவவானாகவுமிருந்தார். இவ்வுபதேசங்க ளொவ்வொன்றையும் நாம் செவ்வையாய்க் கவனித்து அதன்படி நடந்தால் நாமும் கவுரவமும், கீர்த்தியும், ஐஸ்வரியமும் அடையலாமென்பதற்குச் சந்தேகமில்லை.

பெண்ணை பெனவைத்திவிர்த்தம் நேசிப்பதும் பிறன்யென்று தள்ளிவிடுவதும் மடையர்கள் செய்கை.

அதிபேராசையுடைத்தால் அப்பியம் கசக்கும்; மன்னனை அடைந்து கேட்டுக்கொண்டேபோட்டிருந்தால் மாட்டினனை கோடிக்குத் திருவான்.

தீயுந் தண்ணீரும் நல்ல சிநேகிதரல்ல, இராஜாவின் சிநேகமும் அப்படித்தான்.

நமக்குக் கடவுள் செய்வதெல்லாம் நன்மைகளே—(௱௭௬-ம் பக்கத் தொடர்ச்சி.)

மிக்க கருணையுடையவரென்று சாஸ்திரங்களெல்லாம் ஒரேபடித்தாக முறையிடுகின்றனவே, இதுதானு நீ யென்பேரில்வைத்த கிருபா விசேஷம்? நானும் நனைந்து, வஸ்திரங்களெல்லாம் முற்றிலும் ஈரமாகி, என் குதிரையும் நனைந்து குளிர்மேலிட்டு நடுங்குகிறோமே. ஒதுங்கியிருப்பதற்கும் ஒருமார்க்கமுமில்லையே. இது என்ன அடாத காரியம்? எனக்கு இவ்விதத் துன்பத்தைக்கொடுத்தது உன்னருட் பெருக்கத்துக்கழகா? முற்றிலும் நியாய விரோதமாயிருக்கிறதேயென்று பலவாறு பயித்தியங்கொண்டவனைப்போல் தனக்குள்ளே பிதற்றிக்கொண்டுபோகையில், அக்காட்டில் ஒளிந்திருந்த ஒரு திருடன் வெளிப்பட்டு, தன் கையிலிருந்த துப்பாக்கியினுல் அவ்வர்த்தகனைச் சுடுவதற்கு குறிப்பிட்டனன். அச்சமயம் அத்துப்பாக்கிக்குள் போட்டிருந்த மருந்து மழையினுல் நனைந்து ஈரங்கொண்டிருந்தபடியால், சுடுவதற்கு ஏலாமற்போய்விட்டது. திருடனுடைய பிரயத்தினம் வியர்த்தமாய்விட்டபடியால், அவன் பதைபதைத்து துப்பாக்கியைக் கீழெறிந்துவிட்டு, வர்த்தகனைப் பிடிப்பதற்குப் பின்தொடர்ந்தோடினன். வர்த்தகன் தன் குதிரையை அதிகவேகமாய்த் தூண்டித் துரத்திக்கொண்டுபோய்த் தன் வீடு வந்து சேர்ந்து, தன் மனதை நோக்கி, ஹா மூடமனமே! சற்றுநேரத்திற்கு முன்மழை பெய்வித்து உன் சரீரத்தை நனைத்துவிட்டதற்காக பூரணகுணத்தையுடைய கடவுளைத் தூஷணை செய்தாயே. என்னை எதிர் பார்த்திருந்த கொலையினின்றுந் தப்புவித்துக் காத்தருளும்பொருட்டன்றோ கடவுள் கனமழை பெய்வித்தனர். அம்மழை பெய்யாவிட்டால் அக்கணமே துப்பாக்கிக்கு இரையாய்ப் போயிருப்பேனல்லவா? என்னுயிர் தப்பி வீடுவந்து சேர்வேனு? கடவுளால் எனக்களிக்கப்பட்ட பேருதவியைத் தீதாகவெண்ணியது உன்னுடைய அவிவேகத்தினுலன்றோ? என்று பலவாறு மனநொந்து கடவுளைத் தூஷித்ததற்காக அவரைத் துதிசெய்து மன்னிப்புக்கேட்டுக்கொண்டான்.

புத்தி சாதுர்யம்.

திருட்டுக்குற்றம் சாட்டப்பட்டுள்ள ஒரு கைதியைப் பார்த்து,

ஜட்ஜ்:—உன்னுடைய தொழிலிலுனக்குக் கிடைக்கக்கூடிய எவ்வித வஸ்துவையும் நீ எடுத்துக்கொள்வாயல்லவா?

கைதி:—(ஜட்ஜ் தன் பட்சத்தில் அநுகூலமாகப் பேசுகிறாரென்றெண்ணிக்கொண்டு) ஆம், எஜமான்களே.

ஜட்ஜ்:—சரி, சரி, அப்படியென்றே நான் எண்ணினேன். நல்லது இருக்கட்டும், இப்போது என்னிடத்தில் நான்கு வருஷம் கடுங்காவலான தண்டனையொன்று உபயோகமில்லாமல் துருப்பிடிப்பதற்கு ஆரம்பித்திருக்கிறது. அதையிப்போது உன்னுடன் எடுத்துக்கொண்டுபோனுல் எல்லாக் காரியங்களுக்கும் அநுகூலமாயிருக்கும்.

மதராஸ் யூனானி மெடிக்கல் ஹால், 439 நெ., சௌகார்பேட்டை, சென்னை.

நற்போதம்.

ஒரு நாட்டுப்புறத்தில்வசிக்கும் ஒருபெண் ரங்கன், ராமன் என்னும் தன் இரண்டு குமாரர்களுடன் காலை 7-மணிக்கு வீட்டைவிட்டுப் புறப்பட்டு வெளியேசென்று கூலிவேலைசெய்துவிட்டு சாயுங்காலம் 6-மணிக்கு வீட்டுக்குத் திரும்புவது வழக்கமாயிருந்தது. இராவில் சமையல் முதலிய எல்லா விவகாரங்களையும் அடுப்புத்தீ வெளிச்சத்திலேயே நடத்திக்கொள்வதேயொழிய ஒருநாளும் இராவில் தீபம் ஏற்றிவைத்ததேயில்லை. தீபம் என்பது இத்தன்மையதென்று பிள்ளைகளுக்கு ஒரு சிறிதும் தெரியாது. அவர்கள் எப்போதும் கண்டேயறியார்கள். ஒருநாள் தாயும் பிள்ளைகளும் வேலைக்களத்திலிருந்து வீட்டுக்குத் திரும்புவதற்கு இராவில் 7—மணியாய் விட்டபடியால், அதிக இருளாயிருந்தது. அவர்கள் வீட்டிற்குவந்து பார்த்தபோது அதி விம்மிதமுண்டாகும்படியாக வீட்டில் ஒரு தீபம் எரிந்துக்கொண்டிருந்தது. அதைக் கண்ட மூத்தபுதல்வனாகிய ரங்கன், இதற்குமுன் ஒருபோதும் தீபமென்பதைப் பார்த்தும் பிறர் சொல்லக்கேட்டும் அறியாதவனாகையால், தீபம் ஜொலித்துக்கொண்டிருப்பதைப்பார்த்து, அடங்கா மகிழ்ச்சியும் ஆற்றொணா வியப்புமடைந்தவனாய் தீபத்தருகேயோடிப்போய் நின்று கண்ணிமைக்காமல் அதையுற்றுப்பார்ப்பதும் அவ்வொளிவீசும் இடங்களிலெல்லாம் ஓடியுலாவி ஆடிப்பாடி யானந்திப்பதும் பலகால் பார்த்துப் பார்த்துப் பிரமிப்பதுமாயிருந்தனன். அதன் பின்னர் இத்தகைய அபூர்வமான ஒளியைப் பூச்சியை நம் வீட்டில் யாவரேனும் ஒருவர் கொண்டுவந்து வைத்திருக்கவேண்டும் என்று தனக்குள் யோசித்து வீடெங்கும் சுற்றிப்பார்த்து ஒருவரும் அங்கில்லாமையால் மிக்க பரபரப்புடன் தாயினிடஞ்சென்று "அம்மா! இது என்ன ஒளிப்பூச்சி? அதிக பளபளப்பாயிருக்கிறதே, இது எங்கிருப்பது? நான் பிறந்தநாள் முதல் இது பரியந்தம் ஒருபோதும் கண்டதில்லையே, இது நம் வீட்டிற்கு எவ்வாறு வந்தது? எனக்குத் தெரிவிக்கவேண்டும்" என்று தாயைப்போவலுடன் கேட்டான்.

தாய்:—"பிள்ளாய்! இது உயிருள்ள வஸ்துவன்று. இதற்குத் தீபம் என்று பெயர். இது எண்ணெய், திரி, நெருப்பு இம்மூன்றினாலாயது. இருட்காலங்களில் இதைக்கொளுத்திவைத்துக்கொண்டு இதன் பிரகாசத்தினால்தான், சகல ஜனங்களும் தத்தம் வீடுகளிலுள்ள வேலைகளையெல்லாம் குறைவற முடித்துக்கொள்வார்கள். ஆனால் சில நாட்டுப்புறங்களில் நம்போன்ற ஏழைகளாயுள்ளோர் தீபம் வையாமலே அடுப்பு வெளிச்சத்தின் சகாயத்தால் இரவில் தங்கள் வேலைகளை நடத்திக்கொள்வார்கள்" என்றாள்.

மகன்:—"அம்மா! இது எவ்விதமா யிங்குவந்தது?

தாய்:—"அப்பா! உன் தகப்பனார் கொளுத்தி வைத்திருக்கவேண்டும், அல்லது வேறு யாவரேனும் கொண்டுவந்து வைத்திருக்கவேண்டும்".

மகன்:—"நானிதை ஒருபோதும் ஒப்பமாட்டேன், வீட்டில் எல்லா விடங்களிலும் பார்த்தேன். நான் பாராத இடமில்லை. வெளியேயுஞ்சென்று பார்த்தேன். ஒருவரையும் கண்டிலேன். ஆகையால் இது இங்கொருவராலும் வந்ததன்று. தற்செயலாக உண்டாயிருக்கிறது".

௱அ௰ம் பக்கம் பார்க்க.

கிராமத்தின் வளர்த்தியைப்பார்த்து சமுத்திரத்தின் அளவையும் ஒருமனிதனின் வார்த்தைகளைப் பார்த்து அவனுடைய தன்மையையும் அறிந்துகொள்.

பழைய பாதையை யடைத்து திறத்தாதே; பழமையான சிநேகிதனோடே சண்டைக்கு நில்லாதே.

நற்போதம்—(௱எகூ-ம் பக்கத் தொடர்ச்சி.)

தாய்:—கிராமவாசியாயிருப்பதனாலன்றோ நம் புதல்வன் இலைத யின்னதென்றுணர்வதற்குச் சிறிதும் ஞானமின்றி மிக்க அறியாமையாயுள்ளவனாயிருக்கிறான். நகரங்களில் வாசமாயிருந்தால் கல்வியில்லாவிடினும் இயற்கை வாசனை செயற்கை வாசனைகளால் நாகரீகமும் சீர்திருத்தமும்பெற்று சாதாரணமாய் மனிதர் தெரிந்துகொள்ளவேண்டிய விஷயங்களையெல்லாம் உணர்ந்திருப்பானே. அவ்வளவிற்கும் வகையில்லாமல் முழுமூடனாய்ப்போனதற்குக் காரணம் தாய்தந்தையராகிய நாமேயன்றி வேறன்று, என்று பலவாறு சிந்தித்து துக்கத்துடன் மகனைப்பார்த்து, "என் அருமைக்கண்மணியே! உனக்குத்தெரியாத எந்தக் காரியத்தையும் மூடத்தனமாய்ப் பிடிவாதங்கொண்டு சாதிக்கமுயலாதே. தெரியாத விஷயங்களைத் தெரிந்தோர்பாற் கேட்டுத்தெளியவேண்டுமென்று எப்போதும் நிட்சித்தமாயிரு. தமக்குத் தெரியாத விஷயங்களைத் தெரிந்ததுபோல் பாவனைசெய்து நான் பிடித்த முயலுக்கு இரண்டேகாலென்று சாதிக்கும் மூர்க்கனைப்போல், தம் துர்வாதமே நிலைக்கப்போராடுவது முழுமக்கள் கொள்கையாம். விவேகிகளோ சாஸ்திர ஆதாரத்தாலும் யுக்தி அநுபவங்களாலும் நியாயங்களைப் பலவகையாக எடுத்துக்காட்டிக் கேட்போர்க்குத் திருப்தியுண்டாகும்வண்ணம் நிரூபித்துத் தம் வாதத்தை நிலைநாட்டுவார்கள்".

"மூர்க்கரு முதலையுங் கொண்டது விடா" மூர்க்கர்களும் முதலையும் தாம பிடித்ததை விடுவதில்லை, என்பதுபோல் தெரியாத மூடர்களே பிடிவாதஞ் செய்வார்கள். அது அறிவின் குறைவேயன்றி வேறல்ல.

"அறிவின்மை யின்மை யுளின்மை பிறிதின்மை
யின்மையா வையா துலகு".

அறிவில்லாமையே எல்லா இல்லாமைகளிலும் முதன்மையானது மற்றைப்பொருளில்லாமை முதலியவற்றைப் பெரியோர் இல்லாமையாகக் கொள்ளார், என்று பெரியோர்களும் கூறியிருக்கின்றனர். ஆகையால், மைந்தனே! நீ அறியாமையால் மூடப்பிடிகொண்டு பிடிவாதஞ்செய்யாதே" என்று புத்திகூறினாள். அச்சமயத்தில் தகப்பனார் அங்கு வந்தனர்.

மகன்:—அப்பா! அப்பா! இதோ ஒளிப்பூச்சி பார்த்தீரா?

தகப்பன்:—சிரித்துக்கொண்டே, "புத்திரா! இது தீபம் என்று நீ யிதுவரையுந் தெரிந்துகொள்ளவில்லையா?

மகன்:—"ஐயா! என் தாயும் தங்களைப்போலவே சொன்னாள்".

தகப்பன்:—பின்னையின் தாடையில் ஓங்கியடித்து சொன்னாள் என்று அவமரியாதையாய்ப் பேசாதே" "அன்னையும் பிதாவு முன்னறி தெய்வம்" என்று ஒளவையார் கூறியிருக்கின்றனர். ஆகையால் தாய்தந்தைகளை அவமதியாதே. சிறுபோதிலிருந்தே யாரிடத்திலும் மரியாதையாய்ப்பேசக்கற்றுக் கொள். சில மூடத் தாய்தந்தையர் குழந்தைகள் மதலைச்சொல்லால் துர்ப்பாஷை பேசுவதைச் செவிக்கின்பமாய்க் கேட்டானந்தித்து அவ[illegible] உற்சாகப்படுத்தி, மேன்மேலும் பலவித அநுசித வார்த்தைகளால் [illegible] திடக்

௱அக-ம் பக்கம் பார்க்க.

மதராஸ் பூகானி மெடிக்கல் ஆல், 439 செ., சௌகார்பேட்டை, சென்னை.

நற்போதம்—(௱௮௦-ம் பக்கத் தொடர்ச்சி.)

கவும் உதைக்கவும் அவர்களை பயிற்றி பிள்ளைகளை மூடர்களாவும் கெடுத்துவிடுகிறார்கள். இவ்வாறு பிள்ளைகளைத் துராசாரத்திற் பழக்கிவிட்டு, பிற்காலத்தில் அப்பிள்ளைகளால் தாங்களே அடியுதைப்பட்டு விரட்டப்பட்டும்போது, அப்பா, ஐயாவென் றலரியழுது பிரலாபிக்கும் பரிதாபகோலங்களை உலகில் பிரத்தியக்ஷமாகப் பார்த்திருந்தும்; பலர் தங்கள் மௌடிக புத்தியினால் குழந்தைகளைக்கெடுத்து வருவது என்ன பேதமை. ஆகையால், நீ இப்போது தொடங்கியே ஒழுக்கமாகவும், மரியாதையாகவும், நடக்கவும், பேசவும் கற்றுக்கொள். இவனைப் புத்திரனாகப்பெறுதற்கு இவன் தந்தையென்ன தவஞ்செய்தானோ. என்று உலகத்தார் புகழும்படி நற்குண நற்செய்கை நல்லொழுக்கங்களையுடையவனாதலே மகன் தந்தைக்குச் செய்யும் எதிர் நன்றியாம்.

"மகன் றந்தைக்காற்று முதவியிவன் றந்தை
யென்னோற்றான் கொல்லென்னுஞ் சொல்",

என்று "ஆன்றோர் கூறியிருக்கின்றனர்" என்று தந்தை கூறினார்.

மகன்:—"இனியொருபோதும் அமரியாதையான வார்த்தைகளை நான் பேசேன். இந்தப் பிரகாசமுள்ள தீபம் நம்முடைய வீட்டில் தானாகவே வந்திருக்கிறது பாரும்".

தகப்பன்:—"என் குலக்கொழுந்தே! எந்தப்பொருளும் தானாகவே ஒருபோதும் உண்டாகாது. ஒவ்வொன்றிற்கும் காரணகர்த்தா ஒருவர் வேண்டும். இந்தத் தீபத்தைப் பட்டணத்திலிருந்து வரும்போது நான் வாங்கிக் கொண்டுவந்தேன். சூரியன் அஸ்தமித்தபின் நீங்கள் வீட்டிற்குவர இன்று காலதாமதமானபடியால் நானே தீபம் ஏற்றிவைத்துவிட்டு வெளியே போயிருந்தேன்" இரவு நீங்கி சூரியன் உதயமாயிற்று.

மகன்:—"காலையில் சூரியோதயத்தைப்பார்த்து, ஐயா! ஐயா! இதோ சூரியன் பாரும், நேற்றிரவு தங்களுடைய உபதேசத்தில் ஒன்றும் தானாகவே உண்டாகாதென்று சொன்னீர்களே. இச்சூரியன் இரவெல்லாம் எங்கோ ஒளித்திருந்து அதிகாலையில் தலைநீட்டி வெளிவந்த ஒய்யாரத்தைப் பார்த்தீரா? ஒருவரும் அதை இழுத்துக்கொண்டு வருகிறதாகத் தெரியவில்லையே. தானே அதிகாலையில் எழுந்து ஆகாயத்திலுலாவி மாலையில் அஸ்தமிக்கின்றது. கைப்புண்ணுக்குக் கண்ணாடி வேண்டுமா? இதற்கென்ன சொல்கிறீர்கள்".

தகப்பன்:—"என் பிரியமுள்ள ரங்கா! இந்தச் சூரியனை நடத்துவதற்கு ஒரு காரணகர்த்தரிருக்கின்றார். அவரைத்தான் கடவுளென்று சொல்வது".

மகன்:—"அப்படியானால் அவர் எங்கேயிருக்கின்றார்? அவரை எனக்கு காண்பிக்கவேண்டும் நம்முடைய திருஷ்டிக்குப் புலப்படாவிட்டால் அவரிருக்கிறார் என்று நம்புவதெப்படி?".

தகப்பன்:—தன் மகன் கேட்பது மூர்க்கத்தனத்தினாலென்றேனும் அறியாமையினால் கேட்கின்றானென்றும் உணர்ந்து என் புத்திர ரத்தினமே!

௱௮௨-ம் பக்கம் பார்க்க.

பிள்ளை படிக்கப்போகட்டும், பனிதன் வேலை செய்யப்போகட்டும், கிழவன் ஜெபித்துக்கொண்டிருக்கட்டும்.

நீளமான கம்பு பலங்குறைந்தது, நீளமான சம்பாஷணை புத்தியீனமானது.

நற்போதம்—(௱௮௧-ம் பக்கத் தொடர்ச்சி.)

கடவுள் சகல அண்டசராசரங்களையும் படைத்து ரக்ஷித்து அழிக்கக்கூடியவர் ஒருவரே: அவர் அவருக்குச் சர்வசக்தியுமுண்டு. அவருக்கு ஒப்பும் உயர்வுமுடையவர் ஒருவருமில்லை. அவர் அரூபியாயிருக்கிறார். ஆகையால் ஒருவர் திருஷ்டிக்கும் அவர் புலப்படமாட்டார். நீ நன்கு கல்விபயின்று ஆசிரியர் அடிவணங்கி அவருபதேசத்தின்படி கடவுள் ஏற்படுத்தியுள்ள கட்டளைகளையநுசரித்து அவரைத் தொழுதுவந்தால் உன் மனக்கண்ணால் அவரைத் தெரிந்துகொள்வாய். அந்த ஞானக்கண்கொண்டேயன்றி இந்த ஊனக்கண்ணால் ஒருபோதும் அவரைப்பார்க்க ஏலாது.

"முகத்திற் கண்கொண்டு பார்க்கின்ற மூடர்காள்
அகத்திற் கண்கொண்டு பார்ப்பதே யானந்தம்".

என்று மேலோர் கூறியிருக்கின்றனர். இனிக் கடவுளைப்பற்றி வீண் தர்க்கஞ்செய்யாதே. அதைப்போன்ற பெரும்பாவம் வேறொன்றுமில்லை". பிறகு மகன் "தந்தைசொன்மிக்க மந்திரமில்லை" தகப்பனுடைய சொல்லைப்பார்க்கிலும் மேலான மந்திரம் வேறொன்றுமில்லை, என்கிறபடி அவர் உபதேசத்தைச் சிரசாவஹித்து கல்வி பயின்று தேர்ச்சியுடன் ஆசானடிபணிந்து ஞானமார்க்கத்திற் பிரவேசித்து சித்திபெற்றான்.

பூர்வகாலத்தில் ஞானியாயிருந்த ஒருவர் பின்வருமாறு எச்சரிக்கிறார்: அதாவது, "வாலிபனே, உன் இளமையிலே சந்தோஷப்படு, உன் வாலிபநாட்களிலே உன்னிருதயம் உன்னைப் பூரிப்பாக்கட்டும்; உன் நெஞ்சின் வழிகளிலும், உன் கண்ணின் காக்ஷிகளிலும் நட; ஆனாலும் இவையெல்லாவற்றினிமித்தம் தேவன் உன்னை நியாயத்திலே கொண்டுவந்து நிறுத்துவார் என்று அறிந்துகொள்" என்பதே. அதுவுமல்லாமல் "ஞானத்தின் வழிகள் சந்தோஷத்தின் வழிகள், அதின் பாதைகளெல்லாம் சமாதானம்" நீ ஒரு காரியத்தைச்செய்யத் தொடங்குமுன்னே, அது சரியாயிருக்குமா? என்று உன்னைக் கேட்டுக்கொள். நீ அதைத் துவக்கினபிற்பாடு ஒருவேளை அது பிந்திப்போகும். சரி இன்னது, தப்பிதம் இன்னது என்று நீ தீர்மானித்துக்கொள்ள உதவியாயிருக்கும்படி சில விதிகளை இதில் உனக்குச் சொல்லுகிறேன்; அதிக உதவியாயிருக்கும்படி சில முறைகளை அநுசரித்துக்கொள்.

உன் வயதுக்கொத்த சிநேகிதர்களிடம் ஆலோசனை கேளாதே; உன் குருக்களிடத்திலும் பெற்றோரிடத்திலும் யோசனைகேள். அவர்கள் உன்னைவிட வயதுள்ளவர்களும் ஞானிகளுமாயிருந்து, உனக்கு நன்மையானவைகளை மாத்திரம் இச்சிக்கிறவர்களாயிருக்கிறார்கள். நியாயமானவைகளைச்செய்ய நாம் விரும்பினும், அவைகளைமாத்திரம் செய்வோம். பரமபிதாவாகிய கடவுள் நாமும் அவரைப்போல் நல்லவர்களும் பாக்கியசாலிகளுமாயிருக்க விரும்பு[illegible]று கேட்டிருக்கிறாயே. ஆகையால் அவர் நினைக்கிறதுபோல் நாம் நினைக்கவும், நாம் அவர் செய்ய விரும்புவதைச்செய்யவும், பிரயாசைப்படவும் வேண்டும். இதற்காக, அவருடைய ஒத்தாசையைக் கேட்போமாக, அப்போது சகலமும் நன்மையாயிருக்கும்.

அதிகாரியில்லாத காடு மொழியில்லாக் கலகம்; புருஷனில்லா ஸ்திரீ வாசனையில்லா மலர்.

மதராஸ் யூநானி மெடிக்கல் ஹால், 439 நெ., சௌகார்பேட்டை, சென்னை.

பழக்கமில்லாக் காரியத்தில் புகுவோன் பங்கமடைவான்.

ஓர் ஊரில் கிராமாதிபதியாயிருந்த ஒருவன் கிராமாதிபத்தியம் செலுத்துவதோடு அவ்வூரிலுள்ள குடிகளில் எவர் வீட்டிலேனும் மரணம் நேர்ந்தால் அவ்வீட்டிற்குச்சென்று துக்கம் விசாரித்து அவர்கட்குத் தேறுதல் கூறுவது வழக்கம். அவனுக்கிரண்டு குமாரர்களிருந்தார்கள். அக்கிராமாதிபதிக்கு மரணம் நேரிட்டபிறகு, அவன் மூத்தகுமாரன் அக்கிராமாதிகாரியத்தை வகித்தான். இளையவன் பயிர்த்தொழிலைப்பார்த்து வந்தான். இப்படியிருக்கையில் இளையவன் மூடனும் பொறாமையுள்ளவனுமாகையால், நமது தமையன் கஷ்டமொன்றுமின்றி ஓர்நாள் முழுமையும் சும்மா பேசிக்கொண்டு காலங்கழிக்க நாம் மாத்திரம் இந்தப்பயிர்த்தொழிலை மேற்கொண்டு வெய்யிலிலும், காற்றிலும், மழையிலும் அவதிப்படவேண்டியதென்ன? ஆதலால், நாம் அந்தக்கிராமாதிகாரியத்தை மேற்கொண்டு தமையனுக்கிந்தப்பயிர்த்தொழிலை விட்டுவிடலாமென்றெண்ணி, ஓர் நாள் தமையனைக்கிட்டி "அண்ணா! இன்று முதல் கிராமாதிகாரியத்தை நான் வகிக்கிறேன் நீர் பயிர்த்தொழிலைப் பார்த்துக்கொள்ளும்" என்றான். அதுகேட்ட தமையன் தம்பியை நோக்கி, "அப்பா! கிராமாதிகாரம் செலுத்துவதென்றால் சுலபமானதல்ல, "பேசப்போயினையோ சாகப்போயினையோ" என்னும் பழமொழிப்படி, விவகாரம் தெரிந்து பேசாவிட்டால் வினையாய் வந்து முடியும், நீயோ விவகாரப் பழக்கமில்லாதவன், ஆதலால் நீ இந்தக் கிராமாதிகாரத்தை மேற்கொண்டு நீ வகிக்கமாட்டாய்" என்று பலவிதமாகக் கூறியும் கேளாமையால், அவனிஷ்டப்படியே கிராமாதிகாரத்தை அவன்வசம் ஒப்பித்து, அவனைப் பழக்குவதற்காக, ஓர் நாள் ஓர் வீட்டில் அவ்வீட்டுக்காரனுடைய தாயார் இறந்துபோனதைப்பற்றித் துக்கம் விசாரிக்க நேர்ந்தபோது தன் தம்பியை அழைத்துக்கொண்டுசென்று, அவ்வீட்டுக்காரனைக்கண்டு, "உன் தாய் உனக்குமாத்திரம் தாயென்று நினையாதே, இவ்வூரிலுள்ளாரனைவர்க்கும் தாயாயிருந்து அவரவர்கள் மனமும் சந்தோஷிக்கும்படி செய்துவந்தாள், என்செய்வது, விதியை வெல்ல யார்தரம் ஆதலால் நீ விசனப்படுவதிற் பயனென்னை." என்று தேறுதல் கூறினான். இது கேட்டுக்கொண்டிருந்த தம்பி, இதுதான் துக்கம்விசாரிக்கும் மாதிரி எனத்தனக்குள்ளே தீர்மானித்துக்கொண்டு தமையனுடன் வீட்டுக்குத் திரும்பினான். அதுமுதல் கிராமாதிகாரத்தைத் தம்பியே வகித்துக்கொண்டான். சிறிதுநாள் கழிந்த பிறகு மற்றோர் வீட்டில் அவ்வீட்டுக்காரனுடைய மனைவி இறந்துபோனாள். அத்துக்கத்தை விசாரிப்பதற்காகச் சென்ற தம்பி, அவ்வீட்டுக்காரனைக்கண்டு, "உன்னுடைய மனைவி உனக்கு மாத்திரம் மனைவியாயிருந்தாளென்று நினைக்கவேண்டாம். இவ்வூரிலுள்ளாரனைவர்க்கும் மனைவியாயிருந்து அவரவர்களையும் சந்தோஷிப்பித்து வந்தாள்" என்றனன். இதுகேட்ட அவ்வீட்டுக்காரன் துக்கத்தை மறந்து கோபாவேசங்கொண்டு அருகிலிருந்த ஆர்க்காட்டு ஜோட்டினால் ஆறடி அடித்துத் துரத்திவிட்டான். அப்படி அடிபட்டுக்கொண்டு வந்த இளையவன் தமையனைக்கண்டு, "அண்ணா! நான் பழையபடி பயிர்த்தொழிலையே பார்த்

௱௮௪-ம் பக்கம் பார்க்க.

கைவிரலைக்கொண்டு கடலாழம் பார்க்க எத்தனித்தான்.

பழக்கமில்லாக் காரியத்தில் புகுவோன் பங்கமடைவான்—(௱௮௫-ம் பக்கத் தொடர்ச்சி.)

தவறுகின்றேன். கிராமாதிகாரம் உனக்கே தக்கதாகையால் நீயே அதை ஒப்புக்கொள்" என்று கூறி அவ்வாறே பார்த்து வந்தான். ஆதலால் பழக்கமில்லாக் காரியத்திற் புகுவோன் பங்கமடைவான் என்பது நிச்சயம்.

மராட்டியன் ஒருவன் ஒரு கிராமத்துக்குப் போகையில் வழியில் மழை கன்றாய்ப்பிடித்துக்கொண்டது. மராட்டியன் தன் காலில் இருந்த பாதரட்சையை கையில் எடுத்து உயரத் தூக்கிப்பிடித்துக் கொண்டுபோகையில் பாதரட்சையினடியில் பற்றியிருந்த நரகலில் மழையடித்துக் கரைந்து மராட்டியன் தலையில் விழுந்தது. நாற்றமுண்டானதைக் கண்டு, அவன், "இதென்ன பீ மழை பெய்கிறது ?" என்றான்.

நான்காம் நாள் விகடப்பிரஸங்கம்

வெரிவெல் ஜெண்டில்மென் ! இதுவரையில் நான் பேசிவந்த விஷயங்களையெல்லாம் கவனமாய்க் கேட்டுவந்தீர்களல்லவா ? இந்தக் கிழத்தாத்தா இடத்தில் ஏதோ சில கையிருப்பு [illegible]று உங்களிற் சிலர் நிதானித்திருப்பீர்கள். இப்போது ஒரு முக்கிய குறிப்பைத்தெரிவிக்கிறேன், அதையும [illegible] விகட விநோதக்களஞ்சியம் என்னும் இப்புத்தகத்தின் 6-7-8-வது பக்கங்களிலுள்ள முகவுரையை முற்றிலும் இன்னொருமுறை வாசித்துப்பாருங்கள் அதில் சில முக்கிய குறிப்புகளை நீங்கள் தெரிந்துகொள்வீர்கள். இப்புத்தகத்தில் கூறப்பட்டுள்ள அநேக திவ்விய ஔஷதங்களும் அநந்தப்பிரயோஜனங்களைப் பயக்கத்தக்க பல புத்தகங்களும் உங்களுக்கு நிரந்தரமான உயிர்த்துணையாயிருக்குமென்பது திண்ணம். இன்னும் இப்புஸ்தகத்தின் தொடர்ச்சியாய் இரண்டாம்பாகமும் தயாராய்க்கொண்டிருக்கிறது. அதில் அநேக நூதன அரிய விஷயங்களைத் தெரிந்துகொள்வீர்கள். முதல் பாகத்தைவிட மேலான வேடிக்கை விநோத விஷயங்களும் ஞானமார்க்கங்களும் அதில் அடங்கியிருக்கும். சொற்பக்காப்பிகளே தயாரிக்கப்பட்டு வருகிறபடியால் முந்திக்கொண்டவர்களுக்குமட்டும் புத்தகங்கிடைக்கும். தேவையுள்ளவர்கள் உடனே மானேஜருக்கெழுதி உங்கள் பெயரை ரிஜிஸ்தர் செய்துகொள்ளுங்கள். இரண்டாம்பாகம் தயாரானவுடன் உங்களுக்கு வி. பி. யில் அனுப்பப்படும். ஓம் சுபம்.

முதற்பாகம் முற்றிற்று.

A roof above your head;
A mat to make your bed;
A friend to keep your head;
A mate to fill your bed.

Mr. Porter, wrote a letter,
To his sister, who is shorter,
That [illegible], with his mother.

's the bit, That fit the mat,
which hit the cat, That cut the rat.